Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ் : 11 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (10.09.2023) ஹிஜ்ரி-1445, ஸபர் - 24, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8
விலை ரூ.130

## நக்கல் நமசிவாயம்

சும்மா ஒரு விவாதத்தை நடத்தி அப்படியே விட்டுவிட வேண்டியதுதான். மக்களும் மறந்து விடுவாங்கள். இழுத்தடிப்புக்கு ரணில் ஐயாவுக்கு சொல்லிக் கொடுக்கவும் வேணுமோ..



## கேவலமான அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கேவலமான ஒருவரே இந்த நாட்டில் சுகாதார அமைச்சராக உள்ளார். இவ்வாறானவரை வைத்துக்கொண்டு எவ்வாறு சுகாதாரத் துறையை மேம்படுத்த முடியும்.

கெஹேலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சுப் பதவிக்குத் தகுதியற்றவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (08) இடம்பெற்ற சுகாதார...

02 ஆம் பக்கம்



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 19ஆவது நாள் திருவிழாவான சூர்யோற்சவம், வெள்ளிக்கிழமை (8) காலை நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூஜையை அடுத்து, ஏழு குதிரைகள் பூட்டிய இரதத்தில் எழுந்தருளிய சூரியபகவான், உள் வீதி, வெளி வீதியுலாவும் வந்தார்.

(பு.கஜிந்தன்)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் ★ தேசிய பாதுகாப்பு

# சபையில் விவாதம்!


## எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில்

நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பில் முழுநாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் வெள்ளிக்கிழமை (08) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருப்பதாக...

02 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



"ஐயோ எங்களுக்கு சர்வதேச விசாரணைதான் வேணும்" எண்டு சிங்களம் அழுது குளறுவதை பார்க்க சந்தோசமாக கிடக்கு!

"வாழ்க்கை ஒரு வட்டம் ராசா"

முள்ளிவாய்க்காலில் எத்தனை ஆயிரம் உயிர்களை சாட்சியம் இல்லாமல் கொன்றொழித்தீர்கள்!

கொக்குத்தொடுவாயில் இப்போது கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிபோல தமிழர் தாயகத்தில் எல்லா இடத்திலும் புதைகுழிகள் இருக்கின்றன.

02 ஆம் பக்கம்

## சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி



சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க் கட்சி கொண்டுவந்த நம்பிக்கை யில்லாப் பிரேரணை 40 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டது.

பிரேரணைக்கு எதிராக 113 வாக்குகளும் ஆதரவாக 73 வாக்குகளும் கிடைத்தன.

இதன்படி எதிர்க்கட்சி யால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியுற்றது.

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக முன்வைக் கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இறுதி வாக்கெடுப்பு வெள்ளிக்கிழமை (08) இடம்பெற்றது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் வைத்தியர் காவிந்த ஜயவர்தனவால் சபையில் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

அதற்கமைய, ...

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்

★ சனல் - 4 குற்றச்சாட்டுகளை ஆராய விசேட குழு - ரணில் உத்தரவு

★ சுரேஷ் சலே - பிள்ளையான் ஆகியோரின் பதவிகளைப் பறிக்கும் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி



05 ஆம் பக்கம்

## தமிழகத்தில் புதிய வகை கொரோனா தொற்று

ஒமிக்ரோனின் உட்பிரிவான எக்ஸ்பிபி வைரஸிலிருந்து உருமாற்றம் அடைந்த 2 புதிய கொரோனா வைரஸ்கள் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

சீனாவில் கடந்த 2019ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட கொரோனா தொற்று, 2020ஆம் ஆண்டு உலக நாடுகளில் தடம் பதித்தது. 3 அலைகளாக பரவிய கொரோனா வைரஸ், அல்பா, டெல்டா வகைக்கு பிறகு, ஒமிக்ரோன் தொற்றாக உருமாற்றம் அடைந்தது. இது அதிவேக பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் பல இலட்சக்கணக்கான மக்கள் கொரோனா தொற்று பாதிப்புக்கு ஆளாகினர்.

இந்நிலையில், ஒமிக்ரோன் வைரஸிலிருந்து, கடந்த ஆண்டு செப்டெம்பரில் எக்ஸ்பிபி எனும் புதிய வகை வைரஸ் உருவானது. அதுமுதல், ஜனவரி மாதம் வரை இந்த வைரஸ் தொற்றால், 21,979 பேர் பாதிக்கப்பட்டனர். பொதுச் சுகாதாரத் துறை மரபணு பகுப்பாய்வு கூடத்தில், கொரோனா உருமாற்றம் தொடர்பான மரபணு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

**2 புதிய கொரோனா உருமாற்றம்:**

இதில், கடந்த ஆண்டு செப்டெம்பர் முதல் 2023 ஜனவரிவரை 2,085 பேரின் சளி மாதிரிகள் மரபணு பகுப்பாய்வுக்கு...

02 ஆம் பக்கம்




## மதுபானப் போத்தல்களில் Q தொழில்நுட்பம்

### வழிவகைகள் பற்றிய குழு தீர்மானம்

மதுபானம் தயாரிக்கும் 52 இடங்களில் நடத்தப்பட்ட சோதனை களில் போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட 44,000இற்கும் அதிகமான மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக இலங்கை மதுவரித் திணைக்களம் (07) பாராளுமன்றத்தில் வழிவகைகள் பற்றிய குழுவுக்குத் தெரிவித்தது. இவ்வாறு போலியான ஸ்ரிக்கர்களுடன் கூடிய மதுபானப் போத்தல்கள் தொடர்பில் ஒரு நிறுவனத்திடம் ஏறத்தாழ 40 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டிருப்பதாகவும் குறித்த திணைக்களம் குழுவில் அறிவித்தது.

வழிவகைகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப் பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க...

02 ஆம் பக்கம்

## குருந்தூர்மலையில் புத்தர் சிலை வைத்து வழிபட்ட விவகாரம்

### வழக்கு நவம்பர் 23இற்கு ஒத்திவைப்பு

லியோ

குருந்தூர்மலையில் கல்கமுவ சந்தபோதி தேரர் மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தன் உள்ளிட்ட குழுவினர் புத்தர் சிலை வைத்து வழிபாடுகளை மேற்கொண்டமை தொடர்பில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரின் முறைப் பாட்டுக்கமைய, பொலிஸாரால் நீதிமன் றில் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதிக்கு தவணையிடப் பட்டுள்ளது.




இந்த வழக்குத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள...

02 ஆம் பக்கம்



# உயர்தரப் பரீட்சை நவம்பரில் வேண்டாம்

## பரீட்சார்த்திகள் கோரிக்கை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை (2023) எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்துவதானது மீண்டும் பரீட்சை எழுதும் எதிர்பார்ப்பிலிருக்கும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கும் என்று தெரிவித்துள்ள பரீட்சார்த்திகள், அதற்கமைய அவர்கள் பரீட்சைக்குத் தயாராக 100இற்கும் குறைவான நாட்களே கிடைப்பதாகவும் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக வாய்ப்பு அல்லது எதிர்பார்த்த பீடங்களுக்கான தகைமைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையால் மாணவர்கள் கடும் மனஅழுத்தத்தை சந்தித்துள்ளதாகவும் நீதியை நிலைநாட்டுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் செயற்பாட்டில் காலதாமதம் ஏற்பட்டமை மாணவர்களின் தவறல்ல என்று தெரிவிக்கும் பரீட்சார்த்திகள் அவ்வாறு தாமதமான காலத்தை மீண்டும் மாணவர்களுக்கு வழங்காமை அதிகாரிகளின் தவறு என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர் .

### சுகாதார அமைச்சருக்கு...

அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே வெள்ளிக்கிழமை இறுதி வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

சுகாதாரத் துறையில் நிலவும் குறைபாடுகள், மருந்துத் தட்டுப்பாடு, சமீபகாலமாக இடம்பெற்றுவரும் உயிரிழப்புச் சம்பவங்களை அடிப்படையாகக்கொண்டே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது.

### தமிழகத்தில்...

உட்படுத்தப்பட்டன. இதில் 420 மாதிரிகளில் எக்ஸ்பிபி வகை தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டது. இதில் 98 மாதிரிகள் விரிவான நுண் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆய்வில் உலகில் இதுவரை எங்கும் கண்டறியப்படாத 2 புதிய கொரோனா உருமாற்றங்களை மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

இது தொடர்பான ஆய்வுக் கட்டுரையை பொதுச் சுகாதாரத்துறை சமர்ப்பித்தது. அந்த கட்டுரையை சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த லான்செட் இதழ் 2 நாட்களுக்கு முன்பு வெளியிட்டது.

***தடுப்பூசி செலுத்தியவர்களுக்கும் தொற்று:***

தமிழகத்தில் கடந்த ஆண்டு இறுதியிலும் நடப்பாண்டு தொடக்கத்திலும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 81 சதவீதம் பேர் தடுப்பூசிகளை முறையாக செலுத்தியவர்கள். இவர்களில் தீவிர கொரோனா பாதிப்புக்குள்ளானவர்களின் சளி மாதிரிகள் மரபணு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதில் உலகில் வேறெங்கும் பதிவாகாத 2 புதிய வகை வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### குருந்தூர்மலை...

பொலிஸார், நீதிமன்றிடம் கால அவகாசம் கோரிய நிலையில் இவ்வாறு தவணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி கல்கமுவ சந்தபோதி தேரர், மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட குழுவினர் புத்தர் சிலையை கொண்டுசென்று வைத்து பூசை வழிபாடுகள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருந்தனர்.

அந்தவகையில் குருந்தூர்மலையில் புதிதாக சிலைகள் வைத்து வழிபாடுகள் மேற்கொள்ளவோ, மதக் கட்டுமானங்களோ மேற்கொள்ளக்கூடாதென்ற தடைகள் இருக்கும்போது எப்படி இவ்வாறு புத்தர் சிலையை வைத்து வழிபாடுகள் மேற்கொள்ளமுடியுமென குறித்த முறைப்பாட்டின்போது ரவிகரன் மற்றும் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரால் கேள்வி எழுப்பப்பட்டிருந்ததுடன், இதுதொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய பி991/2023 இலக்க வழக்கு, கடந்த செப்டெம்பர் 07ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த பொலிஸார், குறித்த வழக்குத் தொடர்பாக தாம் இன்னும் விசாரணைகள் மேற்கொள்ள இருப்பதாகவும், அதற்காக கால அவகாசம் தருமாறும் நீதிமன்றுக்குத் தெரிவித்திருந்தனர். அதற்கமைய குறித்த வழக்கானது எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமக்கெதிராக எதிர்த்தரப்புகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ளும்போது பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும், தாம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ளும்போது பொலிஸார் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் முறைப்பாட்டாளர்களில் ஒருவரான துரைராசா ரவிகரன் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### உயிர்த்த ஞாயிறு...



பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்றம் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கூடவுள்ளதுடன், 19 மற்றும் 20ஆம் திகதிகளில் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி மற்றும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2334/47ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 20ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை (451ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2346/02ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அன்றையதினம் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணிக்கு ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை குறித்த விவாதத்துக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 21ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சி, பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான முழுநாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

# நடிகர் மாரிமுத்து மாரடைப்பால் மரணம்



இயக்குனரும் நடிகருமான மாரிமுத்து மாரடைப்பால் சென்னையில் வெள்ளிக்கிழமை காலை காலமானார். அவருக்கு வயது 56. இவருக்கு திரையுலகைச் சேர்ந்தவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்கள்.

தேனியைச் சேர்ந்த மாரிமுத்து சினிமா மீதுள்ள ஆசை காரணமாக சினிமாவுக்கு வந்தார். ஆரம்பத்தில் சீமான், மணிரத்னம், வசந்த், எஸ்.ஜே.சூர்யா உள்ளிட்டோருடன் உதவி இயக்குனராக பல்வேறு படங்களில் பணியாற்றினார். கண்ணும் கண்ணும் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமான இவர், பின்னர் விமல் நடித்த புலிவால் படத்தை இயக்கினார்.

இயக்குனராக வெற்றிபெற முடியாத மாரிமுத்து பின்னர் குணச்சித்திர நடிகராக களமிறங்கினார்.

வாலி, உதயா, யுத்தம் செய், கொம்பன், மருது, திருநாள், பைரவா, மகளிர் மட்டும், மதுர வீரன், எனிமி, பரியேறும் பெருமாள், கடைக்குட்டி சிங்கம், மிஸ்டர் லோக்கல், புலிகுத்தி பாண்டி, சுல்தான், விக்ரம், ஜெயிலர் உள்ளிட்ட 100இற்கும் மேற்பட்ட படங்களில் வில்லனாகவும், குணச்சித்திர வேடங்களிலும் நடித்து ரசிகர்களைக் கவர்ந்தார். யதார்த்தமாக நடிக்கக்கூடியவர் என பெயர் பெற்றவர்.

மிரட்டிய ஆதி குணசேகரன் சினிமா மட்டுமல்லாது கடந்த ஓராண்டாக சின்னத்திரையில் 'எதிர்நீச்சல்' என்ற சீரியலில் ஆதி குணசேகரன் என்ற வில்லன் கேரக்டரில் நடித்து சின்னத்திரை ரசிகர்களையும் கவர்ந்தார். குறிப்பாக, சினிமாவில் கிடைக்காத பெயர், புகழ் இந்த ஒரு சீரியலில் கிடைக்கும் அளவுக்கு நடிப்பில் அசத்தி வந்தார். இவரின் நிஜப் பெயர் மாரிமுத்து என்பது மறைந்து இந்த சீரியலில் வரும் குணசேகரன் பெயர் இவருக்கு நிலைத்துவிட்டது. தான் நடித்துவந்த எதிர்நீச்சல் சீரியலுக்காக வெள்ளிக்கிழமை காலை சென்னையில் டப்பிங் பேசி வந்தார் மாரிமுத்து. அப்போது திடீர் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து டப்பிங்கை பாதியில் நிறுத்திவிட்டு, அவரே காரை ஓட்டிச் சென்று வடபழநியில் உள்ள மருத்துவமனையில் அட்மிட்டானார். அங்கு மருத்துவப் பரிசோதனை செய்துகொண்டிருந்தபோது அவரது உயிர் பிரிந்தது. மாரிமுத்துவின் மனைவி பாக்கியலட்சுமி. இவருக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். இவர் ஜெயிலர் திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

மாரிமுத்துவின் வீடு சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ளது. அங்கு அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டது. சென்னையில் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதன்பிறகு அவரது சொந்த ஊரான தேனி, வருசநாட்டிற்கு கொண்டுசெல்லப்பட்டு சனிக்கிழமை இறுதிச்சடங்கு நடைபெறும் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தார்கள்.

எதையும் தைரியமாக மனதில் பட்டதை வெளிப்படையாக பேசக்கூடியவர் மாரிமுத்து. சமீபத்தில் தமிழா தமிழா நிகழ்ச்சியில் ஜோதிடம் தொடர்பாக இவர் பேசிய விடயங்கள் சர்ச்சையானது.

மாரிமுத்துவின் திடீர் மரணம் திரையுலகினர் மட்டுமல்லாது, சினிமாவை தாண்டி சின்னத்திரை ரசிகர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. திரையுலகினரும், ரசிகர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

### கேவலமான அமைச்சர்...

அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் சுகாதார கட்டமைப்பு மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. சுகாதார சேவை அடிப்படை மனித உரிமைக்குள் ஏன் உள்வாங்கப்படவில்லை.

பிரித்தானியா உள்ளிட்ட முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் சுகாதார சேவை அடிப்படை மனித உரிமையாகக் காணப்படுகிறது. இலங்கையில் சுகாதார அமைச்சு ஒரு வியாபாரக் களமாக காணப்படுகிறது.

நாட்டில் சுகாதார தரப்பில் ஒருசாரார் இலவச சுகாதார சேவையை வர்த்தக மாபியாகவே பயன்படுத்துகிறார்கள். இதனால்தான் இலங்கையின் சுகாதாரத் துறை இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் வருடாந்தம் பல வைத்தியர்களையும், தாதிகளையும் உருவாக்குகிறது. ஆனால் பெரும்பாலானோர் நாட்டைவிட்டுச் செல்கிறார்கள்.

மருத்துவத் துறையில் தாதியர் இணைப்பில் தமிழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்படுகிறார்கள். சிங்களவர்களுக்கான நியமனத்தின்போது வேண்டுமாயின் சட்டங்களும் திருத்தம் செய்யப்படும்.

தமிழர்கள் திட்டமிட்டு தவிர்க்கப்படுகிறார்கள். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாதியர் சேவையில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள நாளாந்தம் 420 பேர் வருகிறார்கள்.

மறுபுறம் பல இலட்சக்கணக்கானோர் மாதாந்தம் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால், அந்த வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. இது பாரியதொரு பிரச்சினையாகும்.

நாட்டின் சுகாதாரத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என நாங்கள் குறிப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சுகாதாரத் துறை அமைச்சர் பொறுப்பற்ற வகையில், நீங்கள் பேசுவதை பேசுங்கள், நாங்கள் இவ்வாறுதான் இருப்போம் என்ற நினைப்பில் உள்ளார். இவ்வாறான தகுதியற்ற அமைச்சர் நீக்கப்பட வேண்டும் அல்லவா?

கேவலமான ஒருவரே இந்த நாட்டில் சுகாதார அமைச்சராக உள்ளார். இவ்வாறானவரை வைத்துக்கொண்டு எவ்வாறு சுகாதாரத்துறையை மேம்படுத்த முடியும். இவர் சுகாதார அமைச்சுப் பதவிக்கு தகுதியற்றவர். ஆகவே சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் - என்றார்.

### மதுபானப் போத்தல்களில்...

தலைமையில் கடந்த வியாழன் (07) கூடியதுடன், இதில் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

மதுபானப் போத்தல்களில் போலியான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் ஒவ்வொரு போத்தலில் இருந்தும் அரசாங்கத்துக்கு 2,900 ரூபா வரி இழப்பு ஏற்படுவதாக வழிவகைகள் பற்றிய குழுவில் அண்மையில் வெளிப்பட்டதுடன், இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கடந்த ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி குழு வழங்கிய பணிப்புரைக்கமைய மதுவரித் திணைக்களத்தால் இந்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விடயம் குறித்த தகவல்களை ஆராய்ந்த வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தொடர்ந்தும் இதுபோன்ற போலியான ஸ்ரிக்கர் மோசடிகளில் ஈடுபட்டால் மதுவரி சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ் குறிப்பிட்ட மதுபான உற்பத்தி நிறுவனத்தின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யுமாறும், போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யுமாறும் பரிந்துரைத்தார்.

அத்துடன், போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர்களுடன் கூடிய மதுபானப் போத்தல்களை விற்பனைசெய்யும் மதுபான விற்பனை நிலையங்களைக் கண்டறிந்து அவற்றின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யுமாறும், மதுபானப் போத்தல்களில் உள்ள பாதுகாப்பு ஸ்ரிக்கர்களின் உண்மைத்தன்மையை இலகுவில் கண்டறியக்கூடிய வகையில் QR தொழில்நுட்பத்தின் அடிப்படையில் கையடக்கத் தொலைபேசி செயலியை (MOBILE APP) அறிமுகப்படுத்துமாறும் மதுவரித் திணைக்களத்துக்கு, குழு பரிந்துரைத்தது.

இதற்கமைய, இந்த வருட இறுதிக்குள் பின்வரும் கூறுகளைக்கொண்ட தகவல் தொழில்நுட்ப செயலியொன்றை மதுவரித் திணைக்களம் அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

உற்பத்தி செயல்முறை முடிந்த உடனேயே தானாகவே வரி கணக்கிடும் திறன்.

ஒன்லைனில் உரிமங்களை புதுப்பிக்கும் திறன்.

வரி செலுத்தத் தவறினால் உரிமங்களைத் தானாக இரத்துச்செய்யும் முறைமை.

ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைக்கக் கூடிய வகையில், தேசிய அடையாள அட்டை இலக்கத்தை தனித்துவமான அடையாள எண்ணாகப் பயன்படுத்தக்கூடிய முறைமை.

மேலும், நிலுவையிலுள்ள 6 பில்லியன் ரூபா வரியை இணங்கிக்கொண்ட கொடுப்பனவு முறைக்கமைய ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தாத மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமத்தை மதுவரிச் சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ் இரத்துச்செய்யுமாறும் வழிவகைகள் பற்றிய குழு அறிவுறுத்தியது.

அத்துடன், கள் உற்பத்தி செய்யும் 38 நிறுவனங்களைக் கண்காணிக்கும் பொறிமுறை, போலியான பாதுகாப்பு ஸ்ரிக்கர்களுடன் கூடிய மதுபானப் போத்தல்களை வாடிக்கையாளர்கள் இலகுவில் அடையாளம் காணக்கூடிய வகையில் ஒரே மாதிரியான அடையாள முறையொன்றை அறிமுகப்படுத்தல், மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தனது அலுவலகத்திலிருந்து அனைத்து 23 மதுபான உற்பத்தி நிலையங்களையும் மேற்பார்வையிடக் கூடிய முறைமையொன்றை ஏற்படுத்தல் போன்ற பரிந்துரைகளும் வழிவகைகள் பற்றிய குழுவால் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, அசோக அபேசிங்க, சந்திம வீரக்கொடி, வசந்த யாப்பா பண்டார, சஞ்சீவ எதிரிமான்ன, எஸ்.எம்.எம்.முஷாரப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வெடிமணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*யாழ்ப்பாணத்தின் "செம்மணி" தொடங்கி "மன்னார்" வரை புதைகுழிகள் இருக்கின்றன.*

*இந்த புதைகுழிகளை உருவாக்கியவர்கள் மீது சர்வதேச விசாரணை வேணும் எண்டு நாங்கள் எத்தனை ஆண்டுகளாக கத்திக்கேக்குறம்!*

*காலம் வலியது.*

*இப்ப புதிய முஸ்லிம் தலைவர்களில் இருந்து எதிர்க்கட்சி தலைவர் சஜித் வரை சர்வதேச விசாரணை வேணும் எண்டு கூவுகிறார்கள்.*

*ஆனானப்பட்ட போர்க்குற்றவாளி சரத் பொன்சேகா கூட "சர்வதேச விசாரணை" வேணுமாம்.*

*முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு "உள்ளக விசாரணை";*

*ஈஸ்ரர் படுகொலைக்கு "சர்வதேச விசாரணை"!!!*

*தலைவாரே உங்களுக்கு மனச்சாட்சி இல்லையா?*

*ஈஸ்ரர் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேணும் எண்டதில ஒரு துளி கூட எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை.*

*ஆனால் அதேபோல முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்திலும் சர்வதேச விசாரணை வேணும் எண்டதுதான் எங்களின் நிலைப்பாடு.*

*இது நியாயமான கோரிக்கைதானே!*

*Channel 4 வெளியிட்ட காணொளியில் பல உண்மைகள் வெளிவந்ததுபோல இன்னும் பல அதிர்ச்சியான உண்மைகள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன.*

*இதற்கு ஒரு நியாயமான சர்வதேச விசாரணை கண்டிப்பாக அவசியம்.*

*ஈஸ்ரர் குண்டு வெடிப்பில் மிஸ்ரர் பிள்ளையான் முக்கிய குற்றவாளியாக Channel 4 சொல்லியிருக்கிறது.*

*பிள்ளையான் கொலைக் குற்றவாளியாக சிறையில் இருந்த சமயமே இந்த ஈஸ்ரர் குண்டுவெடிப்பு நடந்தது.*

*அதன்பிறகே அவர் விடுதலை செய்யப்பட்டார். பிள்ளையான் எதற்காக சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்?*

*எப்படி கோட்டாபயவின் கைப்பிள்ளை ஆனார்?*

*பூச்சியமாக இருந்த பிள்ளையானை முதலமைச்சர் பதவி வரை கொண்டுபோனதன் பின்னணி என்ன?*

*ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டதன் மர்மம் என்ன?*

*போன்ற கேள்விகளுக்கான பதில்கள் "சர்வதேச விசாரணை" ஒண்டு நடந்தால்தான் வெளியில வரும்.*

*ஈஸ்ரர் குண்டுவெடிப்பின் உண்மைகள் வெளியில வரவேணுமா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் சக்தி ரணிலுக்கு உண்டு.*

*ரணில் மீண்டும் சனாதிபதி பதவிக்கு வரவேணும் எண்டால்;*

*Channel 4 வெளியிட்ட காணொளி போதாது.*

*சர்வதேச விசாரணை எண்ட அஸ்திரத்தை ஏவினால்தான் "மொட்டுக்கட்சியை" தன்னுடைய கைக்குள் வைத்திருக்கலாம் எண்டு ரணுலுக்கு வடிவா தெரியும்.*

*ரணில் உள்ளால அலுவல் பாத்துத்தான் Channel 4 இந்த காணொளியை வெளியிட்டது எண்டு ஒருசிலர் புறுபுறுக்கினம். அதை உறுதியா பொய்யெண்டு மறுக்க ஏலாது.*

*எது என்னவோ;*

*ஈஸ்ரர் குண்டுவெடிப்புக்கு விசாரிக்க வரும் சர்வதேசம் கொஞ்சம் முள்ளிவாய்க்காலையும் எட்டிப் பாக்கவேணும்.*

*நாங்கள்தான் அவையை எட்டிப்பாக்க வைக்கவேணும்.*

*கொக்குத்தொடுவாயில் படுகொலை செய்யப்பட்டு அரை உயிரோடு புதைக்கப்பட்ட பலரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*

*பலர் சித்திரவதை செய்து கைகள் கால்கள் கட்டப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்கள்.*

*இந்த புதைகுழிக்கு காரணமானவர்களை கண்டறிய "சர்வதேச விசாரணை" வேணும்.*

*முள்ளிவாய்க்கால் படுகொலையின் நீட்சிதான் ஈஸ்ரர் படுகொலை. இதை சர்வதேசம் தெளிவாக புரிந்துகொள்ளவேணும்.*

*ஈஸ்ரர் படுகொலையில் ஆரம்பிப்பதை விட முள்ளிவாய்க்காலில் இருந்து ஆரம்பிச்சால்தான் உண்மையான அத்தனை குற்றவாளிகளையும் கண்டுபிடிக்கமுடியும்.*

*சிறிலங்காவில் நிகழ்ந்த படுகொலைகளுக்கு இதுகாலும் தமிழர்கள்தான் சர்வதேச விசாரணையை கோரி நின்றார்கள்.*

*அப்போது எங்களைப்பார்த்து நக்கலடிச்சு சிரிச்ச ஒருசில முஸ்லிம் அரசியல்வாதிகளும் சிங்கள பேரினவாதிகளும் இப்போது "சர்வதேச விசாரணைதான்" வேணும் எண்டு கேக்கினம்.*

*அப்பதான் நியாயமான விசாரணை நடக்குமாம்.*

*இதைத்தானே 2009'ஆம் ஆண்டில் இருந்து சொல்லிக்கொண்டு வாறம்.*

*உங்களுக்கு வந்தால் "ரத்தம்".*

*எங்களுக்கு வந்தால் "தக்காளி சட்னியா"?*

*இறுதியாக;*

*ஈஸ்ரர் படுகொலையின் உண்மையான சூத்திரதாரிகளை கண்டறிய நேர்மையான முழுமையான ஒரு சர்வதேச விசாரணை வேண்டும்.*

*கெதியில வேணும்.*

*அந்தோனியாரே அந்தப் பாவிகளை மன்னிக்காது இருப்பாயாக!*

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.09.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5230
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 25,602,448.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 5 6 5 6 3 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3472
சீட்டிழுப்பு திகதி 2023.09.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,196,166.40
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 16 20 27 68
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 36128

லக்கி 7
திகதி 07.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0056
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 9 0 7 8 6 4
L7 இலக்கம் 1 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,671,396.96

தன நிதானய
தேதி 2023/09/07
சீட்டிழுப்பு இலக்கம் 1260
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,663,982.40
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 23 54 69 77
விஷேசட ஆங்கில எழுத்து T
Double Chance இலக்கம் 11220

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 539
சீட்டிழுப்பு திகதி 2023-09-07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,296,102.40
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 10 30 34 51
விசேட இலக்கினம் கன்னி

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1578
07/09/2023
Double Chance 71099
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,886,656.00
ஆங்கில எழுத்து S
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 01 02 04 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00




த.யுவராஜ்

★ யாழில் அருண்சித்தர் என்பவரை தமிழ் மக்கள் மன்னிக்க மாட்டார்கள். யாதெனில், அவர் ஒருமுறை, நல்லூரானின் ஆலயத்தை உடைத்து டொய்லட் கட்ட வேண்டும் என விசர்தனமாக திருவாய் மலர்ந்தார். இதற்கு மன்னிப்பு உண்டோ? ஆனால், இவரது சமூக நீதி கருத்துகள் இன்று வடக்கில் மக்கள் மனங்களை சென்றடைய ஆரம்பித்து விட்டன. இது யாழ். மையவாத வேளாளணியத்துக்கு எதிராக அவர் செய்யும் ஒரு மைன்ட்–வோர். இவர் கதைப்பதில் இருக்கும் உண்மைகள் ஒடுக்கப்படுகின்ற மனங்களை வருடுகின்றன. ஒடுக்கும் மனங்களை சுடுகின்றன. வேலுப்பிள்ளையார் காலத்தில் மூடிக்கொண்டு இருந்த சாதீயம் இப்போது யாழில் பெருமளவில் தலைதூக்கியுள்ளது. டெம்பிள் ஆலய வழிபாடுகளில் தொடங்கி உள்ளூராட்சி, மாகாணசபை, பார்லிமென்ட் வேட்பு மனுக்கள்வரை வேளாளணியம் தலைதூக்கி உள்ளதை பற்றி மனுஷன் கதைக்குது. ஊர் ஊராகப் போய் தயவு தாட்சண்யம் இல்லாமல் போட்டு பிரித்து மேயுது என இடதுசாரி தமிழ்த் தேசிய முன்னாள் எம்.பியின் கட்சி FOCUSக்கு தகவல். இதை கேட்டும் கேட்காததைப் போல், கண்டும் காணாததைப் போல் மேலாதிக்க அரசியல் தலைமைகள் எவ்வளவு காலம் தாக்குப் பிடிப்பார்கள் என தெரிவில்லை. இவர்கள் கண்ணை மூடிக்கொண்டால், உண்மை பொய் ஆகிவிடுமோ?



★ தொழிலாளர் காங்கிரஸ் டபள் தலைகளின் செயல் எல்லாம் சினிமா ஸ்டைல்தான். டாம் தூம் என சப்தம் மட்டும்தான். கடைசியில் எந்தத் தீர்வும் இல்லை. பாயும் புலிபோல் பேய்க்காட்டி, கடைசியில் இருப்பதும் போச்சு கண்ணாளா என நொந்துக்கொள்ளும் நிலைதான் என்பது முதலாம் FOCUS செய்தி. திருகோணமலையில், சம்பந்தர் சொன்னதை கேட்டு, செந்திலர், பொரளுகந்த ரஜமஹா விஹார பிக்குவுக்கு பனசலை கட்டத் தடை போட்டது என்னவோ சரிதான். ஆனால், ஒரு காரியம் பண்ண முன் தனது பலம் என்ன, எதிரியின் பலம் என்ன என தேட வேண்டாமோ? இது தெரிந்துதானே இந்தாள் சம்பந்தர் கொழும்பிலேயே நிற்குது. பொரளுகந்த சுக்கித்த வன்சாதிஸ்ஸ தேரர், மாவட்ட கமிட்டிக் கூட்டத்தில் நுழைந்து, செந்திலரின் வேஷ்டியையும், சன் கிளாசையும் மட்டும்தான் கழற்றவில்லை. ஆனால், ஒட்டுமொத்த அதிகாரிகளின் முன் அவமானப்படுத்தி, விகாரை கட்ட அனுமதியும் வாங்கிவிட்டார். அப்புறம் வெளியே போய், “அடா கவர்னர், நீ பெருந்தோட்டத்துக்கு போ! இங்கே என்ன செய்கிறாய்? இங்குள்ள தமிழர் கூட உனக்கு ஆதரவு இல்லை!” (ஒயா யன்ன வத்துகரேட்ட! மே மொகத கரன்னே? மே இன்ன தமிழ ஜனயாத் ஒயாட கெமத்தி நே!) என்று வீதியில் ஆர்ப்பாட்டம் செய்து விட்டுப் போய் விட்டார். இதைவிட என்ன இன்சல்ட் வேண்டும்? அதற்கு கவர்னரின் பதில் என்ன? அவமானம் தாங்காமல் தற்போது ஓய்வுக்காக செந்திலர் டமில்நாட்டுக்கு போயுள்ளாராம். இதுதான் இவரது பதில். இதைவிட மனுசன் ஆம்பளையாக பதவியை ரிசைன் பண்ணி இருந்தால், பௌத்த அராஜக நிலைமையை இன்டர்நேசனலுக்கு எடுத்துக் காட்டியவராக ஹிஸ்டரியில் இடம் பிடித்திருப்பார். ஆனால், அது உண்மை ஹீரோ வேலை. இதுகள் எல்லாம் கார்ட்போர்ட் ஹீரோக்கள். இவர்களிடம் இதுவெல்லாம் எதிர்பார்ப்பது ரொம்ப ஓவர். வீண்.

★ ராஜ்நாத் சிங்கரின் இலங்கை விசிட் திகதி குறிக்காமல் இடைநிறுத்தப்பட்டது, ரணிலருக்கு வைக்கப்பட்ட செக் என எவரையும் விட ரணிலருக்கு நன்கு தெரியும். பார் போற்றும் பாரத நாட்டை சமாளிப்பது எப்படி என யோசனை சொல்பவருக்கு, பாண்டியனை போல் ஆயிரம் பொற்காசு என அறிவிக்காதது மட்டும்தான் நடக்கவில்லை. மற்றபடி தலையை பிய்த்துக்கொண்டுள்ளாராம் ரணிலர். இன்டர்நெசனலை கையாள்வதில் தன்னை விட கெட்டிக்காரர் இங்கே முழு சிலோனிலும் எவருமில்லை என கொஞ்சம் ஓவராக மேம்போக்குடன் திரிந்த ரணிலர், இன்று வாழை மரத்தில் கொத்தி சிக்கிய மரங்கொத்தியைப் போல் தவிக்கிறார் என FOCUSக்கு தகவல். ஏனெனில், ரணிலரின் மூளைக்கு, இந்தியாவுக்கு எதிராக சீனாவும், சீனாவுக்கு எதிராக இந்தியாவும் எவ்வளவு தூரம் வரும் என மிக நன்கு தெரியும். எனவே, அதற்கு வாலையும், இதற்கு தலையையும் காட்டி வாழும் காலம் முடிவடைகிறது என்பதே ரணிலரின் கவலை.

★ முற்போக்கு கூட்டணியில் முறுகல்நிலை. நான் இனி தனியே போவேன். நுவரெலியாவிலும் தனி. பதுளையிலும் தனி. கண்டியிலும் தனி என்ற திகம்பரரின் இ.தொ.கா சார்பு தன்னிச்சை போக்கால், தன் மலைநாட்டு முன்னணி கட்சியின் எதிர்காலம் என்னாவது என ராதாகிருஷ்ணர் வெறுத்துப் போய் நிற்கிறாராம். இதைப் பேசி நிறுத்துங்கள் அல்லது வெளியே வாருங்கள் என மலைநாட்டு முன்னணிக்கு உள்ளேயும் இதனால் தலைவர் ராதாகிருஷ்ணர் மீது கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாம். தன்னிச்சையாக எவராவது போனால் அழிவு அவரவருக்குதான். முடிந்தால் நுவரெலியாவில் அவர் மட்டும் வரலாம். உதயரும் அழிவார். மகனுக்கும் ரோட் குளோஸ். அவர் கட்சியும் அழியும். ஆகவே, டோன்ட் வொரி, என்று கண்டி வேலர்தான், ராதாகிருஷ்ணருக்கு ஆறுதல் சொல்கிறாராம் என FOCUSக்கு தகவல். கணேசர் இதெல்லாம் ஒரு அரசியல் கூட்டணியில் சகஜம், போனால் போகட்டும், இருந்தால் இருக்கட்டும், நீங்கள் கூலாக இருங்கள், என கூலாக சொன்னாராம்.

★ ஒரு வாரத்துக்கு முன்னர், ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜிதர் மொட்டின் கூட்டுக்கட்சியான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி எம்.பி ஒருவரை தன் ஒபீசுக்கு அழைத்து டிஸ்கசன் நடத்தினார். போட்டோ பிடித்தார். டிஸ்கசன் செய்ய அந்த குருநாகலை எம்.பி வந்து போனார். போன மனுஷன் அறையை விட்டு ஒரு அடி எடுத்து வைக்க முன்னர் சஜிதர் ஒபிஸில் இருந்து ஒரு மீடியா ஸ்டேட்மன்ட் பறந்தது. இதோ இவர் இன்று வந்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார் என்று ஒரு செய்தியும், ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டு என்றும் ஒரு செய்தியும் வந்தது. வந்து போன மச்சான் கடுப்பாகி அப்படி எல்லாம் ஒன்றுமில்லை, சும்மா பேசினோம், எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று எதிர் ஸ்டேட்மன்ட் விட்டுவிட்டார். இது முதன் முறை அல்ல. இதற்கு முன்னும் இப்படிதான் என FOCUSக்கு தகவல். டலஸ் குரூப், தயாசிறி ஆகியோரும் சஜிதரிடம் பேச வர, இவர் அதை கூட்டு என சொல்ல, பின்னர் அவர்கள் அதை மறுக்க, நல்ல மட்டக்களப்பு மகிடிக் கூத்துதான் போங்கள். ஆனால், எது நடந்தாலும் சஜிதர் வெட்கமில்லாமல் தன் முயற்சியை தொடர்வதுதான் இங்கே செய்தி.

★ கணேசர் கனடா போய் வந்த கதை. கூட்டங்கள், கலந்துரையாடல்கள், செல்பிகள், வரவேற்புகள், டின்னர்கள் என கலர்புல்லாக பயணம் முடிந்தது. ஒருவாரம் பேஸ்புக்கில் இவர்தான் ஹீரோ. என்ன ஹீரோவாக இருந்தாலும், நிகழ்ச்சி நிரலில் இருந்த கடைசி மீட்டிங் நிகழ்ச்சியை கண்ட மனுஷன் டென்சனாகி கடைசி நேரத்தில் அதை கென்சல் செய்து விட்டாராம். அது என்ன? அண்ணை, கடந்த முறை சுமந்திரரும், சாணக்கியரும் போய் முறுகல்பட்ட அதே இடத்தில் கூட்டம் என்று கணேசரின் தனிப்பட்ட நண்பர் சொல்லி எச்சரித்ததும், கணேசர் இந்த கூட்டம் வேண்டாமே என்று ஒரேயடியாக கூறி விட்டாராம். இலங்கையில் வாழும் ஈழத்தமிழரின் முன்னுள்ள பிரதான சவால் என்ற தலைப்பில் நடந்த பல மூடிய கலந்துரையாடல்களில், அரசியல் தீர்வு என்பதில் சாதாரண மக்களுக்கு ஆர்வம் இல்லாமை, முழுக்க முழுக்க வெளிநாட்டு மோகம், அதனால் அங்கே ஜன எண்ணிக்கை குறைவது என்பவைதான், என்று கூறியவர் அதை பொதுகூட்டத்தில் கூறத் தயங்கியது நியாயம்தானே என கனடா டமில் தம்பி FOCUSக்கு சொன்னார்.



★ வடக்கில் அருண்சித்தர், கடந்த முறை எலக்சன் வேலை செய்தது, அங்கஜருக்கு ஆகும். அங்கஜர் வடக்கில் மிக அதிக விருப்பு வாக்குகளை எடுக்க இரண்டு காரணங்கள். ஒன்று, வேலை வாய்ப்பு வாக்குறுதி, அடுத்தது, அருண்சித்தர். ஆகவே, தன்னை விட்டுப் பிரிந்த அருண்சித்தரின் சுயமுயற்சி முதலில் தனக்கு வைக்கப்படும் ஆப்பு என்பது அங்கஜரின் இன்றைய துயர். அதேபோல் யாழில் டக்கரின் கட்சி வாக்குவங்கி, பிரேமரின் புரட்சிக் கட்சி வாக்குவங்கி ஆகிய சாதீய சிறுபான்மை வாக்குகள்தான், அருண்சித்தரை வைத்து இன்டர்லிஜன்ஸ் திரட்ட முயலும் டார்கெட் என FOCUSக்கு தகவல். இன்டர்லிஜன்சின் இறுதி இலக்கு அருண்சித்தரை பாராளுமன்றம் கொண்டு வருவதாம். கடந்த முறை சொன்னோம். இன்டர்லிஜன்ஸ் ரிப்போர்டை கேட்ட ரணிலர் இதற்கு ஓகே சொல்லிவிட்டாராம்.



★ சிங்கள மகா சிந்தனையிடம், மாத்தளை சம்பவத்தால் ஜீவனர் வெறுப்பை தேடிய நிலையில், அதே வெறுப்பை செந்திலர் திருகோணமலையிலும் தேடியுள்ளார். இவர்களுக்கு நல்ல பதவி கொடுத்து அமைதியாக வேலை செய்ய சொன்னால், போகுமிடத்தில் எல்லாம் ஏன் அவசரப்பட்டு சண்டை போட்டு எனக்கு தேவையற்ற தொல்லைகள் தருகிறார்கள் என தொழிலாளர் காங்கிரசின் டபள் தலைகளால் ரணிலர் கடுப்பேறி உள்ளாராம். விரைவில் பதவி மாற்றங்கள் நடைபெறலாம். இது நமது இரட்டைகளின் முதிர்ச்சியற்ற செயல் என தொழிலாளர் காங்கிரசின் பழைய மூத்தவர் சொல்லி வருத்தப்பட்டதாக FOCUSக்கு தகவல்.

★ ரிசாத்தரின் மக்கள் காங்கிரசின், அநுராதபுரம் எம்.பி ஹிசாக் ரகுமானர், ரொம்ப நாளாக தன் எதிர்காலம் பற்றி கவலை கொண்டுள்ளார். அநுராதபுரத்தில் தன் வெற்றி, தனது சொந்த வெற்றி. அன்று நாடு இருந்த நிலையில், அநுராதபுரம் போன்ற பௌத்த பூமியில் ரிசாத்தரின் பெயர் சொல்லி வாக்கு வாங்க முடியுமா என அவர் கேட்பதில் நியாயம் உண்டு. ஆனால், ரிசாத்தரின் ஒரே கொள்கை என்னவென்றால், தான் ஜெயிலில் இருந்தபோது தன்னை வந்து பார்க்காத எவனும் இனி என் கட்சியில் இல்லை. உள்ளே சேர்க்கவும் மாட்டேன். நொமிநேசன் கொடுக்கவும் மாட்டேன், என்பதாகும். உன் நொமிநேசன் எனக்கு வேண்டாம், உன் பெயர் சொன்னாலேயே எனக்கு கிடைக்கும் ஓட்டும் கிடைக்காது, என்று கடுப்பான ஹிசாக்ரகுமானர் சஜிதரின் காலில் நீண்ட காலம் விழுந்து கிடந்தார். ஆனால், ரிசாத்தரின் மக்கள் காங்கிரஸ் தனது பங்காளி கட்சி என்பதால், சஜிதர், ஹிசாக் ரகுமானரை உள்ளே எடுக்கவில்லை. இப்போது, ரிசாத்தர் ரணிலர் பக்கம் நிற்பது ஏறக்குறைய கன்பர்ம் என்பதால், ஹிசாக் ரகுமானருக்கு, சஜிதர் ஓகே சொல்லிவிட்டாராம் என FOCUSக்கு தகவல்.




★ தொழிலாளர் காங்கிரசின் டபள் தலைகளின் செயல் எல்லாம் சினிமா ஸ்டைல்தான். டாம் தூம் என சப்தம் மட்டும்தான். கடைசியில் எந்த தீர்வும் இல்லை. பாயும்புலி போல் காட்டி, கடைசியில் இருப்பதும் போச்சு கண்ணாளா என்ற நிலைதான் என்ற இரண்டாம் FOCUS செய்தி. மாத்தளையில் எடுப்புக்காட்டிய காரணத்தால், கடைசியில் ஒன்றும் ஆகவில்லை. ஆனது என்னவோ, மலைநாட்டில் தமிழருக்கு காணி பகிர்ந்து அளித்து காணி பிரச்சினை தீர்ப்பதிலும் சிக்கல்தான். ப்ளான்டேசன் கம்பனிகள் எந்த காரணத்தைக் கொண்டும் ஜீவனரை மன்னிக்க தயார் இல்லை. சமாதானம் செய்யவும் தயார் இல்லை. மொட்டுக் கட்சியின் மலைநாட்டு பெரும்பான்மை எம்.பிக்களும் சிங்கள பௌத்த மகா சிந்தனையுடன் பொருமிக்கொண்டு இருக்கிறார்களாம். சத்தமில்லாமல் செய்ய வேண்டிய வேலையை இப்படி பெரிய எடுப்பில் குழப்பி விட்டு விட்டார்களே என்று மலைநாட்டின் மூத்த யூனியன்காரர் ஒருவர் கவலையுடன் கூறுகிறார்.

★ ஜே.வி.பி தலைமையில் தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை நாம் வைத்துள்ளோம். அதில் சிவில் சமூகங்களை சேர்க்கலாம். அரசியல் கட்சிகள் பேசலாம். ஆனால், எம்மை நோக்கி பேச வரும் இன்றைய எல்லா அரசியல் கட்சிகளையும் அப்படியே சேர்க்கும் எண்ணம் எமக்கு இல்லை. இன்றைய அரசியல் கட்சிகளில் ஐடியலோஜி என்ற கொள்கை வழி வருபவர்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களை மட்டும் இணைத்துக்கொள்ள நாம் தயார் என்று, தம்மை சந்தித்த டலஸ் அணியினருக்கு நீண்ட விளக்கம் அளித்தாராம். ஜெனரல் செக்கறடரி டில்வின் சில்வா என FOCUSக்கு தகவல். உம்முடன் யார் கூட்டணி சேர வந்தது? நாம் இங்கே ரணிலருக்கு எதிராக எதிரணியின் பொதுவேட்பாளரை நியமிக்க வாய்ப்பு இருக்கிறதா என தெரிந்து போகவே வந்தோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு நாம் தத்தமது கட்சிகளில் பொதுத்தேர்தலுக்கு போவோம். அதை கேட்க வந்தால் நீங்கள் பெரும் பேச்சு பேசுகிறீர்களே? என்று டிலானர் பதிலுக்கு சொன்னாராம். கடைசியில் சந்தோசமாக கைகுலுக்கி சந்திப்பு முடிவுக்கு வந்தது.

★ முறுகல் நிலை தொழிலாளர் காங்கிரசிலும். இரகசியமாக ஜீவனரும், திகம்பரரும் போடும் பிளான் என்ன? ஒருவர் ரணிலருடன் இருப்போம். இன்னொருவர் சஜிதருடன் இருப்போம். உன் அணி கவர்மென்ட் என்றால், நீ என்னை உள்ளே எடு. என் அணி கவர்மென்ட் அரசாங்கம் என்றால் நான் உன்னை உள்ளே எடுக்கிறேன். நாம் இருவரும் எப்படியும் அமைச்சர்கள். இரண்டு கட்சிகளிலும் உள்ள மற்றவர்கள் விரலை சூப்பிக்கொண்டு இருக்கட்டும். இதுதான் இவர்கள் பிளான். இன்று கவர்னர். நாளை அமைச்சர் ஆக வேண்டும். இது செந்திலரின் பிளான். ஆகவே, திகம்பரருடன் ஜீவனர் போடும் பிளான் தனது எதிர்காலத்தையும் தகர்க்கும் என செந்திலர் நினைப்பது ஆச்சரியமில்லை என FOCUSக்கு தகவல். ஏன் இந்த தேவையற்ற வேலை? தமது பாதைகள் மூடப்படுகின்றனவா என இரண்டாம் மட்டத்தவர் மத்தியிலும் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

★ என்ன நடந்தாலும், ரணிலரின் தலைமையில் நமது கவர்மென்ட் உருவாகியே தீரும் என சபதம் போட்டு வேலை செய்கிறார், நிமல் லான்சர். அவரது லிஸ்ட் ஏறக்குறைய ரெடி. அடிக்கடி ரணிலரிடம் காட்டி ஓகே வாங்கிக்கொண்டு இருக்கிறாராம். தமிழ், முஸ்லிம் கட்சிகளை அவர் சீண்டுவது இல்லை. அதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்பது ரணிலரது உத்தரவு. இன்றைய தினம், மஹிந்தர் எவர் மீதாவது, மிக அதிக கோபம் கொண்டுள்ளார் என்றால், அது நிமல் லான்சர் மீதுதான். இதில் வேடிக்கை என்னவென்றால், மஹிந்தரும் ரணிலர்தான் அடுத்த பிரசிடேன்ட் ஆகவேண்டும் என்று விரும்புகிறார். சஜிதரையும், அனுரரையும் விட ரணிலர்தான் தனக்கும், தன் மகனுக்கும் பாதுகாப்பு என அவர் நினைக்கிறார். ஆனால், ரணிலருக்கு ஆள் திரட்டும் வேலை தன் தலைமையில் நடக்க வேண்டும். அப்போதுதான் ரணிலருடன் பேரம் பேச முடியும் என்பது அவர் கணிப்பு. ஆனால், நிமல் லான்சர் தலைமையில் திரண்டுள்ள அணி, ராஜபக்சர்களுடன் எந்தவொரு தொடர்பையும் வைக்க தயார் இல்லை. அந்தளவு அவர்கள் ராஜபக்சர்கள் தொடர்பில் வெறுத்து போய் உள்ளார்கள். மேலும் இந்த செனல்–போர் (Chanel Four) காரணமாக மீண்டும் ஈஸ்டர் சண்டே குண்டு சம்பவம் வெளியே வந்து விட்டது. கத்தோலிக்கரான நிமல் லான்சருக்கு உண்மை தெரியும் என்பதால், ராஜபக்சர்களை விட்டு விலகி நடக்கிறார் என FOCUSக்கு தகவல். என்ன, எப்போது இந்த டீம் வெளியே பப்ளிக்காக அறிவிக்கப்படும் என்பதே இன்றுள்ள பெரும் கேள்வி. வெயிற், நான் சொல்லும்வரை பொறுங்கள் என்பதே ரணிலரின் கட்டளை.

★ தீபாவளிக்கு தீர்வு வரும் என பேய்க்காட்டிக்கொண்டு திரிந்த சம்பந்தரை இந்த தீபாவளியுடன் ஓய்வுபெற வைக்க கடும் முயற்சியை மேற்கொள்ள டயஸ்போரா குழுக்கள் தீர்மானித்துள்ளன என FOCUSக்கு தகவல். சிங்கள – பௌத்த ஆதிக்கவாதத்தை திட்டி, குறை கூறி எதிர்க்கும் அதேவேளை, நமது அரங்கையும் சுத்தம் செய்யவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக சமீபத்தில் நடந்த ஒரு இணைய சந்திப்பில் இணைந்த உலக டயஸ்போரா குழுக்கள் மத்தியில் ஏகமனதாக பேசப்பட்டதாம். ஐயா போவாரா? திண்ணை காலியாகுமா? அப்படியே நடந்தாலும் அடுத்த சண்டைக்களம் ஆரம்பம் ஆகி விடாதா என்ற கேள்விகளும், பதில்களும் காரசாரமாக கேட்கப்பட்டு, பதில்களும் கூறப்பட்டனவாம். எது எப்படியானாலும், சம்பந்தரை இந்த தீபாவளியுடன் ஓய்வு பெற வைக்க வேண்டும் எனவும் இதற்கான ஆதரவை, டயஸ்போரா முழுக்க பெற வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.



தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, செப்டெம்பர் 10, 2023

# மாற்றம் ஒன்றே மாறாதது!

இந்தியாவில் நடந்த ஜி20 மாநாட்டையொட்டி அனுப்பப்பட்ட அழைப்பிதழில் 'பாரத குடியரசுத் தலைவர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தமை விவாதப்பொருளாகி இருக்கிறது.

"இந்தியா என்பது பாரதம் என்று மாற்றப்பட்டது, பலருக்கும் எதிர்பாராத அதிர்ச்சி. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் செய்யப்பட்ட பெயர் மாற்றம் அரசியல் சாசனத்துக்கு விரோதமானது'' என்பதுவரை இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது, "இந்தியா என்கிற பெயர் உலகளாவிய அளவில் பரவலாகத் தெரிந்திருந்ததால் அதையே பயன்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது எனலாம். ஆனாலும்கூட, இந்திய அரசியல் சாசனத்தின் முதல் வரியிலேயே 'இந்தியா என்கிற பாரதம்' (இண்டியா தட் ஈஸ் பாரத்) என்றுதான் இருக்கிறது. வருங்காலத்தில், ஆங்கிலேயர்கள் வழங்கிய "இந்தியா'' என்கிற பெயர் அகற்றப்படும் அல்லது அகற்றப்பட வேண்டும் என்கிற உள்நோக்கம் இருந்ததை அது வெளிப்படுத்துகிறது.

ஆங்கிலேயர்களுக்கு முன்னர் வந்த இஸ்லாமியப் படையெடுப்பாளர்கள், "பாரதம்'' என்று பரவலாக அழைக்கப்பட்ட பகுதியை, "ஹிந்துஸ்தான்'' என்று அழைத்தார்கள். "சிந்துஸ்தான்'' என்பது "ஹிந்துஸ்தான்'' என்று மருவியது என்று சொல்வோரும் உண்டு. எது எப்படியோ, "இந்தியா'' என்கிற பெயர் வழக்கத்துக்கு வந்தது ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர்தான்.

புராண, இதிகாசங்களில் முக்கடலுக்கு இடையேயும் இமய மலையை வடக்கு எல்லையாகவும் கொண்ட பகுதி "பரதக் கண்டம்'' என்று அழைக்கப்படுகிறது. பரதக் கண்டம் என்று மட்டுமல்லாமல், ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான், திபெத், பர்மா, இந்தோனேசியா, மலேசியா, சுமத்ரா, பாலி, வியட்நாம், தாய்லாந்து உள்ளடக்கிய பெரிய பகுதி "பாரத வர்ஷம்'' என்று வழங்கப்பட்டது.

ஆங்கிலத்தில் "இந்தியப் பிரதமர்'' என்று அழைத்தாலும், இந்திய மொழிகளில் எழுதும்போதும், அழைக்கும்போதும் "பாரதப் பிரதமர்'' என்றுதான் பெரும்பாலும் அழைக்கப்படுகிறது. "இந்தியா'' என்று இருந்தாலும், பண்டித ஜவஹர்லால் நேரு காலத்திலும், இந்திரா காந்தி ஆட்சியிலும் பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்களுக்கு "பாரத் என்கிற அடைமொழியுடன் தான் பெயர் சூட்டப்பட்டன.

பெயர் மாற்றத்தால் என்ன வந்துவிடப்போகிறது என்கிற கேள்வியை எழுப்புவதில் அர்த்தமில்லை. அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்ட எல்லா நாடுகளும், தங்களது பெயரை முந்தைய பெயருக்கு மாற்றியிருக்கின்றன. சீனா கூட தனது தலைநகரான பீஜீங்கை ''பெய்ஜிங்'' என்று மாற்றியிருக்கிறது. "மதராஸ்'' மாகாணத்தை "தமிழ்நாடு'' என்று பெயர் மாற்றியதற்கும், கல்கத்தா கொல்கத்தாவானதற்கும், பம்பாய் மும்பையாக மாறியதற்கும் என்ன காரணமோ, அதே காரணம் "இந்தியா'' என்பது "பாரதம்'' என்று மாற்றப்படுவதற்கும் பொருந்தும். சிலோன் என்று இருந்து பின்னர் பெயர்மாற்றத்துடன் வந்ததே இலங்கை.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட வேண்டும். இந்திய அரசியல் சாசனம் ஹிந்தியில்தான் முதலில் எழுதப்பட்டது. அதில் "பாரத்'' என்கிற வார்த்தைதான் எல்லா இடத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆங்கில மொழிபெயர்ப்பில்தான் "இந்தியா'' என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டது.

மகாகவி பாரதியாரின் தீர்க்க தரிசனம் இங்கு வியக்க வைக்கிறது. தனது பாடல்களில் அவர் "பாரத தேசம்'', "பாரத மாதா'', "பாரத சமுதாயம்'' என்று பரவலாக "பாரதம்'' என்றுதான் நூறாண்டுகளுக்கு முன்பே குறிப்பிடுகிறார்.

இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு 1945இல் ஐக்கிய இராச்சியத்துக்கு தேர்தல் நடந்தபோது கன்சர்வேட்டிவ் கட்சி, தொழிலாளர் கட்சி ஆகிய இரண்டுமே இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பது தொடர்பான வாக்குறுதிகளை தங்கள் தேர்தல் அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்தன.

அந்தத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றிபெற்றது. 1945 செப்டெம்பரில் அப்போதைய இந்திய வைஸ்ராய் லார்ட் வேவல் "இந்தியாவுக்கு முழுமையான சுயாட்சி வழங்கும் திசையில்" செல்வதில் பிரிட்டிஷ் அரசு உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். இதற்குப் பிறகு மிக வேகமாக விடயங்கள் நடக்க ஆரம்பித்தன.

முடிவில் இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகள் பிரிக்கப்பட்டு, 1947 ஓகஸ்ட் 14, 15ஆம் திகதிகளில் சுதந்திரமளிக்கப்பட்டது. இதையடுத்து, இந்தியாவின் சட்டம் இயற்றும் அவையும் மாநிலங்கள் அவையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, இந்தியாவின் அரசியலமைப்பு அவை உருவாக்கப்பட்டது. இந்த அரசியலமைப்பு அவையில் விவாதிக்கப்பட்ட விவாதங்களின் அடிப்படையில், இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவை (draft) டாக்டர் அம்பேத்கர் உருவாக்கினார்.

இந்த வரைவை 1948 நவம்பர் 4ஆம் திகதி டாக்டர் அம்பேத்கர் அரசியலமைப்பு அவையில் சமர்ப்பித்தார். இந்த முதல் வரைவில் நாட்டின் பெயரைப் பற்றிக் கூறும் Article 1இல் பாரத் என்ற வார்த்தை இடம்பெறவில்லை. அதில் "India Shall be a Union of States" என்றுதான் குறிப்பிடப்பட்டது.

இதற்கு கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்குப் பிறகு அதாவது 1949 செப்டெம்பர் 17ஆம் திகதி சில திருத்தங்களை டாக்டர் அம்பேத்கர் முன்வைத்தார். அதில் ஒரு திருத்தமாக, "India, that is, Bharat shall be a Union of States" என்ற திருத்தமும் முன்வைக்கப்பட்டது. அன்றைய தினம் அவை உறுப்பினர்கள் எல்லோருமே Union of States என்ற வார்த்தைகள் குறித்துதான் கவலைப்பட்டார்களே தவிர, India that is Bharat என்பது குறித்து யாரும் பேசவில்லை. அன்றைக்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அம்பேத்கர் கொண்டுவந்த அந்தத் திருத்தம் ஏற்கப்பட்டது.

நரேந்திர மோடி அரசின் இந்த முடிவுக்குப் பின்னால் அரசியல் நோக்கம் இருக்கிறது என்கிற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை. அப்படி இருந்தாலும் அதில் தவறு காண முடியாது. எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து அமைத்திருக்கும் கூட்டணிக்கு "இந்தியா'' என்று பெயரிட்டு, ஒட்டுமொத்த இந்தியாவும் பிரதமர் மோடிக்கும், பாஜகவுக்கும் எதிராக அணிதிரண்டிருப்பதுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயலும்போது, அதை அரசியல் ரீதியாக பாஜக எதிர்கொள்ள முனைந்திருப்பதில் என்ன தவறு?

நாடு விடுதலை பெற்றதும், எல்லாத் தரப்பினரும் இணைந்து நடத்திய போராட்டத்தின் பலனை காங்கிரஸ் கட்சி தனதாக்கிக் கொள்வது நியாயமல்ல என்கிற நோக்கில், "காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடலாம்'' என்று அறிவுரை வழங்கினார் மகாத்மா காந்தி என்பது வரலாறு. கட்சி கலைக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, கட்சியின் கொடியைப்போலவே தேசியக் கொடியும் வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம் காங்கிரஸ் கட்சி அரசியல் ஆதாயமடைந்த வரலாறும் மறந்துவிடக்கூடியதல்ல. காலங்கள் மாறும் காட்சிகள் மாறும். மாற்றம் ஒன்றே மாறாதது.

# லசந்த குறித்து கோட்டாபய மௌனம்





உறுதிப்படுத்தப்படாத நிலையில், நம்பகத்தன்மையுடன் கூடிய வகையில் உலாவந்த கதைகள் தற்போது சனல்-4 அலைவரிசையால் உயிர்ப்புப் பெற்றுள்ளன. அந்தவகையில் சனல்-4 அலைவரிசையின் அண்மைய செய்தி இலங்கை அரசியலிலும் பொதுவெளியிலும் சர்வதேச அரங்கிலும் பேசுபொருளாகியுள்ளது.

### கத்தோலிக்க சமூகம்

2019 ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்த சனல்-4 அலைவரிசையின் செய்திப் பெட்டகம் கத்தோலிக்க சமூகத்தினதும் மற்றும் பாதிக்கப்பட்டநிலையில் நீதி கோரி நிற்கும் உறவுகளினதும் குரலை உரத்து ஓங்கி ஒலிக்க வழிவகுத்துள்ளது. தமக்கான நீதி செத்துவிடவில்லை என்பதை கத்தோலிக்க உலகத்துக்கும் நீதி கோரி நிற்போருக்கும் தமது பயணத்தை மேலும் தொடர்வதற்கான சக்தியையும் தெம்பையும் கொடுத்துள்ளது. குறிப்பாக, கத்தோலிக்க சமூகத்துக்கான நீதி நோக்கிய பயணத்தில் தலைமையேற்று அந்த சமூகத்தினரை வழிநடத்தி வருகின்ற கர்தினால் மெல்கம் ரஞ்சித்துக்கு நீதி கோரிய பயணத்தை அடுத்த தளத்திற்கு எடுத்துச்செல்ல அல்லது முன்நகர்த்த சனல்-4 அலைவரிசையின் செய்திப் பெட்டகம் உறுதுணையாக அமைந்துள்ளது. அதேவேளை, ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தையடுத்து ஈஸ்டர் தாக்குதல் அரசியல் நலன்களை அடைந்துகொள்ள அரங்கேற்றப்பட்ட அரசியல் சதி நாடகம் என கர்தினால் மெல்கம் ரஞ்சித்தும் கத்தோலிக்க சமூகமும் கொண்டிருந்த எண்ணப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவும் சனல்-4 செய்திப் பெட்டகம் அமைந்துள்ளது.



**சனல் 4 அலைவரிசையின் உண்மைகள் உயிர் பெறுமா?**

**சனல்-4 மீண்டும் ஓர் அதிர்வலையை உருவாக்கியுள்ளது**

### முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுப்பு

2019 ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான சனல்-4 இன் சமீபத்திய ஆவணப்படத்தின் உள்ளடக்கங்களை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். மேலும் இந்த ஆவணப்படம் 2005ஆம் ஆண்டுமுதல் ராஜபக்ஷவின் பாரம்பரியத்தை கருமையாக்கும் நோக்கில் பெரும்பாலும் ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டம் எனவும் தெரிவித்துள்ளார்.

### பொய்களால் நிரப்பப்பட்ட படம்

முன்னாள் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், இதே சனல் ஒளிபரப்பிய முந்தைய படங்களைப்போலவே இந்தப் படமும் பொய்களால் நிரப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

### லசந்த குறித்து அறிக்கை பேசவில்லை

ஆனால், இந்த அறிக்கையில் சனல்-4 வெளியிட்டுள்ள ஆவணப் பெட்டகத்தில் இடம்பெற்றுள்ள சன்டே லீடர் ஆசிரியர் லசந்த கொலை குறித்த பதிவுகளுக்கு பதிலளிக்கப்படவில்லை. ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கத்தோலிக்க உலகத்துக்கு தான் மேற்கொண்ட பணிகள் குறித்து விலாவாரியாக முன்னாள் ஜனாதிபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### வழமைபோல் பேச்சுப் போர்

நாடாளுமன்றிலும் வெளியிலும் வழமைபோல் சனல்-4 அலைவரிசை துகில் உரியப்பட்டு நிற்கின்றது. முள்ளிவாய்க்கால் செய்திப் பெட்டகத்தைப்போன்று ஈஸ்டர் குண்டுவெடிப்பு பெட்டகமும் காரசாரமான விவாதத்துக்குள் சிக்குண்டுள்ளது.

### சர்வதேச விசாரணை கோரும் தென்னிலங்கை

முள்ளிவாய்க்கால் படுகொலைகள் குறித்த சனல்-4 அலைவரிசையின் ஆவணப் பெட்டகத்தை மறுதளிக்கும் தென்னிலங்கை அரசியல் களம், தமிழர்கள் கோருகின்ற சர்வதேச நீதி விசாரணையையும் மறுதலித்து நிற்கின்றனர்.

ஆனால், அதே அணியிலுள்ள ஒருசாரார் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான தற்போதைய சனல்-4 அலைவரிசையின் ஆவணப் பெட்டகத்தில் அடங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றனர்.

### பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எம்.பி.

ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான சனல்-4 குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமாகும். அதேவேளை, தெரிவுக் குழுக்கள் எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைக்கு அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்களில் சுரேஷ் சாலி ஈடுபட்டுள்ளார் என நான் நம்புகிறேன். அவர் ராஜபக்ஷக்களின் கழிவறைகளை கழுவியவர். 2019ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதல்களிலும் ஈடுபட்டார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

இதே நிலைப்பாட்டையே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.

2009 ஆம் ஆண்டு எமது மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். ஆடைகள் களையப்பட்டு இளைஞர்கள் நீர்த்தடாகத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுடன் இசைப்பிரியாவும் அமர்ந்திருந்தார்.

இதனை சனல்-4 அலைவரிசை ஒளிபரப்பு செய்திருந்தது. இதுகுறித்து விசாரணை நடத்துவீர்களா என்று பாராளுமன்றில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

### எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும்

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்து உள்ளக விசாரணையிலோ அல்லது தெரிவுக்குழுவிலோ தமக்கு நம்பிக்கை இல்லை. இவர்களால் உண்மைகளைக் கண்டறிய முடியாது. எனவே, சர்வதேச விசாரணையே வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். முள்ளிவாய்க்கால் மற்றும் குருந்தூர் விவகாரங்களில் எதிர்க்கட்சித் தலைவரின் நிலைப்பாடு என்ன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் சார்ள்ஸ் நிர்மலனாதன் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

### பிளவுண்டுள்ள தென்னிலங்கை

பாராளுமன்றில் ஆளும் எதிர்க்கட்சி என ஈஸ்டர் குண்டுவெடிப்பு விவகாரத்தில் பிளவுண்டு இரு அணிகளாக நிற்பதுபோன்று பொதுவெளியிலும் குண்டுவெடிப்புக்கு நீதி கோரி ஒரு பகுதியினரும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாக அதாவது சனல்-4 அலைவரிசைக்கு எதிராக மற்றொரு பகுதியினரும் களத்தில் இறங்கியுள்ளனர்.

தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைப்பு சனல்-4 அலைவரிசைக்கு எதிராக பிரித்தானிய தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

### தமிழ், முஸ்லிம் பொது மகன்களின் பார்வையில்

சனல்-4 அலைவரிசையின் ஈஸ்டர் குண்டுவெடிப்பு பெட்டகம் குறித்து அமைதியாக அலசிக்கொண்டிருந்த தமிழ், முஸ்லிம் பொது மகன்களின் கருத்துகள் இவ்வாறு இருந்தன.

### தமிழ் மகன்

சனல்-4 அலைவரிசையில் ஒளிபரப்பான ஈஸ்டர் குண்டுவெடிப்பு பெட்டகம் பொய்மையின் விம்பம் என்று கூறி கிடப்பில் போட்டுவிடுவர். முள்ளிவாய்க்கால் கொலைக் களத்தையே இன்றுவரை மறுதலித்து வருபவர்கள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் ஆவணப் பெட்டகத்தை ஏற்று சர்வதேச விசாரணைக்குப் போகும் நிலையில் தென்னிலங்கையின் மனநிலை இல்லை. போரை வெற்றிகொண்டவர்களை குற்றவாளிக்கூண்டில் நிறுத்த தென்னிலங்கை முன்வராது என்பதே தமிழ் மகனின் உள்ளக் குமுறலாக இருந்தது.

### முஸ்லிம் பொது மகன்

முஸ்லிம் சமூகத்தையே பலிக்கடாவாக்கிவிட்டார்களே. சனல்-4 அலைவரிசை உண்மையைப் போட்டுடைத்துள்ளது. தென்னிலங்கை இப்பொழுதாவது கண் திறக்குமா?

### தமிழ் பொது மகன்

எங்கே கண் திறக்கும். சனல்-4 அலைவரிசைக்கு எதிராக வீதியில் இறங்கிவிட்டார்கள். இனி புலம்பெயர் தமிழர்கள் சனல்-4 அலைவரிசைக்குப் பணம் கொடுத்து ராஜபக்ஷக்களுக்கும் நாட்டுக்கும் எதிராக சதி செய்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டுவார்கள். கடைசியில் ஏதும் நடக்க வாய்ப்பிருக்காது.

### முஸ்லிம் பொது மகன்

அப்படியென்றால் எல்லோரும் சேர்ந்து படம் காட்டுகின்றார்களா? என்று வினவினார்.

### தமிழ் பொது மகன்

அப்படித்தான் நடக்கின்றது. நடக்கப் போகின்றது.

நாட்டு நடப்பையும் இன்றைய யதார்த்தத்தையும் தமிழ் மற்றும் முஸ்லிம் பொது மக்கள் நன்றாகவே கணித்துவைத்துள்ளனர் என்பதையே இந்த உரையாடல்கள் உணர்த்துகின்றன. மொத்தத்தில் மீண்டும் ஒரு உண்மை அரசியல் நலன்களுக்காக சாகடிக்கப்படப் போகின்றது.




வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்
Email: vathevaraj@gmail.com

# ★ சனல் - 4 குற்றச்சாட்டுகளை ஆராய விசேட குழு - ரணில் உத்தரவு

# ★ சுரேஷ் சலே – பிள்ளையான் ஆகியோரின் பதவிகளைப் பறிக்கும் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி

## சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

இலங்கையில் 2019 இல் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்த பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பான இலங்கை குறித்த சிறப்பு ஆவணம் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே திடுக்கிடும் சில விடயங்களை வெளிப்படுத்தியது.

இந்த ஆவணம் வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் உட்பட்ட பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களால் நேரடியாக பார்வையிடப்பட்டிருந்தது.

2019இல் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகளில் சஹ்ரானின் அமைப்பில் இருந்து குண்டுதாரிகளால் ஆறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

இதில் 269 பேர் கொல்லப்பட்டு ஏராளமானவர்கள் காயமடைந்த நிலையில், இந்தத் தாக்குதலில் பாதிப்படைந்தவர்களின் சாட்சியங்களும் இருந்தன.

இந்த குரூரத்துக்குப் பின்னால் ராஜபக்ஷ அதிகார மையத்தின் அதிகார ஆசைகள் சார்ந்த உண்மைகள் இருப்பதாகவும் இந்த ஆவணம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த ஆவணத்தின் முக்கால்வாசி பகுதி குண்டுவெடிப்புகள் நடைபெறுவதற்கு முன்னர் இருந்த நிலைமைகளைப் பேசுகிறது. அதில் நவீன இலங்கையின் அரசியல் வரலாறு குறித்த சுருக்கமான விளக்கம் உள்ளது.



### திரிப்போலி படைப்பிரிவு

இந்த ஆவணத்தில் முக்கிய சாட்சியாளராக தோன்றும் அசாத் மௌலானா, ராஜபக்ஷக்களுக்குரிய மொழிபெயர்ப்பாளராகவும் உதவியாளராகவும் சுமார் 20 வருடங்கள் பணியாற்றியவர்.

இவரது சாட்சியத்தில் ராஜபக்ஷக்கள் தமது அரசியல் எதிரிகளை அடக்க திரிப்போலி படைப்பிரிவு எனப்படும் இரகசிய குழுவை உருவாக்கியதாகவும் கோட்டாபய இந்தப் பிரிவை நிறுவ உத்தரவிட்டபோது தான் அந்த அறையில் இருந்ததாகவும் அசாத் மௌலானா கூறியுள்ளார்.

அத்துடன், ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கு முதல் வருடமான 2018இல், சஹ்ரானின் தேசிய தௌவீத் ஜமாத் உறுப்பினர்களுக்கும் ராஜபக்ஷவின் இராணுவ உளவுத்துறையின் தலைவராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவுக்கும் இடையே ஒரு சந்திப்பை நடத்தவும் தானே உதவியதாகவும் குறிப்பிட்டார்.

### குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணை

தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என இந்திய உளவுத்துறை வட்டாரங்கள் எச்சரித்தும் இதுகுறித்து சுரேஷ் சலேயின் இராணுவ உளவுத்துறை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்போதும் அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் நாயகமாக உள்ள சலே குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை தடுத்தமைக்கான ஆதாரம் இருப்பதாகவும் அசாத் மௌலானா கூறுகிறார்.

### அரசியலில் அதிர்வுகள்

சனல்-4 காணொளி வெளிவந்து கொழும்பு அரசியலில் அதிர்வலைகளை தோற்றுவித்திருக்கிறது.

இந்த காணொளி வெளிவந்த கையோடு எதிர்க்கட்சித் தரப்பிலுள்ள அரசியல்வாதிகள் அரசாங்கத்தை விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் இந்த விவகாரம் ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு முன்னதாக சனல்-4 இந்த ஆவணத்தை வெளியிட்டமை ஜெனீவாவில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படுத்தவே என அரசாங்கம் கருதுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சனல்-4 வழமைபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு முன்னதாக இந்த ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளதாகவும், எனவே, அரசாங்கம் அவசரமாக நடவடிக்கை எடுக்கக்கூடாது, ஒட்டுமொத்த அரசாங்கமும் பதிலளிக்காமல் இருப்பதெனவும், அதற்குப் பதிலாக, குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் மட்டுமே பதிலளிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறாயினும், குற்றச்சாட்டுகளை விசாரிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் முறையான கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கருத்து கேட்கப்பட்டபோது, முறைசாரா வழிகளில் சில பாராளுமன்ற உறுப்பினர்களின் இத்தகைய நோக்கங்கள் குறித்து கேள்விப்பட்டபோதிலும் தமக்கு அவ்வாறான கோரிக்கை எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

### பாதுகாப்புச் சபை கூட்டத்தில் ஆராய்வு

சனல்-4 காணொளி வெளிவந்த மறுநாள் பாதுகாப்பமைச்சின் தலைமையகத்தில் தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் ஜனாதிபதி ரணில் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், படைத்தளபதிகள், பாதுகாப்புத்துறையின் உயரதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். சனல்-4 காணொளியால் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் சபைக்கு விளக்கமளித்தார். அத்துடன், இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் மேற்படி நிறுவனத்துக்கு அனுப்பிய பதிலையும் பாதுகாப்புச் சபைக்கு விளக்கினார் சலே.

இந்த பதில் கடிதத்தை பகிரங்கப்படுத்தினீர்களா? என்று இதன்போது சுரேஷை கேட்டார் ஜனாதிபதி ரணில். அப்படிவழங்காவிட்டால் அதனை பகிரங்கப்படுத்துவதா, இல்லையா என்பதை தீர்மானியுங்கள் என்று சுரேஷிடம் கூறினார் ஜனாதிபதி.

எவ்வாறாயினும் இந்த குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய ஓய்வுபெற்ற நிர்வாக, பாதுகாப்பு அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி இதன்போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை பணித்தார். அந்த அறிக்கையின்படி நடவடிக்கைகளை எடுக்கலாமென இங்கு குறிப்பிட்டார் ஜனாதிபதி.

### சனல்-4 காணொளியால் அரசியலில் களேபரம்

சனல்-4 காணொளியால் ஆளுங்கட்சிக்குள் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் குற்றஞ்சட்டப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய புலனாய்வுத் தலைவர் சுரேஷ் சலே ஆகியோரை விசாரணைகள் ஒன்று நடந்து முடியும்வரை சேவையில், பதவிகளில் இருந்து இடைநிறுத்துமாறு பேராயர் ரஞ்சித் மெல்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி ரணில் நிராகரித்திருக்கிறார் என்று அறியமுடிகின்றது.

சுரேஷ் சலேவுக்கு ஆதரவு தெரிவித்தும், ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விளக்கமளித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வியாழன் அறிக்கையொன்றை விடுத்திருந்தார். அதற்கு முன்னதாக அவர் ஜனாதிபதி ரணிலுடனும் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

எவ்வாறாயினும் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட தகவல்களைக்கொண்டு ராஜபக்ஷக்களை அரசியல் ரீதியாக ஒடுக்கும் வேலையை ரணில் தரப்பு கனகச்சிதமாக செய்துகொண்டுவருகிறது. இதே விடயத்தை முன்னெடுத்து அடுத்த தேர்தலில் ராஜபக்ஷக்கள் பக்கமிருக்கும் கொஞ்சநஞ்ச ஆதரவையும் பறிப்பதே ரணிலின் நோக்கமென அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

★ ஈஸ்ரர் தின தாக்குதல் சதி - சனல் 4 வெளியிடவுள்ள பரபரப்பு வீடியோ - கொழும்பு அரசியல் தலைகீழாக மாறுமா?



### வெளியாகவுள்ள சர்ச்சைக்குரிய வீடியோ

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான சர்ச்சைக்குரிய காணொளியொன்று வெளியாகவுள்ளதாம்.

சனல் 4 தொலைக்காட்சி கடந்த 15 ஆம் திகதி இந்த காணொளியை வெளியிடவிருந்தது. ஆனால், அது பின்போடப்பட்டது. பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளராக பணியாற்றிய ஒருவர் தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார். அவர் தெரிவிக்கும் பரபரப்பு மிக்க கருத்தொன்றின் காணொளியே வெளியாகவுள்ளதாம்.

*(சனல் 4 காணொளி குறித்து 'தமிழன்' பத்திரிகை முன்கூட்டியே செய்திகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது )*

## தீவிரவாதிகளுடன் இணைந்து புலம்பெயர் தமிழர்கள் உதவி!

### சனல்-4 குறித்து பிள்ளையான் குற்றச்சாட்டு



மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு முன்னதாக சனல்-4 நாடகங்கள் போன்றவை இடம்பெறுவது வழமை என பாராளுமன்ற உறுப்பினரான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

அத்துடன், உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் ஏனைய தீவிரவாதிகளுடன் இணைந்து சனல்-4, இந்த ஆவணப்படத்தை தயாரிப்பதற்கு ஆதரவளித்துள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** உங்கள் கட்சியின் பேச்சாளராக பணியாற்றிய அசாத் மௌலானா உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார். உங்கள் பதில் என்ன?

**பிள்ளையான் :** அசாத் மௌலானா எங்களுடன் இருந்தார். நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக பணியாற்றியவேளை அவர் எங்களுடன் பணியாற்றினார். ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அவர் சில தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டார். இதனையும் ஏனைய கஷ்டங்களையும் சுட்டிக்காட்டிய அவர் வெளியேற விரும்பினார்.

அவர் தற்போது நாட்டில் இல்லை. ஒரே இரவில் செல்வந்தராவதற்காக என்ன செய்ய முடியும். இவ்வாறான போலியான – பொய்யான குற்றச்சாட்டுகளை வெளியிடுவதே அதற்கான ஒரே வழி. எங்களைப் போல் அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருக்கவில்லை. அவர் எங்களின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலேயே இணைந்தார்.

அவரால் விடுதலைப் புலிகள் குறித்து எதனையும் தெரிவிக்க முடியாது. இதன் காரணமாக அவர் சர்ச்சைக்குரிய விடயமான உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து பேசியுள்ளார். தற்போது அவர் நாடகமாடுகின்றார், நடிகராக அவர் சிறப்பாக செயல்படுகின்றார்.

**கேள்வி :** இந்த குற்றச்சாட்டுகள் சர்ச்சையை ஏற்படுத்துகின்றன என்பதற்காக நீங்கள் அவற்றை நிராகரிக்க முடியாது? மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்காக ராஜபக்ஷர்கள் இதனை செய்தார்கள் என குற்றஞ்சாட்டப்படுகிறது. உங்கள் பதில் என்ன?

**பிள்ளையான் :** மேற்குலகத்தால் இயக்கப்படும் அரசியல் இயந்திரங்கள் எப்படி செயற்படும் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து அகற்றப்பட்டமைக்கு யார் காரணம்? மேற்குலகமே காரணம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பின்னர் அவருக்கு சாதகமாக மாறிய சூழ்நிலை காரணமாகத் தான் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார் என எவரும் தெரிவிக்க முடியாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னர் அவரது கட்சியான பொதுஜன பெரமுன உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்றது.

இதன் அர்த்தம் என்னவென்றால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னதாகவே சிங்களப் பகுதிகளில் அவருக்கு சாதகமான நிலை காணப்பட்டது. உள்ளூராட்சி தேர்தலுக்கு பிந்தைய தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றிபெற வேண்டும் என்பதே முடிந்த முடிவாகக் காணப்பட்டது.

எனினும், மேற்குலகம் எப்போதும் தனக்கு சார்பானவர்களை இங்கு ஆட்சியில் அமர்த்த விரும்பும். மனித உரிமைகள் பேரவையின் அமர்வுக்கு முன்னதாக சனல்-4 நாடகங்கள் போன்றவை இடம்பெறுவது வழமை. உலகம் எங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் ஏனைய தீவிரவாதிகளுடன் இணைந்து சனல்-4 இந்த ஆவணப்படத்தை தயாரிப்பதற்கு ஆதரவளித்துள்ளனர்.

அவ்வாறான சக்திகள் அசாத் மௌலானாவை அணுகி அவரை பயன்படுத்தியுள்ளன. நான் ஒரு விடயம் குறித்து கவலையடைகின்றேன். சஹ்ரான் ஹாசிமினால் மூளைச்சலவை செய்யப்பட்ட பல இளைஞர்கள் 2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலை தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அவரது தீவிரவாத அமைப்புக்கு விசுவாசமான பலர் உள்ளனர். இன்று அவர்களைப் பற்றி யாரும் பேசுவதில்லை. இன்று முக்கியமான விடயத்திலிருந்து கவனத்தை திசை திருப்புவதே இடம்பெறுகிறது. எதிரணி அரசியல்வாதிகள் அரசியல் செய்யக்கூடாது.

அவர்கள் நாட்டின் அபிவிருத்தி, தேசிய பாதுகாப்பு குறித்து பேசவேண்டும். ஆனால், அவர்கள் பாராளுமன்றத்தில் அர்த்தமற்ற உரைகளை ஆற்றுகின்றனர். அவர்கள் என் பக்கம் விரல்களை நீட்டுகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றவேளை நான் சிறையில் இருந்தேன். சிறைக்குள் இருந்தவாறு என்னால் எவ்வாறு பேரழிவு சதித்திட்டத்தை தீட்ட முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார்.



# தேயிலை பொருளாதாரம் நாட்டுக்கு மிக அவசியம்!

## பெருந்தோட்டக் கம்பனி உரிமையாளர்கள் சம்மேளனத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை விசேட செவ்வி

நேர்காணல் - நா.தினுஷா

**ஒட்டுமொத்த பெருந்தோட்டத் துறையில் மாத்திரம் ஒரு மில்லியன் வரையிலானவர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்பதுடன், மொத்த சனத்தொகையில் 10 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் தேயிலை உற்பத்தி பொருளாதாரத்தை சார்ந்தே இருக்கிறார்கள். தேயிலை உற்பத்தி பொருளாதாரம் வங்குரோத்து நிலையை அடைந்தால், இந்தத் துறையை சார்ந்துள்ளவர்களே பெரும் நெருக்கடிக்குள்ளாகுவார்கள் என்று ஹேலிஸ் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பெருந்தோட்ட மற்றும் பெருந்தோட்டக் கம்பனி உரிமையாளர்கள் சம்மேளனத்தின் பேச்சாளருமான ரொஷான் ராஜதுரை 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வியின்போது தெரிவித்தார்.**

அவருடனான நேர்காணலின் முழு விபரம் வருமாறு,

**சர்வதேச நிலைபேறு மாநாடு உங்களின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றிருந்தது. அதன்போது பெருந் தோட்டத் துறை தொடர்பில் எவ்வாறான விடயங்கள் கவனம் செலுத்தப்பட்டன?**

பெருந்தோட்டத் துறை தொடர்பில் பேசும்போது விசேடமாக தேயிலை முக்கிய இடம் பெறுகின்றது. காலநிலை மாற்றத்துக்கேற்ப தேயிலை உற்பத்தியிலும் மாற்றங்கள் ஏற்படும். அந்த மாற்றம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். தேயிலை இல்லை என்பதால் மழைவீழ்ச்சி அதிகரித்தாலும், குறைவடைந்தாலும் அது தேயிலை உற்பத்தியிலும், அதன் தரத்திலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும். செலவுகளும் அதிகரிக்கும். ஆயினும் காலநிலை மாற்றத்தை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைக் குறைத்துக்கொள்வதற்கான பல்வேறு நடைமுறைகளைக் கையாள முடியும். இந்த நிலைமை தொடர்பிலேயே அந்த மாநாட்டில் கலந்துரையாடியிருந்தோம்.

100 – 150 வருடங்களுக்கு மேலாகவுள்ள தேயிலைச் செடிகளில் தொடர்ந்து தேயிலை பறிக்கவும் முடியாது. அதற்கமைய, இதுதொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அதுதொடர்பில் ஆழ்ந்து சிந்தித்து செயற்படவேண்டிய அவசியம் இருக்கிறது. பெருந்தோட்டங்கள் மாத்திரமல்லாமல், ஐக்கிய நாடுகளில் உலகளாவிய சமவாயம், யுனிசெப் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த தொழிற்றுறையை பாதுகாத்துக்கொள்வதே அதன் நோக்கமாகும்.

விவசாயத் துறையில் தேயிலை உற்பத்தியை பாதுகாத்துக்கொள்வதற்கு இருக்கும் படிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகவுள்ளது. விசேடமாக தேயிலை உற்பத்தித் துறையில் நாங்கள் ஒரு நிறுவனமாக செயற்பட்டாலும், இலங்கையில் 5 இலட்சம் (5,00,000) பேர் வரையில் சிறுதோட்ட உரிமையாளர்களாக இருக்கிறார்கள். பெருந்தோட்டக் கம்பனிகளில் இலட்சக்கணக்கானவர்கள் தொழில் புரிந்தாலும் 10 இலட்சம் பேரை பராமரித்து வருகிறோம். வீடுகள், நலன் அபிவிருத்தி, சுகாதார சேவை என்ற சகல வசதிகளையும் வழங்குகிறோம். பொருளாதார ரீதியாக அவர்களின் வாழ்வாதாரம் அதற்குள்ளேயே அடங்கி விடுகின்றது.

இந்த சமூக கட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்றால், இலாபகரமான முதலீடொன்று இருக்க வேண்டும். அண்மைக்காலமாக ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. ஆடைக் கைத்தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்கள் இன்று வீடுகளை சார்ந்து இருக்கிறார்கள். வேறு தொழில்களுக்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே, பெருந்தோட்டத் துறையை நிலைபேறுதன்மைக் கொண்டதாக மாற்றுவதற்கு காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்துடன் முகாமைத்துவம் செய்யவேண்டும். இலங்கையை பொறுத்தவரையில், மேற்குறிப்பட்டதுபோன்று 5 இலட்சம் வரையிலானவர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக இருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் 2-3 பேர் வரையில் இருந்தாலும் கணக்கெடுப்பின்படி குறைந்தது 2 மில்லியன் வரையிலானவர்கள் உள்ளடங்குகின்றார்கள். ஒட்டுமொத்த பெருந்தோட்டத் துறையில் மாத்திரம் ஒரு மில்லியன் வரையிலானவர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இவர்களில் தேயிலை உற்பத்தித் துறையில் மாத்திரம் குறைந்தது 2.5 மில்லியன் வரையிலானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, மொத்த சனத்தொகையில் 10 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் தேயிலை உற்பத்தி பொருளாதாரத்தை சார்ந்தே இருக்கிறார்கள்.

**அதன்போது இலங்கை தொடர்பில் விசேடமான தீர்மானங்கள் எட்டப்பட்டனவா?**

தீர்மானங்களுக்கப்பால், பொதுவாக இந்தத் துறைக்காக என்ன செய்யவேண்டும், எப்போது செய்யவேண்டும் போன்ற விடயங்கள் குறித்து ஆழ்ந்து கலந்துரையாடப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில் 150 வருடங்கள் இந்த தொழிற்றுறையை முன்னெடுத்து வருவதாலேயே இன்னும் இங்கு தேயிலை உற்பத்தித் துறை நிலைத்திருக்கிறது. பல்வேறு சவால்கள் இருந்தாலும் ஏதாவதொரு வகையில் நிலைபேறான நடைமுறைகளைக் கையாண்டதாலேயே நிலைத்திருக்கிறோம். அவ்வாறில்லாவிட்டால் இந்தத் துறை என்றோ முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும்.

பெருந்தோட்டப்புறங்களில் இருக்கும் பசார்களிலுள்ள பொருளாதார நடவடிக்கைகளும் தேயிலை உற்பத்தித் துறை சார்ந்ததாகவே அமைந்திருக்கும். தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தால் அவர்களின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுவிடும். தேயிலை உற்பத்தித் துறையை சார்ந்திருக்கும் போக்குவரத்து போன்ற ஏனைய தொழிற்றுறைகளை கணக்கிற்கொள்வதில்லை. அந்தத் துறைகள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இந்த தொழிற்றுறை மத்திய மாகாணத்தை சார்ந்தே இருக்கிறது. அங்குள்ள சனத்தொகையும் அதிகமாகும். மேலும், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் இந்த தொழிற்றுறை இடம்பெற்று வருகின்றது.

2 மில்லியன் வரையானவர்கள் தொழிலில்லாமல் இருக்கிறார்கள். எமது சகல உற்பத்திகளிலும் 95 சதவீதமானவற்றை ஏற்றுமதி செய்கிறோம். தெளிவாக ஏற்றுமதியை அடிப்படையாகக்கொண்டே நாங்கள் செயற்படுகிறோம். தற்போது நாட்டிலிருக்கும் டொலர் பிரச்சினைக்கும் ஏற்றுமதி பொருளாதாரமே முக்கிய தீர்வாகும்.

மூன்றாவது விடயம் என்னவென்றால், விருப்பத் தெரிவுக்கு வரும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 95 சதவீதம் நாட்டின் பொருளாதாரத்துக்கே வழங்கப்படுகின்றது. அதில் 70 சதவீதம் தொழிலாளர்களுக்கான, கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்களுக்கே ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆகவே, இந்த தொழிற்றுறை இல்லாமல் போனால் மொத்த பொருளாதாரமும் நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும். இந்த தொழிற்றுறையின் அடிப்படைத தன்மையை புரிந்துகொள்ள வேண்டும்.

**“95 சதவீதமான தேயிலை உற்பத்தி ஏற்றுமதி பொருளாதாரத்துக்கே அனுப்பிவைக்கப்படுகின்றன”**

**நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொரோனா நிலைமை, பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து பெருந்தோட்டத் துறைசார்ந்தவர்கள், அவர்களின் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளார்கள் அல்லவா?**

பெருந்தோட்டத் துறையில் மாத்திரம் இந்தப் பிரச்சினை ஏற்படவில்லை. கொரோனா பரவலடைய ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக அரசாங்கம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியிருந்தது. அந்தக் காலப்பகுதியில் மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வீடுகளுக்கே விநியோகிக்க நடவடிக்கை எடுத்தோம். 100 சதவீதம் இலவச தடுப்பூசியை விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தோம். எங்களிடம் சிறந்த திட்டங்கள் இருப்பதால் கொரோனா காலத்தில் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பு செயற்பாடுகளை உறுதிப்படுத்தியிருந்தோம். அதன் காரணமாக பெருந்தோட்டப் பகுதிகளில் கொரோனா பரவலை கட்டுப்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

பெருந்தோட்டங்களிலுள்ள மக்கள் தற்போது, பெருந்தோட்டத் தொழிலை விரும்புவதில்லை.என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். ஆடைத்தொழிற்சாலைகள், ஹோட்டல்கள் போன்றன மூடப்பட்டதும், அங்கு தொழில் புரிந்த பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்தவர்கள் மீண்டும் தோட்டங்களுக்கே செல்கிறார்கள். அவ்வாறு வருபவர்கள் தொழில் புரிபவர்களுக்கு சுமையாகி விடுகிறார்கள்.

இந்நிலையில், புதிய தொழிற்றுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம் தொழில்புரிபவர்கள் யாரையும் நாங்கள் ஓய்வெடுக்க விடவில்லை. ஏனைய துறைகளில் தொழிலாளர்களை குறைத்து, மேலதிக கொடுப்பனவு, சம்பளம் என்பவற்றை குறைத்தாலும், அங்கிருந்து மீண்டும் வீட்டுக்கு திரும்பி வந்தவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கவும் நடவடிக்கை எடுத்திருந்தோம். அவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இருப்பதற்கு விரும்புவதில்லை என்பதால் அவர்களை பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களாக இணைத்துக்கொண்டுள்ளோம்.

**இந்த பிரச்சினைகளுக்கப்பால் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கும் அடிப்படை பிரச்சினைகளை பெருந்தோட்ட மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகள் சம்மேளனம் என்ற அடிப்படையில் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

குறிப்பாக, மத்திய மாகாணத்தில் தனியார்மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களும் இருக்கின்றன. அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டங்களும் இருக்கின்றன. மத்திய மாகாணத்தில் அதிகமான அரசுக்கு கீழ் இயங்கும் பெருந்தோட்டங்களே இருக்கின்றன. கண்டி, தெல்தெனிய, மாத்தளை போன்ற பிரதேசங்களில் அரசுக்கு கீழ் இயங்கும் பெருந்தோட்டங்களே அதிகம் இருக்கின்றன.

கம்பனிகளுக்கு கீழியங்கும் பெருந்தோட்டங்களில் பாதுகாப்பான முறை இருக்கின்றது. ஆனால், அரசுக்கு கீழ் இயங்கும் பெருந்தோட்டங்களில் பெரும் பிரச்சினைகள் இருக்கின்றன. தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் கூட முறையாக வழங்கப்படுவதில்லை. ஆனால், எங்கள் மீதே குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள். இவ்வாறு பல்வேறு உள்ளகப் பிரச்சினைகள் இருக்கின்றன.

கொரோனா காலத்திலும் எந்த வேறுபாடுமின்றி சகல மக்களுக்குத் தேவையான அடிப்படை பொருட்களையும் பெற்றுக்கொடுத்து அவர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். தொழிலாளர்கள் நன்றாக தொழிலாற்றக்கூடியவர்கள். ஆனால், வெளியிலுள்ளவர்கள் புதிய பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள்.

**“உற்பத்திச் செலவுக்கு மேலதிகமாக ஊதியம் வழங்கினால் முழு பெருந்தோட்டத் துறையும் வங்குரோத்தடைந்துவிடும்”**

ஏதாவதொரு பிரச்சினையை உருவாக்கி சகல திட்டங்களையும் வீணடித்துவிடுகிறார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் எந்த சிக்கலும் அவர்களிடம் இல்லை. கொரோனா காலமே அதற்கு சிறந்த உதாரணம். தொழிலாளர்களை பாதுகாக்கவேண்டியதே பெருந்தோட்டத் துறையின் கலாசாரமாகும்.

வெளியிலுள்ளவர்கள் பிரச்சினையை உருவாக்கிவிட்டு சென்றுவிடுவார்கள். ஆனால், 24 மணிநேரமும் அங்குள்ள தொழிலாளர்களும் முகாமையாளருமே கடமையாற்றப் போகிறார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் எங்களின் வேலைத்திட்டங்களுக்கு தொழிலாளர்களும் ஒத்துழைப்பாகவே செயற்படுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இடங்களை விடுவித்து தனியான விவசாயத்தை மேற்கொள்வதற்கான ஊக்கப்படுத்தல்களையும் வழங்கினோம். அவர்களுக்கான விதைகளையும் இறக்குமதி செய்து அவர்களுக்கு பகிர்ந்தளித்திருந்தோம். பாதுகாப்பான தோட்டங்களை அமைக்கவும் அவர்களை ஊக்குவித்திருந்தோம்.

**எவ்வாறாயினும் இன்னும் அவர்களுக்கு சம்பளப் பிரச்சினை இருக்கிறதல்லவா? சம்பளப் பிர்ச்சினைக்கு என்ன தீர்வு ?**

இந்த சம்பளப் பிரச்சினை தொடர்பில் காலங்காலமாக பேசுகிறார்கள். எமது ஊதிய சபைகளில் பெருந்தோட்டத் துறையை விட வேறு எங்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. நாங்களே அதிகப்படியான நாளாந்த ஊதியம் வழங்குகின்றோம்.

இலங்கையில், மிக குறைந்தபட்ச ஊதியம் ஒன்றரை மணிநேரமாகும். இவர்களுக்கு இதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆடைத்தொழிற்சாலை, ஹோட்டல்கள், சுற்றுலாத்துறை போன்ற துறைகளின் ஊதிய சபை தரவுகளை பார்த்தால் பெருந்தோட்டத் துறையினால் செலுத்தப்படும் ஊதியமே அதிகமாகும். ஏனைய துறைசார்ந்தவர்களுக்கு வீட்டுத் திட்டமோ, போக்குவரத்து திட்டமோ, சுகாதார வாயப்போ எதவும் இல்லை. ஆனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தேவையான சகல வாய்ப்புகளும் இருக்கின்றன. வீட்டிலிருந்து இறங்கியதும் தொழிலிடம் வந்துவிடும். பாடசாலைகள், மருத்துவ வசதிகளென சகல வாயப்புகளும் இருக்கின்றன.

எங்களால் வழங்கப்படும் ஊதியம் போதாது என்றால் முழு நாட்டிலும் ஊதிய பற்றாக்குறை ஏற்படும். விவசாயத் துறையில் சராசரி மாத வருமானம் 20,000 ரூபா என்பதே ஆய்வுகளில் வெளியாகியுள்ள தகவலாகும். எமது பெருந்தோட்டத் துறையை எடுத்துக்கொண்டால் குடும்பமொன்றில் 2:1 விகிதமானோரே தொழில் புரிகிறார்கள். போதுமானளவு தொழில்கள் பெருந்தோட்டங்களில் இருக்கின்றன. ஆனால், தொழில்புரிய அவர்கள் முன்வருவதில்லை.

சிறுதோட்ட உரிமையாளர்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் தேயிலை பறிப்பவர்களுக்கு ஒரு கிலோவுக்கு 40 ரூபாவே செலுத்துகிறார்கள். அவ்வாறிருக்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 20 கிலோ தேயிலை பறிக்கிறார்கள் என்றால், அதற்கு 800 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், 17 நாள் விடுமுறை சம்பளம், விடுமுறை போன்ற சகல வசதிகளும் இருக்கின்றன. எனவே, எங்களால் வழங்கக்கூடிய சாத்தியப்பாடுகளின் அடிப்படையிலேயே சம்பளம் குறைந்து கூடுகின்றது. உற்பத்திச் செலவு 1000 ரூபாவென்றால், அதற்கு மேலதிகமாக ஊதியம் செலுத்தினால் முழு பெருந்தோட்டத் துறையும் வங்குரோத்து நிலையை அடைந்துவிடும்.

பல்வேறு சிக்கல்களின் மத்தியிலும் முன்னோக்கிச் செல்வதே வியாபாரத்தின் சவாலாகும். எந்தவொரு வர்த்தகமாக இருந்தாலும் உற்பத்திச் செலவை விட அதிக ஊதியத்தை வழங்க முடியாது. செலுத்தக்கூடியவொரு தொகையை செலுத்தவே நாங்கள் உடன்படுவோம். முடியாததொரு தொகையை செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வங்குரோத்து நிலையை அடைவது முகாமையாளர் ஒருவரின் கடமையல்ல. அதற்கு நாங்கள் விரும்புவதும் இல்லை. இதில் மூடிமறைப்பதற்கு எதுவும் இல்லை. உழைப்பதற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியுள்ளோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு போதியளவு நேரம் இருக்கிறது. வாய்ப்புகள் தாராளமாக இருக்கின்றன. மாதாந்தம் வேலை செய்து 8,000 ரூபா உழைப்பவர்களும் இருக்கிறார்கள். 10,000 ரூபா உழைப்பவர்களும் இருக்கிறார்கள். அது எங்களின் பிரச்சினை அல்ல. 3-4 மணிநேரங்களில் தேயிலை பறித்து அவர்களின் இலக்கை நிறைவுசெய்து தேவையான ஊதியத்தை உழைக்க முடியும். ஆனால், மக்கள் அதனை விரும்புவதில்லை. காலையில் தொழிலுக்கு வந்து மாலை வரை கடமையாற்றி தொழில் செய்து பழகிவிட்டார்கள்.

**2024ஆம் ஆண்டில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளீர்கள்?**

1970 ஆம் ஆண்டு செய்த விடயங்களை தற்போது செய்யமுடியாது. உலகம் மாறிவிட்டது. நாளாந்தம் பெயர் வழங்கி, பின்னால் ஒருவர் இருந்து வேலை வாங்க வேண்டிய காலம் இதுவல்ல. உலகம் மாறிவிட்டது. சிறுதோட்ட உரிமையாளர்களே இதற்கு சிற்நத உதாரணமாகும். 30 வருடங்களில் அவர்களின் முயற்சி மும்மடங்காக அதிகரித்துள்ளது. அவ்வாறெனில் அவர்களின் தொழிற்றுறை வெற்றியடைந்துள்ளது. அதேபோன்று, ஈ.பி.எவ், ஈ.ரி.எவ். போன்ற பயன்களை தரும் அதேவேளை, சுய முகாமைத்துவ முறையை ஊக்குவிப்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும்.

சிறுதோட்டங்களைப் பொறுத்தவரையில் சனி, ஞாயிறு கிழமைகளில் ஆசிரியர்கள், கிளார்க் போன்றோர் உலகத்தில் தேயிலை பறிக்கிறார்கள். அவர்கள் அதற்கு வெட்கப்படுவதில்லை. அதுபோன்று சுயபாதுகாப்பு முறையொன்றை உருவாக்கினால் அதற்கு மக்களும் விரும்புவார்கள். யாருக்கும் கீழ் பணியாற்றவேண்டிய அவசியம் இருக்காது. காலை 6.30 – 8.30 மணி வரையில் 20 கிலோ தேயிலை பறிக்க முடியும். ஆனால், மக்கள் நாள் முழுவதும் 20 கிலோ தேயிலை பறித்து பழகிவிட்டார்கள். நேர முகாமைத்துவ அவசியமாக இருக்கிறது. அவ்வாறு நேர முகாமைத்துவ முறையொன்றை எதிர்பார்த்துள்ளோம்.

(தொடர்ச்சி அடுத்த வாரம்)





# ஆசியாவின் ஆச்சரியம்!

## மக்களை பலி கொடுத்து மக்கள் பிரதிநிதிகளாக ஆளும் கொலைவெறி நாடு இலங்கை!

பா.அரியநேத்திரன்











10, ஏப்ரல் 21, ஈஸ்ரர் தினத்தன்று குண்டுகள் வெடித்து 2023, செப்டெம்பர் 04இல் மூன்று வருடங்களும் ஐந்து மாதங்களும் கடந்த நிலையில், தற்போது சனல் - 4, தொலைக்காட்சியில் அது தொடர்பாக பல உண்மைகள் வெளியிடப்பட்டன. அது உலகம் முழுவதும் தற்போது பேசுபொருளாக மாறிவிட்டது. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பதைப்போல் இந்த நபரும், இந்த குண்டுத் தாக்குதலில் சம்பந்தப்படுவாரா என்று ஒருசாராரும், அவன் இப்படியான வேலைகளை செய்து நல்லா பழக்கப்பட்டவன். மஹிந்த சகோதரர்கள் சொன்னால் எதையும் செய்வான் என வேறொரு சாராரும், இத்தனை உயிர்களைப் பலிகொடுத்து வந்த ஒருவன் நாட்டின் தலைவராக வந்தமையால்தான் கடவுளாலே பதவி இழக்கவேண்டி வந்தது என பலரும் தற்போது கதைப்பதைக் காணலாம்.

***2019, ஏப்ரல் 21***

கொழும்பு கிறிஸ்தவ தேவாலயங்களான புனித அந்தோனியார் திருத்தலம், கொச்சிக்கடை புனித செபஸ்தியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம், உணவு விடுதிகளான
சாங்கிரி-லா, கொழும்பு சினமன் கிராண்ட் கிங்சுபரி, த டுரொப்பிக்கல் இன்.

***ஏப்ரல் 21, 2019***

08:00 தொடக்கம் 08:45 வரை ஆறு குண்டுவெடிப்புகள்
பி.ப: 02.10 தெஹிவளை குண்டுவெடிப்பு
பி.ப. 02.40 தொடக்கம் 03:20 வரை தெமட்டகொடை குண்டுவெடிப்புகள் இடம்பெற்றன.

இந்த தற்கொலை குண்டுத்தாக்குதலால் பல்வேறுபட்ட சந்தேகங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிலையில், தற்போது சனல் - 4 தொலைக்காட்சியில் அசாத் மௌலானா என்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியில் ஏற்கனவே ஊடகப் பேச்சாளராகவும் அந்த கட்சியின் தலைவர் பிள்ளையானுடன் மிக நெருக்கமான நம்பிக்கைக்கு ஒருவராகவும் இருந்து தற்போது சுவிஸில் தஞ்சமடைந்த ஒரு முஸ்லிம் நபர், இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பல உண்மைகளை வெளியில் அம்பலப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புத் தாக்குதலுக்கு ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் சிலர் உடந்தையாக இருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இங்கிலாந்தின் சனல் - 4, கடந்த 05ஆம் திகதி ஒளிபரப்பப்பட்ட நேர்காணல் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. தற்போது புகலிடம் கோரி சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் வசிக்கும் பிள்ளையானின் முன்னாள் பேச்சாளர் அசாத் மௌலானாவே இந்த காணொளியின் முதன்மையான ஆதாரமாக இருப்பதாக தகவலறிந்த தரப்புகள் தெரிவித்தன.

''ராஜபக்ஷர்களை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சலே மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித்திட்டம் தீட்டுவதற்காக 2018இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றதாகவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன், சுரேஷ் சலே என்னிடம் வந்து ராஜபக்ஷக்களுக்குத் தேவை இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல். அதுதான் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு ஒரே வழி" - எனக் கூறியதாக ஹன்சீர் அசாத் மௌலானா கூறியுள்ளார்.

இதில் கவனிக்க வேண்டியது, கோட்டாபயவை ஜனாதிபதியாக்குவதற்கு நாட்டில் ஒரு பீதியை உருவாக்கி மக்களை அச்சத்தின் மத்தியில் வைத்து அவர் 2019இல் எப்படி ஜனாதிபதியாக தெரிவானாரோ அதே பாணியில்தான் 2008இல் கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் கிழக்கு மாகாணத்தில் மக்களை அச்சுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை மாவட்டங்களுக்கு செல்ல முடியாத சூழலை உருவாக்கி, பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர்களான ரவிராஜ், சிவநேசன், திருகோணமலை தமிழரசுக் கட்சி உறுப்பினர், ஜோசப் பரராசசிங்கத்தின் வெற்றிடத்துக்கு தேசிய பட்டியலில் நியமனம் பெற இருந்தவர், முன்னாள் பாராளுமன்ற அம்பாறை மாவட்ட உறுப்பினர் சந்திரநேரு உட்பட பல பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டும் மட்டக்களப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்களை கடத்திய சம்பவங்களையும் நடத்தி கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை போட்டியிடாமல் செய்தே பிள்ளையானை முதலமைச்சராக பதவி பெறவைத்ததுபோன்றே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் மூலம் கோட்டாபய ஜனாதிபதியாக தெரிவானார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதியளித்ததன்பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சலே இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார் என்றும் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார் என்பது இதில் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல, இது இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ரீ.எம்.வீ.பி. கட்சியின் தலைவரும், தற்போதைய இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தன்னை கொலைசெய்ய முயற்சித்ததாக பிள்ளையானின் சகாவும், ரீ.எம்.வி.பி. கட்சியின் முன்னாள் பேச்சாளருமான அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

தான் மட்டக்களப்பிற்கு பயணம் செய்யும்போது திட்டமிட்டு விபத்தை ஏற்படுத்தி தன்னைக் கொலைசெய்ய பிள்ளையான் முயற்சித்ததாகவும் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

அசாத் மௌலானா, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் நிதி நிலைமைகளைக் கவனித்து வந்தவர். இவரை மஹிந்த ராஜபக்ஷவின் ஆசியுடனேயே பிள்ளையான் நியமித்தார். இவர், பிள்ளையானுடன் இணைந்து செயல்பட்டு வந்தார். இப்போது அவர்களுக்கு இடையில் உருவான உள்ளக முரண்பாடுகள் காரணமாக அங்கிருந்து தப்பித்து அவர் வழங்கும் வாக்குமூலம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் தொடர்பான விடயத்தில் மாற்றத்தை கொண்டுவருவது மட்டுமல்ல, இனிவரும் காலத்தில் சர்வதேசமும் இந்த உண்மைகளைப் புரிந்துகொள்ளும்.

அத்துடன், தாக்குதலில் கொல்லப்பட்ட சஹ்ரானுடன் சேர்ந்து இயங்கிய புலஸ்தினி ராஜேந்திரன் என்ற தமிழ்ப் பெண்மணி இந்துவாக இருந்து பின்னர் முஸ்லிமாக மாறியவர். தற்போதும் அவரது தாயார் மற்றும் சகோதரர் இருவரும் இன்றும் இராணுவ பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டுள்ளனர். யார் யார் இதில் சம்பந்தப்பட்டுள்ளார்களோ அவர்கள் இந்தப் பெண்மணியை வெளிநாடு ஒன்றுக்கு கொண்டுசென்று அங்கு பாதுகாப்பாக வைத்துள்ளதாகவும் அதனை அவரது தாயாரிடமும் தெரிவித்துள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக எந்த ஊடக சந்திப்புகளையும் மேற்கொள்ளும்போதும் அருகில் இராணுவத்தினர் இருப்பதால் இந்த பெண்மணியின் தாயார் வாய் திறப்பதில்லை. இவையும் காலப்போக்கில் வெளிச்சத்துக்கு வரும். பிழை விட்டவர்கள் யாரும் தப்பிக்க முடியாது. காலம் அதற்கும் பதில் சொல்லும் ஆனால், அசாத் மௌலானாவால் சனல் - 4, தொலைக்காட்சி நேர்காணலில் கூறப்பட்டவைகளை பிள்ளையான் வழமைபோன்று முழுமையாக நிராகரித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் - 4 தயாரித்துள்ள ஆவணப்பட நிகழ்ச்சி தொடர்பில் விசேட பாராளுமன்றக் குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த (04/09/2023) அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப் பட்டதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தேவைப்பட்டால் சர்வதேச விசாரணை குறித்தும் அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். மேலும் கருத்து தெரிவித்த அவர், “பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு நியமனம் தொடர்பில் நேற்று கூடிய அமைச்சரவை, தீர்மானம் எடுத்தது. அது தொடர்பில் எதிர்காலத்தில் அறிவிப்போம். மேலும் சர்வதேச விசாரணை அவசியமானால் அதுபற்றியும் கலந்துரையாடினோம். ஜெனீவா மனித உரிமைகள் சபை கூட்டம் சந்தர்ப்பங்களில் சனல் - 4 இதுபோன்ற வீடியோக்களை தொடர்ந்து வெளியிடுகிறது. இந்த வீடியோவிலுள்ள விடயங்களை நாம் கண்டிப்பாக ஆய்வுசெய்ய வேண்டும்.
இங்கு கூறப்படும் திட்டத்தின்படி கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்படியென்றால் அது வருந்தத்தக்க விடயமாகும்'' என்றார்.

இலங்கையில் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்குரிய ஆவணப்பட நிகழ்ச்சி பிரித்தானியாவின் சனல் - 4 வெளயிட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு இலங்கை அரச புலனாய்வு சேவையின் சிரேஷ்ட அதிகாரியான சுரேஷ் சலேவுக்கும் ஏப்ரல் தாக்குதல் குண்டுதாரிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றதாக வெளியான செய்தியின் அடிப்படையில் இந்த வீடியோ உருவாக்கப்பட்டுள்ளதாக பிரித்தானியாவின் த ரைம்ஸ் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.
இதன்படி, பிள்ளையான் குழுவின் ஊடகப் பேச்சாளராக இருந்த அசாத் மௌலானாவின் வழிப்படுத்தலுக்கமைய இது அமைந்துள்ளது.

அப்போதைய இராணுவப் புலனாய்வுப் பிரதானி சுரேஷ் சலேவுக்கும் தவ்ஹீத் ஜமாத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவருக்கும் இடையே சந்திப்பை ஏற்பாடு செய்தது தாம் என அசாத் மௌலானா கூறியுள்ளார்.
இந்தக் கூட்டத்தை ஒழுங்கமைக்குமாறு பிள்ளையான் என்ற இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தன்னிடம் கோரியதாக அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னர் சைனி மௌலவியை சந்திக்குமாறு அறிவுறுத்தியிருந்ததாகவும் அசாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.
அவர் ஏப்ரல் 21 தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட சஹ்ரானின் சகோதரர் என்பதை பின்னர் தான் கண்டுபிடித்ததாகவும் அசாத் மௌலானா கூறினார்.

நாட்டில் பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி, அதிகார மாற்றத்தை எளிதாக்க வேண்டும் என்ற வகையில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக சனல் - 4 வீடியோவில் தெரிவிக்கப்படுகிறது.
எவ்வாறாயினும், இது தொடர்பான குற்றச்சாட்டுகளை சுரேஷ் சலே மறுத்துள்ளார் என்றும் சனல் - 4 தெரிவித்துள்ளது.
சஹ்ரான் உள்ளிட்டோரை சந்தித்ததாக கூறப்படும் காலத்தில் தாம் மலேசியாவில் இருந்ததாகவும், ஏப்ரல் 21 தாக்குதல் நடந்தபோது இந்தியாவில் இருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவெனில், வடக்கு, கிழக்கில் தமிழர்களின் தலைகளை வெட்டி களனிக்கு கொண்டுவருவேன் என கடந்த மாதம் இரண்டு தடவைகள் பகிரங்கமாகக் கூறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாக 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்ட தகவல்களை தாம் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த 05/09/2023 அன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு ராஜபக்ஷவே பொறுப்பு என வலியுறுத்தியுள்ளார்.
இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர், “உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து புலனாய்வுப் பிரிவினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இந்திய புலனாய்வுப் பிரிவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.
அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் மட்டத்தில் இருந்த அரசியல்வாதிகள் இது குறித்து அறிந்திருக்க வேண்டும். இதனை ஒரு சிறிய விடயமாகவே அவர்கள் கருதியிருந்தனர். ஆனால், இது ஒரு கோழைத்தனமான தாக்குதலாகும். இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது மைத்ரிபால சிறிசேன சிங்கப்பூர் சென்றிருந்தார்.

ஒன்றரை நாள் கழிந்தே அவருக்கு இந்த சம்பவம் குறித்து தெரியவந்துள்ளது. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் கூறுவது சரியானதே. நான் அவரை மதிக்கிறேன்.
இந்தச் சம்பவத்துடன், முக்கிய அரசியல்வாதி களுக்கு பாரிய தொடர்பு இருக்கின்றது. அதிகாரத்தைக் கைப்பற்ற ராஜபக்ஷர்கள் தெரிந்தே இந்தச் சதியை செய்துள்ளனர். மற்றவர்கள் இதற்கு துணை இருந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில்
சனல் - 4 வெளியிட்ட தகவல்களை நான் ஏற்றுக்கொள்கின்றேன். சில ஊடகங்கள் இதை சாதாரணமாக எடுத்துக்கொள்கின்றன. எனினும், இதுவொரு மிகப் பெரிய பிரச்சினையாகும். தவறு செய்திருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு அஞ்சும் ஆள் நான் இல்லை. அன்றைய அரச தலைவரான ராஜபக்ஷவே இதற்கு முழுப் பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதில் கவனிக்கவேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005ஆம் ஆண்டு டிசம்பர் 25, நத்தார் ஆராதனையில் மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் . இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு சிறையில் இருக்கும்போதே சிறையில் இருந்து ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான திட்டம் தீட்டப்பட்டுள்ளது என கூறப்படுகிறது.

2005, டிசம்பர் 25இல் மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் ஒரு புனிதமான கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டு சரியாக பத்தொன்பது வருடங்கள் கடந்து 2019, ஏப்ரல் 21இல் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் புனித தினமான ஈஸ்டர் தின புனித நாளில் இலங்கையில் பல இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றாலும் மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலும் இலக்கு வைத்து 31 அப்பாவி மக்கள், சிறுவர்கள், பெண்கள் மாண்டனர்.

இலங்கையில் ஏழு இடங்களில் கொழும்பு மாவட்டம் அல்லது தென்பகுதியில் இடம்பெற்றபோதும் வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு சியோன் தேவாலயம் ஏன் தெரிவுசெய்யப்பட்டது. அப்படியானால் ஜனாதிபதித் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் ஆதரவை கோட்டாபயவுக்கு பெறவேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு சிறையில் இருந்த மட்டக்களப்பான், சியோன் தேவாலயத்தையும் இலக்குவைப்பதற்கு தெரிவுசெய்தாரா என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்.

# சனல்-4 வெளிப்படுத்திய தகவல்களால் கொதிப்படைந்துள்ள

# இலங்கை அரசியல் மேடை







எம்.எஸ்.அமீர் ஹுசைன்

10ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் சிலவற்றை இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யாராக இருக்கலாம் என்ற உண்மையை மக்கள் அறிந்துகொள்ளும் வகையிலான சில முக்கியமான தகவல்களை உள்ளடக்கியதாக இங்கிலாந்தின் சனல்-4 தொலைக்காட்சி அலைவரிசை 2024.09.06ஆம் திகதி இலங்கை நேரப்படி அதிகாலை 3 மணியளவில் வெளியிட்ட தகவல்களால் தற்போது இலங்கையில் அரசியல் களம் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. இந்த குண்டுத் தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில் இருக்கின்ற உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதை புலனாய்வு செய்து அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக பேராயர் மெல்கம் ரஞ்சித் கடந்த 04 வருடங்களாக கோரிக்கை விடுத்து வருகின்றார். ஆனாலும் அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்துவருகின்றது.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் உண்மையான சூத்திரதாரிகள் யாராக இருக்கலாம், அந்த குண்டுத் தாக்குதலின் பின்னணி நோக்கம் என்னவாக இருந்தது என்பதை ஓரளவுக்கு புரியவைக்கும் வகையில் இங்கிலாந்தின் சனல்-4 அலைவரிசை வெளிப்படுத்திய நேர்காணல் தகவல்கள் உள்ளன. இந்த குண்டுத் தாக்குதல் எவ்வாறு திட்டமிடப்பட்டது, யார் திட்டமிடலின் சூத்திரதாரிகள், பின்னணி நோக்கம் என்ன, அதற்காக யார் பயன்படுத்தப்பட்டார்கள், குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சாதக பாதக விளைவுகள் என்ன? போன்ற பல விடயங்களைப் புலப்படுத்துவதாக இந்த நேர்காணல் வெளிப்படுத்தல் அமைந்திருந்தது. குறிப்பிட்ட சனல்-4 வெளிப்படுத்தல்கள் மூலம் தற்கொலை குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினர் என்று சொல்லாமல் சொல்வதாக குற்றச்சாட்டுகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்காக நாட்டில் இவ்வாறான குண்டுத் தாக்குதல் மூலம் பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதன்மூலம் நாட்டைப் பாதுகாக்க பலமான சக்திமிக்க ஓர் அரசியல் தலைவர் தேவை என்ற கருத்தோட்டத்தை ஏற்படுத்தி அவரை மக்கள் ஆதரிக்கச் செய்வதற்கான களத்தை அமைப்பதற்காகவே இந்த குண்டுத் தாக்குதல் திட்டமிடப்பட்டதாக நேர்காணல் தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. அதன்படி நேரடியாக ராஜபக்ஷ குடும்பம் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகின்றன. முன்னாள் புலனாய்வுத் துறை அதிகாரி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயை சம்பந்தப்படுத்தியதாக இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படுகின்ற சந்திரகாந்தனின் அப்போதைய ஊடகப் பேச்சாளர் அசாத் அன்சிப் மௌலானா ஆகியோர் சம்பந்தப்பட்டதாக இந்தக் காணொளி அமைந்திருக்கின்றது. இதில் தற்கொலைத் தாக்குதல் திட்டமிடல் தொடர்பாக உண்மைகளைப் போட்டுடைப்பவராக பிரதான மூலாதாரமாக அமைவது பிள்ளையானின் ஊடகப் பேச்சாளர் அன்சிப் மௌலானா ஆவார்.

எப்போதும் பொறுப்புவாய்ந்த ஓர் ஊடக நிறுவனம் வெளியிடும் அனைத்துவிதமான தகவல்களுக்கும் அந்த ஊடக நிறுவனமே பொறுப்புக் கூற கடமைப்பட்டிருக்கின்றது. அப்படியானதொரு நிலையில் எந்தவொரு ஊடக நிறுவனமும் ஆதாரம் இல்லாத பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக்கொள்ளாத தகவல்களை அடிப்படையாக வைத்து தகவல்களை வெளிப்படுத்துவதில்லை. இங்கு சனல்-4 காணொளிக்கு பிரதான மூலாதாரமாக இருப்பது பிள்ளையானின் அப்போதைய ஊடக அதிகாரியான அசாத் அன்சிப் மௌலானா ஆவார். இந்த காணொளி இப்போது உலகம் முழுவதிலும் இலங்கை குறித்த அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றது. இதன் நம்பகத்தன்மை பற்றி இலங்கை அரசாங்கம் சார்பான அமைச்சர்கள், அரசியல் மற்றும் சட்டத்துறை பிரமுகர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

எவ்வாறாயினும் இந்த காணொளியால் இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சார்பான ஆதரவாளர்கள் மத்தியில் ஒருவிதமான ஆத்திரம் வெளிப்பட்டிருக்கின்றது. அதனால் கோட்டாபய ராஜபக்ஷ ஓர் அறிக்கை மூலம் தமக்கும் இந்த காணொளியில் சொல்லப்பட்ட தகவல்களுக்கும் தொடர்பில்லை என்று மறுத்துள்ளார். கோட்டாபய சார்பான பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனையே கூறியுள்ளனர்.

பொதுஜன பெரமுன கட்சி சார்பாகவும் மஹிந்த குடும்பம் சார்பாகவும் பேசுகையில், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் இந்த காணொளியானது சனல்-4 இன் திட்டமிடப்பட்ட சதி என்று குற்றஞ்சாட்டினார். ஆனாலும் அரசாங்கம் தம்மீது வரவிருக்கின்ற குற்றச்சாட்டுகளை சமாளிப்பதற்காக ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதேநேரம் பேராயர் சுயாதீனமான விசாரணை வேண்டும் என்றும் அது சர்வதேச விசாரணைக் குழுவொன்றின் மூலம் நடக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தள்ளார். அத்துடன், மஹிந்த குடும்ப ஆதரவாளர்கள் இந்த காணொளிக்கும் சனல்-4க்கும் எதிராக வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

2024ஆம் ஆண்டு பிரதானமாக தேர்தல் ஒன்று நடைபெறும் சாத்தியம் இருந்து வருகின்றது என்ற ஊகத்தின் அடிப்படையில் பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் இப்போதிருந்தே தமது கட்சிகளைப் புனரமைப்பு செய்து பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறு நடைபெறும் தேர்தல் பிரதானமாக ஏனைய சிறிய தேர்தல்களாக இல்லாமல் ஜனாதிபதித் தேர்லாகவே இருக்கும் என்ற அடிப்படையில் பிரதான அரசியல் கட்சிகள் எதிர்பார்க்கின்றன. ஏற்கனவே இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படவில்லை. தேர்தலை நடத்த 1000 கோடி ரூபா நிதி இல்லை என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து தேர்தல் பின்போடப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த சில வாரங்களாக அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்துக்கு மேலும் சில அதிகாரங்களை உட்படுத்தி மீண்டும் 13ஐ நடைமுறைக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதற்காக கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய சர்வகட்சி மாநாடொன்றும் நடத்தப்பட்டது.

அதனடிப்படையில் அரசியல் கட்சிகளின் கோரிக்கையாக இருந்தது 13இற்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதைவிட இருக்கின்ற அதிகாரங்களுடன் கடந்த 06 வருடங்களாக பின்போடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பதாகும். ஆனால், இப்போது அந்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய இடத்திலிருந்தே மறந்துபோன சமாச்சாரமாக மாறியிருக்கின்றது. இந்நிலையிலேயே எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறலாம் என்று எதிர்பார்க்கின்ற ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து காய்நகர்த்தல்கள் இடம்பெற்று வருகின்றன.

அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்குமானால் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அதன் தலைவர் சஜித் பிரேமதாச களமிறங்குவார் என்பது உறுதியாகி இருக்கின்றது. அண்மையில் நடைபெற்ற அரசியல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனை உறுதிப்படுத்தும் வகையில் அறிவித்துள்ளார். இதற்கிடையில் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவை களமிறக்குவதற்கு மஹிந்த குடும்பம் சார்ந்த அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் ஏற்கனவே 2019ஆம் ஆண்டு 67 இலட்சம் வாக்காளர்களது ஆதரவுடன் ஜனாதிபதியாக பதவியேற்று நாட்டை சரியான முறையில் நிர்வகிக்க முடியாமல் 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டத்தை சமாளிக்க முடியாமல் நாட்டைவிட்டு ஓட்டம் பிடித்த கோட்டாபய ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்கும் முயற்சிகளில் அவரது ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அதற்குத் தேவையான அரசியல் களத்தை அமைக்கும் முயற்சிகளை முன்னெடுத்து வருவதாகவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து கதைகள் அடிபடுகின்றன.

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

# பாரதீய ஜனதாவை பதறவைக்கும் "இந்தியா"

ரமணி



இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தொடர்ச்சியாக இரண்டு முறை வெற்றிபெற்று ஆட்சிபீடத்தில் அமர்ந்த பாரதீய ஜனதா, மூன்றாவது முறையும் வெற்றிபெறும் முனைப்பில் இருக்கிறது. நேருவுக்குப் பின்னர் மூன்றாவது முறை பிரதமரானவர் மோடி எனும் சரித்திரத்தை எழுத பாரதீய ஜனதா விரும்புகிறது.

கொள்கை, கோட்பாடு, தனித்துவம் போன்றவற்றை ஒருபுறம் ஒதுக்கிவைத்த இந்திய எதிர்க்கட்சிகள் பாரதீய ஜனதாவை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக ஒன்றுசேர்ந்துள்ளன. எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது சாத்தியமற்றதென பாரதீய ஜனதா பிரசாரம் செய்தது. எதிர்க்கட்சிகளின் முதல் கூட்டம் கடந்த ஜூன் மாதம் பீஹார் மாநிலத் தலைநகர் பாட்னாவிலும், இரண்டாவது கூட்டம் ஜூலை மாத மத்தியில் பெங்களூரிலும் நடைபெற்றன. இரண்டாவது கூட்டத்தில்தான் கூட்டணிக்கு இந்தியா எனப் பெயர் சூட்டப்பட்டது. மூன்றாவது கூட்டம் மும்பையிலுள்ள கிராண்ட் ஹையத் ஹோட்டலில் நடைபெற்றது. மூன்று கூட்டங்களும் எதுவித சலசலப்புமின்றி சுமுகமாக நடைபெற்றன. பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் உருவாக்கியுள்ள கூட்டணிக்கு இந்தியா [I-N-D-I-A ] எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 28 கட்சிகள் இந்தியக் கூட்டணியில் இணைந்துள்ளன. எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சுமார் 62 தலைவர்கள் கைகோர்த்துள்ளனர். இந்திய கூட்டணியிலுள்ள கட்சிகள் மொத்தமாக 11 மாநிலங்களில் ஆட்சியில் இருக்கின்றன. 2019ஆம் ஆண்டு தேர்தலில் மொத்தமாக 134 இடங்களையும் 35 சதவீத வாக்குகளையும் பெற்றிருக்கின்றன. 19 கட்சிகளிடம் 3 அல்லது மூன்றுக்குக் குறைவான இடங்களே இருக்கின்றன. இந்தக் கணக்கு பாரதீய ஜனதாவைப் பதறவைத்துள்ளது.

எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கு வைத்துள்ள ''இந்தியா'' எனும் சொல்லை உலகரங்கிலிருந்து அகற்றுவதில் மோடியின் அரசு குறியாக இருக்கிறது. இந்தியாவின் பெயரை "பாரத்" என மாற்றுவதற்கு மோடியின் அரசாங்கம் கால்கோள் இட்டுள்ளது. "இந்தியா" எனக் கூறினால் அது இந்திய நாட்டைக் குறிப்பிடுமா அல்லது எதிர்க்கட்சிகளின் கூட்டணியைக் குறிக்குமா என்ற சந்தேகம் மத்திய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. அதன்படிதான் ஜனாதிபதியின் அழைப்பிதழில் பிரசிடென்ட் ஒவ் பாரத் என இருப்பதாக தகவல்கள் பரவி வருகின்றன.

கடந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரில் உரையாற்றிய பாஜக எம்.பி நரேஷ் பன்சால், "இந்தியா என்பது காலனித்துவ அடிமைத்தனத்தின் குறியீடு. எனவே, அந்தப் பெயரை அரசியலமைப்பிலிருந்து நீக்க வேண்டும்" என்றார். இந்தியா - பாரத் பெயர் சர்ச்சைக்கு மத்தியில் ஜி20 மாநாட்டுக்கும் இந்தியா முழுவீச்சில் தயாராகி வருகிறது.

இதில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு டின்னர் விருந்து வழங்கவுள்ளார். இதற்கான அழைப்பிதழ் தற்போது வெளியாகியுள்ளது. அதில் பிரசிடென்ற் ஒவ் இந்தியா என்பதற்கு பதில் பிரசிடென்ற் ஒவ் பாரட் என அச்சிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சியின் முதல் நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

இந்தியா எனும் நாட்டை அழைப்பிதழில் "பாரத்" என அச்சடிப்பதன் மூலம் மாற்றிவிடலாம் என பாரதீய ஜனதா தப்புக் கணக்குப் போடுகிறது. தமிழ்நாடு எனச் சொல்லக்கூடாது. தமிழகம் எனச் சொல்ல வேண்டும் என ஆளுநர் ரவி அறைகூவல் விடுத்துவிட்டு கரணமடித்ததை இந்திய மக்கள் மறக்கவில்லை. ஒரு நாட்டின் பெயர் மாற்றம் என்பது வெறும் அறிவிப்பால்



நடைமுறைப்படுத்த முடியாது. மோடி, அமித் ஷா கூட்டணிக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரியும்.



இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவை மத்திய பாஜக அரசு வரும் 18ஆம் திகதி தொடங்கும் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யலாம் என கூறப்படுகிறது.

இந்தியா என்றும் பாரத் என்றும் அழைக்கலாம். ஏனென்றால் இந்த 2 பெயர்களும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. இத்தகைய சூழலில்தான் மத்திய அரசு இந்தியா என்ற பெயருக்கு பதில் பாரத் என பெயர் சூட்ட நினைத்தால் முதலில் அதுதொடர்பாக சட்டதிருத்த மசோதாவை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும். தற்போது இந்தியாவின் அரசியலமைப்பு சட்டப்பிரிவு ஒன்றுதான். நாட்டை இந்தியா, அதுதான் பாரத் என்று கூறுகிறது. இதனால் அரசியலமைப்பு சட்டம் ஒன்றில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். இந்த சட்டத்திருத்த மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஒப்புதலுடன் சட்டமாக்கப்படும்.

இதையடுத்து இந்தியா என்பதற்கு பதில் பாரத் என்ற பெயரில் அழைக்க முடியும். மேலும் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தையும் வெறுமனே செய்து முடித்து விட முடியாது. ஏனென்றால் அதற்கும் சில விதிகள் வரையறைக்கப்பட்டுள்ளன. அதாவது இந்திய அரசியலமைப்பின் 368ஆவது பிரிவுதான் ஓர் அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறது.

அதன்படி அரசியலமைப்பு சட்டத்தை 2 வழிகளில் திருத்தம் செய்ய முடியும். ஒன்று சிம்பிள் மெஜாரிட்டி திருத்தம் (Simple Majority Amendment). மற்றொன்று ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் (Special Majority Amendment) என்பதாகும். இந்த 2க்கும் சின்ன வித்தியாசம் உள்ளது. அதாவது சிம்பிள் மெஜாரிட்டி திருத்தம் என்பது சபையில் 50 சதவீத உறுப்பினர்களின் ஆதரவுடன் மேற்கொள்வது.

இது இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவின் கீழ் புதிய மாநிலம், மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வது உள்ளிட்டவற்றை மட்டுமே இதன்படி மேற்கொள்ள முடியும். மாறாக பிற சட்ட திருத்தங்களுக்கு ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் என்பதுதான் பின்பற்றப்பட்டு வருகிறது. இது சிம்பிள் மெஜாரிட்டி மூலம் நிறைவேற்றப்படுவதிலிருந்து வேறுபாடானது.

அதாவது தற்போது இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 1ஐ மாற்றம் செய்வது உட்பட பெரும்பாலான சட்டத் திருத்தங்கள் என்பது ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்த முறையில்தான் நடக்கும். இந்த ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் என்பது பாராளுமன்றத்தில் 66 சதவீதம் பேர் அதாவது 3இல் 2 பங்கு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கெடுத்து ஓட்டளிப்பில் பங்கேற்று மசோதா வெற்றிபெற வேண்டும். இது நடந்தால் மட்டுமே இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான இந்திய அரசியலமைப்பு சட்டம் 1இல் திருத்தம் கொண்டுவர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தலுக்கு இன்னமும் ஒரு வருடத்துக்குக் குறைவான காலம் இருக்கையில் பெயர் மாற்றம் என்பது சாத்தியப்படாதது.


பாரதீய ஜனதாவின் எதிர்க்கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. இந்திய எதிர்க்கட்சியான காங்கிரஸையும், அதன் தலைவர்களையும் பாரதீய ஜனதா கடுமையாக விமர்சிப்பதில்லை. பாரதீய ஜனதாவின் கோபப்பார்வை திராவிட முன்னேற்றக் கழகம், ஸ்டாலின், உதயநிதி எனத் தொடர்கிறது. மோடியும், அமித் ஷாவும் வடமாநிலங்களில் பேசும்போது ஸ்டாலின், உதயநிதி ஆகியோர் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

சனாதனத்தைப் பற்றிய ஸ்டாலினின் பேச்சால் வடமாநிலம் கொதித்துப் போயுள்ளது. உதயநிதியின் தலைக்கு வட மாநில சாமியார் 10 கோடி ரூபா கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளார். பயங்கரவாதியைப் பிடிபதற்கு அரசாங்கம் அறிவித்ததைப் போன்று தமிழக அமைச்சரின் தலைக்கு விலை பேசிய சாமியாருக்கு எதிராக அந்த மாநிலத்தில் சட்ட நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அந்த சாமியாரிடம் 10 கோடி ரூபா எப்படி வந்ததென்பதை ஆராய அந்த மாநிலப் பொலிஸார் விசாரிக்க முயற்சிக்கவில்லை. உதயநிதியின் கன்னத்தில் அடித்தால் 10 இலட்சம் ரூபா கொடுக்கப்படும் என ஒருவர் அறிவித்துள்ளார். இதை எல்லாம் அந்த மாநில அரசுகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றன.

ஆளுக்கொரு பக்கம் பிரிந்திருந்த இந்திய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்த பெருமைக்குரியவர் ஸ்டாலின். ஆகையால் பாரதீய ஜனதாவின் கோபப் பார்வை தமிழக அரசின் மீது விழுந்துள்ளது.



# ஹைலன்ஸ் கல்லூரியின் சாதனைப் பயணத்தில் அதிபர் ஸ்ரீதர்



**“எப்படியும் வாழலாம் என்பது வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே வாழ்க்கை.”**

தம் பெற்றோர்கள் கொண்டுள்ள நல்லெண்ணப்பாங்கை சிரமேற்கொண்டு வாழ்பவர்கள் வெகுசிலரே. அந்த வரிசையில் நற்பண்பாளராக - தலைமையாளராக - திறன்மிக்க நிர்வாகியாக - ஹட்டன், ஹைலன்ஸ் கல்லூரியை வழிநடத்திய ஆளுமைமிக்க அதிபராக ஆர்.ஸ்ரீதர் பெருமை பெறுகின்றார். இவர் கடந்த நான்கு தசாப்தங்களாக ஆசிரியராக, போதனாசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக நேர்த்திமிகு கல்விப் பணியாற்றியவர். மலையகக் கல்வி மேம்பாட்டில் உந்துசக்தியாக விளங்கியவர். ஹைலன்ஸ் கல்லூரியில் ஏற்றமிகு மாற்றங்களை செயலுருவில் கொண்டுவந்தவர். 2017ஆம் ஆண்டுமுதல் ஹைலன்ஸ் கல்லூரியின் வீறுகொண்ட அதிபராக பணியாற்றிய ஆர்.ஸ்ரீதர் கடந்த வியாழக்கிழமை (07.09.2023) அரச பணியினின்றும் ஓய்வுபெற்றுள்ளார். அவரின் வாழ்வியலோடு தொடர்புடைய கல்விப் பணிகளை மீட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

“முன்றலில் ஓடுமோர் வண்டியைப் போலன்று மூன்றுலகும் சூழ்ந்தே திரியும் விமானத்தைப்போல் நல்ல மனம் படைத்தோம்” பாரதியின் சிந்தனையில் உதித்த உள்ளத்தை ஒத்த அதிபர் ஆர்.ஸ்ரீதர், டிக்கோயா தரவளை தோட்டத்தில் 1963ஆம் ஆண்டு பிறந்தார். ராமநாதன் - தெய்வானையம்மாள் தம்பதியினரின் நான்கு வாரிசுகளுள் இவர் மூன்றாமவராவார். இவருக்கு இரு மூத்த சகோதரிகளும் ஒரு இளைய சகோதரரும் உள்ளனர். இவரது தந்தை ராமநாதன் தரவளை தோட்ட குமாஸ்தாவாக பணியாற்றினார். அதன் காரணமாக ஆங்கிலப் புலமையை இயல்பாகவே பெற்றவர். அத்தோடு இவர் பிறந்த தரவளை தோட்டமும் ஒருவகையில் முக்கியத்துவம் மிக்கது. ஏனெனில், தரவளை தோட்டத்தில் பிறந்த சிலர் ஹைலன்ஸ் கல்லூரியின் சிம்மாசனத்தை அலங்கரித்துள்ளனர். திருமதி செல்வம் சிவசிதம்பரம், கே.மெய்யநாதன், எஸ்.விஜயசிங் ஆகியோருடன் ஆர்.ஸ்ரீதரும் இதில் உள்ளடங்குவார்.

தனது முதலாம் வகுப்பின் முக்கால் வருட கல்வியை தரவளை கீழ்ப்பிரிவு பாடசாலையில் பெற்றுக்கொண்ட ஸ்ரீதர் அதன்பின் ஹட்டன் சென். ஜோன் பொஸ்கோ கல்லூரியில் சேர்ந்து சாதாரண தரம் வரை தனது கல்வியைப் பயின்றார். அக்கல்லூரியில் பயின்ற காலத்தில் கல்வித்துறையைக் காட்டிலும் விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடுடைய மாணவராகத் திகழ்ந்தார்.

குறிப்பாக, பாடசாலையில் உதைபந்து, கிரிக்கெட் அணிகளில் இடம்பெற்றிருந்தார். தனது சாதாரண தர கல்வியை இப்பாடசாலையில் முடித்த பின்னர் ஹைலன்ஸ் கல்லூரியில் இணைந்து உயர்தர கணிதப் பிரிவில் பயின்றார். இக்காலப்பகுதியில் சுறுசுறுப்பான மாணவராக, மாணவ தலைவராக, நியாயத்துக்காக போராடும் குணமுள்ளவராக, உள்ளக விளையாட்டுகள், உதைபந்து ஆகிய துறைகளில் மிளிர்ந்தவராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார்.

இவர் உயர்தர கணிதப் பிரிவில் கற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை தெரிவுசெய்வதற்கான முதலாவது போட்டிப் பரீட்சை நடைபெற்றது அப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இவரும் சித்திபெற்றார். அதன்படி தெரிவான 402 ஆசிரியர்களுள் ஒருவராக இவரும் ஆசிரியர் தொழிற்றுறையில் காலடி எடுத்து வைத்தார். 1983.05.02 தனது ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட இவர், இரு வாரங்கள் ஹைலன்ஸ் கல்லூரியில் கற்பிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அன்று ஆரம்பித்த இவரது கற்பித்தல் பணி இதே பாடசாலையில் அதிபர் சேவை பணியோடு நிறைவு பெறுவது இவருக்கு மட்டுமே வாய்க்கப்பெற்ற பேரதிர்ஷ்டம் என்றே குறிப்பிடலாம்.

ஹைலன்ஸ் பாடசாலையில் கற்பித்தல் பணியை ஆரம்பித்து இரு வாரங்களின் பின்னர் நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஆசிரியராக நிலைப்படுத்தப்பட்டார். எனவேதான் இவரது நியமனத்தை நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்ததாக குறிப்பிடுகின்றனர். ஆயினும் சில மாதங்கள் நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய நிர்வாகத்தின் கீழ் இயங்கிய வெஞ்சர் தமிழ் வித்தியாலயத்தில் இவர் பொறுப்பாசிரியராக பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

வகுப்பு 1 முதல் வகுப்பு 5 வரை கொண்டியங்கிய பாடசாலையே வெஞ்சர் தமிழ் வித்தியாலயமாகும். அப்பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியை செல்வி இலங்கநாதனுக்குப் பின்னர் இவர் பொறுப்பாசிரியராக இரண்டு மாதங்கள் மட்டுமே பணியாற்றினார். இதேவேளை, 1983 ஜூலை கலவரத்தின்போது யாழ்ப்பாணம் சென்று திரும்ப முடியாத சூழ்நிலையை எதிர்கொண்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய கணித பாட ஆசிரியை செல்வி கோகுலராணியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஆர்.ஸ்ரீதர் வெஞ்சர் தமிழ் வித்தியாலயத்திலிருந்து நோர்வூட் தமிழ் வித்தியாலயத்துக்கு வரவழைக்கப்பட்டார். அன்றுமுதல் கணித கற்பித்தல் பணி இவரோடு ஒட்டிக்கொண்டதோடு இவரது வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியும் ஒட்டிக்கொண்டது. இப்பாடசாலையில் மிகச் சிறப்பாக கற்பித்தல் பணியை மேற்கொண்டதோடு மாணவர்கள் விரும்பும் ஆசிரியராக மதிப்பைப் பெற்றுக்கொண்டார். அத்தோடு மாணவர்களின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் பணிகளையும் விருப்பத்தோடு மேற்கொண்டிருந்தார்.

1988 / 1989 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கணித பாட ஆசிரியராக பயிற்சியை பெற்றுக்கொண்டார். ஆசிரியர் கலாசாலையில் இவர் பயிற்சிபெற்ற இக்காலமானது இவரின் பல்வேறு திறன்களை, ஆற்றல்களை ஊக்குவிக்கவும், வளர்க்கவும் வாய்ப்பான களமாக அமையப்பெற்றிருந்தது என்பதை இவரும் இவரது நண்பர்களும் நன்கறிவர். அக்கலாசாலையில் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஒருசில மாணவர்களுள் ஒருவராக திகழ்ந்த ஆர்.ஸ்ரீதர் கலைக்கழகம், விளையாட்டுக் கழகம் என்பவற்றில் தலைமைப் பொறுப்புகளை வகித்ததோடு விவாதத்திறன், நிகழ்ச்சித் தொகுப்பு, அறிவிப்புத்துறை ஆகியவற்றில் தனது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றார்.

இதனைப்பற்றி அதிபர் ஆர்.ஸ்ரீதர், “பலாலி ஆசிரியர் கலாசாலை எனது வாழ்வில் ஒரு திருப்புமுனையாகும். அங்கு பிரதேச வேறுபாடின்றி சகல ஆசிரிய நண்பர்களும், விரிவுரையாளர்களும் எனது திறமைகளைப் பாராட்டி அங்கீகாரத்தை வழங்கினர். இன்றைய எனது வளர்ச்சிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையே மையப்புள்ளியிட்டது” என குறிப்பிடுகின்றார்.

அவ்வாறு பயிற்சியை பெற்றுக்கொண்டது மாத்திரமன்றி அதன் பின்னர் தனது கல்வித் தகைமைகளையும், தொழில் தகைமைகளையும் விருத்திசெய்துகொண்டார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டபின் கல்வி டிப்ளோமா பாடநெறியையும் ஆசிரிய கல்வியில் முதுமாணிப் பட்டத்தையும் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாவையும் பெற்றுள்ளதோடு இலங்கை அதிபர் சேவையின் தரம் - 01 அதிபராக பணிபுரிந்த நிலையில் ஓய்வுபெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது துணைவியார் திருமதி சுகந்தி ஆங்கில பாட ஆசிரியர் என்பதோடு நடனத்துறை ஆசிரியராகவும் முன்பு பணியாற்றியவர். தற்போது கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வருகின்றார். இவரது இரு புதல்வர்களில் மூத்தவரான எஸ்.சுவாதித் இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில் தனது முதுமாணிக் கல்வியைப் பயின்று வருகின்றார். இளையவரான எஸ்.சுவாகத் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தனியார் பல்கலைக்கழகமொன்றில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றார்.






1990ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் இணைந்து தனது கற்றல் கற்பித்தல் பணியை திறம்பட மேற்கொண்டு வந்தார். அத்தோடு PSTB ஆசிரியர் பயிற்சிநெறியிலும் பகுதிநேர விரிவுரையாளராக இணைந்துகொண்டார். இவரது கணித பாட கற்பித்தல் திறனுக்கு அங்கீகாரத்தை தரக்கூடிய வகையில் 1991ஆம் ஆண்டு நுவரெலிய பிராந்திய ஆசிரியர் தொலைக்கல்வி நிலையத்தில் முழுநேர போதனாசிரியராக மற்றும் சிரேஷ்ட போதனாசிரியராக பணியாற்றக்கூடிய அறிய வாய்ப்பு இவருக்கு கிடைக்கப்பெற்றது. இது இவரது திறமைக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வரப்பிரசாதம் எனலாம். குறிப்பாக, இந்நிலையத்தில் பணியாற்றிய சிரேஷ்ட போதனாசிரியர் எஸ்.சிவபிரகாசத்தின் ஊடாகவே இவருக்கு இவ்வாய்ப்பு கிடைத்தது.
அதன் பின்னர் இவர்கள் இருவரும் நல்ல நட்புடன் 2009ஆம் ஆண்டுவரை இணைந்து இந்நிலையத்தை மிகச்சிறப்பாக நடத்திவந்தமை தகவல்கள் ஊடாக அறியமுடிகிறது.

இக்காலப்பகுதியில் ஆசிரியர்கள் தொடர்பான உரிமைப் போராட்டங்களில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக காணப்பட்டார்.

குறிப்பாக, மலையக ஆசிரியர் ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்ட காலப்பகுதி முதல் அதன் அங்கத்தவராக, நிதிச் செயலாளராக இருந்துள்ளதோடு, நீண்டகாலம் அச்சங்கத்தின் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார் என்பது ஆசிரியர்கள் மீதான இவரது சமூக அக்கறையை வெளிகாட்டுகிறது.

தொலைக்கல்வி பயிற்சி பாடநெறி நிகழ்ச்சித் திட்டம் நிறைவு பெற்ற பின்னர் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக இணைந்துகொண்ட ஆர்.ஸ்ரீதர் 2010ஆம் ஆண்டு அதிபர் சேவை தரம் - 2 பரீட்சையில் சித்திபெற்று ஹைலன்ஸ் கல்லூரியின் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். இதே காலப்பகுதியில் அக்கல்லூரியில் பணியாற்றிய கணித ஜாம்பவான் என பெருமையோடு நினைவுகூரப்படும் ஆசிரியர் அமரர் கே.ஜீவராஜனின் மறைவுக்குப் பின்னர் ஆங்கில மொழி மூலமான வகுப்புகளுக்கு கணிதம் கற்பிக்கும் பணியிலும் தன்னை இணைத்துக்கொண்டார்.

அதிபர் எஸ்.விஜயசிங்கின் தலைமைத்துவத்தின் கீழ் பிரதி அதிபராக சேவையாற்றிய இவர் பாடசாலையின் கல்வித்தர வளர்ச்சி, மாணவர் ஒழுக்கம், இணைப்பாடவிதான செயற்பாடுகள் என்பவை தேசிய மட்டத்தில் வளர்ச்சிபெறும் அளவுக்கு உறுதுணையாக பணியாற்றி வந்ததோடு, அதிபர் எஸ்.விஜயசிங்கின் நம்பிக்கைக்குரிய துணை நிர்வாகியாகத் திகழ்ந்தார்.

இச்சூழ்நிலையில்தான் 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அதிபர் எஸ்.விஜயசிங் ஓய்வுபெற்ற பின்னர், ஹைலன்ஸ் கல்லூரியின் வரலாற்றில் பத்தொன்பதாவது அதிபராக ஆர்.ஸ்ரீதர் நியமிக்கப்பட்டார். இது இவருக்கு மட்டுமல்ல, ஹைலன்ஸ் பாடசாலை சமூகத்துக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கருதலாம்.

ஹைலன்ஸ் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் இவருக்கும் தனியானதோர் இடம் உண்டு. இதனை பாடசாலைச் சமூகமும் நன்கு அறியும். 2017 முதல் 2023 வரையான இவரது தலைமைத்துவ காலப்பகுதியில் முன்னுள்ள காலப்பகுதிகளைக் காட்டிலும் பல்வேறு துறைகளிலும், பல்மட்ட வளர்ச்சி வேகத்தை ஏற்படுத்துவதில் இவரது சிந்தனையும் செயற்பாடுகளும் தனித்துவம் மிக்கதாய் அமைந்தது. ஹைலன்ஸ் கல்லூரியின் முகவரியை தேசிய மட்டத்துக்கும் சர்வதேச மட்டத்துக்கும் கொண்டுசென்றவர் அதிபர் எஸ்.விஜயசிங். அவர் வகுத்துக் கொடுத்த பாதையை பின்பற்றி அதை விசாலப்படுத்தி பல சாதனை ஈட்டங்களை கடந்த நாட்கள் வரை அதிபர் ஆர்.ஸ்ரீதர் ஏற்படுத்தினார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

**5 ஆம் தர புலமைப்பரிசில் பெறுபேற்று வளர்ச்சி நிலை**

| ஆண்டு | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| சித்திபெற்றோர் வீதம் | 24.7% | 33.01% | 48.11% | 44.66% | 41.90% | 56.57% |

**க.பொ.த. சாதாரண தர பெறுபேற்று வளர்ச்சி நிலை**

| ஆண்டு | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| உயர்தரத்துக்கான பெறுபேறுகளைப் பெற்றோர் வீதம் | 92.63% | 99.48% | 98.15% | 96.80% | 98% |

**க.பொ.த. உயர்தர பெறுபேற்றின்படி பல்கலைக்கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்**

| ஆண்டு | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| அனுமதி பெற்ற மாணவர்கள் | 173 | 232 | 260 | 229 | 273 |
| வீதம் | 75% | 82% | 85% | 80% | 87% |

அரசாங்கப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஹட்டன் கல்வி வலயத்திலும், மத்திய மாகாணத்திலும், தேசிய மட்டத்திலும் ஹைலன்ஸ் கல்லூரியை அடையாளப்படுத்துவதில் இவரது தலைமைத்துவ உழைப்பு உன்னதமானது. இதற்குரிய சான்றாதாரமாக விளங்குபவை இவை.

மேற்தரப்பட்ட தரவுகளைப் பார்க்குமிடத்து, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பவற்றில் மலையக மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய வழிகாட்டல்களை மேலான முகாமைத்துவ அணுகுமுறைகளுடன் திட்டமிடல்களை அதிபர் ஆர்.ஸ்ரீதர் மேற்கொண்டுள்ளார் என்பதை அறியலாம். இவரது காலப்பகுதியில் பல்கலைக்கழகத்துக்கு அதிகமான மாணவர்கள் தெரிவாகியுள்ளமை இவரது நிர்வாக வெற்றிக்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் இவரால் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கூடுதலான உத்வேகமும் அதனூடான வெற்றியும் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலை மட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளிடையே மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் பல வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன. அகில இலங்கை மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளிலும் வெற்றிகளுடன் கூடிய சாதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகளில் தேசிய மட்டத்திலே அதிக பதக்கங்களைப் பெற்ற பாடசாலைகளின் வரிசையில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை இதற்கு தக்க சான்றாகும். இது ஹைலன்ஸ் வரலாற்றில் தமிழ்மொழித் தினப் போட்டியில் கிடைக்கப்பெற்ற உயர்ந்த பெறுபேறு என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு பாடசாலை சமூகத்துடன் இணைந்துச் செயற்படல் என்ற முகாமைத்துவ சிந்தனையை நடைமுறைப்படுத்தி வெற்றிகண்ட பெருமையும் இவரைச் சாரும். குறிப்பாக, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் (பிரதான சங்கம், கிளை அமைப்புகள்) என்பவற்றின் செயற்பாடுகளை விஸ்தரித்து அதன் பயன்களை பாடசாலையும், மாணவர்களும் அதிகம் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றிய அமைத்தமை மற்றும் பெற்றோர் கூட்டங்களின் ஊடாக பெற்றோர்களது பொறுப்புகள், வகை கூறல்கள் என்பவை சரியாக வலியுறுத்தப்பட்டமை, மாணவர்களின் ஒழுக்க நிலையை மேம்படுத்த பெற்றோர்களின் உதவிகளைப் பெற்றுக்கொண்டமை போன்றவை இங்கே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயங்களாகும்.

இவற்றோடு மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் குறிஞ்சி சொற்சமர் - விவாதப் போட்டி, நாடக ஆற்றுகை விழா, பரதாற்பனம் - நடன நிகழ்ச்சி, தேசிய மட்ட நூலகப் போட்டிகள், உள்ளக விளையாட்டுப் போட்டிகள், FLAMENCO 2022, INTERACT CLUP 2019 என்பவை இவரது காலப்பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடந்தேறி வருகின்றன என்பது மனங்கொள்ளத்தக்கது. மேலும் பாடசாலையில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டுள்ளமையை குறிப்பிடலாம். உதாரணமாக பாடசாலையில் கேட்போர்கூடம் திறந்துவைக்கப்பட்டமை, தொழில்நுட்பப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டமை, நீர் விநியோக விஸ்தரிப்பு வேலைத்திட்டம், சுற்றாடலை அழகுபடுத்தும் செயற்றிட்டங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேலும் 2019ஆம் ஆண்டு சிறந்த அதிபர்களுக்கான ஆறுநாள் தாய்லாந்து கல்விச் சுற்றுலா சென்று வர வாய்ப்பு கிட்டியமை 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த அதிபர்களுக்கான குரு பிரதிபாபிரபா விருதைப் பெற்றுக்கொண்டமை போன்றமையும் இவரது சேவைக்கு கிடைத்த பெரும் சன்மானங்களாகவே கருதப்படுகின்றது.

மும்மொழிப் பரீட்சியம் என்பது இவரது வெற்றிக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளுள் ஒன்றென்பது இங்கு பலரும் அறிந்த விடயமே. சரளமாக மூன்று மொழிகளிலும் தெளிவாக புலமை பெற்றுள்ளதோடு, தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அறிவிப்பு செய்வதிலும் கைதேர்ந்தவர். மேடை நிகழ்ச்சிகள், கள நிகழ்ச்சிகள் என்பவற்றில் மிகச் சிறப்பாக அறிவிப்பு செய்யக்கூடிய ஒரு நல்ல கலைஞராகவும் இவர் மிளிர்கிறார்.

மலையக கல்விப்புல வளர்ச்சியில், ஹைலன்ஸ் கல்லூரியின் சாதனைப் பயணத்தில் உயரிய பாய்ச்சலை ஏற்படுத்திய அதிபர் என்ற வகையில் ஆர். ஸ்ரீதரின் சேவையை, பணியை, தலைமைத்துவ வகிபங்கை உயர்வாக மதிப்பதோடு அவரது ஓய்வு காலம் சிறக்க ஹைலன்ஸ் கல்லூரி சமூகம் வாழ்வாங்கு வாழ்த்துகின்றது.

**எம். அகிலன் - விரிவுரையாளர்,**
**அரசினர் ஆசிரியர் கலாசாலை,**
**கொட்டகலை.**

# கனிய மணல் அரசியல்!

**றிப்தி அலி**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கனிய வளங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இரத்தினக் கல், காரீயம், சுண்ணாம்புக் கற்கள், களிமண் வகைகள், கனிய மணல் வகைகள், இரும்புத்தாது மற்றும் உப்பு ஆகியன எமது நாட்டின் முக்கிய கனிய வளங்களாக காணப்படுகின்றன.

இலங்கையின் ஏற்றுமதியில் சுமார் மூன்று சதவீத பங்கை கனிய வளங்கள் கொண்டுள்ளன. எமது நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கனிய மணல் ஏற்றுமதிக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

இந்த ஏற்றுமதியின் ஊடாக வருடாந்தம் இலங்கைக்கு 65 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைப்பதாக கனிய வள ஏற்றுமதியாளர் சம்மேளனம் தெரிவிக்கின்றது.

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிறுவனத்தின் தரவுகளின் பிரகாரம் வருடாந்தம் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் கனிய மணல் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சீனா, ஜப்பான், இந்தியா, சிங்கப்பூர், ஜேர்மன் போன்ற பல உலக நாடுகளுக்கு இவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் 90 சதவீதமானவை இல்மனைட்டாகும்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலேயே பெறுமதி வாய்ந்த கனிய மணல் வளம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக, இம்மாகாணத்தின் புல்மோட்டை மற்றும் திருக்கோவில் ஆகிய பிரதேசங்களிலேயே இல்மனைட் காணப்படுகின்றது.

திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் அமையப்பெற்றுள்ள புல்மோட்டை பிரதேசத்தின் சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்துக்கும் நூறு மீற்றர் அகலத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இல்மனைட் காணப்படுகின்றது.

இதுபோன்று திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் முதல் உமிரி வரையான நான்கு கிலோ மீற்றர் பிரதேசத்திலும் இல்மனைட் காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்வதற்காக கனிய மணலை ஏற்றுமதிசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து, கிழக்கு மாகணத்திலுள்ள கனிய வளங்களை ஏற்றுமதி செய்வதில் அமைச்சர் நசீர் அஹமட் மற்றும் ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் குறிவைத்துள்ளனர். இதன் காரணமாக ஆளும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களான இவர்கள் இருவருக்கும் இடையில் கடந்த பல மாதங்களாக பனிப்போர் இடம்பெற்று வருகின்றது.

கனிய வளங்களை அகழ்வதற்குத் தேவையான அனுமதிகளை வழங்க வேண்டிய புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல் பணியகம் அமைச்சர் நசீர் அஹமட்டின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலுள்ள கனிய வளங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் சில அதிரடி உத்தரவுகளை கிழக்கு ஆளுநராக செந்தில் தொண்டமான் கடமைகளை பொறுப்பேற்றவுடன் மேற்கொண்டிருந்தார்.

மாகாணத்திலுள்ள கனிய மணல் மற்றும் கைத்தொழில்சார் கனிய வளங்கள் தொடர்பான முன்மொழிவுகள் அனைத்தையும் உடனடியாக இடைநிறுத்துமாறும், இதற்கு தேவையாக காணிகளை விடுவிக்க வேண்டாம் எனவும் கிழக்கு ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க கடந்த ஜூன் மாதம் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், ஆளுநருடைய செயலாளரின் கடிதத்தின் ஊடாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அரசியலமைப்பை நேரடியாக மீறும் செயல் என புவிச்சரிதவியல் அளவை சுரங்கவியல்



பணியகம் அறிவித்திருந்தது.

"கனிய வளங்கள் தொடர்பில் எந்தவொரு உத்தரவையும் ஆளுநர் செயலகத்தால் வழங்க முடியாது. இது தொடர்பில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது" என இப்பணியகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் பட்டய புவிச்சரிதவியல் நிபுணர் அஜித் பிரேம எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

இதேவேளை, "கனிய மணல் மற்றும் மண் அகழ்வுகள்" எனும் தலைப்பில் ஆளுநர் செந்தில் தொண்டமானால் கடந்த ஜூலை மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு துறைக்குப் பொறுப்பான அமைச்சரின் அனுமதி அவசியம் என கிழக்கு மாகாணத்திலுள்ள புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் பிராந்திய பொறியியலாளர்கள் மூவரும் தனித்தனி கடிதங்களின் ஊடாக ஆளுநரின் செயலாளருக்கு அறிவித்திருந்தனர்.



இவ்வாறான நிலையில், திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான 13 கிலோ மீற்றர் பிரதேசத்தில் கனிய மணல் அகழ்வை மேற்கொள்வதற்கு 'மிட் வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்' என்ற நிறுவனத்துடன் புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் ஒப்பந்தம் செய்துள்ளது.


நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றால் வழங்கப்பட்ட அனுமதியை அடுத்து இப்பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை குறித்த நிறுவனம் ஆரம்பித்திருந்தது.

இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகளை முன்னெடுக்கத் தேவையான அனுமதிகள் பெறப்பட வேண்டியுள்ளமையால் குறித்த திட்டத்தை முன்னெடுக்க முடியாதென கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின்பேரில் ஆளுநரின் செயலாளரால் குறித்த நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தலின்படி ஆளுநரின் செயலாளரால் வெளியிடப்பட்ட குறித்த கடிதத்தை அமுல்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போது இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தால் ஓகஸ்ட் 28ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட ரீட் மனுவை ஓகஸ்ட் 31ஆம் திகதி பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர்களான நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோரே 14 நாட்களுக்கான இடைக்கால தடையுத்தரவை வழங்கியுள்ளனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறி புவியியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தும் வகையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் உத்தரவுக்கமைய கடிதங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை (05) புல்மோட்டை தொடக்கம் நிலாவெளி வரையான கடற்கரைப் பகுதிகளில் கனிய மணல் அகழ்வுக்கான ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.


இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது. புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத் தலைவரின் தன்னிச்சையான ஒப்பந்தத்தை அடுத்து முன்னெடுக்கப்படும் ஆய்வு நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்துமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேசவாசிகள், அமைப்புகளின் பிரதிநிதிகள், கடற்றொழில் மீன்பிடி சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். இதன்போது, "அழிக்காதே அழிக்காதே இயற்கை வளத்தை அழிக்காதே", "சுரண்டாதே சுரண்டாதே மக்களின் வாழ்வாதாரத்தை சுரண்டாதே", "நிறுத்து நிறுத்து GSMB தலைவரின் தன்னிச்சையான முடிவை நிறுத்து", "அழிக்காதே அழிக்காதே சுற்றுலாத்துறையை அழிக்காதே", "மண் அகழ்வு ஒப்பந்தத்தை உடன் நிறுத்து" என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்ட இடத்திற்கு விஜயம் செய்த குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதனிடம் இந்த விடயத்தை ஜனாதிபதி, கிழக்கு ஆளுநர், மாவட்ட செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுசெல்வதற்கான மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக் தொன் கனிய மணல் சீனாவுக்கு கடந்த வாரம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச அளவிலான கேள்வி மனுக்கோரல் ஊடாக சீன நிறுவனம் ஏற்கனவே தெரிவுசெய்யட்டிருந்தது. சீன நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாக புத்தளம் இல்மனைட் நிறுவனம் செயற்படுகின்றது.



திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்ற கப்பலேற்றும் நிகழ்வில் புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத்துறை நிபுணருமான றையான் றொக்வுட் விளக்கமளிக்கையில்,

"வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பெறுமதியுடைய பெருமளவினால் கனிய மணலை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. இது ஒரு சிறப்புவாய்ந்த ஏற்றுமதியாகும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இக்காலத்தில் இடம்பெறும் இந்த ஏற்றுமதி மூலம் பல மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைக்கின்றது. நாட்டின் டொலர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது பங்களிப்பை வழங்கும்" - என்றார்.

இதுபோன்று மேலும் பல்லாயிரம் மெற்றிக் தொன் கனிய வளங்களை ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான முதலீட்டாளர்களை கொண்டுவரும் நோக்கில் எதிர்வரும் ஒக்டோபர் 20ஆம், 21ஆம் திகதிகளில் கனிய வளங்கள் தொடர்பான விசேட மாநாடொன்றை புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம் கொழும்பில் நடத்தவுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதற்றடவையாக நடைபெறும் இந்த மாநாட்டில் 500 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கலந்துகொள்ளவார்களென எதிர்பார்ப்பதாக பணியகத்தின் தலைவர் ஆர்.சஞ்சீபன் தெரிவித்தா.

எவ்வாறாயினும், கனிய மணலை நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு சூழலியலாளர்கள், சூழல் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். இக்கனிய மணல் அகழ்வால் சுற்றுச்சூழலுக்குப் பாரியளவிலான சேதம் விளைவிக்கப்படும் என்பதிலும் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

எனினும், நாட்டுக்குத் தேவையான அந்நியச் செலாவணி கொண்டுவரப்படும் என்ற நல்ல நோக்கில் இந்த கனிய மணல் அகழ்வுக்கு சில விட்டுக்கொடுப்புகளுடன் தற்போது பொதுமக்கள் அனுமதி வழங்கி வருகின்றனர்.

"இதனால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக கனிய மணலை ஏற்றுமதி செய்தால் மாத்திரமே எமது நாட்டுக்கு நன்மை கிடைக்கும்" என தென்கிழக்குப் பல்கலைக்கழத்தின் புவியயல் இணைப் பேராசிரியரான எம்.ஐ.எம்.கலீல் தெரிவித்தார்.

இதன்மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன், கனிய மணல் அகழப்படும் பிரதேசமும் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையும் என அவர் குறிப்பிட்டார்.

"கனிய மணலை நேரடியாக ஏற்றுமதி செய்வதன் ஊடாக நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ, நாட்டின் பொருளாதாரத்திற்கோ எந்தவித நன்மையும் கிடைக்காது. மாறாக, சில வெளிநாட்டு கம்பனிகளுக்கும், அவர்களின் உள்நாட்டு தரகர் நிறுவனங்களுக்கு மாத்திரமே நன்மை கிடைக்கும்" என இணைப் பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

---

# மறைந்தும் மறையாத ஆளுமை



இவ்வுலகில் பல மனிதர்கள் வாழ்ந்துவிட்டு சென்றாலும் நாம் அவர்கள் அனைவரையும் ஞாபகம் வைத்திருப்பதில்லை. அது இவ்வுலக வழக்காகும். ஆனால், அவர்களுள் முத்துகளாக மிளிர்ந்துவிட்டுச் சென்ற ஒருசிலரை மக்கள் மறக்க மறுத்திருந்தனர். அவர்கள் அவ்வாறு காலம் கடந்தும் மக்கள் மனதில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பதற்கான காரணம், அவர்களது செல்வங்களோ அல்லது அதிகாரங்களோ அல்ல. மாறாக, அவர்கள் எதிர்கால சந்ததியினருக்காக எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்தமையேயாகும்.

இத்தகைய மனிதர்களுள் களுத்துறை மாவட்டத்தின் பேருவளை மண் பெற்றெடுத்த முத்தாகிய மொஹமட் அப்துல் பாக்கீர் மாக்கார் என்ற நேர்மையினதும் கடமையுணர்வினதும் முழு உருவமாகத் திகழ்ந்த அரசியல் மகானைப் பற்றி பேசியே ஆகவேண்டும்.

இவர் 1917ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி பேருவளை மருதானையில் பிறந்தார். பின்னர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். இலங்கை மண்ணுக்கு பெரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய இஸ்லாமிய மறுமலர்ச்சித் தலைவர்களுள் ஒருவரான ரீ.பி.ஜாயா அவர்களை ஆசானாகக்கொண்டவராவார். ஸாஹிராக் கல்லூரியில் தனது கல்வியை முடித்துக்கொண்டு, அதே கல்லூரிக்காக சிலகாலம் பணியாற்றிவிட்டு இலங்கை சட்டக் கல்லூரிக்கும் தெரிவாகினார். 1940ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியாகிய அவர், 1942ஆம் ஆண்டு 2ஆம் உலகப்போர்க் காலத்தில் இலங்கை குடியுரிமைப் பாதுகாப்புப்படையில் இணைந்து சேவையாற்றினார். இதற்காக இந்தியாவுக்குச் சென்று பயிற்சி பெற்றார். போரின் பின்னர் அவர் சட்டத்துறைக்கான தனது பணியை ஆரம்பித்தார்.

அவருடைய அரசியல் பணி பேருவளை நகரசபையிலிருந்தே ஆரம்பித்தது. 1960ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பேருவளைத் தொகுதியில் போட்டியிட்டு, 9339 வாக்குகள் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். அதிலிருந்து பல பதவிகளை வகித்த அவர், 1977 முதல் 1978 வரை பிரதி சபாநாயகராகவும் 1978 முதல் 1983 வரை சபாநாயகராகவும் பதவி வகித்தார். இக்காலப்பகுதியில் அவர் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் பதில் ஜனாதிபதியாகவும் கடமையாற்றியிருக்கிறார். அக்காலங்களில் பாராளுமன்றத்தை மிகச் சரியாக வழிநடத்திய சிறந்த சபாநாயகராக அவர் திகழ்ந்தார். பின்னர் 1983 முதல் 1988 வரை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராகவும் 1988இலிருந்து 1993 வரையிலான காலப்பகுதியில் தென்மாகாண சபையின் ஆளுநராகவும் பணிபுரிந்தார்.

மொஹமட் அப்துல் பாக்கீர் மாக்கர் அவர்கள் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் சம்மேளனத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார். அத்தோடு, ஈராக் மற்றும் இலங்கை நட்புறவுச் சங்கத்தின் தலைவராக அவரது இறுதிநாள் வரை செயலாற்றியிருக்கிறார்.

இறுதியாக 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி தேசமானிய அல் –ஹாஜ் முஹம்மத் அப்துல் பாக்கீர் மாக்கார் தனது 80ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

தேசமானிய பாக்கீர் மாக்கார் அவர்கள் தனிப்பட்ட சுயலாபத்துக்காகவும் வேறு குறுகிய நோக்கங்களுக்காகவும் அரசியலில் ஈடுபட்டவரல்லர். அதற்கு மாற்றமாக பல்லினங்களைக்கொண்ட இந்த நாட்டின் எல்லா இனத்தவர்களும் சம உரிமையோடும் அந்தஸ்தோடும் வாழவேண்டும் என்பதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். தனது செயற்பாடுகள் குறித்து மறுமையில் இறைவனுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு நீதியாகவும் நேர்மையாகவும் தனது அரசியல் வாழ்விலும் நடந்துகொண்டவர். தனக்காக வாக்களித்த, வாக்களிக்காத அனைவரோடும் ஊர்மக்களோடும் சேர்ந்து அழகிய முறையில் வாழ்ந்து காட்டிய ஒரு சிறந்த முன்மாதிரி மிக்க அரசியல் தலைவராவார்.

பேருவளை நகரசபையின் நகரபிதாவாக பணிற்றுகின்ற காலப்பிரிவிலும் அவர் நகரசபைக்கு சொந்தமான கணக்கு வழக்குகளிலும் பொதுச் சொத்துகளிலும் மிக நேர்மையாக நடந்துகொண்டவர். மக்களுக்கு சேவையாற்றுவதையே தமது முதற்பணியாகக்கொண்ட அவர், அதிக வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் இறைவனுக்கும் தனக்கும் இருக்கின்ற தொடர்பு அறுபடாது பார்த்துக்கொண்டவர்.

புராணக் கதைகளில் கூறப்படும் செங்கோலாட்சி புரிந்த மன்னர்களைப் போன்று தாம் வகித்த பதவிகளில் நெறிதவறா முறையில் சிறப்புப் பணியாற்றியவர். தமது சுய நலத்தையும் சுய இலாபத்தையும் மாத்திரம் இலக்காகக்கொண்டு அரசியலில் ஈடுபடுகின்ற அரசியல்வாதிகளினின்றும் பிரித்துக்காட்ட மிகவும் தகுதியான ஒருவரே அப்துல் பாக்கீர் மாக்கார் அவர்கள்.

சம காலத்தில் இத்தகைய இலட்சியமிக்க அரசியல்வாதிகளின் தேவையை இந்த நாட்டு மக்கள் கவனத்திற்கொள்வது அவர்களது கடமையும் பொறுப்புமாகும்.

**எம்.எச்.எம். இஹ்ஸான்**
**எம்.ஏ.ஆயிஷா ஷஹானி**
**12 கலைப்பிரிவு**
**அல் – பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் பா. ம. வி.**

# வடமாகாணத்தில் அதிகரித்துவரும் கொலைகள்

## மன்னாரில் மாத்திரம் 4 வருடங்களில் 14 கொடூர கொலைகள்

## சட்டம், ஒழுங்கு சீரழிந்துள்ளமைக்கு யார் காரணம் ?

ஜோசப் நயன்

நாடளாவிய ரீதியில் கொலை கலாசாரம் அனைத்து பகுதிகளிலும் அதிகரித்து வருகின்றமை அண்மைக் காலங்களாக இடம்பெற்று வருகின்ற சம்பவங்களூடாக தெரியவருகின்றது. அதிலும் குறிப்பாக, வட பகுதியில் நடைபெற்றுவரும் துப்பாக்கிப் பிரயோகங்கள், கொலைகள் மற்றும் வாள்வெட்டுச் சம்பவங்கள் எல்லோர் மத்தியிலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், நெடுந்தீவு பகுதியில் இடம்பெற்ற கூட்டுக் கொலை இலங்கை முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. வெளிநாட்டைச் சேர்ந்த நபர் உட்பட நால்வர் கொடூரமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்டிருந்தனர்.



அதேபோன்று கடந்த மாதம் வவுனியாவில் வீடொன்றுக்குள் புகுந்த கும்பலொன்று வீட்டுக்கு தார் ஊற்றி வீடொன்றை எரித்து அங்கிருந்த அனைவரையும் தாக்கி, கணவன், மனைவி இருவரையும் கொலைசெய்த சம்பவமும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறிருக்க, கடந்த வாரம் மன்னார் மாவட்டத்தில் விவசாய வேலை நிறை வடைந்து வீடு திரும்பிய இருவர் அடம்பன், முள்ளிக் கண்டல் பகுதியில் கொடூரமாக திட்டமிடப்பட்டு சுடப்பட்டு கொலைசெய்யப்பட்டிருந்த சம்பவமும் மன்னார் மாவட்டம் முழுவதையும் அச்சுறுத்தியுள்ளது.

கொலை இடம்பெற்று இரு வாரங்கள் நிறைவடைய வுள்ள நிலையில், இன்றுவரை குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் எவரையும் மன்னார் பொலிஸார் கைதுசெய்யாத நிலையே காணப்படு கின்றது.

இது ஒரு புறம் இருக்க, கடந்த 2020ஆம் ஆண்டு மன்னார், மாந்தை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இலுப்பைக் கடவை பகுதியில் பணி முடிந்து வீடு திரும்பிய கிராமசேவகர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொடூரமாக கொலைசெய்யப்பட்டிருந்தார்.

இருப்பினும் இதுவரை கிராமசேவகர் கொலை தொடர்பில் முக்கிய சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதுடன், கொலைக்கான காரணங்களோ, பின்னணிகளோ கண்டறியப்படவில்லை என்பது பொலிஸார் மீதான மக்களின் நம்பிக்கையைக் குறைத்துள்ளது.

பணியில் இருக்கும் அரச ஊழியர்களுக்கே உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில், சாதாரண மக்களின் நிலை எவ்வாறு என்பதே இங்கு பலரின் கேள்வியாக உள்ளது.

இவ்வாறான நிலையில், மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் (2020.01.01 தொடக்கம் 2023.08.28 ) மூன்று வருடங்கள் ஒன்பது மாதங்களில் 14 கொடூர கொலைகள் இடம்பெற்றுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக, 2020ஆம் ஆண்டு 5 கொலைகளும், 2021ஆம் ஆண்டு 2 கொலைகளும், 2022ஆம் ஆண்டு 2 கொலைகளும், இந்த வருடம் தற்போதுவரை 5 கொலைகளும் இடம்பெற்றுள்ளதாக தகவல் வழங்கியுள்ளனர். இதுவரை 14 கொலைகளுடன் சம்பந்தப்பட்ட 38 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட் டுள்ளதாகவும் 5இற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாகவும் தகவல் வழங்கியுள்ளனர்.











குறிப்பாக, இந்த வருடம் மன்னார், சாந்திபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் குடும்பம் ஒன்றால் சுற்றிவளைக்கப்பட்டு கொடூரமாக ஆயுதங்களால் தலைப்பகுதியில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருந்தார்.

கடந்த வருடம் மன்னார், உயிலங்குளம் பகுதியில் இரு சகோதரர்கள் ஒரேநேரத்தில் வாள்களால், கோடரிகளால் கொடூரமாக வெட்டிக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றிருந்தது.

அத்துடன், 2021ஆம் ஆண்டு மன்னார் ஓலைத் தொடுவாய் பகுதியில் நபரொருவர் 20 இடங்களில் வெட்டப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது

இவ்வாறான கொடூர கொலைகள் இடம்பெறும் சில சமயங்களில் குற்றவாளிகளில் அதிகமானவர்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு கைதுசெய்யப் பட்டாலும் இன்னும் பல கொலைச் சம்பவங்களில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படாமலும் கைது செய்யப்பட்டவர்களுக்கு உரிய காலத்தில் தண்டனை கிடைக்காமலும் உள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் கொலைகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதுடன், கொலை முயற்சிகளும் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக, 2020ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தக் கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை உச்சகட்டம் அடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை வருடத்துக்கு ஒன்று என்று காணப்பட்ட கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை தற்போது வருடத்துக்கு மூன்று தொடக்கம் ஐந்தாக அதிகரித்துள்ளது

அதேநேரம், சில சம்பவங்கள் கொலையா, தற்கொலையா என்ற முடிவுக்கே வரமுடியாத நிலையில் வழக்குகளாக மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக, கடந்த 2021ஆம் ஆண்டு மன்னார் எமில் நகர்ப் பகுதியில் தனிமையில் வசித்த நபரின் வீட்டில் இரத்தக் கறைகள் காணப்பட்ட நிலையில், அதே நபர் மன்னார், தரவன்கோட்டை புகையிரதக் கடவையில் இறந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார். குறித்த சம்பவம் கொலை என்ற சந்தேகத்தை உறவினர்கள் எழுப்பியிருந்தபோதும் குறித்த வழக்கிலும் இதுவரை எந்தக் குற்றவாளிகளோ சந்தேக நபர்களோ கைதுசெய்யப்படாத நிலையே காண்ப்படுகின்றது

அதேநேரம் அண்மையில் உயிலங்குளம் பிரதான வீதியில் நபரொருவர் வாகனம் ஒன்றால் அடித்து மரணமடைந்த நிலையில், அது விபத்தா அல்லது திட்டமிட்ட கொலையா என கண்டறிய முடியாத நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு மாவட்டத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்ற நிலையில், மாவட்ட ரீதியாக இடம்பெறும் கொலைகள், கொள்ளைகள், பாலியல் வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் கடத்தல் உள்ளடங்கலாக காணப்படுகின்ற வழக்கு விவரங்களை தரவு ரீதியாக நீதி சேவை ஆணைக்குழு கோவைபடுத்துவதில்லை எனவும் முடிவுறுத்தப்பட்ட வழக்கு முடிவுறுத்தப்படாத வழக்கு என மாத்திரமே கோவைப்படுத்துவதாகவும் நீதி சேவை ஆணைக்குழு, தகவல் அறியும் ஆணைக்குழு முன்னிலையில் விசாரணை ஒன்றின்போது தெரிவித்திருந்தது.

இவ்வாறான தரவுகள் பேணப்படாமையால் நாட்டில் இடம்பெறுகின்ற சட்டவிரோத விடயங்கள் தொடர்பில் சரியான தரவுகளை கூட மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது

எது எவ்வாறிருந்தாலும் நாடளாவிய ரீதியில் அதிகரித்துவரும் கொலைகள் உட்பட வாள்வெட்டுச் சம்பவங்கள், பழிவாங்கும் சம்பவங்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள், சட்டத்தைக் கையிலெடுக்கும் எந்தவொரு குற்றச்செயல்களும் நிறுத்தப்படவேண்டும் என்பதுடன், அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களோ, குழுக்களோ, அவர்களுக்கு நிதி வழங்கும் உள்நாட்டு, வெளிநாட்டு தரகர்களோ உடனடியாக கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதேநேரம், இவ்வாறான கொடூரமான கொலைகளை செய்பவர்களும் அவற்றுக்குக் காரணமானவர்களும் அவற்றுக்கு உதவுபவர்களும் பாரபட்சமின்றி விரைவான - விரிவான விசாரணைகளின் பின்னர் உடனடியாக தண்டிக்கப்படவேண்டும்.

அவ்வாறு தண்டிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே இவ்வாறான சம்பவங்கள் வடக்கிலிருந்து முடிவுக்கு வரும் என்பதே நிதர்சனம்.

---

# மாத்தளை மாநகர சபைக்குரிய தகனசாலை

## நிதி மோசடி




**கணக்காய்வில் வெளிப்பட்டுள்ள தகவல்கள்**

மாத்தளை மாநகர சபை தகன சாலையில் ஆறு மாத காலப் பகுதியில் 5,50,000 ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளமை கணக்காய் வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பற்றுச் சீட்டுகள் திருத்தம் செய்யப்பட்டே இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளதை கணக்காய்வை மேற்கொண்ட குழுவினர் கண்டறிந்துள்ளனர்.

பொதுமக்கள் தகனசாலை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு செலுத்தப் படுகின்ற நிதிக்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டு களின் தொகையை மாற்றியே நிதி மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடம் 2022 ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிமுதல் இந்த வருடம் 2023 ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிவரை ஆறு மாத காலத்தில் தகனசாலையில் தகனம் செய்யப்பட்ட சடலங்களுக்கு பொதுமக்களால் செலுத்தப்பட்ட நிதி தொடர் பான ஆய்விலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு 20,000 ரூபாவும் வெளியாருக்கு 25,000 ரூபாவும் மாநகர சபையால் குறிப்பிட்ட தகனம் செய்வதற் கான தொகை அறவிடப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப் படுகின்ற கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு களை கணக்காய்வுக் குழுவினரால் ஆய்வுக்கு உட்படுத்தியபோது வெளியாரிடம் பெற்றுக்கொண்ட 25,000 ரூபாவுக்குப் பதிலாக அதனைத் திருத்தி 20,000 ரூபா என மாநகர சபையின் கணக்கில் காட்டப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தின் வங்கி விடுமுறை தினம் மற்றும் பொது விடுமுறை தினமான கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதி தற்காலிகமாக இரண்டு பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு 50,000 ரூபா தகனசாலை பொறுப்பாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மறுநாள் காலை மாநகர சபைக்கு செலுத்தப்பட்ட தொகையையும் பற்றுச் சீட்டையும் பரீட்சித்து பார்த்தபோது 50,000 ரூபா என குறிப்பிடப்பட்டிருந்த பற்றுச்சீட்டில் 35,000 ரூபா என திருத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் ஊடாக தெரியவந்துள்ளது.

மாத்தளை மாநகர சபை தகனசாலைக்கு கொண்டுவரப்படுகின்ற சில சடலங்கள் தகனம் என்பதற்குப் பதிலாக அடக்கம் செய்யப்பட்டதாக பற்றுச்சீட்டு உடைக்கப்பட்டு நிதி மோசடி இடம் பெற்றுள்ளமையை கணக்காய்வுக் குழுவினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தகனசாலைக்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் சேவைகளை முன்னெடுத்த நபர் மீதே குற்றச்சாட்டு எழுந்துள்ளது. குறித்த நபர் தற்போது மாவட்ட வைத்திய சேவை காரியால யத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிதி மோசடி தொடர்பாக மாத்தளை மாநகர சபையினரால் மாத்தளை பொலிஸ் நிலையத்தின் விசேட குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப் பாடொன்றும் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்தப் பிரிவின் பொறுப் பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் சுமேத தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மாத்தளை மாநகர சபையால் முன்னெடுக் கப்படுகின்ற செயற்பாடுகளில் ஒரு நபரின் செயற்பாட்டை இன்னும் ஒருவர் ஊடாக பரிசீலனைக்கு உட்படுத்தப்படு கின்ற செயற்பாடானது முறையாக செயற்படுத்தப்படவில்லை என்ற விடயத்தையும் கணக்காய்வை மேற்கொண்ட குழுவினர் அறிக்கை ஒன்றின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிதி மோசடியில் ஈடுபட் டுள்ளதாகக் கூறப்படும் நபரிடம் தொலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்தி இது தொடர்பான மேலதிக தகவல்கள் அவர் தரப்பில் கேட்கப்பட்டபோது, அவர் தனக்கு இது தொடர்பாக எந்தவொரு விடயமும் தெரியாது எனவும் எந்தவொரு தரப்பினரும் தனக்கு இந்த சம்பவம் தொடர்பில் அறிவித்திருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ஊடாக மாத்தளை காவல் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளமை தொடர்பில் மாநகர சபையின் ஆணையாளர் யுரேஸ் நிசாந்த மாதுவகே உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு மாத்தளை மாநகர சபை யிலும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளக விசாரணைகளும் முன்னெடுக்கப் படுகின்றன. இது தவிர, கடந்த சில வருடங் களாக இடம்பெற்ற நிதி தொடர் பான விடயங்களையும் ஆய்வுக்கு உட்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கின்றோம் என்பதை ஆணையாளர் யுரேஸ் நிசாந்த மாதுவகே தொலைபேசி ஊடாக எமக்கு தெளிவுபடுத்தினார். மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான மோசடிகள் நடைபெறுவதை தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் ஆணையாளர் குறிப்பிடுகின்றார்.

கணக்காய்வாளர் பி.ஜி.எஸ்.நிசாந்த தலைமையிலான குழவினரே மேற்படி கணக்காய்வை மேற்கொண்டுள்ளனர். இந்த அறிக்கையின் பிரதிகள் மத்திய மாகாண ஆணையாளர் மத்திய மாகாண பிரதி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு சேவை வழங்குகின்ற நிறுவனமாக உள்ளன. இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது பணிக்கூற்றிலும் மக்களுக்கு சிறப்பான சேவையை முன்னெடுப்பதே தமது இலக்கு என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தாலும் அதையும் மீறி இங்கு சில மோசடிகளும் ஊழல்களும் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் கடும் கண்டனங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா எஸ்.தியாகு






# இந்திய கூட்டணி இந்தியாவை காப்பாற்றுமா?

இந்தியாவில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. அடுத்தாண்டு மே மாதம் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் தயாராகிவருகின்றன

ஆளும் பா.ஜ.கவை வீழ்த்த வேண்டும். ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் பா.ஜ.க. இந்தியாவை சிதைத்துவிட்டது. மதவாதத்தை வளர்த்து வெறுப்பு அரசியலை வளர்த்ததைத் தவிர, மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. மீண்டும் அவர்கள் கையில் ஆட்சியைக் கொடுத்தால் மேலும் இந்தியாவை சிதைத்துவிடுவார்கள். எனவே, பா.ஜ.கவை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து களமிறங்கியுள்ளன.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலுள்ள பா.ஜ.கவை எதிர்க்கும் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து இந்தியா (இந்திய தேசிய உள்ளடக்கிய வளர்ச்சிக் கூட்டணி) என்ற புதிய கூட்டணியை அமைத்துள்ளன.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவை எதிர்கொள்வதற்காக 26 கட்சிகள் இணைந்து இந்தத் கூட்டணியை அமைத்துள்ளன. இக்கூட்டணியின் முதலாவது கூட்டம் பீகார் தலைநகர் பாட்னாவிலும் இரண்டாவது கூட்டம் பெங்களூரிலும் நடைபெற்றன.

இந்நிலையில், இந்திய கூட்டணியின் மூன்றாவது கூட்டம் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் செப்டெம்பர் 1ஆம் 2ஆம் திகதிகளில் நடந்து முடிந்துள்ளது. இரண்டு நாள் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்திய கூட்டணி இந்தியாவை காப்பாற்றுமா என்ற எதிர்பார்ப்பும் இந்தியர்களிடம் எழுத்துள்ளது. இந்தக் கூட்டணியைக் கண்டு பா.ஜ.கவும் ஒருவிதமான அச்சத்தில் இருப்பதாகவும் தெரிகிறது.

மதச்சார்பற்ற இந்தியாவைக் காப்பாற்றவேண்டியது அவசியம் என்று மும்பை கூட்டத்துக்குப் பிறகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்

அவர் மேலும் கூறும்போது,

ஆட்சி அதிகாரத்திலிருந்து பா.ஜ.கவை இறக்குவதற்கான கவுண்ட்டவுன் தொடங்கிவிட்டது. கடந்த 9 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் எந்த சாதனையும் இல்லை. பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசின் செல்வாக்கு நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இந்திய கூட்டணிக்கு ஒவ்வொருநாளும் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

எத்தனை பேர் ஒன்றுசேர்ந்தாலும் அவர்களால் ஒன்றும் சாதிக்க முடியாது என்று பா.ஜ.கவின் மகளிர் தேசிய தலைவர் வானதி சீனிவாசன் உறுதிப்பட கூறுவதையும் புறந்தள்ளிவிட முடியாது. ஏனென்றால், பா.ஜ.கவின் சாதனைகளை முன்வைத்து பிரசாரம் செய்யும்போது மக்கள் யோசிக்கவே செய்வார்கள்.

தற்போது சமையலுக்கான எரிவாயு உருளையின் விலையை 200 ரூபாவால் ஆளும் பா.ஜ.க. அரசு குறைத்துள்ளது

இதற்கு குடும்பப் பெண்கள் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது. இதேபோல் இன்னும் பல கவர்ச்சிகரமான அறிவிப்புகள் வரலாம்

***செப்டெம்பரில் நடைபெறும் G20 மாநாடு***

ஜனவரியில் அயோத்தியில் திறக்கவிருக்கும் இராமர் கோயில், இதுபோன்ற நிகழ்வுகள் எல்லாம் பா.ஜ.கவுக்கு பலம் தரலாம் என்றாலும் முழுமையான வெற்றி கிடைக்குமா என்பதையும் அவதானிக்க வேண்டியுள்ளது.

ஏனென்றால், இந்திய கூட்டணி பாட்னாவில் கூடும்போது 19 கட்சிகளும். பெங்களூரில் கூடும்போது 26 கட்சிகளும். இடம்பெற்றிருந்தன. மும்பையில் நடந்த கூட்டத்தில் இதன் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது

அடுத்துவரும் கூட்டங்களில் இதன் எண்ணிக்கை கூடலாம். இது தேர்தலில் வெற்றிபெறுவதற்கான கூட்டணி மட்டுமல்ல, 140 கோடி இந்தியர்களின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்கான கூட்டணி என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

எங்கள் கூட்டணியின் பலத்தைக் கண்டு ஆளும் பா.ஜ.க. அரசு அச்சம்கொண்டுள்ளது. அதனால்தான் எரிவாயு உருளையின் விலையை 200 ரூபாவால் குறைத்துள்ளது. இதுவே எங்கள் கூட்டணிக்குக் கிடைத்த முதல் வெற்றிதான் என்று இந்திய கூட்டணியினர் மகிழ்ச்சியடைகின்றனர்





பிரதமர் எங்கே சென்றாலும். எங்கே பேசினாலும் தன்னுடைய ஆட்சியின் சாதனைகளை சொல்வதில்லை. அதற்குப் பதிலாக இந்திய கூட்டணியைப் பற்றியே பேசி எங்கள் கூட்டணிக்கு நல்ல விளம்பரத் தூதராக செயல்பட்டு வருகிறார். இந்திய கூட்டணியை செல்வாக்குமிக்க கூட்டணியாக ஆக்கியதற்கு நன்றி தெரிவிக்கும் எதிர்க்கட்சிகளின் நேர்மறையான சிந்தனையைப் பாராட்டவேண்டும்

அண்மைக்காலமாக எதிர்க்கட்சிகளைப் பிளவுபடுத்துவது, விசாரணை அமைப்புகள் மூலம் அவர்களுக்கு மிரட்டல் விடுப்பது, தன்னை எதிர்ப்பவர்களே அரசியலில் இருக்கக் கூடாது என்று நினைப்பதும். சர்வாதிகாரமாக நடந்துகொள்வதும் பா.ஜ.கவின் பின்னடைவுக்கான காரணமாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கின்றன.

ஊழல் கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்துள்ளன என்று மேடைதோறும் முழக்கமிட்ட பிரதமர் நரேந்திர மோடி, தனது அரசின் மீது தணிக்கை அறிக்கை காட்டியுள்ள 7.5 இலட்சம் கோடி மதிப்பிலான முறைகேடுகளைப் பற்றி பேசாமல் இருப்பதன் மர்மத்தையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்தியாவை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இன்று சாதாரண மக்களின் மனதிலும் எழுந்துள்ளது. பா.ஜ.கவை வீழ்த்த முடியாத சக்தியல்ல. வெவ்வேறு மாநிலங்களில் தனித்தனியாக விழ்த்தப்பட்ட கட்சிதான் பா.ஜ.க. என்று மு.க.ஸ்டாலின் கூறுவது நியாயமானது என்றாலும் இந்திய கூட்டணி மும்பையில் நடத்திய கூட்டத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்களே அதிக நேரம் பேசினார்கள் என்று அதிருப்தியை ஏற்படுத்திய திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மேற்குவங்க முதல்வருமான மம்தா பானர்ஜியும், ஆம் ஆத்மி கட்சியின் தலைவரும் டில்லி முதல்வருமான கெஜ்ரிவாலும் கூட்டணியை பலப்படுத்துவார்களா? பலவீனப்படுத்துவார்களா?

இதுபோன்ற அதிருப்திகளை எப்படி எதிர்கொள்ளப்போகிறார்கள் என்பதும் கேள்வியாகவே இருக்கிறது.

**தமிழ்நாட்டிலிருந்து**
**நந்தவனம் சந்திரசேகரன்**

## சனல் -4 வெளிப்படுத்திய...
(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொரு சூழ்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பம் அரசியலில் மீண்டும் தமது நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்ள தேவையான அடித்தளத்தை இடுவதில் கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

சனல்-4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலுக்கு கோட்டாபய ராஜபக்ஷதான் பிரதான சூத்திரதாரி என்ற குற்றச்சாட்டு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஏற்பட்ட மக்கள் போராட்டத்துடன் பதவியை விட்டு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு ஓடியதால் மஹிந்த குடும்ப அரசியல் செல்வாக்கு சரிவடைந்தது. அந்த செல்வாக்கையும் ஆதரவையும் மீண்டும் கட்டியெழுப்புவதில் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் முக்கிய இடத்தைப் பெறவிருக்கின்ற நிலையில் சனல்-4 அதிர்வலைகள் அமைகின்றன.

இதற்கிடையில் 2023 செப்டெம்பர் 03ஆம் திகதி ஸ்ரீல.சு.கட்சியும் அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் 72ஆவது பேராளர் மாநாட்டைக் கூட்டி பல விடயங்களை ஆராய்ந்திருக்கின்றது. இந்தப் பேராளர் மாநாடு பத்தரமுல்லை இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்றிருக்கின்றது. இந்த மாநாட்டுக்கு கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் ஸ்ரீல.சு.கட்சியும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது, ஜனாதிபதி வேட்பாளராக யாரை களமிறக்குவது என்ற விடயங்கள் தொடர்பாக ஆழமான முறையில் பரிசீலனை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றது. குறிப்பாக, அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவை களமிறக்குவது தொடர்பாகவே ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது. ஆனாலும் அக்கட்சி அதிரடியாக அதன் செயலாளரை பதவி இறக்கி புதியவரை நியமித்தமை அக்கட்சிக்குள் ஒருவிதமான குழப்பநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

மறுபுறமாக ஐ.தே.கட்சி 2023 செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி நடத்தவிருந்த பேராளர் மாநாட்டை மறுஅறிவித்தல் வரை பின்போடவேண்டி ஏற்பட்டிருக்கின்றது. தற்போது தொடரும் சீரற்ற காலநிலை இந்த மாநாட்டுக்கு குறுக்கீடு செய்ததாக கட்சியின் உயர்பீடம் அறிவித்திருக்கின்றது. எவ்வாறாயினும் கொழும்பு லேக்ஹவுஸ் முன்னால் அமைந்துள்ள விசாலமான வாகன தரிப்பிடத் திடலில் சுமார் 20,000 பேராளர்கள் அளவில் பங்குபற்றச் செய்யும் வகையில் நடத்தவிருந்த பேராளர் மாநாடே இவ்வாறு பின்போடப்பட்டிருக்கின்றது. ஒரேயொரு தனி பாராளுமன்ற உறுப்பினருடன் கரை சேர்ந்த ஓடமாக பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஐ.தே.கட்சி தேர்தல் தொகுதிகள்தோறும் அதன் கட்சிக் கிளைகளை புனரமைப்புச் செய்து அமைப்பாளர்களையும் நியமித்து அடுத்து அவர்களை ஒன்றுகூட்டவே இந்த மாநாட்டை திட்டமிட்டிருந்தது. கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை களமிறக்குவதோடு, எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் ஐ.தே.கவுக்கு புதுத்தெம்பு வந்துள்ள நிலையில் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது.

இப்படியாக தனிவழி பயணத்தைத் தொடரவிருக்கின்ற ஐ.தே.கவுக்கு சவாலாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகளை இணைத்து புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவரும் சமகி ஜனபலவேகய கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச செயற்பட்டு வருகின்றார். ஆனாலும் அந்தக் கூட்டணியில் மஹிந்த குடும்பத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பொதுஜன பெரமுன கட்சியோ, ஐ.தே.கட்சியோ இடம்பெறாது என்றும் அறிய முடிகின்றது. அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலை சந்திப்பதற்காக தயாராகிக்கொண்டிருக்கின்ற நிலையில் இப்படியான புதிய கூட்டணி புதிய உத்வேகத்தை அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கூட்டணியை அமைப்பதற்கு முன்னர் அதற்குத் தேவையான யாப்பை வரையும் பணிகளும் நிறைவடைந்திருப்பதாக சமகி ஜனபலவேகய கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் பொதுஜன பெரமுனவிலிருந்து உடைந்து டலஸ் அலகப்பெருமவின் வழிநடத்தலில் இயங்கிக்கொண்டிருக்கின்ற ஜாதிக நிதஹஸ் சபாவ என்ற தேசிய சுதந்திர சபாவ மற்றொரு புதிய கூட்டணியை உருவாக்குவது தொடர்பாகவும் ஆலோசனை செய்துவருவதாக அதன் உறுப்பினரும் பாராளுமன்ற அங்கத்தவருமான டலஸ் அலகப்பெரும அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளார். அவருடன் இணைந்ததாக 13 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

உஎதிர்க்கட்சித் தலைவர் சஜித் தலைமையிலான கூட்டணியுடன் கூட்டுச் சேராமல் மற்றுமொரு தனிவழி பயணத்துக்கான ஆரம்பமாகவே அவரால் இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக அறிய முடிகின்றது. தற்போதைய நிலையில் ஐ.தே.கவுடன் பதவிக்காகவும் அரசியல் அதிகாரத்துக்காகவும் இணைந்துள்ள பொதுஜன பெரமுன ஆதரவு உறுப்பினர்களும் ஜனாதிபதித் தேர்தலொன்று நெருங்கும் நேரத்தில் யார் பக்கம் சாய்வார்கள் என்பதை திட்டவட்டமாக கூற முடியாத நிச்சயமற்ற ஒருநிலை காணப்படுகின்றது.

இருந்தாலும் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சியின் தலைமையில் உருவாக்கப்படவிருக்கின்ற கூட்டணியில் இணைவதற்காக டலஸ் அலகப்பெருமவின் ஆதரவு உறுப்பினர்கள் 09 பேரும் தயாராக இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எவ்வாறோ எதிர்வரும் நாட்களில் அரசியல் களம் புதிய கூட்டணிகளை உருவாக்குவதிலும் யாரோடு யார் சேர்வது என்பதிலும் கடும் போட்டி அல்லது சூடு பிடித்ததாக அமையவிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறானதொரு நிலையில் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தியதாக புதிய அரசியல் அணி ஒன்றும் உருவாகின்றபோது அரசியல் களத்தில் மும்முனைப் போட்டி ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. இருந்தாலும் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய கட்சியின் பலமான எதிர்பார்ப்பு தற்போது நாடு இருக்கின்ற நிலையில் மக்கள் ஒருபோதும் மீண்டும் மஹிந்த அணியின் அரசியல் முகாம் பலமடைய இடம்வைக்க மாட்டார்கள் என்பதோடு, அடுத்த தேர்தலில் மக்கள் சஜித்தின் தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரள்வார்கள் என்பதுமாகும்.

தற்போதைய நிலையில் இந்த அரசாங்கம் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்தது என்ற காரணத்தை சொல்லிக்கொண்டு ஆட்சியை முன்னெடுத்தாலும் அன்றாட வாழ்வில் மக்கள் ஏராளமான நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. அதன் பிரதிபலனாக மீண்டும் பஸ் கட்டணங்கள் உயர்வடைய இருப்பதோடு அதனோடிணைந்த பல பொருட்கள் சேவைகளிலும் பாதிப்புகள் ஏற்பட இருக்கின்றன.

அமெரிக்க டொலருக்கான தட்டுப்பாட்டையும் இறக்குமதி கட்டுப்பாடுகள், வரி விதிப்புகளை காரணமாக வைத்து அன்றாட பாவனைப் பொருட்கள் மற்றும் சேவைகள் பலவற்றின் விலைகள் சுமார் 300 வீதத்தால் உயர்வடைந்தன. ஆனாலும் தற்போது அமெரிக்க டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி மற்றும் பணவீக்கத்திலான வீழ்ச்சி என்பன ஏற்பட்டிருந்தாலும் உயர்வடைந்த விலைகள் குறையவில்லை. அத்துடன், அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களது சம்பளங்களில் உயர்வு ஏற்படவில்லை. வாழ்க்கைச்சுமை உயர்வடைந்துகொண்டே போகின்ற நிலையில், நாட்டில் மக்கள் மத்தியில் பட்டினி, போசாக்கின்மை போன்ற பக்கவிளைவுகள் ஏற்பட்டவண்ணம் உள்ளன. இந்த நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு நாட்டில் உண்மையான பொருளாதார செழிப்பும் வளர்ச்சியும் ஏற்படவேண்டுமானால் புதிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என்பது மக்கள் எதிர்பார்ப்பாகும்.

# கரையோரக் கவலைகள்



உமர் அலி உஸ்மான்

இலங்கைக்கு அழகு, இலங்கையை சூழவுள்ள கடலும் கடல் சார்ந்த இடங்களும்தான். அதேபோன்றே இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் அழகும் கடற்கரையே. இதனால் கிழக்கு மக்களுக்கு பிரதான தொழில்களில் மீன்பிடியும் ஒன்று. இன்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் கால்கடுக்க கடற்கரை மண்ணில் நடந்து சென்றே அலையுடன் விளையாட வேண்டும். கடலில் குளிக்க வேண்டும், மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்ல வேண்டும். மீன்பிடிப் படகுகள் கடற்கரை மண்ணில் கம்பீரமாக - அழகாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். மாலைவேளையில் இளைஞர்கள் கடற்கரையில் உதைபந்து, எல்ல, கிரிக்கெட் விளையாடுவார்கள். அந்தக் காலம் பசுமையான காலமாக இருந்தது. தூக்கத்திலிருந்து எழுந்தவனின் அழகான கனவு கலைந்ததுபோல் காலம் சுழன்றோடி கடலிருக்கிறது கரையை காணவில்லை. சில அதிகார வர்க்கத்தின் பிழையான தீர்மானங்களால் கிழக்கு கடற்கரை படிப்படியாக கடலுடன் சங்கமித்து வருகிறது.


அம்பாறை மாவட்ட கரையோரம் பலத்த சேதத்தை சந்தித்து வருகின்றது. இதற்கு காரணம் ஒலுவிலில் நிர்மாணிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகம் என்கின்றனர் விடயம் அறிந்த வல்லுநர்கள் பலரும். அந்த துறைமுகம் “யாருமில்லா ஊரில் யாருக்கு ரீ ஆத்துறாய்” என்பதுபோலவே உள்ளது. அந்தத் துறைமுகத்தால் மீனவர்களுக்கும் பயனில்லை, அரசுக்கும் இலாபமில்லை, மக்களுக்கும் காணிகள் கடலுடன் செல்கின்றன என்கிற பிரச்சினை இருக்கிறது. ஆனால், இங்கு பெருமைக்கு ஒரு துறைமுகம் இருக்கிறதென்பதே உண்மை. ஆனாலும் சிலருக்கு தொழில் கிடைத்துள்ளது. ஒலுவில் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு, செயற்படாத நிலையில் காணப்படும் துறைமுகத்துக்கு மாதாந்தம் 56 இலட்சம் ரூபா அளவில் செலவிடப்படுவதாக அறிய முடிகிறது.

கல்முனை பிராந்தியத்தில் கடலரிப்பு ஏற்பட பிரதான காரணமாக அமைந்துள்ள ஒலுவில் துறைமுகம் அமைவதை 1998ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம், அப்போதைய துறைமுக அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப் பிரகடனப்படுத்தினார். இதனையடுத்து ஒலுவில் துறைமுக நிர்மாணத்துக்காக டென்மார்க் அரசிடமிருந்து 46.1 மில்லியன் யூரோவை இலங்கை அரசு வட்டியில்லாக் கடனாகப் பெற்றது. (இதன் இன்றைய இலங்கைப் பெறுமதி சுமார் 1,600 கோடி ரூபாவாகும்). 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம், ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதி அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஒலுவில் துறைமுகத்தை அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். ஆயினும், இதுவரையில் இந்தத் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் கூட வந்துபோகவில்லை. துறைமுகத்தின் பல கட்டடங்கள் சிதைவடைந்துள்ளதோடு, ஆங்காங்கே புதர்களும் வளர்ந்து காணப்படுகின்றன. வர்த்தகத் துறைமுகம் மற்றும் மீன்பிடித் துறைமுகம் என ஒலுவில் துறைமுகத்தில் இரண்டு பிரிவுகள் உள்ளன. மீன்பிடித் துறைமுகம் 2013ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவந்த போதிலும் இப்போது அதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் மக்களின் வரிப்பணம் வீணாகியுள்ளது என்பதெல்லாம் விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

ஒலுவில் துறைமுகம் நிர்மாணிக்கப் பட்டமையால் மக்களுக்கு எந்தவிதப் பயன்களும் கிட்டாத நிலையில், துறைமுகம் அமைக்கப்பட்டதன் பின்னர் இப்பிராந்தியத்தில் கடுமையான கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. கடலரிப்பைத் தடுப்பதற்காக பாரிய பாறாங்கற்கள் ஒலுவில் கடற்கரையோரங்களில் போடப்பட்டுள்ள போதிலும் கடலரிப்பை முற்றாகத் தடுக்க முடியவில்லை. ஒலுவிலுக்கு அடுத்துள்ள நிந்தவூர் பிரதேசத்தில் பெரும் நிலப்பரப்பை கடலரிப்பு காவு கொண்டுள்ளமையை காணமுடிகிறது. அதுமட்டுமன்றி காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை வரை இந்த கடலரிப்பின் அகோரத் தாண்டவம் உள்ளது.

ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்ட பின்னரே, இந்தப் பிராந்தியத்தில் இவ்வாறு தீவிர கடலரிப்பு ஏற்பட்டுள்ளதென்று, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளர் கே. நிஜாமிர் சர்வதேச ஊடகமான பிபிசி தமிழுக்கு தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. துறைமுக நிர்மாணத்தின் பின்னர் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக ஒலுவில், நிந்தவூர், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை போன்ற பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் தென்னந்தோப்புகளும்,







கட்டிடங்களும், அரச மற்றும் தனியார் கட்டிடங்களும் அழிவடைந்துள்ளன.

நிந்தவூர் பிரதேச கடற்கரைப் பகுதியிலுள்ள சுமார் 100 மீற்றருக்கு அதிகமான நிலப்பரப்பு கடலால் காவுகொள்ளப்பட்டுள்ளதுடன், 75இற்கும் மேற்பட்ட காணிகள் மற்றும் தென்னந்தோட்டங்களும் கடலரிப்பால் அழிந்துள்ளன. கடலில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலை மாற்றங்களால் கடலரிப்பு அதிகமாகக் காணப்படுவதுடன், கடலரிப்பால் இப்பிரதேச கடற்கரைப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் வீழ்ந்துள்ளதுடன், கரையோரங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் முற்றாக இடிந்து கடலுக்குள் வீழ்ந்துள்ளன.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர். மக்களின் தொடர் அழுத்தம் காரணமாக பிரதேச அரசியல் அதிகாரங்களின் முயற்சியால் நிந்தவூர் பிரதேசத்தில் கடற்கரை சார்ந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பைத் தடுக்கும் முகமாக கரையோரம் பேணல் திணைக்களத்தால் 100 மீற்றர் நீளத்துக்கு கற்களைக்கொண்டு தடுப்புச்சுவர் அமைக்கும் வேலைகள் கடந்த காலங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் நடைபெறாத பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. ஆனாலும் கடலரிப்பின் காரணமாக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்துகின்ற பகுதிகளில் கற்களைக் கொண்டு தடுப்புச்சுவர் அமைப்பது அவர்களின் நாளாந்த தொழிலுக்குத் தடையாக அமையும் என்பதால் கரையோரம் பேணல் திணைக்களத்தால் இப்பகுதியில் மண்மூடைகள் இடுவதற்காக திட்டமிட்டிருந்ததுடன், ஜியோ பேக் பைகளில் மண் இட்டு நிரப்பி கடலரிப்பைத் தடுக்கும் முறைகள் தொடர்பில் கரையோரம் பேணல் திணைக்களத்தால் பல மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கான வேலைகள் பாரிய காலதாமதம் மற்றும் இழுபறிக்குப் பின்னர் நடந்தாலும் கூட மீனவ மக்களின் ஆசைக்கு ஏற்றாற்போல நடக்க கடலரிப்பு இடங்கொடுக்கவில்லை.

இப்போது கடலரிப்பில் பாதிக்கப்பட்ட இடங்கள் சுற்றுலா சென்று பார்க்கும் அளவுக்கு பிரசித்திபெற்று விளங்குகிறது. அப்பிராந்தியத்தை அண்மித்த மக்கள் மட்டுமன்றி அண்மையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கூட நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டார். அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

பார்க்க வந்த தாம் சும்மா போகக்கூடாது என்பதற்காக அப்பிரதேசத்திலுள்ள மீனவர்களை சந்தித்த ஹக்கீம் தலைமையிலான குழுவினர், நிந்தவூரில் நீண்ட காலமாக பாதிப்பை ஏற்படுத்திவரும் கடலரிப்பின் பாரதூரமான விளைவுகளை நேரில் கேட்டறிந்துகொண்டதுடன், இதற்கு நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளப்போவதாக உறுதியளித்து சென்றுள்ளனர். ரவூப் ஹக்கீமின் இதுபோன்ற பல உறுதியளிப்புகளை கேட்டுப் பழகிப்போன மக்கள் நடக்கும்போது பார்க்கலாம் என்ற மனோநிலையில் உள்ளனர் என்பதெல்லாம் வேறு கதை.

இதுபோன்றே மாளிகைக்காடு மண்ணும் கடலரிப்பில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ‘‘கடல் இருக்கிறது கரை இல்லை’’ என்ற நிலையே மாளிகைக்காட்டில் இருக்கிறது. கடலை அண்டிய மையவாடி கடலுடன் சங்கமிக்கும் தறுவாயிலிருந்து ஹரீஸ், மஹிந்த போன்றவர்களின் தயவால் கொஞ்சம் காப்பாற்றப்பட்டுள்ளது. இருந்தாலும் அந்த தற்காலிய தீர்வும் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ என்ற நிலையில் உள்ளது. மீனவர் கட்டிடம் இப்போது கடலுக்கு நடுவில் அமைந்துள்ளது. கிழக்குக்கு வெளியே உள்ளவர்கள் அதை பார்த்தால் கடலுக்கு நடுவில் இந்தக் கட்டிடத்தை கட்டிய பொறியியலாளர் யார் என்று கேட்பார்கள். அப்படித்தான் இருக்கிறது மாளிகைக்காட்டின் நிலை. கடலுக்கு அண்மையில் இருந்த கலாசார மண்டபம் கடலலை முறியும் இடமாக மாறிவிட்டது. பல இலட்சம் பெறுமதியான அந்த அந்நூர் கலாசார மண்டபம் கடலுடன் சங்கமிக்கும் காலம் தூரத்தில் இல்லை. மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக அழிந்துவிட்டது. கரைவலை தொழில் இப்போது இல்லை. மீனவர் படகுகள் வீதிக்கு அருகில் வந்துவிட்டது. பக்கத்தில் உள்ள சாய்ந்தமருதும் இதே நிலை. சாய்ந்தமருது பிரதேசத்தில் மீண்டும் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பால் பீச் பார்க் (கடற்கரைப் பூங்கா) கிழக்குப் பகுதி சுற்றுமதில் வீழ்த்தப்பட்டிருப்பதுடன், மீனவர் நூலகக் கட்டிடமும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. மீனவர் வாடிகள் கடலுக்கு இரையாகிவிட்டன. இன்னும் சில வாடிகள் கொஞ்சநாளில் இரையாகிவிடும் நிலை தோன்றியுள்ளது.

தீவிரமடைந்துள்ள கடலரிப்பு காரணமாக பீச் பார்க்கின் பெரும் பகுதி கடலுக்கு இரையாகக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த பீச் பார்க்கிற்கு கிழக்குப்புறமாக இருந்த கடற்கரை நிலப்பகுதி கடலால் முற்றாகக் காவு கொள்ளப்பட்டிருக்கிறது. மக்கள் ஓய்வு, பொழுது போக்குக்காக கூடுகின்ற இக்கடற்கரைப் பகுதியின் இழப்பு ஈடுசெய்ய முடியாத தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடல் கொந்தளிப்பு மற்றும் கடலரிப்பு என்பவற்றைக் கருத்திற்கொண்டு படகுகள், தோணிகளை தரிக்கச் செய்வதற்குரிய தளமாக கூபா பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள இடத்தை விசேடமாக ஒழுங்கு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அது செயற்பாட்டுக்கு இன்னும் வரவில்லை.

சாய்ந்தமருது பீச் பார்க் (கடற்கரைப் பூங்கா) சேதப்படுத்தப்படுவதைக் கருத்திற்கொண்டு அதன் பாதுகாப்பு, புனரமைப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு, மாநகர சபையால் முன்னெடுக்கப்பட வேண்டிய விசேட பொறிமுறைகள் குறித்தும் அதாவுல்லா எம்.பியின் தலைமையில் கல்முனை மாநகர ஆணையாளர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கணக்காளர், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களங்கள், பள்ளிவாசல் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் சேர்ந்து தீர்மானங்கள் மேற்கொண்டனர். அவை ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை.

***மீன்பிடி முற்றாக பாதிப்படைந்துள்ளது :***

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசங்கள் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, நிந்தவூர், மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை கடற்கரைப் பிரதேசம் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றமையால் கடற்கரையை அண்டிய பகுதியிலுள்ள மீன்வாடிகள் மற்றும் கடற்கரைப் பகுதியிலுள்ள தென்னை மரங்கள் கடல் அரிப்பால் கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் பல தென்னை மரங்கள் கடலரிப்பால் கடலினுள் இழுத்துச் செல்லப்படும் நிலையில் உள்ளன. பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையிலான கடற்கரைப் பிரதேசங்கள் கடலரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டு கடற்றொழிலை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கடலரிப்பு குறித்து பிராந்திய தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கும், துறைசார் அதிகாரிகளுக்கும் பல தடவைகள் மக்கள் தெரியப்படுத்தியும் பாராமுகமாகவும், அலட்சியப்போக்குடனும், இதர பல காரணங்களை கூறிக்கொண்டும் இருக்கிறார்கள் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வங்காள விரிகுடா கடலில் ஏற்பட்டுள்ள திடீர் காலநிலை மாற்றங்கள் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் மீனவர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனால் அம்பாறை மாவட்ட கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக பெரியநீலாவணை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, மருதமுனை, பாண்டிருப்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஒலுவில் போன்ற பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரிப்பு, காற்றின் திசை மாற்றம், நீரோட்டத்தில் ஏற்பட்டுள்ள திசை மாற்றம், கடல் நீரின் தன்மை வழமைக்கு மாறாக குளிர்ச்சியாக காணப்படுகின்ற காரணங்களால் கடல் அலைகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதாலும், கடலரிப்பால் ஏற்பட்ட மாறுதல்கள் மற்றும் மாற்று ஒழுங்குகள் காரணமாகவும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக காலநிலை மாற்றங்களால் கடலரிப்பு அதிகமாக ஏற்படுவதாலும் கரையோர மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். மேலும் அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகள் பாரிய கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது. கடற்கரை பகுதியிலுள்ள சுமார் 100 மீற்றருக்கு அதிகமான நிலப்பரப்பு கடலால் காவுகொள்ளப்பட்டுள்ளதுடன், தென்னைகளும் கடலரிப்பால் மருதமுனை பகுதியில் அழிந்துள்ளன. இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கடலரிப்பினால் கல்முனை கடற்கரைப் பகுதிகளில் போக்குவரத்து செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன், கடந்த சுனாமி பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் தீவிரமடைந்து வரும் கடலரிப்பின் காரணமாக பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை மக்கள் இழந்து வருவதோடு, அங்குள்ள மீனவர்களும் தொழில் நடவடிக்கைகளில் பெரிய இடர்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில் தொடங்கி நிந்தவூர், காரைதீவு வரையிலான பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடலரிப்பின் காரணமாக 400 மீற்றர் வரையிலான நிலப்பகுதிக்குள் கடல் புகுந்துள்ளதாகவும் கடலரிப்பு ஏற்பட்டு வருகின்றமையால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காரைதீவு, நிந்தவூர் கரையோரப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக கடலரிப்பு அதிகரித்து வருகின்றமையைத் தடுக்க - நிரந்தரமாக கடலரிப்பை தடுக்க நடவடிக்கை முன்னெடுக்க பல்வேறு தரப்பினர் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர். எனினும், அம்பாறை மாவட்டத்தின் கரையோரைப் பிரதேசங்களில் இவ்வாறு கடலரிப்பு தீவிரமடைவதற்கு ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையே பிரதான காரணம் என அப்பகுதி மக்கள் நீண்டகாலமாக குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

இப்பிரச்சினைக்கு அரசின் தீர்மானம் என்ன ?

**- இதுவே அம்பாறை கரையோர மக்களின் கேள்வியாக அமைந்துள்ளது.**




# சீத்துவக்கேடு 255

உந்த மாட்டு விளையாட்டைப் பற்றிச் சொன்ன அப்பு, அட மேனை உனக்கு ஒரு விஷயம் தெரியுமே . இப்ப நாங்கள் சொல்லுறம் எல்லே உந்தத் தடி ஊண்டிப் பாயிற விளையாட்டு அதையும் எங்கடை ஆக்கள் அப்பவே விளையாடி இருக்கிறாங்கள். ஒரு நாள் எங்கட குறப் பெடியள் கொஞ்சப்பேர் ஒண்டா நிண்டு விளையாடி இருக்கிறாங்கள். அப்பேக்கை அங்கை மந்தி ஒண்டு வந்ததாம். அதுகின்ரை வயித்திலை அதுகின்ரை குட்டி ஒட்டிக்கொண்டு இருந்துதாம். அப்பேக்கை அந்த மந்தி குட்டியோடை அங்கை நிண்ட மூங்கில் மரம் ஒண்டின்ரை நுனியைப் பற்றிப் பிடிச்சு எம்பித் தாவிப் பஞ்சதாம். உதைப் பாத்த எங்கட குறப்பெடியளும் குரங்கு பாஞ்ச மாதிரி மூங்கில் மரத்தின்ரை நுனியைப் பிடிச்சு வளைச்சு எம்பிப் பாஞ்சவங்களாம்.

உதைப் பாத்த கொட்டம்பலவனார் எண்ட புலவர் ஒரு பாட்டைப் பாடி இருக்கிறார் எண்ட அப்பு அந்தப் பாட்டைச் சொன்னார்.

“செம்முகத் துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்க்
கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும் குன்றகம்” ( நற்றிணை- 95)

அட குரங்கு எண்டதுந்தான் ஞாபகம் வருகுது உந்தப் பாட்டிலை துய்த்தலை மந்தி எண்டு வருகுது எல்லே அது என்னண்டு தெரியுமே. உந்த மந்தியின்ரை தலையிலை மயிர் தொப்பி போட்ட மாதிரி அரை வட்டமா நீளமாயும் கட்டையாயும் தொங்கிக்கொண்டு இருக்கும். உந்த வட்ட விளிம்பிலை சின்னச் சின்ன மயிர்கள் எல்லாப் பக்கமும் நீட்டிக்கொண்டு நிக்கும். உதைத்தான் எங்கடை சங்க இலக்கியங்கள் துய்த்தலை மந்தி எண்டு சொல்லுது. உந்த அரை வட்டமா இருக்கிற மயிர்கள் நெத்தி உச்சியிலை வகிடு எடுத்த மாதிரி இருக்கும்.





உப்படி அரை வட்டமா இருக்கிற மயிரை முச்சி எண்டும் எங்கடை உரை எழுதிற ஆக்கள் சொல்லுறவை. இப்ப உள்ள மாதிரியே முந்தியும் சின்னப் பெடியளுக்கு தலைமயிரை அரை வட்டமா வெட்டிற ஒரு பழக்கம் இருந்திருக்குது. உந்த அரைவட்ட மயிரை அவை முச்சி மயிர் எண்டு சொல்லுறவை. எங்கடை ஆக்கள் உந்தக் குரங்குகளைப் பாத்துத்தான் உப்படி பெடியளுக்கு தலை மயிரை வெட்டிச்சினமோ தெரியாது. ஆனால், எங்கடை நத்தத்தனார் எண்ட புலவருக்கு உந்தக் குரங்குகளைப் பாக்க எங்கடை அரை வட்டமா மயிர் வெட்டின பெடியளைப் பாக்குமாப்போல இருந்திருக்குது. உடனை அவர் குரங்கைப் பெடியளுக்கு ஒப்பிட்டு “மகா அர் அன்னமந்தி” (சிறுபாணாற்றுப் படை வரி 56 ) எண்டு அவற்றை பிள்ளயளைப்போல இருந்த குரங்கு எண்டு சொல்லுறார் எண்டார் அப்பு.

எங்கடை பெடியள் அந்தக் காலத்திலை மல்யுத்தம், யானை ஏற்றம், குதிரை ஏற்றம், சிலம்பாட்டம், களரி எண்டு எக்கச் சக்கமமான விளையாட்டுகளை விளையாடி இருக்கிறாங்கள். அதிலையும் உந்தச் சிலம்பாட்டம் எண்டது தமிழரின்ரை பழம்பெரும் தற்காப்புக் கலை. எங்கடை ஆக்கள் அப்ப அந்தக் காலத்திலை காட்டு மிருகங்களிட்டை இருந்து தங்களைப் பாதுகாக்க கையிலை கம்பு எடுத்து பாவிச்ச முறைதான் பேந்து சிலம்பமா வந்தது எண்டு விசயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் எண்டு அப்பு சொல்ல, உடனை ஆச்சி, அப்ப தமிழர்கள் முதல் முதல் கையிலை எடுத்த ஆயுதம் கம்புதான் எண்டு சிரிச்சா.

ஆச்சியோடை சேந்து சிரிச்ச அப்பு, எங்கட அகத்தியர் அறுபத்தி நாலு கலையளிலை சிலம்பமும் ஒண்டு சொல்லிருக்கிறார். கி.மு.2000க்கும் முற்பட்ட ஆதிச்ச நல்லூரிலை ஆய்வு செய்தவை முப்பத்திரெண்டு வகையான சிலம்பு ஆயுதங்களைக் கண்டுபிடிச்சதிலை இருந்து உது எவ்வளவு பழம் விளையாட்டு எண்டு விளங்குதெல்லே எண்டார். உந்த சிலம்பாட்டம் பாதுகாப்பு விளையாட்டு எண்டதுக்கும் அங்காலை உடம்புக்கும் நல்லது எண்ட அப்பு, “பதார்த்த குண சிந்தாமணி எண்ட வைத்தியப் புத்தகம் சிலம்பம் விளையாடினால் வாதம், பித்தம், கபம் எண்டு ஒண்டும் வராது'' எண்டு சொல்லுது எண்டார் .

**(இன்னும் ஆடுவம் )**

---



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

# இவ்வார இராசி பலன்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்கு பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவசியம். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்கள் பணிகளில் உதவிக்கரமாக இருப்பார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இட மாறுதல் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் உற்சாகம் தரும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் சிறிது கடன் வாங்கவும் நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். கடன்கள் விடயத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது. இளைய சகோதரர்களால் உதவி உண்டு. பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளை இந்த வாரம் மேற்கொண்டால் சாதகமாக முடியும்.

வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கச் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பங்குதாரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது.

### மிதுன ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தருவதாக இருந்தாலும், தேவையற்ற செலவுகளால் கடன் வாங்க நேரிடும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் வாழ்க்கைத் துணையின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் கூடுமானவரை பொறுமையை கடைப்பிடிப்பது அவசியம்.

அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது மிக முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ இந்த வாரம் எதிர்பார்க்க முடியாது.

வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

### கடக ராசி அன்பர்களே!

பணவரவுக்குக் குறைவில்லை. அதேசமயம் சில தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். அவசியத் தேவை என்றாலும்கூட இப்போது கடன் வாங்குவதைத் தவிர்த்து விடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கும்.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கவனமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். ஒருசிலருக்கு இருக்கும் இடத்திலிருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.

வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தியடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது தாமதமாகும். குடும்ப நிர்வாகத்தை கவனித்துவரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

### சிம்ம ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் இருக்காது. திருமண வயதிலுள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு உடனே சரியாகிவிடும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவருடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

அலுவலகத்தில் உங்களின் செயல்பாடுகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டுதல்களையும் அதனால் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்ற நினைத்தால் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வாடிக்கையாளர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, அவர்களுடன் உறவு சுமுகமாகும்.

### கன்னி ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறிதளவு பாதித்தாலும் உடனே நிவாரணம் கிடைக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு வெளிமாநிலங்களுக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் தேவையற்ற பிரச்சினைகளில் சிக்கக்கூடும்.

வியாபாரத்தில் லாபம் குறைவாகத்தான் இருக்கும். கடையை விரிவுபடுத்தவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ சாதகமான சூழ்நிலை இல்லை. கடன் வாங்குவதை கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

### துலா ராசி அன்பர்களே!

வருமானம் திருப்திகரமாக இருக்கும். செலவுகளும் அவசிய செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி இந்த வாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக கொஞ்சம் அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். உறவினர்கள் வருகை ஆதாயம் தருவதாக இருக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும்.

வியாபாரத்தில் விற்பனை இருந்தாலும்கூட அதற்கேற்ற இலாபம் கிடைக்காது. எனவே, பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களிடம் அனுசரணை யாக நடந்துகொள்ளவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி சுமாராகத் தான் இருக்கும். அதேநேரம் செலவுகளும் குறைவாகவே இருக்கும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. குடும்பம் தொடர்பான எந்தவொரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர் பயணம் செல்ல நேரும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட யோகம் ஏற்படும். தந்தையால் அனுகூலம் உண்டாகும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சிக்கவேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததை விட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பங்குதாரர்களிடம் கேட்கும் பண உதவி கிடைக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

பண வரவுக்குக் குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். சகோதர வகையில் சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பெரியளவில் பாதிப்பு இருக்காது. நீதிமன்ற வழக்குகளில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் இருந்து அழைப்பு வரும்.

வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்து கொள்வது அவசியம். புதிய முதலீடுகள் விஷயத்தில் நன்றாக யோசித்து இறங்கவும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம் இது. சகோதரர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

### மகர ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததை விட பணவரவு அதிகமாக இருக்கும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன்தொகை கைக்கு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திருமண முயற்சிகளில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் தீர்ந்து திருமணம் கூடி வரும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

அலுவலகத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாக செயல்படுவீர்கள்.

வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே திருப்தி தருவதாக இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்படுவதன் காரணமாக மனதில் சிறுசிறு சஞ்சலம் ஏற்படக்கூடும். புகுந்த வீட்டு உறவினர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது அவசியம்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தடைப்பட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை கனிந்து வரும். உறவினர் வீட்டு விசேடங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பிறருக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன்தொகை கிடைக்கக்கூடும்.

வேலைக்குச் செல்லும் அன்பர்கள் வேறு வேலைக்கு முயற்சிப்பது பாதிப்பையே ஏற்படுத்தும். அலுவலகப் பணிகளிலும் கவனமாக இருப்பது அவசியம்.

வியாபாரத்தில் கடுமையாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்து கொள்ளவும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். கணவருடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை காப்பது நல்லது.

### மீன ராசி அன்பர்களே!

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டுவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வழக்குகளில் சாதகமான திருப்பம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை நிலவும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கு சாத்தியமுண்டு.

வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். பற்று வரவில் பிரச்சினை எதுவும் இருக்காது. வியாபாரம் தொடர்பாக சிலருக்கு தொலைதூர பயணங்கள் மேற்கொள்ள நேரிடும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

## ஊமையாய் இன்றும்

வேடிக்கை மனமும் வெட்கம் கொள்ளுமா
வேதனைத் தீயும் வெந்து தணியுமா
வாடிக்கையாளராய் வருத்தம் கொள்ள
வம்சத்தின் வித்துக்களும் முன் வருமா...

போட்டிக்கு வந்த இளங் கன்றும்
பொறாமைக் கடலில் மூழ்கியதே
காட்டிக் கொடுத்த வஞ்சகரும் - இன்று
கர்வமாய் சுற்றித் திரிகின்றனரே...

பேசுவது எல்லாம் உண்மையும் அல்ல
பேதையின் அன்பும் பொய்யும் அல்ல
காசுக்காக மட்டும் நீ இருக்க
காழ்புணர்ச்சி இங்கு பஞ்சம் இல்லையே...

நேசம் எங்கே மலர்கிறது
நேர்மையும் எங்கே இருக்கின்றது
பாசம் கொஞ்சம் கிடைத்து விடாதா என்று
பாழ் மனம் ஏங்கித் தவிக்கின்றதே...

*- தேவந்தி (சயூரன்)*
*காரைதீவு-*

## அடிமை மாறாத உறவு?

மலையகமும் மாறிடுமா
மாயைதனை போக்கிடுமா
மனம் வளர்ச்சி கொள்ளாமல்
மறுமலர்ச்சி தோன்றிடுமா

தலைமுறைகள் பல கடந்தும்
தடம் பிறழ்வு மாறவில்லை
தன்னெழுச்சி தோன்றினாலும்
தரக்குறைவு தளரவில்லை

அதிகார வர்க்கத்தினர்
அவர் தம் வாழ்வுக்காய்
அவ்வப்போது குரல் கொடுப்பார்
ஆனாலும் ஒன்றுமில்லை

அனுதினமும் அழுகுரல்கள்
அரங்கேற்றம் தான்
சிறப்பு ஒட்டி உறவாடி
ஊர் வாயை தான் மூடி
தட்டி தடுமாறி

தன் வாழ்வில் தளமிட்டு
தலைசிறந்த தலைமையென
தன் வாயால் புகழ் பாடி
தம்பட்டம் அடிப்பதிலே
தன் காலம் முடித்துக்கொள்வர்

எங்கனம் பிறர் பணி
செய்திடுவர் அவர் வாழ்வில்
தட்டி பறிப்பதிலும்
குட்டி விடுவதிலும்
குறியாய் இருப்பவர்கள்
இவர்கள் அல்லோ

*- பி. துரையரசன்*
*வித்தியாபுரம்*
*ஒட்டுசுட்டான் -*

## கண்கலங்கும் கரும்பலகை

கற்பித்த கரும்பலகை
கண்ணீர் வடிக்கிறது
முற்காலப் பொருளாகி
மூலையில் கிடக்கிறது

வெண்கட்டி மறைந்து
வெகுகால மாகிறது
வேண்டாத பொருளாகி
வேறெங்கோ இருக்கிறது

பழைய பள்ளிக் கூடம்
பாழடைந்து கிடக்கிறது
இளைய
தலைமுறைக்கு
அது இழிவாகத்
தெரிகிறது

அரிவரி வகுப்பெல்லாம்
அநாவசியமாய் ஆகிறது
சரித்திரத்திலும் இல்லாமல்
சங்கை கெட்டுப் போகிறது

பழம் பெரும் ஆசான்கள்
பழிப்புக்குள்ளாகிறது
ஒழுக்க விழுமியங்கள்
ஒதுக்குப் புறமாகிறது

கற்பித்தல் முறையெல்லாம்
காலத்தால் மாற்றமாகி
விற்பனைப் பொருளாக
வலையமைப்பில்
விற்கிறது

கல்வி கற்பதிப்போ
கண்கட்டி வித்தையாகி
செல்லுமிடங்களெல்லாம்
சூமாக வருகிறது

எந்நாளும் பள்ளி செல்லும்
ஏழைக்குத்
திறமையிருந்தும்
இந்தக்காலத்து
இலவசக்கல்வி
இருந்தும்
இல்லையென்றாகிறது

*- கவிஞர் ஜனதாலத்தீப்*
*ஒலுவில்-*

## கவிகளில் ஜனனமாய்....

சில நாட்கள் எழுதா வரிகளை
நினைவூட்டி பார்க்கும் மனதினை
தொலைந்து போக சொல்வதா
சிதைந்து போக சொல்வதா
கரைந்து போக சொல்வதா
மறைந்து போக சொல்வதா
விடை தெரியாமல் தவிக்கிறேன்
வினா அறியாமல் விழிக்கிறேன்
என்னென்ன சொல்ல வார்த்தைகளால்
எணணற்றவை சொல்ல வார்த்தைகளை தேடி
மீண்டும் கவிகளில் ஜனனமாய்
இங்கு நானும் அங்கு நீயும்

*- கிஷாரன்-*



## காத்திரு

உன்னை யாசித்த
குற்றத்திற்காக
உன் நினைவாலே
நான் இங்கே
நாள்தோறும்
மெழுகுவர்த்தியாய்
எரிகிறேன்
நீயோ அங்கே
என்னை நினைத்து
ஊதுவர்த்தியாய்
மணம் பரப்ப
முயல்கிறாய்
காலம் கனியும்போது
நம் மெய்க்காதல்
நிச்சயம் கை கூடும்
கண்ணா அதுவரை
கலங்காமல் காத்திரு

*- என்.கே.வேணி.*
*பலாங்கொடை-*

## வாங்கிய வீடு

நிறைவாக இருக்கின்றன
உதிர்ந்த சருகுகள்.
அந்தி வானம்
அழகாக இருக்கிறது
மறையும் சூரியன்
பெய்யும் மழை
தொடர்ந்தவண்ணம் உள்ளன

அணைக்கட்டுகள்.

நுளம்புச்சுருள் பாவனை
கூடிக் கொண்டே செல்கிறது
நுளம்புகளின் பெருக்கம்
ஆற்றுநீர் வேகமாக ஓடுகிறது
தப்பிய மீனொன்று

விளையாட்டு பொம்மை
அழகாக இருக்கிறது
குழந்தையின் மகிழ்ச்சி
வீசும் காற்றில்
சிதறி விழுகிறது
பனித்துளி

வற்றிய குளத்தில்
தெளிவாகத் தெரிகின்றன
பாசி படிந்த கற்கள்

கிராமப்புற வாழ்க்கை
மறைந்து செல்கிறது
மாலை சூரியன்

பழகும் மிதிவண்டி
காணாமல் போகிறது
மனதில் பயம்

தேர்தல் வாக்குறுதி
அழியாமல் இருக்கிறது
விரலில் மை

நகரும் வாகனம்
மறைந்து செல்கிறது
வெளியாகும் புகை.

*- ஏஹூர். கவிமாமணி*
*எம்.ரி.எம்.அன்ஸார்*
*ஏறாவூர்.-*

## நிலவே சொல்

வெண்ணிலவே வெண்ணிலவே
விண்ணி லுலவும் வெண்ணிலவே
விண்ணி லிருந்தே நீயும்
வேடிக்கை செய்வதேன் வெண்ணிலவே

எழில் நிலவே எழில் நிலவே
ஒளி வீசும் எழில் நிலவே
கள்ள மில்லா உன் முகத்தை
கார்மேகம் மறைப்பதேன் எழில் நிலவே

வட்ட நிலவே வட்ட நிலவே
வசந்தம் வீசும் வட்ட நிலவே
எட்ட நினைக்கு மென்னை
ஏளனம் செய்வதேன் வட்ட நிலவே

வண்ண நிலவே வண்ண
நிலவே
வடிவில் சிறந்த வண்ண
நிலவே
மண்ணி லிந்த மாந்தரெல்லாம்
மடிந்து போறார் பார் நிலவே

ஒளி நிலவே ஒளி நிலவே
உயரத்தி லிருக்கும்
ஒளி நிலவே
வாழத் தெரியா திந்த மாந்தர்
வழி தவறி போறார்
பார் நிலவே

பால் நிலவே பால் நிலவே
பரவசம் தரும் பால் நிலவே
குலத்தில் சிறந்த மாந்தர் வீண்
குழப்பத்தி லழிகிறார்
பார் நிலவே

பொன்னிலவே பொன்னிலவே
புகழ் பரப்பும் பொன்னிலவே
உன்னைப்போல்
மனிதரெல்லாம்
ஒளிர்வ தெப்போ சொல் நிலவே

*- வரக்காமுறையூர் ராசிக் -*

தூறல்கள்

## செத்தான்டா சேகரு!



நம்மாளு ஜிம்முல பயிற்சி செய்தபோது விடாமல் அடித்த செல்போனை எடுத்தான்.

"ஹலோ.."

"ஏங்க...நீங்க வர லேட்டாகுமா ..."

"ஆகலாம்.."

"நானும் ஃப்ரெண்டும் நகை கடைக்கு வந்திருக்கோம். நம்ம போன தடவை பார்த்த சிகப்பு கல் நெக்லஸ் இன்னும் பத்தாயிரம் குறைச்சு தர்றேங்கறார் கடை ஓனர் வாங்கிடவா?"

"தாராளமா வாங்கிக்கோ."

"வாவ் நீங்க ஸ்வீட். ஹப்பி அப்புறம் நீங்க ஆட்சேபம் பண்ணலைன்னா.

அடுத்த மாசம் வர என் பர்த் டேக்கு பக்கத்து புடவை கடைல ரெண்டு பட்டுப் புடவை எடுத்துக்கவா? "

"இது எங்கிட்ட கேட்கணுமா. தாராளமா வாங்கிடு."

"ஐ லவ் யூ, ஸோ மச் தாங்ஸ் டார்லிங்."

இப்படி பேசி போனை வச்சுட்டு நம்மாளு ஜிம்ல இருக்குற கூட்டத்தை பாத்து கேட்டான் பாருங்க ஒரு கேள்வி.

"ஹலோ ஃப்ரெண்ட்ஸ் இந்த செல்போன் யாரது?"

## அருள்வாக்கு!



அந்த சாமியாரிடம் அருள்வாக்கு கேட்க, கூட்டம் அலைமோதியது. அந்தக் கூட்டத்தில் விவேக்கும் இருந்தான். அவன் முறை வந்தபோது, "காணாமல்போன உன் மனைவி திரும்ப கிடைப்பாளான்னு கேட்க வந்திருக்கே, சரியா?" என சாமியார் கேட்கவும் அதிர்ந்துபோனான் விவேக்.

"எப்படி சாமி...என் மனதில் உள்ளதை அப்படியே கேட்கறீங்க?" ஆச்சரியப்பட்டான்.

"உன் மனைவி உன்னோடு சேர்ந்து வாழ ஆசைப்படலை. அவ தெய்வ அம்சமாயிட்டா. இனி நீ அவளைத் தேடவேண்டாம்."

"சரிங்க சாமி..." சொன்ன விவேக், அவரிடம் விபூதி வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டு வெளியே வந்தான்.

போனை எடுத்து வினிதாவை கூப்பிட்டான். "வினிதா டார்லிங்... காணாமல்போன என் மனைவி இனி திரும்ப கிடைக்க மாட்டாளாம். அருள்வாக்கு சாமியாரே சொல்லிட்டாரு. இனி சந்தோஷமா நாம திருமணம் பண்ணிக்கலாம்" என்றான்.

அதே சமயம், "மனைவியை கை விட்டுட்டு ஆன்மீக பணி செய்ய வந்த எனக்கு, புருஷனை கை விட்டுட்டு உதவியா வந்ததுக்கு நன்றி ஜெயந்தி" என விவேக்கின் மனைவியை கட்டி அணைத்தபடி சொல்லிக்கொண்டிருந்தார் சாமியார்!-திருமயம் பெ.பாண்டியன்



"மந்திரியாரே, எதிரி மன்னன் போருக்கு அழைப்பு விடுத்த ஓலையை ஏன் என்னிடம் காண்பிக்காமல் மறைத்தீர்!"

"அவன் போருக்கு அழைப்பு விடவில்லை மன்னா. மாறாக, உங்கள் ஷுகர் லெவல் கூடியிருந்தால் போர் தொடுத்து வரவும். தோற்று புறமுதுகிட்டு ஓடினால் குறைந்துவிடும் என்று வெறுப்பேற்றியுள்ளான்!"







"தலைவர் வீட்டுல ரெய்டு வந்ததால அவரோட சம்சாரம் கோவிச்சுக்கிட்டு போயிட்டாங்களாமே. ஏன்?"

"தலைவர் சொத்துகள் எல்லாத்தையும் அவரோட சின்னவீடு பேருல வாங்கியிருந்தது அப்பதான் அவங்களுக்கு தெரிய வந்திச்சாம்!"



"என்னது எங்கவீட்டு மாடிலேர்ந்து பைக்கோட இறங்கி வர்றீங்க..?"


"ஹீ..ஹீ..கூகுள் மெப்பைப் பார்த்துட்டே ஓட்டிட்டு வந்தேங்க!"



டாக்டர்: உங்க வயித்துக்குள்ளே பல்லி இருக்கு எக்ஸ்ரே ரிப்போர்ட்ல தெரியுது.

நோயாளி: எக்ஸ்ரே ரிப்போர்ட் மேலதான் டாக்டர் பல்லி இருக்கு. அத தள்ளிவிட்டுட்டுப் பாருங்க..!


## உபயோகமான ஒரு விடயம்!



ஒரு அறிஞர் பேசறப்போ, "மிகவும் அலட்சியப்படுத்தக் கூடியது என்று ஒரு துண்டுப் பேப்பரைக் கூட நினைக்காதீர்கள். ஒரு கலண்டர் தாளின் அச்சிடப்படாத மறுபக்கம் கூட பயனுள்ளதாக இருக்கும். கிழிந்த துண்டுப் பேப்பரும் கூட உபயோகப்படும். அந்தத் துண்டுப் பேப்பரை பையில் எடுத்துக்கொண்டு வெளியே சென்றால், வெளியே என்னென்ன செய்ய வேண்டும்? என்று குறித்துக்கொள்ளலாம். வெளியே திடீரென்று பழகும் நண்பரின் முகவரியையும், போன் நம்பரைக் குறித்துக்கொள்ளவும் உதவும். நீங்கள் தேடிச் சென்ற நபர் தன் வீட்டில் இல்லாவிட்டால், நீங்கள் வந்த விடயத்தை அவர்களுக்குத் தெரிவித்து எழுதிப் போட்டுவிட்டு வர அந்தத் துண்டுப் பேப்பர் உதவும். யாரிடமும் நேரிலோ போனிலோ பேசும்போது, என்ன பேசுவது? என்று குறித்துக்கொள்ள அந்தத் துண்டுப் பேப்பர் உதவும். அதேமாதிரி யாரிடமாவது பேசினால் அவர்கள் பேசியதை குறித்து வைத்துக்கொள்ள அது உதவும்.''

இப்படி நிறைய சொல்றாரு. ஆக, எந்தப் பொருளும் நாம் அதைப் பயன்படுத்தும் முறையில்தான் நமக்கு அது உபயோகமுள்ளதாக மாறும்ங்கறது அந்த அறிஞர் கருத்து.

## காந்தியை மடக்கிய நீதிபதி!



ஒரு தடவை காந்திஜி சென்னைக்கு வந்திருந்தப்போ தன் கையெழுத்துக்கு ஐந்து ரூபாய்னு வசூலித்து ஹரிஜன நிதியைத் திரட்டிட்டிருந்தாரு. அப்போ ஏ.எஸ்.பி.ஐய்யர் ஒரு புகழ்பெற்ற நீதிபதி. அவர் காந்திஜியை சந்திச்சு ஐந்து ரூபாவைக் கொடுத்து கையெழுத்து வாங்கினார். காந்திஜி ஹிந்தியில் கையெழுத்துப் போட்டிருந்தாரு.

"தமிழில் கையெழுத்துப் போட்டுக் கொடுங்க"ன்னாரு ஐய்யர். "அதுக்கு 100 ரூபா வேணும்"னாரு காந்திஜி. "ஹிந்திக்கும், தமிழுக்கும் இவ்வளவு வித்தியாசமா? ஹிந்தியைவிட தமிழ் 20 மடங்கு உயர்ந்ததா?"ன்னு ஐய்யர் கேட்க, எதற்கு வம்புன்னு ஐந்து ரூபாக்கே தமிழில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாரு.

அப்புறம் இன்னொரு ஐந்து ரூபாவைக் கொடுத்து "ஆங்கிலத்தில் உங்கள் கையெழுத்தைப் போட்டுக் கொடுங்கள்"னாரு ஐய்யர்.

"முடியாது! ஒரு இந்தியருக்கு ஏன் ஆங்கிலத்தில் நான் கையெழுத்து போட்டுக் கொடுக்க வேண்டும்?"னு கேட்டாரு.

"ஆங்கிலேயருக்கு பயப்படாத நீங்கள் ஆங்கிலத்தைக் கண்டு பயப்படுகிறீர்களா? காந்திஜிக்கு மொழி பேதம் ஏன்?"னாரு நீதிபதி ஐய்யர். வேறு வழியில்லாமல் ஐந்து ரூபாவுக்கு ஆங்கிலத்திலேயும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாரு.

# தமிழன் தொடர்கதை

# சூரன் போர்

அத்தியாயம்

பாலா சங்குப்பிள்ளை

மாயனும் சுடலையும் நிதானமில்லாமல் கீழே விழுந்தவர்கள் பள்ளத்தை நோக்கி வேகமாக உருண்டோடினார்கள். மழைத் தண்ணீர் பட்டு உடல் முழுவதும் சேறாகியது. முதுகிலிருந்த தோல் பை எங்கே போனது என்று தெரியவில்லை. வாள், கத்தியையும் காணவில்லை. அதேசமயம், மேலேயிருந்து உருண்டு வந்ததில் உடல் முழுவதும் அடிப்பட்டு கடுமையாக வலியெடுத்தது. அவர்கள் இருவரும் இடையில் குறுக்கிட்ட மரத்திணடியில் உடல் பட அப்படியே மல்லாந்து கிடந்தார்கள். வலியால் அவர்கள் இருவரும் துடித்தார்கள். அப்போது அந்த சத்தம் கேட்டது. யாரோ சரசரவென்று நடந்து வந்தார்கள். அந்த இடமே அதிர்வதை போன்றதொரு ஒலி கேட்டது. அவர்கள் அச்சத்துடன் அசையாமல் மூச்சு விடவும் தோன்றாமல் கண்களை திறந்தவாறு இருந்தார்கள். சத்தம் இப்போது அவர்கள் அருகே வந்தது. சிறிது சிறிதாக வந்தது. திடீரென்று அந்த முகம் தோன்றியது. அதைப் பார்த்ததும் அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். அதன் கண்களை தொடர்ச்சியாக பார்க்க முடியவில்லை. அவர்கள் அப்படியே அச்சத்தினால் மயக்கமானார்கள். மழை கொட்டத் தொடங்கியது.

ஒளியரசி தன் வீட்டில் நாலைந்து பேருக்கு இலவசமாக டியூசன் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்போது மாலை ஆறு மணி. மாறன் மல்லாந்து படுத்தவாறு தன் அறையில் பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் தூரத்தில் யாரோ வருவதைப் போயிருந்தது. ஏற்கனவே நேரமாகிவிட்டமையால் ஒளியரசி மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்க, சுமார் 60 வயது மதிக்கத்தக்க அந்தப் பெரியவர் அவளை நோக்கி நடந்துவந்தார்.

''என்னம்மா நல்லா இருக்கியா. நானும் உன் தூரத்து சொந்தம்தான். எங்கே உங்கப்பன் இருக்கானா?''

''உள்ளேதான் இருக்கு வாங்க.'' ...

அவள் சொல்லிவிட்டு சமையலறைக்குள்ளே செல்ல, அவளின் தந்தை மாறன் வெளியே வந்தார்.

''அடடே மாரிமுத்து பூசாரியா. உள்ளே வாங்க...''

''ரொம்ப நாளா உன்னை பார்க்கணும்னு நினைச்சேன். இன்னைக்கித்தான் கால நேரம் அமைஞ்சுது. உன் மகளோட ஜாதகத்தை நான்தான் கணிச்சேன். அவளோட பதினைஞ்சி வயசு வரைக்கும்தான் நான் பார்த்தேன். போன பௌர்ணமி அன்றைக்குத்தான் மிச்சத்தைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைச்சது. ஏற்கனவே நான் எழுதிய மூலப்பிரதி உன்கிட்ட இருக்கு. அதனோட பிரதியை வச்சித்தான் கணிச்சேன். அந்தவகையில் இந்த வயசுல உன் மகளுக்கு நடக்கக்கூடாததெல்லாம் நடக்கப்போவுது. அதாவது ஒரு பெரிய ஆபத்துல சிக்கப் போறா..''

''எ... என்ன சொல்லுறீங்க பூசாரி....''

''நான் உண்மையைத்தான் உனக்கு சொல்லுறேன். ஆயிரத்துல ஒருத்தருக்குத்தான் இந்த மாதிரி ஜாதகம் அமையும். அதுல ஒருத்திதான் உன் மகள்.''

'' என்ன பூசாரி நீங்க என்னை போட்டு இம்சைப் பண்ணுறீங்க. தயவு செஞ்சி விளங்குற மாதிரி சொல்லுங்க.''

''சொல்லுறேன். சொல்லுறேன். உன் மவ சூரிய கிரகணம் ஆரம்பமாகிய நேரத்துல நிறைஞ்ச அமாவாசை ராத்திரி பன்னிரண்டு பன்னிரண்டுக்கு பிறந்திருக்கா. துலாம் ராசி சுவாதி நட்சத்திரத்துல பிறந்திருக்கிறதால எதையும் தாங்கும் சக்தி கொண்டவ. இவளோட ஜாதகத்துல தெளிவா சொல்லியிருக்கு. இவளை மணம் முடிப்பவன் அசுர சக்தியடைவான். அதனால் தீய சக்திகள் இவளை கவர்ந்து கொண்டுசெல்ல முயற்சிசெய்யும். இன்னும் பச்சையா ஒளிவு மறைவில்லாம சொல்லணுமாயிருந்தா இவளோட நடு முதுகெலும்பு அபார சக்திமிக்கது.''

மாறன் சட்டென பூசாரியின் கைகளை பிடித்துக்கொண்டார்.

''பூசாரி எனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை. ஆனா, என் மகளுக்கு எதுவுமே நடக்கக்கூடாது. என்ன பரிகாரம்னு சொல்லுங்க. என் உயிரைக் கொடுத்தாவது செய்யிறேன்.''

பூசாரி எதையோ சொல்ல வாயை திறந்தார். அப்போது சமையலறையிலிருந்து சகலதையும் கேட்டுக்கொண்டிருந்த ஒளியரசி கோபத்துடன் வேகமாக அந்த இடத்துக்கு வந்தாள்.

''ஐயா.. எனக்கு எது நடந்தாலும் பரவாயில்லை. இந்த ஆள் என் விஷயத்துல தலையிடக் கூடாது. அதுக்கு இவருக்கு அருகதையில்லை. இவர் ஒரு துரோகி.''

''நீ என்னம்மா பேசுற. மாறன் பற்றியா இப்படி சொல்லுற. இவன் யார் தெரியுமா. உங்கம்மா யார் தெரியுமா. பிரசவத்துக்காக மாறனோட மனைவி சேர்க்கப்பட்ட அதே அரச வைத்தியசாலையிலத்தான் உன் அம்மாவும் சேர்க்கப்பட்டாங்க. மாறனோட மனைவி சாவித்திரியும் குழந்தையும் பிரசவத்துல ஒண்ணா இறந்துட்டாங்க. உன்னோட தாய் சாந்தியை ஏற்கனவே வயித்துப் பிள்ளையோட வைத்தியசாலையில சேர்த்துட்டு யாரோ தலைமறைவாயிட்டாங்க. கைக்குழந்தையோட யாருமில்லா அனாதையா நின்னுக்கிட்டிருந்த உன் அம்மாவையும் உன்னையும் இங்கே கூட்டிவந்த இவன் மாறன் உன் மேல் பாசத்தைக் கொட்டி வளர்த்தான். சாந்தி மேல கடைசிவரை இவனோட கை விரல்கள்கூட படலை. அவ இவனை தெய்வமா நினைச்சி வாழ்ந்தா. இந்த உண்மையை மாறனுக்கும் எனக்கும் மட்டும்தான் தெரியும்.''

மாரிமுத்து பூசாரி சொல்லி முடிக்கவும் ஒளியரசி ''அம்மா'' என கதறியவாறு மாறனின் காலில் விழவும் சரியாக இருந்தது.



(தொடரும்)

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

கோப்பிக்காட்டு
தொங்கலிலே
ஐயோனு சத்தமொன்னு
உயிர்போகும் சத்தமது
என்னானு
பாருங்களே...

அக்கம் பக்கம்
ஆளுகளா
ஓடியாந்து பாருங்களே
மேல பக்கோ தேரியிலே
அவல சத்தம்
கேக்குதப்போ...

மூக்காயி கோப்பி
பறிக்கயிலே
முட்டுக்கட்டி வெச்சிருந்த
குழவிக்கூட்ட
தொட்டுப்புட்டா....
குழவி கொட்டிவிட்டு
போயிருச்சே
மொச்சி மொச்சி
திங்கிறதே...

ஈரசாக்க போத்திக்கிட்டு
அங்கவந்த நாலு பேரு
மூக்காயி மேல ஒரு
சாக்கு பைய
போட்டாங்க...

எளவு கொட்டும்
வாழ்க்கயில
எத்தன அக்கப்போரு
வாழ்ராசா சாமி நிய்யும்
வேடிக்கைத்தா
பாக்குறியோ...

மூக்காயி குடிசையில
மல்லாந்து படுத்திருக்க
பச்சப்பாக்க
கொண்டாந்து
ரெண்டாக பிழந்து
விட்டு
கடிபட்ட காயத்துல
ஒன்னொன்னா
தேய்க்கிறாங்க...

ஐயோ வலிக்கிறதே
எரிச்சலாகி நிக்கிறதே
மண்ட கணக்கிறதே
வவுரும் எரிகிறதே.....

தொண்டத்தண்ணி
வத்தும் வர மூக்காயி
கத்திவிட
அதபாத்து
சின்னப்பொண்ணும்
கத்துகிறா
கவலை இருக்காதா...

பச்சபாக்கு தோலோட
காரத்துக்கு கட்டுப்பட்டு
குழவி கொடுக்கு
முள்ளு
ஒன்னொன்னா
வெளிவருது...

முகமெல்லாம் பந்து
மாதி
ஊதிபோயி வீங்கிருக்க
சின்னப்பொண்ணு
மெல்லவந்து
வெந்நீரில்
ஒத்தி ஒத்தி காயத்துக்கு
ஒத்தடமும்
போடுகிறாள்......

பாம்பு தொல்ல
அட்ட தொல்ல
சிறுத்த தொல்ல
குளவி தொல்ல
கங்காணி பெரிய
தொல்ல
பாலான தேசத்துல
எத்தன
தொல்லையப்பா

ரத்த காயத்தோட
மூக்காயி
பொழைச்சிக்கிட்டா
உசுரு தப்புனது
காளியம்மே போட்ட
வரம்

தேம்பூச்சி இத்தன
கடிகடிச்சும் இவ
இன்னும்
உசுரோட இருக்குறது
என்ன அதிசயமோ...

அது தானே சூனியமா
போயிவிட்ட
சொந்தமெல்லாம்
சேரும் முன்ன
இந்த உசுரு மட்டும்
போயிடுமா...

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்
இறம்பொடை

# தமிழன் சிறுகதை

# அவனில்லாதபோது...

படிக்கும் காலந்தொட்டு இன்றுவரை றிஸ்னாஸ் பயணித்துக்கொண்டே இருக்கிறாள். இதை நினைக்க நினைக்க உள்ளம் வேதனைத் தீயால் கொழுந்து விட்டெரிகிறது.

துள்ளித் திரியும் பாடசாலைப் பருவத்தில் பயணம் செய்வது சந்தோஷமாகவே இருந்தது. எந்த நேரத்தில் வீட்டுக்குச் சென்றாலும் உம்மா சமைத்து வைப்பாங்க.

அவற்றைச் சாப்பிட்டு குட்டித் தூக்கம் போட்டு எழுந்தால் அன்றைய பொழுது கலகலப்பாகச் சென்று விடும்.

இப்போது திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாய். அவனைப் பிரிந்து செல்வதென்றால் மலையைப் பிளப்பதுபோல் கடினமானது. பாடசாலைக்கு ஆயத்தமானால், ''உம்மா..! நானும்..நானும்..''அவனது அழுகையை நிறுத்த முடியாது.

றிஸ்னாஸ் டீச்சரின் உள்ளம் ஓவென அழுது புலம்பும். மகனைத் தாயிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் விறுவிறு என நடந்து செல்வாள். மகன் தேம்பியழும் சத்தம் காதில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

உம்மா மகனைப் பார்ப்பதால் காலை, மதிய சாப்பாட்டுக்கான வேலைகளை இரவிலேயே செய்து முடித்துவிடுவாள். மகனின் பின்னால் ஓடியோடியே உம்மா களைத்துவிடுவாங்க.

இதெல்லாம் பார்க்கும்போது றிஸ்னாஸ் டீச்சருக்கு தொழிலே வேணாம்னு போகுது. வீட்டிலே சும்மா இருந்துவிடலாம் போலிருக்கும்.

சில நேரங்களில் பஸ்ஸில் நிற்கக்கூட இடமில்லாமல் மாணவர்களும், ஆசிரியர்களும், வேறு தொழில்களுக்குச் செல்வோரும் நிரம்பி வழிவார்கள். பல சிரமங்களையும் பொருட்படுத்தாமல் பாடசாலைக்கு வந்து சேர, பிங்கர் பிரின்ட் 8.00 மணியைக் காட்டும்.

இவ்வாறு தொடர்ந்தால் நேரம் பிந்தி வந்தமைக்கு லீவுகள் அநாவசியமாகக் கழிக்கப்படுகிறது. வந்தும் வராமல் லீவு கழிகிறதென நினைத்தால், பாடசாலை வாழ்க்கை வெறுக்கிறது. இது யாருக்குப் புரியப்போகிறது?

அதுமட்டுமா?

ஓரிடத்தில் அமர்ந்திருக்க முடியாது. இடுப்பு வருத்தம். நெருப்பில் கால் மிதித்ததுபோல அங்குமிங்கும் தொங்கோட்டம் ஓடுவதுதான்.

இந்தச் சின்ன வயதில் இவ்வளவு கஷ்டமா?

சில ஆசிரியர்கள் வாயைப் பிளப்பார்கள். எதுவும் தனக்கு வந்தால்தான் தெரியும். அலுத்துக்கொள்வாள் றிஸ்னாஸ் டீச்சர்.

பாடசாலை முடிவடைந்ததும் நீண்டதொரு வரிசை நிற்கும். தூரச் செல்லும் ஆசிரியர்களுக்கு விட்டுக் கொடுப்போமே என்ற மனப்பான்மை எந்த ஆசிரியர்களிடத்திலும் வராது.

உரிய நேரத்துக்குச் செல்லும் பஸ் சென்றுவிடும். புகாரியடியில் வெகுநேரம் காத்திருக்க வேணும். வீடு சென்றடைய மாலை 5.30 ஐயும் தாண்டிவிடும். மகன் தாயை எதிர்பார்த்துத் தவம் கிடப்பான்.

மறுநாள் அதிகாலை பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். மக்களை ஏற்றிக்கொண்டு பஸ் புறப்பட்டது. சிலர் ஏறியும், இறங்கியும் பயணத்தைத் தொடர்ந்தனர்.

அப்போது...

சுருட்டை முடி, அடர்ந்த தாடி, கறுப்பு நிறமுடைய ஒருத்தன் றிஸ்னாஸ் டீச்சரை வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பார்வை அவளை அச்சமடைய வைத்தது.

எதற்காக இப்படிப் பார்க்கிறான்?

வருவதும், போவதுமாக நடமாடிக் கொண்டிருந்தான்.

திருடனாக இருப்பானோ அல்லது போதைக்கு அடிமையானவனோ?

அவளது உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் எழுந்து மறைந்தன.

அவன் றிஸ்னாஸ் டீச்சரின் அருகில் வந்தான்.

கடித உறையை நீட்டினான். அவளுக்கு அதை கை நீட்டி வாங்குவதற்கு தயக்கமாக இருந்தது. எனக்கெதற்குத் தருகிறான்? அக்கம்பக்கம் பார்த்தாள். யாரும் கவனிப்பதாக இல்லை. மெதுவாக வாங்கிக் கொண்டாள். விரித்துப் பார்த்தாள்.

அதற்குள் 5000 ரூபாதாள் காசு இருந்தது. கடித உறையில் பெயர் எழுதப்பட்டிருந்தது.

அப்பாடா..!

போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. நன்றி கூறுவதற்குள் அவன் பஸ்ஸை விட்டு கீழிறங்கி மறைந்து விட்டான். எங்கே தேடுவது..?

ஒருவரின் உருவத்தைப் பார்த்து எடை போடக்கூடாது என்பதைப் புரிந்துகொண்டாள். அவன் நினைத்திருந்தால் பணத்தைத் தராமல் இருந்திருக்கலாம். இந்தக் காலத்திலும் நல்லபிமான முள்ளவனும் வாழ்கிறான் என்பதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டு.

அப்பணம் வேறு யாருடையதுமல்ல. நண்பி நதா டீச்சருடையதுதான். அதை கொடுக்கும் வரை நதாவுக்குத் தெரியாது. பணத்தைத் தேடினாள். எங்கையுமே இல்லை.

நடந்த சம்பவத்தை றிஸ்னாஸ் டீச்சர் கூறினார்.

இருவரும் நன்றியும், பாராட்டும் தெரிவிக்கையில், அவன் அவ்விடத்தில் இல்லை.



ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்




CK & VJLO

# VIVAHA விவாஹா விவாஹா

## ஏழில் புதன் இருக்குமானால் ஏற்படும் திருமணத் தடை



புதன், புத்திசாலித்தனத்தைக் குறிக்கும் காரக கிரகமாகும். ஏழில் தனித்து புதன் இருப்பவர்களுக்கு எளிதாக இளம் வயதில் திருமணம் நடக்கும். தாய்மாமன் வழி உறவில் திருமணம் நடக்கும் வாய்ப்பு அதிகம். தன் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி வாழ்க்கைத்துணையை சந்தோஷமாக வைத்திருப்பார்கள். வாழ்க்கைத்துணை இளமைப் பொலிவுடன் இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவார்கள். இது ஒரு அலி கிரகம் என்பதால், ஆண்களுக்கு காதலியையும் பெண்களுக்கு காதலனையும் குறிக்கும் கிரகம் என்பதால் திருமணத்துக்குப் பிறகும் காதலர்களாக ஆதர்சன தம்பதியராக வாழ்வார்கள். தனுசு மற்றும் மீன லக்னமாக இருக்கும்போதும் ரிஷப லக்னத்துக்கு ஏழாம் அதிபதி புதனின் நட்சத்திரமான கேட்டையில் நின்றாலும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்தைத் தரும். மற்றபடி தனித்த புதன் எந்தத் தொந்தரவும் தராது. புதனுடன் பகை கிரகங்களான செவ்வாய், சந்திரன், ராகு, கேதுகள் சேரும்போது உலகப் போரே நடந்த பாதிப்பு வாழ்க்கையில் இருக்கும். ஊருக்காகவும் உறவுக்காவும் கணவன் மனைவியாக நடிப்பார்கள். வாழ்க்கைத்துணை இருக்கும்போதே அவரை அலட்சியப்படுத்தி மற்றவரோடு சிரித்துப் பேசி வாழ்க்கைத்துணையை வெறுப்படையச் செய்வார்கள். அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் நடக்கும்.

ஏழில் புதன் விவாகரத்துக்குப் பிறகு கூட சேர்ந்து வாழ்வார்கள். புதனின் சேட்டைகளைக் கணிப்பது கடினம். சென்ற பிறவியில் இளம்பெண்ணைக் காதலித்து ஏமாற்றிய குற்றத்தின் பதிவால் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

**பரிகாரம்**

17 வாரங்கள் புதன்கிழமைகளில் மகா விஷ்ணுவுக்கு பால் அபிஷேகம் செய்து வழிபட வேண்டும்.
திருமணம் ஆகாத 07 இளம் பெண்களுக்கு 17 வாரங்கள் இனிப்பு உணவு தானம் செய்ய வேண்டும்.

## நல்ல கணவன், மனைவி கிடைக்க வழிபட வேண்டிய தெய்வங்கள்



பொதுவாக காதல் என்பது ஜாதகத்தைப் பார்த்தோ, யார், இன்னார் என தெரிந்துகொண்டு வருவதில்லை. அப்படியிருக்க, காதல் செய்பவர்கள் தங்களின் காதலில் வெற்றி பெற அல்லது நல்ல கணவன், நல்ல மனைவி அமைய என்ன செய்ய வேண்டும் என்பதை தெரிந்துகொள்வோம்.

ஜோதிடத்தின்படி பல்வேறு விடயங்கள் காதல் மற்றும் திருமணம் சார்ந்த விடயங்கள் குறித்து கவனிப்பது அவசியம். அதில் குறிப்பாக, துணையைக் குறிக்கக்கூடிய ஜாதகத்தில் 7 ஆம் இடம் எனப்படும் கணவன் / மனைவி, துணை ஸ்தானத்தைக் கவனிப்பது அவசியம்.

ஜோதிட முறைப்படி ஒருவரின் பெண்ணின் ஜாதகத்தில் லக்கினத்துக்கு ஏழாம் வீட்டு கணவனைக் குறிக்கும்.

அதுவே ஆண் ஜாதகத்தில் அவரின் லக்கினத்துக்கு 7 ஆம் வீடு மனைவி ஸ்தானத்தைக் குறிப்பதாகும்.

இதனால் காதலில் வெற்றி பெற விரும்புபவர்கள், தங்களுடைய ஜாதகத்தை எடுத்துப் பார்த்து அதில் 'ல' என குறிப்பிடப்பட்டுள்ள லக்கினத்திலிருந்து 7 ஆம் வீடு என்ன அதன் அதிபதி யார் என்பதை தெரிந்துகொண்டு, அந்த தெய்வத்துக்கான குலதெய்வத்தை வழிபட்டீர்களானால், உங்களின் காதல் நிச்சயம் பலிக்கும். அந்த காதல் திருமணம் நன்றாக இருக்கும்.

ஜாதகத்தை எல்லாம் பார்க்கத் தெரியாதென்று கூறுபவர்கள்,
காதலில் வெற்றி பெற பௌர்ணமி விரதம் இருந்து, பௌர்ணமி அன்று துர்க்கை, அம்பாள் போன்ற பெண் தெய்வங்களை வழிபாடு செய்து, சந்திரனையும் வழிபாடு செய்ய வேண்டும்.

***குரு வக்ர பெயர்ச்சி 2023:*** 12 ராசிகளுக்கு நன்மைகளை அள்ளித்தரப்போகும் குரு இந்த அற்புதமான வழிபாடு செய்தால் காதலில் நல்ல வெற்றி கிடைக்கும்.

ஏனெனில், சந்திரன் மற்றும் சந்திர வழிபாடு என்பது காதலுக்கே உரிய கிரகம். இந்த சந்திர வழிபாடு, பௌர்ணமி வழிபாடும் சேர்ந்து செய்யும்போது உங்களின் காதல் வெற்றி பெறும்.


இருப்பினும் இந்த பெரிய பொறுப்பை உங்களின் பெற்றோரிடம் கொடுக்கவும்.

## தன்னை விட வயது கூடிய பெண்ணை ஆண் திருமணம் செய்துகொள்ளலாமா?



பெரும்பாலான திருமணங்கள் ஆணை விட பெண்ணுக்கு 3 முதல் 5 வயது குறைவாக இருக்கும் வகையில் திருமணம் செய்யப்படுகிறது. திருமண பந்தத்தில் ஆணை விட பெண்ணின் வயது குறைவாக இருக்க வேண்டுமா அல்லது பெண்ணை விட ஆண் குறைந்த வயதுடன் இருக்க வேண்டுமா, இருவருக்கும் ஒரே வயது இருந்தால் நல்லதா என பல்வேறு சந்தேகங்கள் தற்போதுள்ள இளைஞர்கள், பெற்றோர்களின் மனதில் தோன்றக்கூடிய முக்கிய விடயமாக உள்ளது.

பொதுவாக திருமண பந்தத்தில், மணமகனை விட, மணமகளின் வயது குறைவாக இருக்க வேண்டுமென பின்பற்றப்படுகிறது. தற்போது நடக்கும் பெரும்பாலான திருமணங்கள் ஆணை விட பெண்ணுக்கு 3 முதல் 5 வயது குறைவாக இருக்கும் வகையில் திருமணம் செய்யப்படுகிறது.



திருமண பந்தத்தில் ஆணை விட பெண்ணின் வயது குறைவாக இருக்க வேண்டுமா அல்லது பெண்ணை விட ஆண் குறைந்த வயதுடன் இருக்க வேண்டுமா, இருவருக்கும் ஒரே வயது இருந்தால் நல்லதா என பல்வேறு சந்தேகங்கள், தற்போதுள்ள இளைஞர்கள், பெற்றோர்களின் மனதில் தோன்றக்கூடிய முக்கிய விஷயமாக உள்ளது.

உண்மையில், வயதுக்கும் திருமண பந்தத்துக்கும் பெரிய தடையோ, பிரச்சினையோ இல்லை.

இருப்பினும் இதுபோன்ற அமைப்பு ஜாதகத்தில் சில கிரக அமைப்பு அடிப்படையில் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒருவரின் ஜாதகத்தில் ஏழாம் வீடு திருமண பந்தத்தைத் தரக்கூடிய துணை, பங்குதாரரை குறிக்கக்கூடிய வீடாகும்.

ஜாதகத்தில் 7ஆம் வீட்டில் சனி பகவானும், 8இல் ராகு போன்ற அமைப்பு அல்லது 7இல் சனி, ராகு என இருந்தால் அந்த ஜாதகருக்கு திருமண தாமதம் அல்லது ஆணை விட அதிகமான வயது இருக்கும் பெண்ணுடன் திருமணம் நடக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக 7இல் சனி இருந்தால் இதுபோன்ற விடயம் நடக்கும்.

சில காலத்திற்கு முன்னர் திருமண பந்தத்தில் ஈடுபட இருக்கும் ஆணை விட பெண்ணுக்கு 5 அல்லது 6 வயது வரை குறைவாக இருக்க வேண்டும் என நினைத்தனர். அதற்கு முன்னர் 10 முதல் 15 வயது வரை கூட வயது வித்தியாசத்தில் திருமணம் செய்து கொடுத்ததும் உண்டு.

தற்போது திருமண பந்தத்தில் ஈடுபடக்கூடிய இளைஞர்கள் மனதில் மட்டுமல்லாமல், பெற்றோரின் மனதிலும் தன் மகளின் வயதுக்கு ஒன்று அல்லது இரண்டு வயது வித்தியாசம்தான் இருக்கவேண்டும் என கேட்க ஆரம்பித்து விட்டனர். இதே நிலைதான் மகன் வீட்டாரிலும் உள்ளது. தற்போதுள்ள காலத்தில் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு வயது குறைவு இருந்தாலும் நல்லதுதான்.

திருமணம் செய்துகொள்ளக்கூடிய மணமக்களில் ஆணை விட பெண்ணுக்கு வயது குறைவாக இருந்தால், அவர்களின் வயோதிப காலத்தில் யாரேனும் ஒருவர் நோய்வாய்ப்பட்டால், மற்றொருவர் அந்த சங்கடங்களைத் தாங்கி வாழ்க்கையை சமாளிக்க வேண்டும் என்பதற்காகதான் இதுபோன்ற வயது இடைவெளி வைத்து திருமணம் செய்து வைத்தனர்.

## திருமணத் தடை நீக்கும் வியாழக்கிழமை விரதம்

வியாழக்கிழமை விரதம் இருந்தால் திருமணத் தடை நீங்கும் என்ற ஐதீகம் உண்டு. இந்த விரதத்தை எத்தனை நாட்கள் செய்யவேண்டும்? எப்படி விரதம் இருக்கவேண்டும்? என்று அறிந்துகொள்ளலாம்.

பொதுவாக வியாழக்கிழமை என்றாலே அது குருபகவானுக்கு உகந்த நாள் என்பது நம் அனைவருக்கும் தெரிந்த ஒன்றே.

'சுக்லபட்சம்' என சொல்லப்படும் வளர்பிறையில் வரக்கூடிய வியாழக்கிழமைகளில் இந்த விரதத்தை மேற்கொள்ளலாம். அதாவது, ஒரு வருடத்தில் இதுபோன்ற வியாழக்கிழமை 16 முறை வரும். இந்த வியாழக்கிழமைகளில் விரதம் இருப்பது மிகுந்த நன்மைகளைக் கொடுக்கும்.

இதுபோன்ற விரதத்தை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் செய்து வந்தால் குருபகவானின் பூரண அருள் வாழ்நாள் முழுவதும் அந்த ஒரு நபருக்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரகஸ்பதி என குறிப்பிடப்படும் வளர்பிறை வியாழக்கிழமை அன்று குருபகவானுக்கு விரதம் இருப்பவர்கள், அன்றைய தினத்தில் காலை எழுந்தவுடன் தலைக்குக் குளித்து, மஞ்சள் நிற ஆடையை அணிந்து, எதையும் அருந்தாமல் அருகே உள்ள நவக்கிரக கோவிலுக்குச் சென்று குருபகவானை வழிபட வேண்டும்.

குருபகவானுக்கு மஞ்சள் நிறப் பூக்கள் சாற்றி, மஞ்சள் நிற இனிப்புகளை வைத்து நைவேத்தியம் செய்து, சந்தனம், மஞ்சள் போன்றவற்றை கொண்டு அபிஷேகம் செய்யவேண்டும்.

அதாவது, மஞ்சள் நிறத்திலேயே அனைத்தும் பயன்படுத்தி மகிமை பெறுவதற்கான அறிகுறி இது. அதன்பின்னர் குங்குமப்பூ கலந்த பசும்பாலைக்கொண்டு குருபகவானுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவது மிகவும் சிறந்தது. முக்கியமாக இந்த விரதம் மேற்கொள்பவர்கள் அன்றைய தினத்தில் உணவு எதுவும் உண்ணக்கூடாது.

மேலும், அன்றைய நாள் முழுவதும் குருபகவான் தொடர்பாக மந்திரங்கள் சொல்லி பகவானை வழிபடுவது மிகவும் சிறந்தது. அதேபோன்று அன்றைய தினத்தில் மாலைநேரத்தில் ஆடைகள், இனிப்புகள் என மற்றவர்களுக்குத் தானம் செய்யலாம். தானம் செய்து முடித்த பிறகு விரதத்தையும் முடித்துக்கொள்ளலாம்.

இவ்வாறு மூன்று வருடங்கள் வளர்பிறை வியாழக்கிழமைகளில் விரதமிருந்து வந்தால் வாழ்வில் குருபகவானின் அருள் என்றென்றும் இருக்கும். பல யோகங்கள் வந்துசேரும் என்பது ஐதீகம்.

குறிப்பாக, திருமணத் தடை நீங்கும். ஜாதகத்தில் இருக்கக்கூடிய கிரகதோஷம் எதுவாக இருந்தாலும் கழிந்துவிடும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இதுபோன்று பல நன்மைகளை குருபகவான் விரதம் மூலம் பெறமுடியும் என்பது ஐதீகம்.




# Ballon dOr 2023

## பெயர்ப்பட்டியலில் றொனால்டோ பெயர் இல்லை



2ஆம் ஆண்டுக்கான ஆண்கள் பலோன் டிஆர், பெண்கள் பலோன் டிஆர், யாஷின் டிராபி, கோபா டிராபி ஆகியவற்றுக்காக பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலை பிரான்ஸ் கால்பந்து புதன்கிழமை வெளியிட்டது.

2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண சம்பியனான ஆர்ஜென்ரீனாவின் கெப்டனும், ஏழு முறை பலோன் டிஆர் வென்றவருமான லியோனல் மெஸ்ஸி, கடந்த சீசனில் மான்செஸ்டர் சிட்டியுடன் மும்முனை வெற்றிபெற்ற எர்லிங் ஹோலண்ட், 2022 வெற்றியாளர் கரீம் பென்சிமா ஆகியோரின் பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை, பலோன் டிஆர் விருதுக்காக மெஸ்ஸியின் பெயர் 16ஆவது வருடமாக சேர்க்கப்பட்டமை சாதனையாகப் பார்க்கப்படுகிறது.

பெண்கள் உலகக் கிண்ணத்தை வென்ற ஸ்பெயினின் அய்டானா பொன்மதி, கோல்டன் பூட் வென்ற ஜப்பானின் ஹினாட்டா மியாசாவா, கொலம்பிய வெளிப்பாட்டாளர் லிண்டா கைசெடோ ஆகியோர் பலோன் டிஆர் பெண் பரிந்துரைக் கப்பட்டவர்களில் அடங்குவர்.

யாஷின் விருதுக்கு (சிறந்த கோல்கீப்பர்), உலகக் கிண்ணத்தை வென்ற ஆர்ஜென்ரீனாவின் எமிலியானோ மார்டினெஸ், மான்செஸ்டர் சிட்டியின் ட்ரெபிள்-வினர் எடர்சன் மற்றும் லா லிகா கோல்டன் க்ளோவ் மார்க் ஆண்ட்ரே டெர் ஸ்டெகன் ஆகியோரின் பெயர் பட்டியலிடப்பட்டுள்ளது.

கோபா விருதுக்கு (சிறந்த U-21 வீரர்), பார்சிலோனா வைச் சேர்ந்த 2022 வெற்றியாளர் கவி, 2021 வெற்றியாளர் பெட்ரி ஆகியோர் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் ரியல் மாட்ரிட்டின் ஜூட் பெல்லிங்ஹாம், பேயர்ன் முனிச்சின் ஜமால் முசியாலா மற்றும் மான்செஸ்டர் யுனைடெட்டின் ரோஸ்மஸ் ஹோஜ்லண்ட் ஆகியோர் இணைந்துள்ளனர்.

2023 Bஅல்லொன் ட்ஓர் பட்டியலிலிருந்து கிறிஸ்ரியானோ றொனால்டோவின் பெயர் இல்லாததால் ரசிகர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்களில் ரசிகர்கள் பிளவுபட்டுள்ளனர். அல்-நாசருக்காக 33 ஆட்டங்களில் 26 கோல்கள் அடித்த போதிலும், ஐரோப்பிய கிளப்பில் றொனால்டோ இல்லாததால் 2023 Bஅல்லொன் ட்ஓர் விருதுக்கான 30 பேர் தெரிவுப் பட்டியலிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். 2003ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர் பட்டியலிலிருந்து வெளியேறுவது இதுவே முதல் முறை என்பதால், சில ரசிகர்கள் இந்தச் செய்தியால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## ஈரானும் சவூதியும் ஏழு வருட பகையை கைவிட்டன



சவூதி அரேபியா, ஈரான் ஆகிய நாடுகளின் தேசிய அணிகளும், கிளப்புகளும் 2016க்குப் பிறகு முதல் முறையாக தமது நாடுகளில் விளையாட ஒப்பந்தம் செய்துள்ளன.

சவூதி அரேபிய கால்பந்து சம்மேளனம் (SAFF), ஈரான் இஸ்லாமிய குடியரசு (FFIRI) ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் அமைதியின்மை காரணமாக கடந்த ஏழு ஆண்டுகளாக நடுநிலையான மைதானங்களில் அனைத்துப் போட்டிகளும் நடைபெற்றன. இரண்டு நாடுகளும் மேற்கொண்ட ஒப்பந்தத்தை ஆசிய கால்பந்து கூட்டமைப்பு பாராட்டியது.

2016ஆம் ஆண்டில், ஷியா மதகுரு நிம்ர் அல்-நிம்ரை ரியாத் தூக்கிலிட்ட பிறகு ஈரானிலுள்ள சவூதி தூதரகம் உட்பட தூதரகம் தாக்கப்பட்ட பின்னர் இரு இஸ்லாமிய நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் துண்டிக்கப்பட்டன.

ஷியா பெரும்பான்மையான ஈரான் மற்றும் சன்னி பெரும்பான்மையான சவூதி அரேபியா ஆகியவை யேமன் போரில் முக்கிய பங்கு வகிக்கின்றன, அங்கு தெஹ்ரான் ஹூதி கிளர்ச்சியாளர்களை ஆதரிக்கிறது, அதேநேரத்தில் ரியாத் அரசாங்கத்துடன் இராணுவ கூட்டணியை வழிநடத்துகிறது. லெபனான் மற்றும் சிரியாவில் மோதல்களில் இரு நாடுகளும் எதிரெதிர்த் தரப்பில் உள்ளன. இருப்பினும், இந்த ஆண்டு மார்ச் மாதம் பல வருட பதற்றத்துக்குப் பிறகு தூதரகங்களைத் திறக்கத் திட்டமிடப்பட்டபோது, சவூதி அரேபியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தத்தை மத்தியஸ்தம் செய்ய சீனா உதவியது. தெஹ்ரான் தனது தூதரகத்தை ஜூன் மாதம் அதிகாரப்பூர்வமாக ரியாத்தில் மீண்டும் திறந்தது. தெஹ்ரானிலுள்ள சவூதி தூதரகமும், மஷாத்திலுள்ள அதன் தூதரகமும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதாக சமீபத்தில் தகவல் வெளியானது.

## லொஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்



லொஸ்ஏஞ்சல்ஸ் 2028 ஒலிம்பிக் விளையாட்டுத் திட்டத்தில் கிரிக்கெட்டைச் சேர்க்க விரும்புவதாக தோமஸ் பாக். தெரிவித்துள்ளார்.

''பாரம்பரிய வடிவத்தில், நாங்கள் ஒலிம்பிக் திட்டத்தில் கிரிக்கெட்டுக்கு இடமளிக்க முடியாது. ஆனால், ரி20 வடிவத்தில்இது மிகவும் சாத்தியமாகும்" என்றார் தோமஸ் போக்.

லொஸ் ஏஞ்சல்ஸ் 2028 ஏற்பாட்டுக் குழு செப்டெம்பர் 8ஆம் திகதி கிரிக்கெட்டைச் சேர்ப்பதை ஐஓசி நிர்வாகக் குழுவிடம் முன்மொழியும், அது இறுதி முடிவை எடுக்கும். கொடி கால்பந்து, பேஸ்பால்/சாப்ட்போல், லாக்ரோஸ், பிரேக்கிங், கராத்தே, கிக்பாக்சிங், ஸ்குவாஷ் மற்றும் மோட்டார்ஸ்போர்ட் ஆகியவற்றுடன் கேம்ஸ் திட்டத்தில் சேர்க்கப்படும் ஒன்பது விளையாட்டுகளில் கிரிக்கெட் ஒன்றாகும்.

ஒக்டோபர் 15 முதல் 17 வரை மும்பையில் நடைபெறவுள்ள அடுத்த ஐஓசி அமர்வில் புதிய விளையாட்டுகள் அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சூதாட்ட புகாரில் ஆதாரத்துடன் சிக்கிய சசித்ரா சேனநாயக்க



சர்வதேச கிரிக்கெட்டில் பல நட்சத்திர வீரர்கள் ஒரு கட்டத்தில் பணத்துக்காக ஆசைப்பட்டு சூதாட்டத்தில் ஈடுபடுவதும் அது நாளடைவில் கண்டுபிடிக்கப்படுவதும் வரலாற்றில் பலமுறை அரங்கேறியுள்ளது.

நட்சத்திர வீரர்கள் பலர் சூதாட்டம், ஆட்ட நிர்ணயம் செய்து கிரிக்கெட் வாழ்க்கையைத் தொலைத்தனர். இப்போது இலங்கையைச் சேர்ந்த முன்னாள் வீரர் சசித்ர சேனநாயக்க சூதாட்டப் புகாரில் சிக்கியது மட்டுமல்லாமல், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான அவர் ஓவ் ஸ்பின்னராக இலங்கைக்காக 49 ஒருநாள் போட்டிகள், 24 ரி20, ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடியுள்ளார்.

கெரம் பந்துகளால் புகழ்பெற்ற அவர் ரி20 கிரிக்கெட்டில் 25 விக்கெட்களும் ஒருநாள் போட்டிகளில் 53 விக்கெட்டுகளும் எடுத்து 2014 ரி20 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம்பிடித்தார்.

ஓய்வுக்குப் பின் உள்ளூர் அளவில் விளையாடிவரும் இலங்கை பிரீமியர் லீக் ரி20 தொடரில் கடந்த 2020 சீசனில் சூதாட்ட புகாரில் சிக்கியுள்ளார். அந்தத் தொடரில் அவர் விளையாடவில்லை என்றாலும் ஒன்றுக்கும் மேற்பட்ட வீரர்களை சூதாட்டத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்து அணுகியதாக தெரியவருகிறது. இந்தத் தகவல் இலங்கை விளையாட்டுத் துறையின் ஊழல் தடுப்பு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

அதைத்தொடர்ந்து விளையாட்டு ஊழல் தடுப்புப் பிரிவின் கீழ் அவரை காவல்துறையினர் கைதுசெய்துள்ளதாக தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும் இது சம்பந்தமாக கடந்த மாதம் இலங்கையின் உள்ளூர் நீதிமன்றம் அவர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தடை விதித்திருந்தது. அந்த நிலைமையில் கடந்த ஒரு மாதமாக நடைபெற்றுவந்த விசாரணையில் அவருக்கு எதிராக ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிகிறது.

தொடர்ந்து அடுத்த 24 மணிநேரத்தில் அவரை நேரில் கொண்டுவருமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரியவருகிறது. அதன் காரணமாகவே தற்போது இலங்கை காவல்துறையினர் அவரை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்காக கைதுசெய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த செய்தி இலங்கை ரசிகர்கள் மத்தியில் மிகவும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

நீதிமன்றத்தில் மேற்கொண்டு நடைபெறும் விசாரணையில் அவருக்கு எதிராக ஆதாரங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் இன்னும் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் இறுதியில் அவருக்கான தண்டனைகள் பற்றிய விவரங்களை நீதிமன்றம் அறிவிக்கும் என்றும் தெரிகிறது.

தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் வழிகாட்டி



நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

விலை ரூ.60 மட்டுமே

தொடர்புகளுக்கு: 0741684643

# us open
# தவறவிட்ட வீரர்கள்

ரமணி

அவுஸ்திரேலிய ஓபன், பிரெஞ்ச் ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 4 வகையான கிராண்ட்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான 143ஆவது அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. நியூயோர்க்கிலுள்ள யுஎஸ்டிஏ பில்லி ஜீன் கிங் தேசிய டென்னிஸ் மையத்தில் நடைபெறும் போட்டி செப்டெம்பர் 10 ஆம் திகதி முடிவடைகிறது. கடின தரையில் நடக்கும் இந்தப் போட்டியையொட்டி முன்னணி வீரர், வீராங்கனைகள் நியூயோர்க்கில் முகாமிட்டு தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். ரபேல் நடால், நிக் கிர்கியோஸ், எம்மா ரடுகானு ஆகிய பலம் வாந்த வீரர்கள் டு.எஸ். ஓபனைல் விளையாடவில்லை. இவர்கள் இல்லாததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

### ரபேல் நடால்



ரபேல் நடால் இந்த ஆண்டு ஆடவர் ஒற்றையர் களத்திலிருந்து விடுபட்ட சவாலான வீரர். 37 வயதான ஸ்பானியர். தனது 22 கிராண்ட்ஸ்லாம்களில் நான்கை நியூயோர்க்கில் பெற்றார். இந்த ஆண்டு, அவுஸ்திரேலிய ஓபனில் அமெரிக்காவின் மெக்கென்சி மெக்டொனால்டிடம் இரண்டாவது சுற்றில் தோல்வியடைந்தபோது இடுப்பு காயம் ஏற்பட்டதால் இந்த ஆண்டு அவர் ஒரு போட்டியில்கூட விளையாடவில்லை.

2005இல் களிமண் தரையில் அவர் அறிமுகமான பிறகு முதல் முறையாக பிரெஞ்ச் ஓபனிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மே மாதம் ஒரு செய்தியாளர் கூட்டத்தில், “நான் ரோலண்ட்-காரோஸில் இருக்க மாட்டேன், நான் விரும்பவில்லை. அடுத்த மாதங்களில் தொடர்ந்து விளையாட வேண்டும். எனது உடலமைப்பு காரணமாக, எல்லா வகையிலும் தொடர்ச்சியைக் கொண்டிருப்பது எனக்கு கடினமாக இருந்தது. எனது விளையாட்டு வாழ்க்கை என்ன என்பதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நான் என் உடலை மீண்டும் உருவாக்கப் போகிறேன், நான் தயாராக உணர்ந்தவுடன், மீண்டும் தொடங்குவேன்" - என்றார்.



### நிக் கிர்கியோஸ்

விம்பிள்டனில் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டியை கடந்த ஆண்டு எட்டிய பிறகு, 28 வயதான அவுஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸ் ஃப்ளஷிங் மெடோஸில் காலிறுதிக்கு முன்னேறினார்.

இந்த சீசனில், காயங்கள் காரணமாக முதல் மூன்று ஸ்லாம்களைத் தவறவிட்டார். மேலும் அவர் கடைசி போட்டியிலும் வெளியேறுவார். அவர் அனைத்து சீசனிலும் ஒரேயொரு அதிகாரப்பூர்வ ஒற்றையர் போட்டியில் விளையாடியுள்ளார். ஜூன் மாதம் ஜேர்மனியின் ஸ்டட்கார்ட்டில் ஒரு போட்டியில் தோல்வியடைந்தார்.

இடது முழங்காலில் காயம் ஏற்பட்டு ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை தேவைப்பட்டதால் அவுஸ்திரேலிய ஓபனை அவர் தவறவிட்டார். துப்பாக்கி முனையில் கிர்கி யோஸின் காரைத் திருடியதாகக் கூறப்படும் ஒரு நபர், ரோலண்ட் கரோஸிலிருந்து வெளியேறும்படி கட்டாயப்படுத்தியபோது, காலில் காயம் ஏற்பட்டதாக அவரது மனேஜரான டேனியல் ஹார்ஸ்ஃபால், தி கான்பெர்ரா டைம்ஸிடம் கூறினார். கால்கட்டில் ஏற்பட்ட காயம் காரணம் என அவர் பட்டியலிட்டார்.

### ஏம்மா ராடுகானு

2021ஆம் ஆண்டு யுஎஸ் ஓபனில் ஸ்லாம் வென்ற முதல் தகுதிப் போட்டியாளர் என்ற பெருமையை எம்மா ரடுகானு பெற்றபோது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கினார். இருப்பினும், பிரிட்டனின் வாழ்க்கை அதன் பின்னர் காயங்களால் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, முன்னாள் உலக நம்பர் 10 ராடுகானு தனது மணிக்கட்டு மற்றும் கணுக்காலில் அறுவை சிகிச்சை செய்ததால் பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் ஆகியவற்றைத் தவறவிட்டார். இந்த மாத தொடக்கத்தில், அவர் மே மாதம் அறுவை சிகிச்சைக்கு பிறகு முதல் முறையாக பயிற்சிசெய்தார். நியூயோர்க்கில் அவரது பெயர் இல்லை.



### கீ நிஷிகோரி

ஜப்பானின் நிஷிகோரி ஜனவரி 2022இல் தனது இடுப்பில் அறுவை சிகிச்சை செய்து, இந்த ஆண்டு ஜூன் மாதம் புவேர்ட்டோ ரிக்கோவில் சேலஞ்சர் பட்டத்தை வென்று தன்னை நிரூபித்தார். 2014 யுஎஸ் ஓபன் ரன்னர்-அப், ஞாயிற்றுக்கிழமை ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியில் இடது முழங்காலில் காயம் ஏற்பட்டு மாதம் முழுவதும் விளையாடவில்லை. மெக்டொனால்டிடம் இரண்டாவது சுற்றில் தோல்வியடைந்தபோது இடுப்பு காயம் ஏற்பட்டதால் இந்த ஆண்டு அவர் விளையாடவில்லை.



### மரின் சிலிக்

குரோஷியாவின் மரின் சிலிச் 2014இல் யுஎஸ் ஓபனில் அபாரமாக விளையாடினார். இறுதியில் அவர் இறுதிப் போட்டியில் கெய் நிஷிகோரியை வீழ்த்தி சம்பியனானார். வென்றார். இந்த சீசன் முன்னாள் உலக நம்பர் 3க்கு ஒரு ராசியில்லாதது. ஜனவரி மாதம் புனேவில் நடந்த டாடா ஓபன் மகாராஷ்டிராவில் பயிற்சியின்போது முழங்காலில் காயம் ஏற்பட்டதால் யு.எஸ்ஸுக்குச் செல்லவில்லை.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

ஹெல்த்

# ஹெல்த்
HEALTH

மலர் :1 இதழ் : 6 - 10.09.2023



**உள்ளம், உடல் நலம் காக்கும் அதிகாலை தோப்புக்கரணம்**

**கால்களில் இந்த மாற்றத்தை உணர்கிறீர்களா? எச்சரிக்கை!**

**காலையில் உணவை சாப்பிடாமல் பகலில் சாப்பிடுவதால் காத்திருக்கும் ஆபத்து**

# மருத்துவ பலன்கள் நிறைந்த அதிசயக்கனி

**எலுமிச்சையிலுள்ள ஊட்டச்சத்துகள்**

எலுமிச்சையில் கலோரி – 24%, புரதச்சத்து – 0.92 கிராம், நார்ச்சத்து – 2.4 கிராம், இரும்புச்சத்து – 0.5 மில்லி கிராம், கல்சியம் – 11 மில்லி கிராம், சோடியம் – 2 மில்லி கிராம், பொட்டாசியம் – 138 மில்லி கிராம், சர்க்கரை – 2.5 கிராம், விற்றமின்கள், மினரல்ஸ் போன்றவை அடங்கியுள்ளன.

**தலைவலி குணமாகும்**

ஒரு கப் சூடான காப்பி அல்லது தேநீரில் ஒரு எலுமிச்சம் பழத்தை பாதியாக நறுக்கி, பிழிந்து சாறாக்கி கலந்து அருந்தி வந்தால் தலைவலி குணமாகும்.

**தாகத்தை தணிக்கும்**

கோடை காலங்களில் பலருக்கும் நா வறட்சி ஏற்படும். நா வறட்சியைப் போக்கும் சிறந்த பானமாக எலுமிச்சை ஜுஸ் விளங்குகிறது. இது உடலுக்கு ஒரு புத்துணர்ச்சியை கொடுக்கிறது.

**கல்லீரலை பலமாக்கும்**

கல்லீரல் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சாறெடுத்து, அதில் தேன் கலந்து குடித்து வந்தால் கல்லீரல் பலப்படும்.

**பித்தத்தைக் குறைக்கும்**

எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு தேக்கரண்டி சீரகத்தையும், ஒரு தேக்கரண்டி மிளகையும் கலந்து வெயிலில் காயவைத்து, காய்ந்த பின் நன்றாக பொடித்தெடுத்து போத்தலில் பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். காலை, மாலை இருவேளையும் இதில் அரை தேக்கரண்டி அளவு வாயில் போட்டு வெந்நீர் குடித்து வந்தால் பித்தம் குறையும்.

**உடலுக்குப் புத்துணர்வு கொடுக்கும்**

எலுமிச்சம் பழச்சாற்றை உடலில் தேய்த்து குளித்தால் உடல் வறட்சி நீங்கி நறுமணத்துடன் புத்துணர்வு பெறும். எலுமிச்சம் பழச்சாற்றைத் தலைக்குத் தேய்த்து அரை மணிநேரம் ஊறவைத்து பின்னர் குளிக்க வேண்டும்.

**வயிற்று வலி மற்றும் நெஞ்செரிச்சல் குணமாகும்**

உடல் பருமன், கொலஸ்ட்ரோல், அதிக எடை உடையவர்கள், நீரிழிவு வியாதியால் அவதிப்படுபவர்கள் தினமும் ஒரு எலுமிச்சம் பழச்சாறு குடித்து வரலாம். இது வயிற்றுவலி, வயிற்று உப்புசம், நெஞ்சு எரிச்சல், கண் வலி ஆகியவற்றை குணமாக்கும்.

**மயக்கம் குணமாகும்**

சீரகத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து பின்பு உலர்த்தி, சூரணம் செய்து 5 கிராம் அளவு கொடுத்து வர 48 நாளில் பைத்தியம் குணமாகும். பிதற்றல், மயக்கம் போன்றவை தீரும்.

**மாதவிலக்கால் ஏற்படும் வலியைக் குறைக்கும்**

பெண்கள் மாதா மாதம் ஏற்படும் மாதவிலக்கு பிரச்சினையால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அடிவயிற்று வலி அதிகமாக இருக்கும். அவ்வேளையில் எலுமிச்சம்பழம் கொண்டு செய்யப்பட்ட உணவு மற்றும் பானங்களை எடுத்துக்கொண்டால் மாதவிலக்கின்போது உண்டாகும் வலி குறையும்.

**பற்கள் ஆரோக்கியமாகும், வாய் துர்நாற்றம் நீங்கும்**

பற்கள் ஆரோக்கியம், வாய் துர்நாற்றம் நீங்க எலுமிச்சம் பழத்தைப் பயன்படுத்தலாம். எலுமிச்சம் பழத்திள்ள சிட்ரிக் அமிலம் மனிதர்களின் உடலில் தீங்கு ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள், கிருமிகளை அழிக்கும். பற்கள் மற்றும் ஈறுகளில் சொத்தை பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் இளஞ்சூடான நீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து, காலை மற்றும் மாலை வேளைகளில் வாய் கொப்பளித்து வந்தால் பற்கள் மற்றும் ஈறுகள் சம்பந்தமான குறைபாடுகள் குணமாகும்.





**புற்று நோய்களைத் தடுக்க**

பழங்காலம் முதல் புற்று நோய்களுக்கு எதிரான மருத்துவ சிகிச்சைகளில் சிட்ரஸ் பழ வகைகளில் ஒன்றான எலுமிச்சை அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. எலுமிச்சம் பழத்தில் விற்றமின் சி மற்றும் ஆன்டி ஆக்சிடண்டுகள் அதிகம் உள்ளன. இந்த சத்துகள் நமது இரத்தத்தில் உருவாகும் ப்ரீ ரேடிக்கல்களை அணுக்களை உருவாகாமல் தடுத்து, புற்றுநோய் ஏற்படாமல் காக்கிறது என மேலை நாடுகளில் நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வுகளில் தெரியவந்திருக்கின்றது.

**கல்லீரல் வலுப்பெற**

அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை சாப்பிடுபவர்கள், மது, சிகரெட் போன்ற போதைப் பொருட்களை உபயோகிப்பவர்களுக்கு அவர்களின் கல்லீரல் அதிகமாக வேலை செய்வதோடு, அந்த உறுப்பில் அதிகளவு நச்சுகள் சேர்ந்து எதிர்காலங்களில் கடுமையான நோய் பாதிப்புகள் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கிறது. இரண்டு நாட்களுக்கொரு முறை அல்லது குறைந்தபட்சம் வாரத்திற்கொரு முறை எலுமிச்சம் பழச்சாறு அருந்துபவர்களுக்கு கல்லீரலில் தங்கியிருக்கும் அத்தனை நச்சுகளும் நீங்கி, கல்லீரல் தூய்மையாகி உடல் நலத்தை மேம்படுத்துகிறது.

**இரத்தக் காயங்கள்**

எலுமிச்சம் பழச்சாற்றில் இரத்தத்தை உறைய வைக்கும் தன்மை அதிகமுள்ளது. சிறியளவிலான இரத்த காயங்களில் எலுமிச்சம் பழச்சாற்றை சிறிது எடுத்து தடவுவதால் அக்காலங்களில் நோய்த்தொற்று ஏற்படுவதை தடுப்பதோடு, இரத்தம் விரைவில் உறையவும் உதவுகிறது. மேலும் கோடை காலங்களிலும், இன்ன பிற காரணங்களாலும் சிலருக்கு மூக்கில் இரத்தம் வடியும் நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு பஞ்சுத் துண்டை நனைத்து, இரத்தம் வடியும் நாசி துவாரத்திற்குள்ளாக வைத்துக்கொள்வதால் இரத்தம் வடிவது உடனடியாக நிற்கும்.

**சிறுநீரகக் கற்கள் கரைய**

தினந்தோறும் சாப்பிடும் உணவுகளில் குறைந்த அளவு சிட்ரேட் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிர்காலங்களில் சிறுநீரகக் கற்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிறது. திராட்சை மற்றும் ஆரஞ்சு பழங்களைக் காட்டிலும் அதிக வீரியம் மிக்க சிட்ரிக் அமில கூட்டுப் பொருட்கள் இருக்கின்றன. எனவே, சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்க நினைப்பவர்கள், ஏற்கனவே சிறுநீரகக் கற்கள் ஏற்பட்டு அவதிப்படுபவர்கள் தினமும் எலுமிச்சம் பழச்சாற்றை காலையில் அருந்தி வந்தால் வெகு விரைவில் அவர்கள் சிறுநீரகத்தில் உருவாகியிருக்கும் சிறுநீரகக் கற்களைக் கரைத்து, அவற்றை சிறுநீர் வழியாக வெளியேற்றி சிறுநீரக அறுவை சிகிச்சை நோய் ஏற்படாமல் செய்கிறது.



# நீரிழிவை கட்டுப்படுத்த சிறந்த சலட் வகைகள்



கத்தரிக்காய், வெண்டைக்காய், குடமிளகாய் 100 கிராம், சீஸ் 20 கிராம், மிளகு 10 கிராம், பூண்டு இரண்டு பல், ஒலிவ் எண்ணெய், துளசி சிறிது, உப்பு சுவைக்கேற்ப.

குடமிளகாயை துண்டுகளாக நறுக்கி, ஓவன் அல்லது தோசைக்கல்லில் எண்ணெய் விடாமல் நன்கு சுட வேண்டும். பின்னர் அதன் தோலை நீக்கிவிட வேண்டும்.

இந்த சுட்ட குடமிளகாய், துளசி, ஒலிவ் எண்ணெய், மிளகு, தோல் நீக்கிய பூண்டு, உப்பு ஆகியவற்றை ஒன்றுசேர்த்து மிக்ஸியில் போட்டு நன்றாக அரைக்க வேண்டும். இது சோஸ் போன்ற கலவையாக இருக்கும்.

அடுத்தது, கத்தரிக்காயை மிக மெல்லியதாக வட்ட வடிவில் வெட்டிக்கொள்ள வேண்டும், இதற்கு ஏற்றாற்போல வெண்டைக்காயை நீளவாக்கில் வெட்டி அடுப்புத் தணலில் காட்டி சுட வேண்டும்.

க்ரில் வசதி இருந்தால் அதில் போட்டும் சுட்டுக்கொள்ளலாம். கருக விடாமல் பதமாக இதை சுட்டுக்கொள்ள வேண்டும். பின்னர் வெண்டைக்காய், கத்தரிக்காயை ஒவ்வொரு லேயராக அடுக்கி அதற்கு மேல் சீஸ் போட்டுக்கொள்ள வேண்டும்.

இதன் மீது நாம் ஏற்கனவே செய்துவைத்துள்ள சோஸ் சேர்த்து சாப்பிட சுவையாக இருக்கும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு மிகவும் ஏற்றது வெண்டைக்காய். இதில் விற்றமின் சி மற்றும் பி அதிகமாக உள்ளது.

இதை தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் சிறுநீரைப் பிரித்து, உடல் சூட்டைக் குறைக்கும்.

இதிலுள்ள பெகடின் என்ற நார்ச்சத்து, உடலிலுள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்கும்.

இதயத் துடிப்பைச் சீராக்கும் மெக்னீசியம் இதில் உள்ளது. கத்தரிக்காயில் அதிகளவில் நார்ச்சத்து உள்ளதால், அது குடல் புற்றுநோய்க்கான வாய்ப்பைக் குறைக்கிறது. உணவு செரிமானத்துக்கு உதவுகிறது.

இதில் கெட்ட கொழுப்பு மற்றும் சோடியம் மிகக் குறைவாகவே உள்ளது. குடமிளகாயில் விற்றமின் ஏ, சி மற்றும் பீட்டா கரோட்டின் நிறைவாக உள்ளது. கொழுப்பு குறைவாக உள்ளது.

இதுவும் சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்றது. சீஸில் அதிகளவில் கல்சியம் உள்ளது. மேலும் விற்றமின் டியும் இருப்பதால் கல்சியம் உறிஞ்சப்படுவது எளிதாகிறது.

# கால்களில் இந்த மாற்றத்தை உணர்கிறீர்களா? எச்சரிக்கை!



எமது உடலில் கொழுப்புச்சத்து அதிகப்படியாக இருந்தால் இதய நோய்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனாலும், கொழுப்பு முற்றிலுமாக தேவையில்லை எனக் கூற முடியாது, எமது உடலின் அன்றாட செயல்பாடுகளுக்கு கொழுப்புச்சத்தும் மிக முக்கியமானது.

கொழுப்பானது கல்லீரலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் வேக்ஸ் போன்ற பொருளாகும்.

கொழுப்பு அதிகரிக்கும்போது சில சமயம் இரத்த நாளங்களில் இரத்த ஓட்டத்தைத் தடுக்கிறது, இதனால் உடல் நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

கொழுப்புகள் அதிகளவில் உடலில் இருந்தால் இதய நோய்கள் மற்றும் ஸ்ரோக் ஏற்படலாம்.

நம் உடலில் கொழுப்பின் அளவுகள் அதிகரித்துள்ளது என்பதை சில அறிகுறிகள் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கால்களில் சில அறிகுறிகள் தெரிய வரும். இவை இருந்தால் உடனடியாக மருத்துவ பரிசோதனை செய்து தகுந்த சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கால்கள் அடிக்கடி பிடித்துக் கொள்கின்றன என்றால் உடலிலுள்ள எல்.டி.எல். கொழுப்பின் அளவுகளை பரிசோதனை செய்யவேண்டும்.

கால்களுக்கு செல்லும் இரத்த நாளங்கள் பாதிப்படைந்துள்ளன என்பதன் அறிகுறியாகவே பிடிப்புகள் ஏற்படுகின்றன.

பொதுவாக மழைக்காலங்களில் நம் பாதங்கள் நீண்டநேரத்திற்கு குளிர்ச்சியாக இருக்கும். எந்தவித காரணமும் இல்லாமல் மற்ற நாட்களிலும் பாதங்கள் குளிர்ச்சியாக இருப்பின், அது அதிக கொழுப்பு உள்ளதற்கான எச்சரிக்கையாகும்.

கொழுப்பு காரணமாக இரத்த ஓட்டம் குறையத் தொடங்கும்போது, நம் கால்களின் சருமத்தின் நிறம் மாறி மஞ்சள் நிறத்தில் இருக்கும். நிறம் மாறுவதை அலட்சியமாக நினைத்துவிடக் கூடாது.

கொழுப்பு அதிகரிப்பதன் காரணமாக இரத்த ஓட்டம் குறையும் நிலையில் கால்களில் அடிக்கடி உணர்வின்மை ஏற்படலாம்.

சட்டென்று எழுந்து நிற்கவும், நடக்கவும் மிகுந்த சிரமம் ஏற்படலாம். அடிக்கடி இந்தப் பிரச்சினை ஏற்பட்டால் மருத்துவப் பரிசோதனை செய்வது அவசியம்.

கடினமான வேலை அல்லது உடல் பயிற்சியின்போது ஏற்படும் வலி இயல்பானது.

அதை விடுத்து கொஞ்ச தூரம் நடந்தால் கூட கால்களில் கடுமையான வலி ஏற்படுகிறதென்றால் அது கொழுப்பின் அறிகுறிகளாகும்.

இரத்தப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். உடல் எடை சீரான அளவில் இருப்பது அவசியமாகும். புகைப்பிடித்தல் பழக்கம் இருக்கக் கூடாது.

தினசரி 30 நிமிடம் உடற்பயிற்சி செய்யவேண்டும். இனிப்பு, சோடா, துரித உணவுகள் போன்றவற்றைக் குறைத்து, காய்கறிகள், பருப்புகள், நார்ச்சத்து உணவுகளை அதிகளவில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



# 5 மணித்தியாலங்கள் தூங்காதவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம்

உறங்குவதில் பிரச்சினை இருப்பவர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் ஆபத்து அதிகம் என்று ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

★ குறட்டை

★ மூக்கின் மூலம் சரியாக மூச்சு விட முடியாதது.

★ மெத்தையில் திரும்பிக்கொண்டே இருப்பது.

★ இரவெல்லாம் கண்விழித்துப் பகலில் நீண்டநேரம் தூங்குவது.

★ மிகக் குறைவாகத் தூங்குவது.

★ அளவுக்கு மீறித் தூங்குவது.

இதுபோன்ற ஐந்துக்கு மேற்பட்ட அறிகுறிகளைக் கொண்டவர்களுக்கு, தூக்கப் பிரச்சினை இல்லாதவர்களைக் காட்டிலும் பக்கவாதம் ஏற்படும் ஆபத்து 5 மடங்கு அதிகம் என்கிறார் அயர்லந்தின் கேல்வே பல்கலைக்கழகத்தின் (University of Galway) ஆய்வாளர் கிறிஸ்டீன் மெக்கார்த்தி (Christine McCarthy).

அவர்களில் 2,200இற்கும் மேற்பட்டவர்களுக்கு பக்கவாதம், இரத்தங்கட்டுதல் போன்ற உடல்நலக் கோளாறுகள் இருந்தன.

அத்தகையோரின் தூக்கத்தின் தரம் குறைவாகக் காணப்பட்டமை ஆய்வில் தெரியவந்தது.

நாள்தோறும் சராசரியாக 5 மணி நேரத்துக்கும் குறைவாகத் தூங்குவோருக்குப் பக்கவாதம் ஏற்படுவதற்கான ஆபத்து மும்மடங்கு அதிகம்

நாள்தோறும் சராசரியாக 9 மணி நேரத்துக்கும் அதிகமாகத் தூங்குபவர்களுக்குப் பக்கவாதம் ஏற்படுவதற்கான ஆபத்து இரு மடங்கு அதிகம். பெரியவர்கள் நாளுக்கு 7 மணிநேரம் தூங்குவது ஆரோக்கியமானது.

# வெறும் வயிற்றில் பிஸ்கட் சாப்பிடுவது நல்லதா?

காலை எழுந்ததும் எந்த வேலை செய்கிறோமோ இல்லையோ டீ, கோப்பி குடிக்க மறப்பதேயில்லை. அவ்வாறு டீ, கோப்பி குடிக்கும்போதே பிஸ்கட்டுகள் சாப்பிடுவது பலருக்கு பழக்கமாக உள்ளது. தினந்தோறும் காலை எழுந்ததுமே பிஸ்கட் சாப்பிடுவது உடலில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

காலை எழுந்ததுமே டீ அல்லது கோப்பியோடு பிஸ்கட் சாப்பிடுவதை பலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இரவு முழுவதும் வயிறு காலியாக இருப்பதால் காலையிலேயே சாப்பிடும் பிஸ்கட் செரிமான பிரச்சினையை உண்டாக்கும்.

பிஸ்கட்டுகளில் பயன்படுத்தப்படும் சுத்திகரிக்கப்பட்ட மாவின் உயர் கிளைசெமிக் உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவை உயர்த்தக்கூடும். உப்பு சேர்க்கப்பட்ட குக்கீஸ்கள் உங்கள் இரத்த அழுத்த அளவை உயர்த்தும் திறன் கொண்டவை. வெண்ணெய் சேர்க்கப்பட்ட பட்டர் பிஸ்கட்டுகள் உங்கள் கொலஸ்ட்ரோல் அளவை அதிகரிக்கலாம்.

பச்சை மாவு, பாக்டீரியா தொற்று பாதிக்கப்பட்ட மாவிலிருந்து தயாரிக்கப்படும் குக்கீகள் உணவு ஒவ்வாமை (Food Poison) ஏற்படுத்தலாம்.

செயற்கை சுவையூட்டிகள் நிறைந்த பிஸ்கட்டுகள் உடலில் கலோரிகளை அதிகப்படுத்துவதால் உடல் எடை வேகமாக அதிகரிக்கும்.

காலையிலேயே எழுந்ததும் தண்ணீர் குடித்துவிட்டு 15 நிமிடங்கள் கழித்து எதையும் சாப்பிடுவது நல்லது.

# உடல் நலம் காக்கும் உடற்பயிற்சிகள்



## தோள்பட்டை மற்றும் கழுத்து வலியைப் போக்கும் உடற்பயிற்சிகள்

கணினியில் அதிக நேரம் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கு நாளடைவில் கழுத்து தசை பாதிக்கப்படும். அந்த இடத்தில் போதிய இரத்த ஓட்டம் இருக்காது.

இதனால் கழுத்து மற்றும் கை, கால் பகுதிகளில் வலி ஏற்பட்டு கழுத்துப் பகுதியை அசைக்கக்கூட முடியாமல் போகலாம். கழுத்துப் பகுதிக்கு வலுசேர்க்கும் எளிய பயிற்சிகள் உள்ளன. இவற்றை தொடர்ந்து செய்துவந்தால் கழுத்து வலி பிரச்சினையே இருக்காது.

**மேலும் கீழும்**

தரையில் நேராக நின்று கழுத்தை மட்டும் மேலும் கீழும் அசைக்க வேண்டும். இப்படி தொடர்ந்து 20 நொடிகள் செய்யவேண்டும்.

**நெக் சைட்**

தரையில் நேராக நின்றுகொண்டு கழுத்தை வலது புறம் திருப்பி, பின்நோக்கி நேராக்கி அதன் பின் இடது புறம் திருப்ப வேண்டும். இப்படி 20 நொடிகள் செய்ய வேண்டும்.

**நெக் ஸ்ட்ரெச்சிங்**

கைகளை மோவாயில் வைத்தபடி கழுத்தை பின்னால் சாய்க்கவும். 20 நொடிகள் இந்த நிலையில் இருந்த பின்னர் பழைய நிலைக்கு வரவும்.

**நெக் போர்வர்ட் பெண்ட்**

கைகளை பின்னந்தலையில் வைத்தபடி கழுத்தை முன்பக்கமாக குனியவும். இந்த நிலையில் 20 விநாடிகள் இருக்கவும். மேலே சொன்ன இந்தப் பயிற்சிகளை தொடர்ந்து செய்துவந்தால் விரைவில் நல்ல பலனைக் காணலாம்.

## இடுப்பிலுள்ள கொழுப்பைக் குறைக்கும் எளிய உடற்பயிற்சி



இடுப்புப் பகுதியில் தோலுக்கு அடியில் 'சப்ஜடேனியஸ்' எனும் கொழுப்பு இருக்கிறது. இடுப்புப் பகுதிக்கு எந்த வேலையும் கொடுக்காதபோது, இக்கொழுப்பானது கரையாமல் தங்கி, இடுப்புச் சதைப் பகுதி பெருத்துப் போவதற்குக் காரணமாகி விடுகிறது.

இதைத் தவிர, மரபு ரீதியாகவும் இடுப்பு பருமன் ஏற்பட வாய்ப்புண்டு. பிரசவத்துக்குப் பிறகு, சில பெண்களுக்கு ஏற்படும் ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் மாற்றங்களாலும் இடுப்பில் சதை போட்டுவிடும். சிறிது கவனம் எடுத்துக்கொண்டாலே போதும். இந்தப் பிரச்சினைக்கு 2 எளிய பயிற்சிகள் உள்ளன.

ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பதுபோன்ற நிலையில் உடலை நிறுத்திக்கொண்டு, இரண்டு கைகளையும் நேராக நீட்டியபடி, எழுந்து எழுந்து உட்காரவும். இந்தப் பயிற்சி, கொழுப்பைக் கரைய வைத்து, இரத்த ஓட்டத்தை சீராக்க உதவும்.

தரையில் மல்லாந்து படுத்துக்கொண்டு, இடது காலை மட்டும் மடக்கி, அப்படியே வலது பக்கமாக சாய்ந்து படுக்கவும். சில விநாடிகள் கழித்து, மடக்கிய காலை நீட்டி, வலது காலை மடக்கவும். இப்படி 25 தடவைகள் செய்த பிறகு, இரண்டு கால்களையும் மடக்கியபடியே இடது பக்கமாக சாய்ந்து படுத்து, முன்பு செய்ததுபோலவே ஒவ்வொரு காலையும் மாற்றி மாற்றி மடக்கவும்.

இதையும் 25 தடவைகள் செய்யவும். இப்படி தினமும் செய்வதால், இடுப்பின் அமைப்பு கட்டுக்கோப்பாக இருக்கும். இந்த இரு பயிற்சிகளை தினமும் வீட்டில் செய்த வந்தால் விரைவில் நல்ல பலனைக் காணலாம்.

## உள்ளம், உடல் நலம் காக்கும் அதிகாலை தோப்புக்கரணம்



அதிகாலையில் பல் துலக்கி, உடல் நீராடியபின் நம் முன்னோர்களின் வழிகாட்டுதலின்படி உள்ளம், உடல் நலம் காக்க அதிகாலை தோப்புக்கரணம் (உக்கி போடுதல்) போடுவோம். தோப்புக்கரணம் ஓர் உன்னதமான உடற்பயிற்சி அல்லது யோகா என்றால் உண்மை. 48 ஆண்டுகளுக்கு முன் பாடசாலைகளில் தண்டனையாகவும் பயிற்றுவித்தனர்.

தோப்புக்கரணம் சுத்தமான சம தலமான இடத்தில் (மரத்தின் கீழ் என்றால் மிகவும் நன்று) செய்யவேண்டிய பயிற்சி. ஆடைகள் தளர்வாக இருத்தல் அவசியம். இரு கால்களையும் உடலின் அகலத்துக்கு வைத்து நின்றுகொள்ளவும், வலது காதை இடது கையாலும், இடது காதை வலது கையாலும் பிடித்துக்கொள்ள வேண்டும், இந்நிலையில், முழங்காலை மடக்கி உட்கார்ந்து எழவேண்டும். உட்காரும் போது மூச்சை மெதுவாக உள்ளே இழுக்கவும், எழும்போது மூச்சை மெதுவாக வெளியே விடவும். இப்பயிற்சியை முதலில் 5 தடவைகளும், பின் 7, 9, என்று பழகியபின் 21 தடவைகளும் தோப்புக்கரணம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

இதனால் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றிலுள்ள பிராணவாயு 70% மூளைக்குச் சென்று உடலுக்குப் புத்துணர்ச்சி, உள்ளத்துக்கு ஒரு நிலைப்பாடு கிடைக்கிறது. நம் நரம்பு மண்டலம் தூண்டப்பட்டு ஆரோக்கியம் அடைகிறோம். குழந்தைகளுக்கு மூளை செயல்பாடுகள் அதிகரித்து கல்வி, கேள்வி அறிவுச்செல்வம் பெருகுகிறது.

## அடிமுதுகு பகுதியை வலுவாக்கும் பயிற்சி



இருசக்கர வாகனம் ஓட்டுபவர்களுக்கு முதுகுவலி ஏற்பட வாய்ப்புகள் அதிகம். சிலருக்கு அடிமுதுகில் வலி அதிகமாக இருக்கும். அதிலும், தொடர்ந்து அதிக தூரம் வாகனத்திலேயே பயணம் செய்ய நேரிடும்போது கை, கால், மூட்டு, தோள்பட்டை போன்ற பகுதிகளில் தசைகள் இறுகி வலி ஏற்படும்.

இந்த வலியிலிருந்து நிவாரணம் பெற வீட்டிலேயே 20 நிமிடங்களில் செய்யக்கூடிய பயிற்சி உள்ளது. அந்தப் பயிற்சி தரையில் நேராக குப்புறப் படுத்துக்கொண்டு, வலது கையை பக்கவாட்டில் உடலை ஒட்டியபடியும், உள்ளங்கையை மேல் நோக்கியும் வைக்க வேண்டும். இடது கையை முன்பக்கமாக நீட்டி தரையைத் தொடும்படி வைக்க வேண்டும்.

இப்போது, இடது கை மற்றும் வலது காலை மேலே உயர்த்த வேண்டும். கால்களை வளைக்கக் கூடாது. இப்படி 20 முதல் 30 தடவைகள் செய்ய வேண்டும். ஒரு பக்கம் செய்த பின்னர் 5 விநாடிகள் ஓய்வு எடுத்த பின்னர் மறுபக்கம் பயிற்சியை செய்ய வேண்டும்.

***பலன்கள்:*** முதுகெலும்பு, முதுகிலுள்ள நரம்புகள் வலுவடையும். அடிமுதுகு வலி குறைவும். இரத்த ஓட்டம் சீராகும். முழங்கால் மூட்டுப் பகுதி வலுப்பெறும்.

## நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இயங்கிட எளிய பயிற்சிகள்





உடற்பயிற்சிக்கான நேரம் ஒதுக்க முடியாதவர்கள் இந்த எளிய பயிற்சிகளை தினமும் 30 நிமிடம் செய்து வந்தால் அன்றைய தினம் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கலாம்.

★ தலையை பின்புறம் 10 முறையும் முன்புறம் 10 முறையும் சாய்க்கவும்.

★ தலையை நன்றாக பின்நோக்கி வைத்துக்கொண்டு, வாயை நன்றாகத் திறந்து அசைத்து மூடவும்.

★ தலையை ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்துக்குத் திருப்பவும்.

★ பிறகு தலையை வலது தோள்பட்டை வரை கொண்டுசென்று மறுபடி இடது தோள்பட்டைக்கு கொண்டுசெல்லவும். இதுபோல் 10 முதல் 20 தடவைகள் செய்யவும்.

★ வாய்க்குள் காற்றை நிரப்பி மூடவும். பின்னர் காற்றை வெளியேற்றவும். இதுபோல் 10 தடவைகள் செய்யவும்.

★ கண்களை வட்டமாக சுற்றிப் பார்க்கவும். இதுபோல் ஒரு 2 நிமிடம் செய்யவும்.

★ கழுத்தை நேராக இருக்குமாறு வைத்து தரையில் உட்கார்ந்து கழுத்தை கொஞ்சம்-கொஞ்சமாக சாய்க்கவும். அதேபோன்று மெதுவாக மூச்சை இழுத்துவிட்டுக்கொண்டு கழுத்தை மேலே உயர்த்தவும்.

★ இரு புருவங்களுக்கும் மேல் ஒற்றை விரல்களால் சில நிமிடங்கள் வரை அழுத்திக்கொண்டேயிருந்து விடவும்.

★ கண்களைச் சுற்றி சுருக்கங்கள் விழுவதால் வெகு சீக்கிரம் வயதாகிவிட்டது போன்று தோற்றம் ஏற்படும். கீழ்க்கண்ட பயிற்சியின் மூலம் கறுப்பு வளையங்கள் நீங்க வாய்ப்புள்ளது.

★ முதலில் நேராகப் பார்த்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பார்வையைத் தூக்கி மேலே பார்த்து, பிறகு கீழே பார்க்கவும். இதேபோன்று வலப்புறமும், இடப்புறமும் பார்க்கவும்.

★ விரல்களின் அடிப்புறத்தால் முகம் முழுக்க மெதுவாக அழுத்தினால் முகத்திலுள்ள தளர்ச்சி நீங்கும்.

# காலையில் உணவை சாப்பிடாமல் பகலில் சாப்பிடுவதால் காத்திருக்கும் ஆபத்து



உலகளவில் காலை உணவைத் தவிர்ப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்வதாக கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

உடல் எடையைக் குறைக்கிறேன் என்று பலர் காலை உணவைத் தவிர்க்கிறார்கள். நேரமில்லை என்கிறார்கள் சிலர்.

***காலை உணவை தவிர்ப்பதால் உடலில் ஏற்படும் மாற்றங்கள்?***

காலை உணவைத் தவிர்ப்பதால், குளுக்கோஸ் வளர்சிதை சுழற்சியில் பாதிப்பு ஏற்பட்டு சர்க்கரை நோய் உண்டாவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அதன் பிறகு மதிய உணவின் மூலம் கிடைத்த அதிக குளுக்கோஸை ஈடுகட்ட அதிகமாக இன்சுலின் சுரந்து, தொடர்ந்து மாற்றங்கள் நிகழும். சில மாதங்கள் கழித்து 'இன்சுலின் ரெசிஸ்டன்ஸ்' ஏற்பட்டு, சர்க்கரை நோயாளியாக நாமும் மாறிவிடுவோம்.

காலை உணவை மென்று சாப்பிடும்போது, எச்சில் சுரப்பிலுள்ள லைஸோசைம் (கிருமிநாசினி செய்கையுடையது), வாய்ப் பகுதியில் மையமிட்டுள்ள நுண்கிருமிகளை அழிக்கும். அதுவே உணவைச் சாப்பிடாவிட்டால், கிருமிநாசினியின் ஆதரவின்றி, வாய்ப் பகுதியில் கிருமிகளின் ஆதிக்கம் அதிகரித்து, விரைவில் வாய்நாற்றம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

***நீண்ட நேரம் சாப்பிடாமல் இருப்பதால்***

முந்தைய நாள் இரவு முதல் அடுத்த நாள் மதியம் வரை நீண்ட நேரம் சாப்பிடாமல் இருப்பதால், உடலில் நடக்கும் அனைத்து வளர்சிதை மாற்றங்களிலும் பாதிப்புகள் ஏற்படும்.

காலையில் சாப்பிடாமல் தவிர்க்கும்போது, செயல்படுவதற்குத் தேவைப்படும் சக்தி கிடைக்காது. உணவின் மூலம் கிடைக்கவேண்டிய அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் கிடைக்காமல் சோர்வான நிலையை உடல் அடையும்.

***மறதி அதிகரிக்கும்***

சாப்பிடாமல் இருப்பதால் குளுக்கோஸ் பற்றாக்குறை ஏற்பட்டு, மூளைக்குத் தேவைப்படும் ஆற்றல் முழுமையாகக் கிடைக்காமல் மறதி அதிகரிக்கும். அறிவாற்றலும் குறையும்.

உடல் எடையைக் குறைப்பதற்காக காலை உணவைத் தவிர்ப்பவர்கள், அடுத்தவேளை அளவுக்கதிகமாக சாப்பிடுவார்கள். இதனால் உடல் எடை அதிகரிக்கும் என்பதை நினைவிற்கொள்ளவும்.

# பச்சை அப்பிள் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்



அப்பிளை தினமும் சாப்பிடுவதால் பல நன்மைகள் கிடைக்குமென மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர்.

சிவப்பு அப்பிளைபோல் பச்சை அப்பிளை சாப்பிடுவதால் பல நன்மைகள் கிடைக்கும்.

**கண்களின் ஆரோக்கியம்**

பச்சை அப்பிளிலுள்ள விற்றமின் ஏ கண் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வாகும். கண்களின் வறட்சி, கண்களின் பலவீனம் ஆகியவற்றை சரி செய்யும்.

**நீரிழிவு நோய்க்கு நல்லது**

பச்சை அப்பிளில் சர்க்கரை குறைவு. மேலும், நார்ச்சத்துகள் போதுமான அளவு உள்ளதால் நீரழிவு நோயாளிகளுக்கு சிறந்த பலனைத் தரும்.

**நுரையீரல் ஆரோக்கியத்துக்கு நல்லது**

பச்சை அப்பிளிலுள்ள ஃபிளாவனாய்டுகள் நமது நுரையீரலை பலப்படுத்தி ஆஸ்துமா அபாயத்தை பெருமளவு குறைக்கின்றன.

**எலும்பு வலிமை**

பச்சை அப்பிளிலுள்ள கல்சியம் மற்றும் பொட்டாசியம் எலும்புகளுக்கு வலிமை சேர்க்கும். தினமும் பச்சை அப்பிளை சாப்பிட்டால் எலும்புகள் பலம் பெறும்.

**சரும ஆரோக்கியம்**

பச்சை அப்பிளிலுள்ள விற்றமின் சி சருமத்தை இளமையாகவும் அழகாகவும் வைத்திருக்க உதவும்.

# சிக்கன் பிரியர்களுக்கு காத்திருக்கும் ஆபத்து!



மக்களின் அன்றாட விருப்பமான அசைவ உணவுகளில் ஒன்றாக சிக்கன் உள்ளது. பலரும் பல்வேறு வகைகளில் தினந்தோறும் சிக்கனை சாப்பிடுவதை வழக்கமாகக்கொண்டுள்ளனர்.

சிக்கனை தினமும் சாப்பிடும்போது ஏற்படும் அதிக புரதம் ஆஸ்டியோபோராசிஸை தடுக்கும் பணியை நிறுத்துவதால் எலும்பு பிரச்சினைகள் உண்டாகும்.

சிக்கனிலுள்ள அதிக கலோரி மற்றும் கொழுப்பு உடலில் தொடர்ந்து சேர்வதால் உடல் எடை வேகமாக அதிகரிக்கும்.

வறுத்த சிக்கன் கறியிலுள்ள கொழுப்பு, எண்ணெய் ஆகியவை உடலில் கொலஸ்ட்ரோலை அதிகப்படுத்துவதால் இதய பிரச்சினைகள் ஏற்படலாம்.

கோழிக்கறியிலுள்ள அதிகமான வெப்பம் உடலை சூடாக்குவதுடன், பித்தம், நீர்க்கடுப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை உண்டாக்கக்கூடும்.

கோழிக்கறியிலுள்ள சில மூலப்பொருட்கள் பெருங்குடல் புற்றுநோயை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதால் தினசரி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

மருந்துகள் மூலம் வளர்க்கப்படும் ப்ராய்லர் கோழிகளை தொடர்ந்து உண்பது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை பாதிக்கும் எனக் கூறப்படுகிறது.

தினமும் கோழிக்கறி சாப்பிடுபவர்கள் அதை தவிர்த்து வாரம் ஒருமுறை அல்லது அதிகபட்சம் இருமுறை மட்டும் சாப்பிடலாம்.

# காய்கறிகளை இப்படி சமைத்தால்தான் முழு சத்தும் கிடைக்கும்!



காய்கறிகள் அதிகம் சாப்பிட்டால் எந்தவித நோயும் வராது என்று நமது முன்னோர்கள் கூறியிருக்கும் நிலையில் காய்கறியை சில வழிமுறைகளின்படி சாப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்கறிகள் தற்போது இரசாயன உரங்களால் விளைவிக்கப்படுவதால் காய்கறிகளை 20 நிமிடம் தண்ணீரில் ஊறவைத்து நன்றாக கழுவ வேண்டும். அப்போதுதான் அதன் தோலிலுள்ள பூச்சி மருந்துகளின் தாக்கம் விலகும் என்பது குறிப்பிடத்தக்கது

காய்கறிகளை நறுக்கியதற்கு பிறகு கழுவக்கூடாது என்பதும் நறுக்கியதற்கு முன்பே கழுவி விட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. நீர்ச்சத்து மிகுந்த காய்கறிகளை ஐந்து நிமிடங்கள் மாத்திரம் வேக வைத்தால் போதுமானது.

அதேபோல் காய்கறிகளை எண்ணெயில் வதக்கி சாப்பிட்டால் அதன் முழு சத்தும் கிடைக்காது. முட்டைக்கோஸ், வெள்ளரிக்காய், தக்காளி கேரட் இவற்றை சமைக்காமல் பயன்படுத்தினால் அதிக சத்துகள் கிடைக்கும்.

சமைக்க வேண்டிய காய்கறிகளை தேவையான அளவு தண்ணீரில் வேக வைத்து அதன் பின் அந்தத் தண்ணீரை வீணாக்காமல் குடித்தால் உடலுக்கு மிகவும் நல்லது.

# இந்த காய்கறிகளை குளிர்சாதனப்பெட்டியில் வைக்காதீர்கள்!


பழங்கள் மற்றும் காய்கறிகளை குளிர்சாதனப்பெட்டியில் வைப்பதால் நீண்டநேரம் பிரெஷ்ஷாக இருக்கும். ஆனால், சில பழங்கள் மற்றும் காய்கறிகளை குளிர்சாதனப்பெட்டியில் வைப்பது உடல்நலத்துக்கு கேடு விளைவிக்கும்.

பூண்டை குளிர்சாதனப்பெட்டியில் வைப்பதைத் தவிர்க்கவும். பூண்டானது குளிர்சாதனப்பெட்டியில் ஈரப்பதத்தை உறிஞ்சும். பூண்டை குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதால் மற்ற காய்கறிகளிலும் துர்நாற்றம் ஏற்படும்.

தக்காளியை குளிர்சாதனப்பெட்டியில் வைப்பதைத் தவிர்க்கவும். குளிர்சாதனப் பெட்டியில் வைத்த தக்காளி சீக்கிரம் கெட்டுவிடும். இது தக்காளியின் சுவை மற்றும் ஊட்டச்சத்தையும் குறைக்கிறது.

உருளைக்கிழங்கை குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதால், அதிலிருக்கும் மாவுச்சத்தின் தன்மை மாறும். அத்தகைய உருளைக்கிழங்கு ஆரோக்கியத்துக்கு பெரும் கேடாகும்.

# வெந்நீரில் குளிப்பதன் பின்னால் இவ்வளவு விடயங்கலா?



இன்று பலரும் குளிர்ந்த நீரை விட வெந்நீரில் குளிக்கவே அதிகம் விரும்புகின்றனர். அவ்வாறு வெந்நீரில் தொடர்ந்து குளிப்பது ஆபத்தை ஏற்படுத்துமா என்று பலருக்கும் சந்தேகம் ஏற்பட்டிருக்கும்.

அவ்வாறான சந்தேகங்களை தற்போது குறித்த பதிவின் மூலம் தெரிந்துகொள்ளலாம். தற்போது வெந்நீரில் குளிப்பது ஆரோக்கியமா, ஆபத்தா என்பதை அறிந்துகொள்வோம்.

*வெந்நீர்க் குளியல் ஆபத்தா?*

1. மழை மற்றும் பனி போன்ற குளிர்க் காலங்களில் வெந்நீரில் குளிப்பதுதான் நல்லது. அதிலும் சூடான தண்ணீரை விட வெதுவெதுப்பான நீரில் குளிக்கலாம்.

2. இவ்வாறான குளிர் காலங்களில் எண்ணெய் குளியலைத் தவிர்த்துவிட வேண்டும்.

3. சைனஸ், மூக்கடைப்பு, ஆஸ்துமா பிரச்சினை இருப்பவர்கள் சுக்கு தைலத்தை தண்ணீரில் பயன்படுத்தி குளிக்கலாம்.

மேலும் தலையில் வெந்நீரை அப்படியே ஊற்றுவது தவறாகும். காரணம், தலையில் வெந்நீரை ஊற்றுவதால், உடலை விட்டு வெப்பம் வெளியேற முடியாமல் உள்ளேயே இருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

வெந்நீரை முதலில் காலில் ஊற்றிவிட்டு, பின்பு முழங்கால், இடுப்பு, நெஞ்சுப் பகுதி என ஊற்றிய பின்பு இறுதியில் தலைக்கு ஊற்ற வேண்டும். இவ்வாறு ஊற்றினால் உடலில் வெப்பம் வெளியேறுமாம்.

மழை மற்றும் குளிர்க் காலங்களில் காய்ச்சல், சளி, ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தலைக்கு குளிப்பதை தவிர்த்துவிட வேண்டும். பொதுவாக சாப்பிட்ட பின்பு குளிக்கக்கூடாது என்பதை தெரிந்திருப்பீர்கள். செரிமான பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதே அதற்குக் காரணம்.

மேலும் குளிர்க் காலங்களில் செரிமானம் தாமதமாகவே நடக்கும் என்பதால் உணவுக்குப் பின்பு குளித்தால் அது செரிமானத்தை மட்டுப்படுத்தும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# காது வலிக்கு எண்ணெய் ஊற்றலாமா?



காது வலிக்கு எண்ணெய் விடுவது ஆபத்தான ஒரு விடயம் என்பது எம்மில் பலர் அறியாத ஒன்று. காதுகளில் வலி ஏற்பட்டால் தாங்கிக் கொள்ள முடியாது.

அடிக்கடி காது வலி ஏற்படும்போது நிறைய பேர் தேங்காயெண்ணெய் அல்லது ஏதேனும் எண்ணெயை சூடாக்கி, வெதுவெதுப்பாக காதுக்குள் விடுவார்கள். இனி அந்தத் தவறை ஒருபோதும் செய்யக்கூடாது.

காது வலிக்கு என்ன காரணம் என்றே தெரியாமல் எண்ணெய் போன்றவற்றை காதுக்குள் விடுவது பெரும் ஆபத்தில் முடியும்.

காதுக்குள் இருக்கும் சவ்வுகள் மிகவும் மெல்லியன. அதில் வெதுவெதுப்பாக எண்ணெய் ஊற்றுவது சவ்வுகளைப் பாதிக்கும்.

எனவே, இனி காதில் எதுவும் பிரச்சினை இருந்தால் உடனே மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

**காது வலிக்கு வீட்டு வைத்தியங்கள்**

காது வலிக்கும்போது நிறைய தண்ணீர் குடித்து உடலை அதிக நீர்ச்சத்துடன் வைத்திருக்க வேண்டும். இதனால் இயற்கையாகவே காது வலி குறைய ஆரம்பிக்கும்.

மருத்துவ ஆலோசனையுடன் நாசி துவாரங்களை சுத்தம் செய்ய வேண்டும். வலி அதிகமாக இருந்தால் சூடாகவோ அல்லது ஐஸ் கட்டிகளை வைத்தோ ஒத்தடம் கொடுக்கலாம்.

**காது வலிக்கு நாம் செய்யக்கூடாதவை**

காதுக்குள் குச்சி, பட்ஸ் விட்டு சுத்தம் செய்யக்கூடாது.

அதிக சப்தத்தைத் தவிர்க்கவும்.

காதில் இயர் போன் வைத்துக்கொண்டு, அதிக சத்தத்தில் படம் பார்ப்பது, செல்போன் பேசுவது போன்ற விடயங்களும் காது வலிக்கு அதிக காரணமாகும்.

# நீச்சல் பயிற்சி செய்யக்கூடாத நேரங்கள்!

நீச்சல் என்பது வெள்ளம் ஏற்படும் நேரத்தில் உயிரைக் காக்கும் ஒரு பயிற்சி மட்டுமல்ல, உடலுக்கு ஆரோக்கியத்தையும் புத்துணர்ச்சியையும் தரும் பயிற்சி என்பதால் அனைவரும் நீச்சலை பயின்றுகொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது

அதேநேரம் ஒருசில நேரங்களில் நீச்சல் பயிற்சி செய்யக்கூடாது என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக, காலியான வயிற்றுடன் இருக்கும்போது நீச்சல் பயிற்சி செய்யக்கூடாது. அதேபோல் வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு நீச்சல் பயிற்சி செய்யக்கூடாது

நீச்சல் பயிற்சி பெறுபவர்கள் தகுதி பெற்ற பயிற்சியாளர்கள் மற்றும் மீட்பு நபர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு நீச்சல் பயிற்சி செய்யவேண்டும். நீச்சல் குளத்தில் தண்ணீர் சுழற்சி முறையில் மாற்றம் இருக்கிறதா என்பதையும் கவனித்து நீச்சலடிக்க வேண்டும்.

தரையில் உடற்பயிற்சி செய்வதை விட தண்ணீரில் நீச்சல் பயிற்சி செய்வது



உடம்புக்கு மிகவும் நல்லது. குறிப்பாக, நரம்பு மண்டலம் சீராகும் என்றும் நன்கு பசியெடுக்கும் தூக்கம் வரும் என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்

எனவே, இதுவரை நீச்சல் தெரியாதவர்கள் உடனடியாக நீச்சல் பயிற்சியை செய்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. அரை மணிநேரம் நடைப்பயிற்சி செய்தால் 200 கலோரிகளை எரிக்கும். அரை மணிநேரம் சைக்கிள் பயிற்சி செய்தால் 150 கலோரிகள் இருக்கும். ஆனால், அரை மணிநேரம் நீச்சல் பயிற்சி செய்தால் 350 கலோரிகளை எரிக்கும் என்பதால் நீச்சல் பயிற்சி மிகவும் முக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது.

# உங்களின் வயிறு உப்புகின்றதா? புதினாவை வாயில் போட்டு மெல்லுங்கள்

புதினாவில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துகள், பொஸ்பரஸ், கல்சியம், இரும்புச்சத்து ஆகிய அனைத்து விதமான ஊட்டச்சத்துகளும் அடங்கியுள்ளன.

புதினாவை வாயில் போட்டு மென்று வந்தால் வயிறு உப்புதல் மற்றும் வாயு பிரச்சினைகளிலிருந்து தீர்வு கிடைக்கும். புதினாவில் இருக்கும் எண்ணெய்ச் சத்து பல்வலியிலிருந்து பாதுகாக்கும்.



வயிற்றுப்போக்கு பாதிப்புள்ளவர்கள் வடித்த சாதத்துடன் புதினா துவையலை கலந்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுப்போக்கு நின்றுவிடும்.

அசைவ உணவு மற்றும் கொழுப்பு நிறைந்த பொருட்களை சாப்பிடுவதால் உண்டாகும் அஜீரணத்தை சரிசெய்ய புதினா உதவுகிறது.

புதினா ஜீரண சக்தியை அதிகரித்து பசியைத் தூண்டுகிறது.

மலச்சிக்கலால் அவதிப்படுபவர்கள் உணவில் புதினாவை சேர்த்துக் கொள்வதன் மூலம் மலச்சிக்கலை சரிசெய்யலாம்.

# அவித்த முட்டையை சாப்பிடலாமா?

தினமும் அவித்த முட்டை சாப்பிடுவது ஒருபோதும் தப்பில்லை. உடலுக்கு மிகவும் நல்லதுதான், முட்டையில் புரதச்சத்து மற்றும் விற்றமின் சத்துகள் அதிகம் உள்ளன.



வளரும் குழந்தைகளுக்கு தினமும் ஓர் அவித்த முட்டையை கட்டாயம் கொடுக்கலாம்.

தினமும் அவித்த முட்டை சாப்பிடுவதால் பற்கள் மற்றும் எலும்புகள் நன்கு வலிமை பெறுவதுடன், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

ஒரே இடத்தில் அமர்ந்து தினமும் அதிக நேரம் வேலை செய்பவர்கள் தினமும் ஒரு அவித்த முட்டை சாப்பிடலாம்.


உடலுழைப்பு அதிகம் கொண்டவர்கள் ஒரு நாளுக்கு 2 அல்லது மூன்று முட்டைகளை சாப்பிடலாம். ஆனால், அவற்றின் வெள்ளை கருவை மட்டும் சாப்பிடுவது மிகவும் சிறப்பு.

சிலர் முட்டையின் வெள்ளை கருவை மட்டும் சாப்பிடுவார்கள். அவர்கள் ஒரு நாளுக்கு 3 அல்லது 4 முட்டையின் வெள்ளை கருவை சாப்பிட்டால் உடல் வலிமையாக இருக்கும்.

இரவு நேரங்களிலும் முட்டை சாப்பிடலாம். ஆனால் இரவு உறங்குவதற்கு 2 மணிநேரத்திற்கு முன்னர் சாப்பிடவேண்டும்.

உடற்பயிற்சி செய்துவிட்டு முட்டை சாப்பிட்டு வந்தால் உடல் வலிமையாக இருக்கும்.

# புற்றுநோயும் சித்த மருத்துவமும்




சித்த மருத்துவத்தில் புற்றுநோயானது லிங்கப்புற்று, யோனிப் புற்று, தனப் புற்று, அண்டப்புற்று, குடற் புற்று, உச்சிப் புற்று, கன்னப் புற்று, தந்தப் புற்று, நேத்திரப் புற்று, நாக்குப் புற்று, குடற் புற்று, முகப் புற்று, தொண்டைப் புற்று ஆசனப் புற்று என பதினெட்டு பெயர்களில் குறிப்பிடப்படுகின்றது.

சித்த மருத்துவம் புற்றுநோய் வராமல் தடுப்பதில் பல்வேறு முறையில் பங்காற்றுகின்றது.

1. சித்த மருத்துவ மூலிகைகள்
2. சித்த மருந்துகள்
3. சைவ மூலிகை உணவு முறைகள்
4. பிராணயாமம், யோக, தியான முறைகள்
5. சைவத்தமிழ் ஆலய வழிபாட்டு முறைகளும், சித்தமருத்துவம் கூறும் வாழ்வியல் முறைகளும் நோய் வராமல் தடுக்கின்றன.

சித்த மருத்துவ மூலிகைகள் ஒட்சினெதிரிகளாக (Nutritional Anti-oxidants) காணப்படுகின்றன.

புற்றுநோய் நிலையில் வாத ஐயம், ஐய வாதம் போன்ற நாடி நடைகள் காணப்படலாம்.

''சதக நாடியில் கபத்தில் வாதம் பிரண்டாலும் வாத மையம் பினல் கொண்டாலும் குறியாக மருந்து பலவிதம்செய்தாலும் தூண்டவிடம் விட்டு வுயிர்கடக்குந் தானே'' என்று கூறப்படுகின்றது.

புற்றுநோயில் ஏழு தாதுக்களில் எது தாக்கப்படுகின்றதோ அதற்கேற்ப நாடி நடை காணப்படும். மூலிகைகளிலுள்ள இரசாயனப் பொருட்களும், போசணைப் பதார்த்தங்களும் (Phyto chemicals and phyto nutrients) புற்றுநோய் ஏற்படாமல் தடுப்பதுடன், நோய் நிலையிலும் பயன்படும். கழிவுகள் உடலில் தங்கி இருக்கவிடாது வாந்தி, பேதி போன்ற தொன்மையான சித்த மருத்துவ அறிவியல் முறைகள் (Ancient Scientific method for detoxification) மூலம் புற்றுநோய் ஏற்படாது சித்த மருத்துவ காப்பு முறை அமைகின்றது.

மாறுபாடான உணவு புற்றுநோயை உருவாக்கும். மாறுபாடில்லா உணவு புற்றுநோய் வருவதைத் தடுக்கும். முளை கட்டிய தானியங்கள், சிறுதானியங்கள், கைகுத்தல் அரிசி, நவதானியங்கள் சாப்பிடுவது நன்று. கறிவேப்பிலையில் ஒட்சினெதிரி (Anti oxidants) உள்ளது. இவை திசுக்களின் அழிவிலிருந்து பாதுகாக்கும் Free Radicals உருவாவதையும் தடுக்கும். மஞ்சளில் வயது முதிர்வைத் தடுக்கும் இரசாயனங்கள் (Anti aging), ஒட்சினெதிரிகள் (Anti oxidants) இருப்பதால் புற்றுநோய்க்கு எதிராகப் பயன்படும். மஞ்சள் மலக்குடல் புற்றுநோய் (Colo Rectal Cancer) ஏற்படாமல் தடுக்கும்.

மாதுளம்பழம் மார்பகப் புற்றுநோயைத் தடுக்கும். இதிலுள்ள எல்லஜீக்கமிலம் எனும் இரசாயனப்பொருள்( Phyto chemicals) புற்று நோய்க்கு கலங்கள் வளர்வதைக் கட்டுப்படுத்தும்.

மார்புக் கட்டிகள், மார்பு புற்றுநோய் வருவதை கொத்தமல்லி தடுக்கும். தாய்ப்பால் எதிர்காலத்தில் புற்றுநோய் தடுப்பாகவும் அமையும். மிளகில் புற்றுநோய், எயிட்ஸ் போன்றவற்றுக்கான எதிர்ப்புச்சக்தியைக் கொடுக்கும் மூலக்கூறுகள் காணப்படுகின்றன.

சில மூலிகைகளில் புற்றுநோய்க்கு எதிரான இரசாயனங்கள் (Anti cytotoxic properties) காணப்படுகின்றன. தக்காளியில் உள்ள லைக்கோபின் புரஸ் ரெட் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும். மொசு மொசுக்கை நுரையீரல் புற்று வராமல் தடுக்கும் மஞ்சள், இஞ்சி புற்று கலங்களை அழிக்கும். வெங்காயம் புற்றை குறைக்கும். பட்டிப்பூ இரத்த புற்றுநோய்க்கு பயன்படும்.

அமெரிக்கப் பல்கலைக்கழக ஆய்வின்படி மார்பகப் புற்றுநோயைத் தடுப்பதற்கு பாகற்காய்ச்சாறு பயன்படும். ஆடு பல மூலிகைகளைச் சாப்பிடுவதால் ஆட்டுப்பால் புற்று வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். இஞ்சி, உள்ளி புற்றுநோய் வராமல் தடுக்கும். முதல் நாள் சமைத்த உணவு அமுதம் எனினும் அருந்தோம் என நோய் அணுகா விதி கூறுகின்றது.'

இரசகெந்தி மெழுகு, வல்லாரை கிருதம், வாலை ரச மெழுகு, மேகசஞ்சிவி தைலம், சிவனார் அமிர்தம், வான்மெழுகு, பூரண சந்திரோதயம், இரச பற்பம் நந்திமை பறங்கி கிழங்குப்பற்பம், தங்க பஸ்பம், நாத செந்துரம் இரச பதங்கம், கௌரி பதக்கம், பஞ்சலோக செந்துரம், புற்றுப் பதங்கம் இரச பற்பம், மகா வல்லாதி, இடிவல்லாதி போன்ற சித்தமருத்துவ மருந்துகள் நிலைமைக்கேற்ப சித்த மருத்துவர் கண்காணிப்பில் புற்றுநோய் சிகிச்சையில் வழங்கப்படுகின்றன, சேராங் கொட்டை, வெண்கொடிவேலி, செங்கொடி வேலி போன்ற மூலிகைகளும் புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகின்றன. நெல்லிக்காய், அமுக்கரா, மஞ்சள், உள்ளி போன்ற உணவுகள் புற்றுநோய் வராமல் தடுக்கும் மூலிகை உணவுகளாகும்.



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A . m c, b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,தெல்லிப்பழை.

# குழந்தைகளுக்கு வரும் உயர் இரத்த அழுத்தத்தின் ஆபத்துகள்

முன்பெல்லாம் பெரியவர்களுக்கான நோய்கள் என்பதாக வகைப்படுத் தப்பட்டவை, தற்போது சிறிய குழந்தைகளிடமும் சாதாரணமாக தோன்ற ஆரம்பித்துள்ளன. கெட்டுவிட்ட சுற்றுச்சூழலும், தவறான மருத்துவப் பழக்க வழக்கங்களும் மற்றும் நமது வாழ்க்கை முறையுமே இவற்றுக்கு பிரதான காரணம்.

***குழந்தைகளுக்கு இரத்த அழுத்த சோதனை செய்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?***

உயர் இரத்த அழுத்த பிரச்சினை கொண்ட 75% குழந்தைகள், சோதனைக்கு உட்படுத்தப்படாமலேயே உள்ளனர். இதன்மூலம், அவர்கள் பெரியவர்களானதும், இதயம் மற்றும் இரத்த நாளம் தொடர்பான நோய்களுக்கு உள்ளாகின்றனர். உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை உள்ள ஒருவர், சர்க்கரை நோய், அதிக கொழுப்பு மற்றும் இதய நோய் ஆகியவை தாக்குவதற்கான அதிகபட்ச ஆபத்தில் இருக்கிறார்.

உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை உள்ள குழந்தைகள் கண்டறியப்பட்டு, முறையான கவனிப்புக்கு உட்படுத்தப்படாவிட்டால், மூளை வீக்கம், குழப்பம், கோமா, தீவிர தலைவலி மற்றும் குருட்டுத்தன்மை உள்ளிட்ட மோசமான நிலைகளுக்கு ஆட்படும் ஆபத்து உள்ளது. எனவே, ஆண்டுக்கு ஒரு முறையாகினும், குழந்தைகளுக்கு இரத்த அழுத்த சோதனை நடத்தப்பட வேண்டும்.

**அதிகரிக்கக் காரணங்கள்**

இன்றைய சமூகத்தில், குழந்தைகளின் வாழ்க்கை முறையில் பல விரும்பத்தகாத அம்சங்கள் இருப்பதே அதற்குக் காரணம். உதாரணமாக, அதிகமாக தொலைக்காட்சிப் பார்த்தல், கணினி முன்பாக அதிகநேரம் செலவழித்தல், வீடியோ கேம் விளையாடுதல், ஜங்க் உணவுகளை உண்ணுதல் மற்றும் சர்க்கரை அதிகம் சேர்க்கப்படும் பானங்களைப் பருகுதல் உள்ளிட்ட பல பழக்கவழக்கங்களால், உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை ஏற்படுகிறது.

அதேசமயம், தேவைக்கும் குறைவான உடலியக்கம், தொடர்ச்சியாக உடற்பயிற்சிகள் செய்யாமை, உடல் சார்ந்த விளையாட்டுகளுக்கு வாய்ப்பில்லாமை உள்ளிட்ட அம்சங்கள் ஒரு குழந்தை குண்டாவதற்கு மட்டுமல்ல, அக்குழந்தை உயர் இரத்த அழுத்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கும் காரணமாகின்றன.

**இரத்த அழுத்த சிக்கலைத் தீர்க்க செய்யவேண்டியவை**

குழந்தைகள், நல்ல சத்துள்ள பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிட ஊக்கப்படுத்தப்பட வேண்டும். மேலும் ஜங்க் உணவு மற்றும் சர்க்கரை அதிகம் கலந்த பானங்களை தவிர்க்க வேண்டும்.

காலை, மதியம் மற்றும் இரவு உணவு களை தவறவிடாமல், சரியான நேரத்தில உண்ண வேண்டும். அதுபோல், அதிக நேரம் தொலைக்காட்சி முன்னாலோ அல்லது கணினி முன்னாலோ அமரக்கூடாது. தேவையான அளவுக்கு விளையாட வேண்டும்.

தினந்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். மேலும், இரவில் நெடுநேரம் கண்விழிக்காமல், தினமும் தேவையான அளவு தூங்க வேண்டும்.

**குழந்தைகளுக்கான சாதாரண இரத்த அழுத்தம் என்பது என்ன?**

பெரியவர்களை எடுத்துக்கொண்டால், அவர்களின் சாதாரண இரத்த அழுத்த அளவு 120/80 mm Hg என்பதாக இருக்கும். ஆனால், குழந்தைகளைப் பொறுத்தவரை, சாதாரண இரத்த அழுத்தம் என்பது வயது, பாலினம் மற்றும் உயரம் ஆகியவற்றைப் பொறுத்து அமையும். எனவே, இதற்கென்று குறிப்பிட்ட அளவீட்டை நிர்ணயிக்க முடியாது. குழந்தையின் இரத்த அழுத்தத்தை அளவிடும் மருத்துவர், அதை reference tableக்கு பொருத்திப் பார்த்து, அது சாதாரணமானதா அல்லது அசாதாரணமானதா என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

இந்த ஒப்பீட்டின்போது, 95% விழுக்காட்டுக்கு மேல் இருந்தால், அது உயர் இரத்த அழுத்தமாக கணக்கிடப்படும். உதாரணமாக, 5 வயது குழந்தையின் உயரம் 95% விழுக்காட்டில் இருந்தால், 104/65 mm Hg என்பதற்கு மேலான மதிப்பு உயர் இரத்த அழுத்தமாக கருதப்படும்.

**குழந்தைகளிடம் நிலவும் மாறுபட்ட இரத்த அழுத்த நிலைகள் யாவை?**

குழந்தைகளிடம் முதல் நிலையிலான அல்லது அவசியமான உயர் இரத்த அழுத்தம் இருக்கும். இதற்கென பின்னணி உடல் பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் இருக்கலாம். அதேசமயம், சிறுநீரக மற்றும் இதய நோய்களுக்கான அறிகுறியாகவும் உயர் இரத்த அழுத்தப் பிரச்சினைகள் இருக்கலாம். முன்பு, குழந்தைகளிடம் இருக்கும் அனைத்து உயர் இரத்த அழுத்த பிரச்சினைகளும் இரண்டாம் நிலையிலானவை என்று கருதப்பட்டு வந்தது. ஆனால், தற்போது நடைபெற்றுவரும் பல ஆராய்ச்சிகளின் விளைவாக, முதல்நிலை அல்லது அவசியமான உயர் இரத்த அழுத்த பிரச்சினைகள் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினைகள், இதுவரை பெரியவர்களிடம் மட்டுமே இருந்தன.

**குழந்தைகளிடம் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான சில முக்கிய காரணங்கள் யாவை?**

உடல் பருமன், சிறுநீரகக் கோளாறு, இதயக் கோளாறு, தூக்கத்தின்போதான சுவாசப் பிரச்சினை உள்ளிட்டவை, குழந்தைகளுக்கு உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை ஏற்படுவதற்கான சில முக்கிய காரணங்கள். ஒரு குழந்தையிடம் உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை இருக்கிற தென்றால், அதற்கு சிறுநீரகம் தொடர்பான பிரச்சினை இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

**இரத்த அழுத்தத்தை சோதனை செய்வதற்கான உகந்த கை (Hand) எது?**

வலது கை, இரத்த அழுத்தத்தை சோதனை செய்வதற்கான சரியான உறுப்பாகும். இடது கையில் இரத்த அழுத் தத்தை சோதனை செய்தால், இதயநோய் அறிகுறியை கண்டறிவதில் சிக்கல் ஏற்படலாம். ஏனெனில், இடது கை அழுத்தம் குறைவாக இருக்கும்.

# அலட்சியப்படுத்தக்கூடாத அறிகுறிகள்

| அறிகுறிகள் | சாத்தியமான காரணங்கள் | நடவடிக்கைக்கான ஆலோசனை |
|---|---|---|
| வாய்வுடன் தொப்புளைச் சுற்றியும் கீழும் வலி | மலச்சிக்கல் அல்லது வாய்வு | மருந்துக் கடைகளில் கிடைக்கும் வாய்வுமருந்து அல்லது மலமிழக்கிகள். வலி இரண்டு வாரங்களுக்கு மேலாக இருந்தால் மருத்துவரை நாடவும். |
| குமட்டல், காய்ச்சல், வாந்தி, பசியின்மை, முக்கி மலம் கழித்தலுடன் தொப்புளைச் சுற்றித் திடீர் வலி | குடற்வால் அழற்சி (அப்பெண்டிசைட்டிஸ்) | மருத்துவரை அணுகவும். குடல் வால் அழற்சிக்கு உடனடியாக மருத்துவம் பார்க்க வேண்டும் அல்லது அது வெடித்து தொற்றுள்ள திரவம் வயிற்றின் பிற பாகங்களில் பரவும். |
| வலது புற வயிற்றில் திடீர் வலி தோன்றி வயிற்றின் பிற பாகங்களுக்கும் முதுகிலும் பரவுதல். | பித்தப்பைக் கல் அல்லது பித்தப்பை தொற்றுநோய் | கொழுப்புணவை உண்ட பின் வலி நீடித்தாலோ கூடினாலோ மருத்துவரை அணுகவும் |
| வேறு அறிகுறிகளற்ற கறுப்பு நிற மலம் | நாவற்பழம், காரீயம், இரும்பு மாத்திரைகள், தக்காளி, சிவப்பு முள்ளங்கி உட்கொள்ளுதல் | நிறத்துக்குக் காரணம் என எண்ணும் உணவை உட்கொள்ளுவதை நிறுத்திய பின்னும் பழைய நிலைக்குத் திரும்பாவிட்டால் மருத்துவரை அணுகவும். |
| மலம் கழிக்கும்போது அழுத்தம் அல்லது வலியுடன் அரக்கு அல்லது பிரகாசமான சிவப்பு நிற மலம் | ஆசன வாய் வெடிப்பு அல்லது மூல நோய் | மருந்துக் கடைகளில் கிடைக்கும் மூல நோய்க் களிம்பு. பிரச்சினை தொடர்ந்தால் மருத்துவரை அணுகவும். அறுவை மருத்துவம் தேவைப்படலாம். |
| அடிவயிற்றில் அசௌகரியம், வாயு, மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, வலி சிவப்பு நிற மலம். | பெருங்குடல் அழற்சி, கிரோன் நோய், கட்டி அல்லது புற்று | மருத்துவரை அணுகவும். எக்ஸ்கதிர், கேளா ஒலி போன்ற சோதனைகள் தேவைப்படலாம். உணவுக்குழல் நிபுணரின் ஆலோசனை தேவைப்படலாம். |

## தோசை சாப்பிடுவதால் ஆபத்து உள்ளதா...?



மொறுமொறு தோசை மற்றும் சட்னி, சாம்பாரை கண்டால் யாருக்குத்தான் நாவில் எச்சில் ஊறாது?

தோசையில் பல ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. அதேசமயம் எண்ணெய் மிதக்க தோசை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும், இது கொலஸ்ரோலை அதிகப்படுத்தும்.

முக்கியமாக இதுபோன்ற தோசைகளை இதய நோயாளிகள் சாப்பிடக்கூடாது. ஒரு மசால் தோசையில் 387 கலோரி உள்ளதாக சொல்லப்படுகிறது.

அதேபோல் ஒரு சாதாரண தோசையில் 133 கலோரிகள் உள்ளன. இட்லி, தோசை, பொங்கல் போன்றவை நம் பாரம்பரிய உணவுகள். இவற்றை சாப்பிடும்போது நமக்கு அளவு தெரியாமல் சாப்பிடுகிறோம்.

ருசியாக இருந்தால் சொல்லவே வேண்டாம். பெரும்பாலும் அரிசி மாவில்தான் தோசை சுடப்படுகிறது, இதனை சர்க்கரை நோய் உள்ளவர்கள் அதிகம் சாப்பிட்டால் சிக்கல் தான். தோசையை எந்தளவுக்கு விரும்புகிறோமா அந்தளவுக்கு தொட்டு சாப்பிடும் சட்னியையும் விரும்புகிறோம்.

இதில்தான் பிரச்சினை உள்ளது, எடுத்துக் காட்டுக்கு தோசைக்கு பெரும்பாலும் தேங்காய் சட்னிதான் சுவைமிக்க சைட்டிஷ் ஆக இருக்கும்.

நீரிழிவு நோயாளிகள் தோசையோடு தேங்காய் சட்னி சேர்த்து சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். அதேபோல் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்கள் தக்காளி சட்னியை அதிகம் சாப்பிட்டால் அது தீங்கு விளைவிக்கும்.

## மூக்கில் இரத்தம் வருவதற்கு என்ன காரணம்?




நம் உடலில் சில பகுதிகளில் இருந்து இரத்தம் வெளியேறுவது நம்மை மிகவும் அச்சத்தில் ஆழ்த்தும். மூக்கு, காது மற்றும் வாயில் இரத்தம் வெளியேறுவது பெரிய நோயின் அறிகுறி அல்லது உயிருக்கு ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று பயப்படுவோம்.

பெரியவர்கள் மற்றும் சிறியவர்களைப் பொறுத்து விளைவுகள் வேறுபடலாம். மூக்கில் இரத்தப்போக்கு ஏற்படுவதென்பது 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் அடிக்கடி காணப்படும் ஒரு பொதுவான பிரச்சினையாகும். அவை பொதுவாக ஓர் அடிப்படை பிரச்சினையால் ஏற்படவில்லை என்றாலும், அவை மிகவும் பயமாக இருக்கும்.

இது சில நேரங்களில் சாதாரணமானதாகக்கூட இருக்கலாம். எனவே, மூக்கில் இரத்தப்போக்கு ஏற்பட்டால் அதை எவ்வாறு நிறுத்துவது என்பதற்கான வழிகாட்டிகளை இக்கட்டுரையில் தெரிந்துகொள்ளுங்கள்.

### மூக்கில் இரத்தம் வருவதற்கு என்ன காரணம்?

நமது மூக்கு ஒரு உணர்திறன் வாய்ந்த பகுதி மற்றும் சிறிய இரத்த நாளங்களால் நிரம்பியுள்ளது. இது எளிதில் காயமடைந்துவிடும் மற்றும் மூக்கடைப்புக்கு வழிவகுக்கும். மூக்கில் இரத்தம் வருவதற்கு வறட்சியும் ஒரு முக்கிய காரணமாகும். வறண்ட மற்றும் குளிர்ந்த காலநிலையால் உங்கள் மூக்கில் விரிசல் ஏற்படலாம். இது மூக்கிலிருந்து இரத்தம்



வருவதற்கு வழிவகுக்கும். நீங்கள் அடிக்கடி உங்கள் மூக்கினுள் கையை அல்லது துணியை அல்லது ஏதும் பொருளை விடுவதால், அது உங்கள் மூக்கு நரம்பை சிறிது காயப்படுத்தலாம். இது மூக்கில் இரத்தம் வருவதற்கு வழிவகுக்கும்.

★ வரும் முன் காப்பதே சிறந்தது. எனவே, உங்களுக்கு அடிக்கடி மூக்கடைப்பு இருந்தால், சிறிது பெற்றோலியம் ஜெல்லியைப் பயன்படுத்தி உங்கள் மூக்கை ஈரப்பதமாக்குங்கள். உங்கள் விரல் நகங்களை (குறிப்பாக குழந்தைகளுக்கு) சுருக்கமாக வைத்திருங்கள். வறண்ட மற்றும் வெப்பமான காலநிலையில் வெளியே செல்வதைத் தவிர்க்கவும். நிறைய தண்ணீர் (810 கண்ணாடிகள்) குடிப்பதன் மூலம் உங்களை நீரேற்றமாக வைத்திருக்கவும்.

★ மூக்கிலிருந்து இரத்தப்போக்கு ஏற்பட்டால், முதலுதவிக்காக மூக்கின் கீழ் மென்மையான பகுதியில் உங்கள் மூக்கை கடுமையாகக் கிள்ளுங்கள். நேராக உட்காருங்கள், படுக்காதீர்கள். உங்கள் மூக்கை 5 நிமிடங்கள் கிள்ளுங்கள், உங்கள் வாய் வழியாக அமைதியாக சுவாசிக்கவும். உங்கள் தலையில் ஒரு ஐஸ் பேக் அல்லது குளிர்ச்சியான எதையும் வைக்கலாம்.

★ மூக்கைக் கிள்ளிய பிறகு, உங்கள் தொண்டைக்குள் இரத்தம் வடிந்தால், அதை துப்பவும், விழுங்காமலும் இருக்க முயற்சி செய்யவும்.

★ 5 நிமிடங்கள் கிள்ளிய பிறகும் இரத்தப்போக்கு நிற்கவில்லை என்றால், உங்கள் மூக்கை மேலும் 5 நிமிடங்கள் அப்படியே வைத்திருங்கள். இரத்தப்போக்கு இன்னும் நிற்கவில்லை என்றால், மருத்துவரிடம் விரைந்து செல்லவும்.

★ மூக்கில் இரத்தம் வருவது ஒரு பொதுவான பிரச்சினையாகும், பெரும்பாலானவை முதலுதவி மூலம் எளிதில் சமாளிக்க முடியும். கவலை மற்றும் பீதி உங்கள் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது. இதனால் மேலும் இரத்தப்போக்கு அதிகம் ஏற்படுகிறது. எனவே, அமைதியாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

தமில் முரசு

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 11 - 10.09.2023





## ‘சாகித்திய ரத்னா’ விருது பெறும் எழுத்தாளர் க. சட்டநாதன்



தமிழ் முரசு
තමිල් මුරසු
Thamil Murasu
நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்
மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com
தொலைபேசி: 0115 200 900/011 588 6187
விளம்பரம் : 0114 846 097

# ‘சாகித்திய ரத்னா’ தெரிவுகள் வெளிப்படைத்தன்மை கொண்டனவா?

2022ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது விழா அடுத்தவாரம் நடப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த வருடத்துக்கான படைப்புகள், மொழிபெயர்ப்புகளுக்கு அப்பால் வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும் இலக்கிய சாதனையாளர் விருதான சாகித்ய ரத்னா விருது தமிழ் மொழி பக்கத்தில் சட்டநாதன் தெரிவுசெய்யப்பட்டு இருப்பதாக அறியக் கிடக்கிறது. முதலில் சட்டநாதனுக்கு ‘தமிழ் முரசு’ தனது வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்கிறது.

சமகாலத்தில் இடம்பெறும் ஒரு விடயம் குறித்து காத்திரமான மீள்பார்வை ஒன்றுக்காக சாகித்திய ரத்னா விருதாளர்களைத் தெரிவுசெய்வது தொடர்பில் தெரிவுக்குழுவிடம் ஏதேனும் வெளிப்படைத்தன்மைமிக்க தெரிவு நிபந்தனைகள் உண்டா எனும் கேள்வியை எழுப்பி ஒரு பேசுபொருளை உருவாக்குவது இந்த வார ஆசிரியர் தலையங்கமாக அமைகிறது.

இந்த அலசல் எந்தவிதத்திலும் சட்டநாதனின் தெரிவு குறித்தான விமர்சனம் இல்லை என்பதை முதலில் மனங்கொள்தல் வேண்டும். அதேபோல் அதற்கு முன்னர் தெரிவானவர்கள் குறித்த விமர்சனமோ கூட அல்ல. மாறாக சமகாலத்தில் வழங்கப்படும் ஓர் உயரிய இலக்கிய விருதை தெரிவுசெய்யும் முறைமைகள் குறித்த ஒரு தெளிவான புரிதலை வேண்டி நிற்பதே நோக்கமாகிறது.

கல்வித்துறையில் பேராசிரியர்களாக இருப்பவர்களுக்கு சாகித்ய ரத்னா விருது வழங்கப்படுவது குறித்து ஒரு விமர்சனம் எழுந்தது. ஏற்கனவே பல்கலைக்கழக மட்டத்தில் அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், படைப்பாளர்களாக மட்டும் இருக்கக்கூடிய இலக்கிய சாதனையாளர் விருதையும் பேராசிரியர்களுக்கு வழங்கி வைப்பது முறையாகுமா என்பதே அவ்வாறு எழுந்த விமர்சனமாக இருந்தது. அந்தக் கேள்வி நியாயமானதுதான். எனினும், பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சபா. ஜெயராசா போன்றவர்களுக்கு சாகித்ய ரத்னா விருது வழங்கப்பட்டபோது அதற்கு அவர்கள் தகுதியற்றவர்களாக உள்ளனர் என யாராலும் சுட்டக்காட்ட முடியாதளவு அவர்கள் இலக்கிய புலமையாளர்கள் என்பதால் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. ஆனாலும் அவர்களது துறைசார்ந்து பேராசிரியர் தரம் வரை உயர்ந்தவர்களுக்கு படைப்பாளர்களுக்கு கிடைக்கவேண்டிய சந்தர்ப்பங்களிலிருந்து பெற்றுக்கொடுப்பது சரிதானா என்கிற கேள்வியே இங்கே எழுப்பப்பட்டது.


அதேபோல் இந்த முறை இலங்கை பூர்விகத் தமிழர் தெரிவுசெய்யப் பட்டால் அடுத்த முறை மலையகத் தமிழர் தரப்பிலிருந்து ஒருவரைத் தேடிப்பிடிக்க முயல்வது, அதற்கு அடுத்த முறை இஸ்லாமியரான ஒருவரை தெரிவுசெய்ய எத்தனிப்பது போன்ற ஒரு காலகட்டம் இருந்தது.

தற்போது வயது அடிப்படையில் தெரிவுசெய்வது எனும் நிபந்தனை எழுந்திருப்பதுபோல் ஒரு தோற்றத்தைக் காண முடிகின்றது. அத்துடன், இதுவரையில் பெண் எழுத்தாளர் ஒருவரேனும் இவ்விருதுக்கு தகுதியுடையவர் இல்லையா என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே, காலத்துக்குக் காலம் தெரிவுசெய்வதற்கான நிபந்தனைகளை (Criteria) மாற்றிக்கொண்டு சென்று சாகித்ய ரத்னா எனும் உயர் விருதுக்கான விருதாளரை தெரிவுசெய்வதா அல்லது தெரிவு நிபந்தனைகள் இவைதான் என பொதுவெளியில் தெரியப்படுத்தி தங்களது தெரிவுகளை நியாயப்படுத்துவதா அல்லது உண்மைநிலை யில் பல்வேறு இலக்கியத்தளங்களில் செயற்பட்டவர்களை தெரிவுசெய்வதா என வரைமுறைகளை வகுத்துக்கொள்வதே சிறந்தது. அதேபோல் தெரிவுசெய்யும் குழு உறுப்பினர்களிலும் அவ்வப்போது மாற்றங்கள் செய்து இன்னும் இன்னும் சாகித்திய ரத்னா தெரிவுகள் வெளிப்படைத்தன்மை கொண்டனவா எனும் கேள்வியை உருவாக்காத வகையில் தெரிவு முறைமைகளும், தெரிவாளர் விபரங்களும் வெளிப்படையாக அமைவது அந்த உயர் விருதின் பெறுமதியை மேலும் உயர்த்தி வைக்கும். ‘தமிழ் முரசு’ இதழின் இந்தப் பார்வை அதனையே எதிர்பார்க்கையாகக் கொள்கிறது.

# எழுத்தாளர் தவச்செல்வனின் இரு நூல்கள் கொழும்பில் வெளியீடு






மலையக மகளிர் மன்ற அனு சரணையில், ஆசிரியரும் எழுத்தாளருமான சு.தவச்செல்வனின் இரு நூல்களின் அறிமுகவிழா 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி இராஜகுலேந்திரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

திருமதி சண்முகப்பிரியா கார்த்திக் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ள இந்நிகழ்வில் கணக்காளர் இலட்சுமணன் வேலு நூலின் முதற்பிரதியைப் பெறவுள்ளார்.

மங்கள விளக்கேற்றல், தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில் கவிதாயினி லுணுகலை ஸ்ரீ வரவேற்புரை நிகழ்த்துவார். பின்னர், தலைமையுரையையடுத்து, சாஹித்ய ரத்னா ஞானம் ஞானசேகரன், கவிஞர் சுப்பிரமண்ய செல்வா ஆகியோரின் வாழ்த்துரை இடம்பெறும்.

ஆடுபாலம் நூல் அறிமுகத்தை தகவம் செயலாளர், எழுத்தாளர் திருமதி வசந்தி தயாபரன் நிகழ்த்த, எழுத்தாளர், ஆய்வாளர் மல்லியப்பு சந்தி திலகர் ‘தவச்செல்வனின் சிறுகதைகள் வெளிப்படுத்தி நிற்கும் சமகால சமூக யதார்த்தம்’ எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவர்.

தவச்செல்வனின் ‘ஆடுபாலம்’ எனும் சிறுகதையின் புனைவு முகம் என எழுத்தாளர், சட்டத்தரணி பதுளை சேனாதிராஜா உரை நிகழ்த்துவார். கலாபூஷணம் கே.பொன்னுத்துரை ஒருங்கிணைப்பில் இடம்பெறும் நிகழ்வில், நூலாசிரியரின் ஏற்புரை -நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெறும்.

# ‘தென்றல்’ சஞ்சிகையின் 60ஆவது இதழ் வெளியீடு

மட்டக்களப்பு கல்லடியிலிருந்து காலாண்டுச் சஞ்சிகையாக கடந்த 15 ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருக்கும் ‘தென்றல்’ சஞ்சிகையின் 60ஆவது இதழ் வெளியீடு மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

‘தென்றல்’ சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபாலரெத்தினம் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர்.

‘தென்றல்’ சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனால் ‘தென்றல்’ கொடியேற்றப்பட்டு ஆரம்பமான நிகழ்வில், அகவணக்கம், அகல் விளக்கேற்றல், ‘தென்றல்’ கீதம் இசைத்தல், அதிதிகள் உரை ஆகியன இடம்பெற்றன. இதன்போது ‘தென்றல்’ சஞ்சிகை ஆசிரியர் கதிரேசபிள்ளை கிருபாகரனுக்கு 60ஆவது இதழின் முதல் பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்திக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து அவர் சிறப்பு, கௌரவப் பிரதிகளை ‘வீசுதென்றல் விருது’ பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கினார். இதனைத் தொடர்ந்து அதிதிகளால் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஆ.மூ.சி.வேலழகன், மூ.அருளம்பலம், செ.குணரத்தினம், கா.சிவலிங்கம், இ.நல்லையா, திருமதி மாலினி அஜந்தன், சீ.கோபாலசிங்கம், திருமதி ஜெகதீஸ்வரி நாதன், மா.திருநாவுக்கரசு, மீரா முகைதீன் ஜமால்தீன், திருமதி இந்திராணி புஸ்பராஜா, பரதன் கந்தசாமி, திருமதி வேதநாயகி குணநாயகம், தி.பத்மநாதன், செ.துரையப்பா, பெ.பேரின்பராசா, த.கோபாலகிருஷ்ணன், வீ.வீரசொக்கன், தம்பி சாகித் சித்தி பரீதா, தி.சத்தியநாதன், மி.அருள்மொழிராஜா, ஏறாவூர் தாஹிர், எஸ்.இரவீந்திரன், முகம்மது லெவ்வை முகம்மது பாறூக், எஸ்.தியாகராஜா, க.ரெட்னையா, திருமதி சுந்தரமதி வேதநாயகம், வி.பத்மசிறி, ஆத்மராஜா றூத் சந்திரிக்கா, பெ.ஹரிச்சந்திரா, வா.கிருஸ்ணகுமார், சீ.தரணீஸ்வராநந்தா, மா.சசிகுமார், அனோஜா பவளேந்திரன், சி.புரவர்த்தனி, எம்.சிவகுமார், ம.புருஷோத்தமன், ச.மதன், த.இன்பராசா, கிறிஸ்தோபர் கிறிஸ்டிராஜ், ஏ.எல்.எம்.சலீம், க.பகீரதன், உ.உதயகாந், கு.கோடீஸ்வரன், தே.லோகவியாசன், க.பாக்கியராஜா, த.மதியழகன், மு.விஸ்வநாதன் மற்றும் வீ.ரஞ்சிதமூர்த்தி ஆகியோர் ‘வீசுதென்றல் விருது’ மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.











நிகழ்வில் விருது பெற்ற கலைஞர் சார்பில் கதிரவன் த.இன்பராசா பாராட்டுரையையும், ‘தென்றல்’ சஞ்சிகை ஆசிரியர்பீட உறுப்பினர் த.செல்வராணி நன்றியுரையையும் ஆற்றினர்.

இந்நிகழ்வுகளை சிரேஷ்ட ஊடகவியலாளர் பெ.ஹரிச்சந்திரா தொகுத்து வழங்கினார்.

**க.கிருபாகரன்**



# பிராண சக்தியும் மனித வளமும்

பிராண சிகிச்சை, மருந்தில்லாத சிகிச்சை முறை. இது பல நோய்களுக்குத் தீர்வைத் தேடிக்கொள்ளச் சிறந்த வழி. இச்சிகிச்சை முறையைக் கற்றுக் கொண்டால் உங்களுக்கு நீங்களே சிகிச்சை அளிக்கலாம். அதேவேளை, பிறருக்கும் சிகிச்சை அளித்து அவர்களையும் சுகதேகிகளாக வைத்துக் கொள்ளலாம் என்கிறார் ஒரு பிராண சிகிச்சைப் பயிற்சியாளர்.


பிராண சிசிச்சை என்பது தொன்மை கலையின் ஓர் அறிவியல் முறை. இது நமது பண்டைய கால முறை. இந்தக் கலை, சீன அறிஞர் யுவாங்க்சுவாங் காலத்தில் சீனத்தில் பரவியது. பிற்காலத்தில் இக்கலை சிறிது மாற்றம் செய்யப்பட்டு உலகமெங்கும் பரப்பப்பட்டது. தற்சமயம் இக்கலை உலகம் முழுவதும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையின் மூலமாக நமது உடலில் மற்றும் மனதில் தோன்றும் பலவிதமான நோய்களை, வியாதிகளை, எந்தவிதமான பக்கவிளைவுமின்றி குணப்படுத்தலாம்.

மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். உடலிலுள்ள சத்துகள் குறைவால் வரக்கூடியது. வெளியிலிருந்து கிருமிகளால் தொற்றக்கூடியது. மேற்கண்டவைகளில் எவற்றால் மனிதன் பாதிக்கப்பட்டாலும் நமது பிராண சிகிச்சையின் மூலம் அவற்றைக் கண்டறிந்து குணப்படுத்த முடியும். பிராண சிகிச்சை என்பது மருந்தில்லா துணை மருத்துவம், நீர், நிலம், ஆகாயம், மண், காற்று ஆகிய இந்த ஐம்பூதங்களிலிருந்து உயிர் சக்தியைப் பெற்று சிகிச்சையளிப்பதாகும்.

எம் உடல் தன்னைத்தானே குணப்படுத்தக் கூடிய சக்தி படைத்தது என நவீன மருத்துவத்தின் தந்தையான ஹிப்போக்கிரட்டீஸ் சொல்லியிருக்கிறார். நோயால் பாதிக்கப்பட்ட உடல் பகுதிக்கு பிராண சக்தியை அளித்தால் போதும். விரைவாகக் குணமடைந்துவிடும். பிராண சக்திக்கு அத்தனை பலன் உண்டு.

மனித உடலில் ஏழு சக்தி மையங்கள் இருப்பதாக எம் முன்னோர் கருதினர். அந்த சக்தி மையங்களை "சக்ரா" என்று அழைத்தனர். "சக்ரா"க்களின் தன்மையைப் பொறுத்தே மனிதர்களின் தன்மையும் அவரது ஆற்றலும், அறிவும் அமைவதாகவும் அவர்கள் நம்பினர். இதனை சீனா, திபெத் போன்ற நாட்டு மக்கள் வலுவாக நம்பினர்.

ஒவ்வொரு சக்ராவும் புறக்கண்ணால் காணமுடியாததாக இருந்தாலும் சூட்சும சரீரத்தில் இருக்கும் சக்தி மையங்களாக அவர்கள் அவற்றைக் கண்டதோடு, அந்த சக்ராக்களுக்குத் தனித்தனியாக சின்னங்களும், நிறங்களும், மந்திர சப்தங்களும் ஒதுக்கி இருந்தார்கள். ஒவ்வொரு சக்ராவும் தனித்தன்மை கொண்டதாகவும், சில குறிப்பிட்ட சக்திகளை மையமாகக் கொண்டதாகவும், அந்த சக்திகளை உருவாக்கவும், கட்டுப்படுத்தவும் முடிந்ததாகவும் கருதப்பட்டது. உடலிலுள்ள குண்டலினி சக்தியும் இந்த சக்ராக்களின் வழியாகத்தான் மேலே எழுகிறது என்றும் சொல்லப்படுகிறது - என வலைப்பூ பதிவொன்றில் படித்தறிந்துகொண்டேன்.




அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் சு.நந்தகுமார் யோகியர் சிகிச்சை இரகசியம் (பிராண சிகிச்சை) என்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அவர் அதனை கடந்த 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் வெளிட்டுவைத்துள்ளதை இணைய வாயிலாக அறிந்தேன். யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி திருமுகுந்தன் தலைமையில் இந்துக் கல்லூரி சபாலிங்க மண்டபத்தில் மாலை 4 மணிக்கு அவ் வெளியீட்டு விழா நடைபெற்றதாகவும் பிரதம விருந்தினராக கலாநிதி ஆறு திருமுருகன் கலந்து சிறப்பித்திருந்ததாகவும் பதிவுகள் உள்ளன.

நந்தகுமார் அவுஸ்திரேலிய ரெய்கி தொடர்பு என்ற அமைப்போடு இணைந்து பணியாற்றுபவர். பிராண சக்தி பற்றி அவர் தனது நூலில் குறிப்பிடுகையில், "பிராண சக்தி அல்லது பிராண எனும் உயிர் சக்தி அல்லது வாழ்க்கை விசை (சக்தி), பிரபஞ்சத்திலுள்ள யாவற்றையும் இயங்கச் செய்கின்ற ஓர் இயற்கைச் சக்தியாகும். எல்லா இயற்கை வைத்தியங்களும், சிகிச்சைகளும், இந்த உயிர் சக்தியை எவ்வாறு சம நிலையில் வைத்திருக்கும் என்ற புரிந்துணர்வைக்கொண்டே செயற்படுகின்றன. இதன் மூல தந்தையான எமது சைவசமயத்தின் வழிவந்த திருமூலரே இதன் ஆதிகுருவாக அமைகின்றார் என்பது பெருமைக்குரியதாகும்" என்றவாறு சொல்லியிருக்கிறார்.

"பிராணன் ஆகிய காற்று உடலின் உள்ளே சென்று வெளியே வருகிறது. உடற்கூற்றுகளை ஒழுங்குபடுத்துவதில் இதற்குப் பெரும் பங்கு உண்டு. இச்சக்தியை எவ்வாறு கையாண்டு நலமாய் வாழலாம் என்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது. இந்நூலை க. ஸ்ரீ நந்தகுமார் எளிய முறையில் உருவாக்கியுள்ளார். பிராண சக்தி பற்றி உலகளாவிய ரீதியில் இன்று பலர் ஆராய்கிறார்கள். மனித உறுப்புகளை மாசுபடியாது காப்பாற்றுவதற்கு பயிற்சி அவசியம் என்பதை இந்நூல் விளக்கி நிற்கிறது. சுவாசிப்பு சீராக இருத்தல் எல்லா நலன்களுக்கும் மூலம் என்பதை நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார்" - என கலாநிதி ஆறு திருமுருகன் அந்நூலுக்கான அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

***போட்டிமிகு உலகை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?***

மனித உடலை வளப்படுத்துவதைப்போல் மனித மனத்தையும் வளப்படுத்த வேண்டும். மனித வாழ்வு ஆரோக்கியமானதாகக் கட்டமைக்கப்பட வேண்டும். அதற்காக பல பயிற்சிகளையும், முறைகளையும் பல அறிஞர்களும், பல ஞானிகளும் முன்வைத்து வந்திருக்கின்றனர். எனினும், இவ்விடயங்களின் சாரங்களை அனைவரும் அறிந்து பயன்பெறுவதென்பதுவும் அரிதாகவே காணப்படுகின்றது.

இந்திலையில், எமது கல்லூரியின் பழைய மாணவர் சு.ஸ்ரீ நந்தகுமார், 'பிராண சக்தியும் மனித வளமும்' என்ற நூலை எழுதி வெளியிடுகின்றார். அவர் அவுஸ்திரேலியாவில் பிராண சக்தி பற்றி பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். பல நோய்களைத் தீர்க்கக்கூடிய வழியாக பிராண சக்திகளைப் பயன்படுத்தக்கூடிய வழிகளைப் பற்றி எடுத்துக் கூறி வருகிறார். அது மட்டுமன்றி இவர் எமது கல்லூரிக்கு நேரடியாக வருகைதந்து மாணவர்களுக்குப் பிராண சக்தி பற்றி பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். இத்தகைய கருத்தரங்குகள் மாணவர்கள் மன ஆளுமை வளர்ச்சிக்கு மிகுந்த பயனுடையதாக அமைந்திருந்தது – என யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர்ரண்ணம் செந்தில்மாறன் நூலுக்கான தனது வாழ்த்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

**கணபதி சர்வானந்தா**



காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற முன்பள்ளி மழலையர் கலை நிகழ்வின் காட்சிகள் சில...





# ‘சொற்கோ. வி.என்.மதிஅழகன்’ கொழும்பில் நூல் வெளியீடு











இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் தமிழ்ப்பிரிவு பணிப்பாளராகவும் ஒலி, ஒளி செய்தி வாசிப்பாளர், தயாரிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற வி.என்.மதிஅழகனின் ‘சொற்கோ.வி.என்.மதிஅழகன்’ தமிழ் ஒலிபரப்பில் சொற்காலப் பதிவு எனும் நூல் வெளியீட்டு விழா 06ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஆனந்த பாலகிட்னர் தலைமையில் நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடமிருந்து இலக்கியப் புரவலர் ஹாசீம் உமர் பெற்றுக் கொண்டார். அத்துடன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊடகவியலாளர்கள் இணைந்து ‘சொல்லாயன்’ எனும் பட்டத்தை வி.என்.மதிஅழகனுக்கு வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் மண்டபம் நிறைந்து ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



**அஷ்ரப் ஏ. சமத்**

**ஆசிரியர் தினத்தை முன்னிட்டு...**

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயமான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளை படத்தில் காண்கிறீர்கள்.

இந்தியாவின் பெங்களூரிலிருந்து வருகை தந்த கலைஞர்களின் கலை நிகழ்வுகளும் உள்ளூர்க் கலைஞர்களின் கதக் நிகழ்ச்சியும் நடைபெற்றன. அத்துடன் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் வளர்ச்சி மற்றும் அதனுடன் இணைந்து சேவைகளை வழங்கி வரும் ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

*படமும் தகவலும் தகவல் - ஐ.சி.சி.ஆர்.*









# ‘சாகித்திய ரத்னா’ விருது பெறும்

# எழுத்தாளர் க.சட்டநாதன்

## (இம்மாதம் 14 ஆம் திகதி விருதுவிழா இடம்பெறும்)




**முருகபூபதி - அவுஸ்திரேலியா**


இம்முறை எழுத்தாளர் க. சட்டநாதனுக்கு இலங்கை அரசின் சாகித்திய ரத்னா விருது கிடைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட இலங்கையில் வேலணையில் பிறந்திருக்கும் சட்டநாதன், அந்த தீவுப் பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களுடனும் நெருக்கமான உறவைப் பேணி வளர்த்தவர். இவரை நண்பராகப் பெறுபவர்கள் எளிதில் இவரை மறந்துவிடமாட்டார்கள். இழக்கத் தயாராகமாட்டார்கள்.

வேலணையில் மறுமலர்ச்சிக் கழகம், தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் முதலானவற்றிலும் அறுபதுகளில் சட்டநாதன் இணைந்திருந்த காலத்திலேயே தரமான இலக்கிய ரசனைமிக்கவராகவே




திகழ்ந்திருப்பதாக பேராசிரியர் சிவச்சந்திரன் பதிவுசெய்துள்ளார்.

“எனது கதைகள் பற்றி நானே ஏதாவது சொல்லவேண்டும் போலிருக்கிறது. விஸ்தாரமாக அல்ல, சுருக்கமாக. எந்த புற நிகழ்வுகளுமே என்னைப் பாதிக்கின்றன. மனதைத் தொட்டு நெருடுகின்றன. சில சமயங்களில் காயப்படுத்துகின்றன. இந்த அனுபவங்களையெல்லாம் சிறைப்பிடிக்கும் எத்தனம்தான் எனது கதைகள். இறுக்கமான குடும்ப உறவுகளில் ஆணின் அதிகாரமுனை மழுங்க, பெண் தன்னைச் சுற்றிப் பிணைந்து கிடக்கும் தளைகளைத் தகர்த்துவிட்டு விடுதலையாவது எனது கதைகளில் இயல்பாகவே சாத்தியமாகிறது. ஆண் – பெண் உறவு உணர்வு விவகாரங்களைக் கடந்து சமூகத்துடனான மனித உறவுகளின் சித்திரம்தான் ‘பிச்சைப்பெட்டிகளும் அந்தக்கிராமத்துச் சிறுமியும்’. இக்கதைகளிலும் ஏனைய கதைகளிலும் வருபவர்கள் நமது சிநேகத்துக்கும் நேசத்துக்கும் உரியவர்கள். மனிதநேசம் சாஸ்வதமானது.”

இவ்வாறு தனது முதலாவது கதைத் தொகுப்பான ‘மாற்றம்’ நூலில் சொல்லும் சட்டநாதன், இது வரையில் எழுதியிருக்கும் அனைத்துக் கதைகளிலும் மனித நேயம் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இவருடைய படைப்புமொழி எந்தச் சிக்கல்களுமற்ற எளிமையானது. அதனால் எத்தகைய வாசகர்களுக்கும் இலகுவில் நெருக்கமாகிவிடும். இலக்கிய வட்டாரத்தில் சிறுகதை இலக்கியம் பற்றிய பேச்சு வந்தால், அங்கு சட்டநாதனின் பெயர் தவிர்க்க முடியாததாயிருக்கும்.

சட்டநாதனின் படைப்பாளுமைப் பண்பு பற்றி தமிழகத்தில் ஜெயமோகன், வெங்கட் சாமிநாதன் உட்பட அருண்மொழிவர்மன், தி.செல்வமனோகரன், ஜீவநதி பரணீதரன், இரா.சிவச்சந்திரன், குப்பிளான் ஐ.சண்முகன், கலாநிதி நா.சுப்பிரமணியன், ஏ.ஜே.கனகரத்தினா, பேராசிரியர் சிவசேகரம், கருணாகரன், ஏ.ஜே.கனகரத்னா, மதுசூதனன் முதலானோர் விதந்து எழுதியுள்ளனர்.

எனினும், பெண்களின் உணர்வுகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் எழுதிவரும் சட்டநாதனின் படைப்புலகம் பற்றி நானறிந்தவரையில் பெண்ணியவாதம் பேசும் பெண்கள் இதுவரையில் எழுதவில்லை என்பது எனது நெருடலான அவதானம்.

தமிழ் கதைஞர் வட்டத்தின் (தகவம்) பரிசில்களை சட்டநாதனின் பல கதைகள் பெற்றுள்ளன. சட்டநாதனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு ‘உலா’, (1992) யாழ். இலக்கிய வட்டம், அகில இலங்கை சுதந்திர இலக்கிய அமைப்பு ஆகியனவற்றின் விருதுகளையும் வடக்கு, கிழக்கு மாகாண சாகித்திய விருது, இலங்கை தேசிய சாகித்திய விருது முதலானவற்றையும் பெற்றுள்ளது.

1970 இல் இவரது முதல் சிறுகதை ‘நாணயம்’ வீரகேசரி வாரவெளியீட்டில் வந்திருப்பதாக அறியப்பட்டாலும், நான் முதலில் படித்த அவரது கதை பூரணியில் 1972இல் வெளியானது. இவரது சில கதைகள் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிநாட்டு இதழ்கள் – நூல்களிலும் ( nt ne nts rh ls st – The Penguin New writing in Srilanka) வந்துள்ளன.

மல்லிகையில் சட்டநாதன் எழுதியிருந்த உறவுகள் கதை, அது வெளிவந்த காலப்பகுதியில் இலக்கிய உலகில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது.

சட்டநாதன், ஆண் – பெண் உறவுகளை துல்லியமாக இனங்கண்டு எழுதிவரும் அதே சமயம், உளவியல் பாங்கிலும் பாத்திரங்களைப் படைப்பவர். ஒரு பாடசாலை மாணவனின் எண்ணச் சுழற்சியையும் அதன் அடிப்படையில் வரும் மன அழுத்தத்தையும் (Obsessive Compulsive disorder) அழகாக சித்திரித்து அழுத்தம் என்ற கதையை எழுதியவர்.

சட்டநாதன், சிறுகதைகளை எழுதத் தொடங்கிய காலம்முதல், ஜீவநதியில் தொடர்நாவல் எழுதும் காலம்வரையில் சித்திரித்த பாத்திரங்களும் அவர்களை நடமாடவிட்டு வாசகரை அழைத்துச்செல்லும் ஊர்களும் மனதை விட்டு அகலாது. முக்கியமாக பெண்களும், குழந்தைகளும், அவரது கதைகளில் வரும் ஊர்களும் வீதிகளும் ஏன், மரம், செடி, கொடிகளும் காய், கனிகளும் பறவையினங்களும் எமது வாசிப்பு அனுபவத்தில் உடன் வந்துகொண்டிருக்கும்.

அவரை மார்போடு அணைத்து விடைகொடுத்து அனுப்புவேன். அவரது அன்புத் துணைவியார் மறைந்த செய்தியறிந்ததும் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆறுதல் சொன்னேன்.



அவருக்கு குழந்தைகள் இல்லை. இன்று மனைவியும் இல்லை. எனினும், அவர் சிருஷ்டித்த குழந்தைகளும் மனைவிமாரும் அநேகம். அவர் உளமார நேசித்த மனைவியும் சமூகத்தின் குழந்தைகளும் சகோதர, சகோதரிகளும் நண்பர்களும் அவரது கதைகளில் ஏதோ ஒரு உருவத்தில் வந்துகொண்டிருக்கிறார்கள்; வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.அவர் தனது நூல்களை குடும்ப அங்கத்தவர்களுக்கே சமர்ப்பணம் செய்தவர்.

இலங்கையில் மல்லிகை, ஞானம், ஜீவநதி ஆகியன சட்டநாதனை அட்டைப்பட அதிதியாக பாராட்டி கௌரவித்துள்ளன. ஜீவநதி சிறப்பிதழே வெளியிட்டுள்ளது.

இலக்கிய உலகில் கொண்டாடப்படவேண்டியவரான சட்டநாதனின் படைப்புலகம், பாத்திர வார்ப்புகள், கதைசொல்லும் உத்தி பற்றியெல்லாம் வாசகர் மட்டத்தில் அனுபவப்பகிர்வுகளை எதிர்காலத்தில் நடத்தவேண்டும், அவர் குறித்து ஆவணப்படம் தயாரிக்கவேண்டும் முதலான வேண்டுகோள்களையும் இந்தப் பதிவின் ஊடாக முன்வைக்கின்றேன்.

பாவேந்தல் பாலமுனை பாறூக்



# ஆளுமைகளின் அடையாளம்

# காத்திரமான படைப்புகளால் கவனத்தை ஈர்த்துவரும் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ

இலங்கை முஸ்லிம் பெண்களின் எழுத்து முயற்சி 1940இன் பிற்பகுதியிலேயே தொடங்குவதை அது தொடர்பில் ஆய்வுசெய்பவர்கள் எடுத்துக்காட்டுவர். பெண்ணியச் சிந்தனைகள் அதிகம் பேசப்படாத காலத்தில் 1947களில் எழுத்து முயற்சியில் ஈடுபட்டவராகப் பேராதனை ஷர்புன்னிஷாவையும், 1960களில் சிறுகதைகளினூடாக எழுத்து முயற்சியில் பங்களித்தவராக நயீமா சித்தீக்கையும் குறிப்பிட்டு, அவர்களை முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய முன்னணி முஸ்லிம் பெண் எழுத்தாளர்களாக அடையாளப்படுத்துகிறார் திறனாய்வாளர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ்.

அப்பெண் எழுத்தாளர்களைப் பின்தொடர்ந்தவர்களாக பெண் விடுதலை, ஆணாதிக்க எதிர்ப்பு, மூடநம்பிக்கைக்கு எதிரான எழுச்சி, அரசியல், மனிதநேயம், பாலின சமத்துவம் போன்ற மையப் பொருட்களில் எழுதிவருகின்ற இன்னும் சில முஸ்லிம் பெண் படைப்பாளர்கள் இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் தடம்பதித்து வருவதை இலக்கிய உலகம் பேசும்.

கல்வி, வாசிப்பு, மொழியாற்றல் என்பவற்றினூடாகப் பிரகாசம் பெற்றிருக்கின்ற அவ்வாறான முன்னிலைப் படைப்பாளர்களில் ஒருவராக இலக்கிய உலகில் பெயர் பெற்றிருப்பவர் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி.

நாடகம், நடிப்பு, கவிதை, சிறுகதை, அறிவிப்பு, பயண இலக்கியம், மொழிபெயர்ப்பு என்று பல துறைகளில் அவருடைய கலை இலக்கியப் பயணம் தொடர்கிறது.

1980களில் தினகரன் சிறுவர் உலகம் மூலம் எழுத்துத்துறையில் பிரவேசித்த அவர், தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன், வீரகேசரி போன்ற தேசிய பத்திரிகைகளிலும் பல்வேறு உள்நாட்டு - வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் மின்னிதழ்களிலும் தொடர்ந்து எழுதி வருகின்றார். முகநூலில் அவர் அரகல ஆர்ப்பாட்டக் காலத்தில் எழுதியிருந்த கவிதை, பலராலும் வியந்து பார்க்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, பொது வெளியில் முன்னின்றவரை பெண் என்ற காரணத்தால் ஆணாதிக்கவாதிகள் அங்க ஆபாச அஸ்திரமிட்டுக் கொச்சைப்படுத்தியபோது, அதனை எதிர்த்து மரீனா எழுப்பிய கலகக் குரல் இலக்கிய நெஞ்சங்களின் அவதானத்தை ஈர்த்ததாகும்.

"அடுப்பங்கரையில் எரிந்து போ...
ஆர்ப்பாட்டக் களத்துக்கு
ஏன் வருகிறாய்... ?
கட்டிலில் எனக்காக
காலை விரித்து வைத்துக் காத்திரு ...!
கட்டுப்பாடுகளை உடைத்துவிட்டு
கடல் அலைபோல் பொங்கியெழ
காலம் அனுமதித்தாலும்
நாங்கள் ஆமோதிப்போம்
என்று நினைத்தாயோ ...?
கூண்டிலிருந்து வெளியே விட்டாலும்
கத்தரித்துத்தானே வைத்திருக்கிறோம்
உன் இறக்கைகளை...
எப்படி நீ
பறக்க எத்தனிக்கிறாய் ...?
குரல்வளை நசுக்கப்பட்ட பின்பும்
சுதந்திரம் பேச மேடைக்கு வருகிறாயா...?
வந்து பார்...!
பாலியல் வன்முறை என்ற
பரம்பரை ஆயுதம்
எம் கையிலிருப்பதை
மறந்துவிட்டாயா நீ?
போர்க்களத்திலும்
உன் மார்பகங்களை பேசுபொருளாக்கி
உன்னைக் கொச்சைப்படுத்த
ஒரு கூட்டமே காத்திருக்கிறது ...
அதனால்
பொத்திக்கொண்டு வீட்டில் இரு...
உன் பிணத்தைக் கூட நிர்வாணமாக்கி
பிழைப்பு நடத்த



எங்களுக்குத் தெரியும்"

மரீனா இல்யாஸ் ஷாபி இலக்கிய உலகுக்கு

குமுறுகின்ற எரிமலைகள் - சிறுகதை -(1998)

தென்னிலங்கை முஸ்லிம்களின் தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் ஆய்வு (1998)

இரவைக் காக்கும் இமைகள் -கவிதை (2020)

என் சிறகில் சிக்கிய வானம் - பயணக் கட்டுரை (2023)

ஆகிய நூல்களை வழங்கியிருக்கின்றார்.

"பெண்விடுதலை பற்றிய வேட்கையும் அது தொடர்பான செயற்பாடுகளும், முனைப்புப் பெற்றுவரும் இற்றை நாளில், அவற்றுக்கு மேலும் உரமூட்டுவனவாக அமைவன மரீனாவின் கதைகள்" என்று அவரின் சிறுகதைகள், ஆய்வுநூல் என்பன தொடர்பாகக் கருத்துரைத்த பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி அருணாசலம் கூறுவார். அது போலவே, வாழ்க்கைக் கோலங்களை பல்வேறு கோணங்களில் படம் பிடிப்பவையாக, சமூக மேம்பாடு நோக்கிய உணர்வுபூர்வமான இலகு மொழிக் கவிதைகளாக அவரின் கவிதைகள் அமைந்திருப்பதாக அதனை ஆய்வு செய்பவர்கள் சுட்டிக் காட்டுவர்.

அவருடைய பயணக் கட்டுரைகள் சென்ற, பார்த்த இடங்களை அதன் அழகை வெறுமனே விபரிப்பனவாக அமைந்துவிடாமல், ஆத்மீக உணர்வுகளை மேலோங்கச் செய்வனவாக அமைந்திருப்பதை அதனை வாசித்தவர்கள் எடுத்துரைப்பர். "கண்களுக்கு விருந்து படைக்கும் பயணங்களை விட ஆத்மாவுக்குத் தீனி போடும் பயணங்கள் பெறுமதியானவை" என்ற உறுதிப்பாட்டோடு பயணக் கட்டுரைகளை எழுதிவருபவர் அவர்.

மரீனா இல்யாஸின் எழுத்து முயற்சியில் அவரின் வானொலிப் பங்களிப்பு தனித்து நோக்கப்பட வேண்டியதாகும்.

அவரின் 25 - 30 நாடகங்கள் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி உள்ளன.

'பாறையில் பூத்த மலர்' என்ற தொடர் நாடகமும் வானொலியில் ஒலிபரப்பாகி நேயர்களின் அபிமானத்தைப் பெற்றிருக்கின்றது.

அவுஸ்திரேலியாவிலிருந்து ஒலிபரப்பாகும் 'வளர்பிறை' வானொலி நிகழ்ச்சியில் ஓர் அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார் மரீனா.

'சந்திப்பு' என்ற நிகழ்ச்சியின் மூலம் வளர்ந்த, வளரத் துடிக்கின்ற கலைஞர்களை, சமூக சேவையாளர்களை அடையாளப்படுத்தி வருவதோடு ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள் கவியரங்குகளையும் தலைமை தாங்கி நடத்தி வருகின்றார்.

வானொலி நாடகங்களில் பல பாத்திரங்களை ஏற்று நடித்திருப்பவர் அவர். அவர் எழுதிய 'இலையுதிர் காலம்' என்ற நாடகத்தில், கணவன் - மனைவி, சிறுமி, வயதான தாய் , பக்கத்து வீட்டுப் பெண் என்று எல்லாப் பாத்திரங்களிலும் அவரே நடித்துப் புகழ் பெற்றார்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

# வலம்புரி கவிதா வட்டத்தின் 91ஆவது கவியரங்கம்





பௌர்ணமி தினத்தைக் தவற விடாது தனது கவியரங்கை நடத்தும் வலம்புரி கவிதா வட்டம் சென்ற மாதம் வந்த இரண்டு பௌர்ணமி தினங்களிலும் தனது கவியரங்குகளை வெற்றிகரமாக நடத்தியது. சென்ற மாத இறுதியில் தனது 91ஆவது கவியரங்கை நடத்தி கவிதை உள்ளங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நிகழ்வுகளை வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். பொருளாளர் ஈழ கணேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கவியரங்குக்கு புரட்சிக் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமை தாங்கினார். தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் நடந்த கவியரங்கு இறுதி வரை உற்சாகமாக நடந்தது.

கவிஞர்கள் சமூகஜோதி ரபீக், லைலா அக்ஷியா, தி.ஸ்ரீதரன், ஆர்.தங்கமணி, மலாய்கவி டிவாங்ஸோ, மஸீதா அன்சார், யாழ். அஸீம், தாமரைச் செல்வி, கவிஞர் திலகம் எம்.பிரேம்ராஜ், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், கம்மல்துறை இக்பால், ரவூப் ஹஸீர், கிண்ணியா அமீர் அலி, ரஷீத் எம்.றியாழ், ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், நியாஸ் ஏ.சமத், ஆர்.எஸ்.ரஸ்மியா, சிறுமி இ.கலைநிலா, எஸ்.யூ.கமர்ஜான் பீபி, வதிரி சி.ரவீந்திரன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், எம்.எம்.நவாஸ்தீன், ஏ.கே.இளங்கோ, மினுவங்கொடை ஏ.சிவகுமார் ஆகியோர் கவிதை பாடினர். ஒவ்வொரு கவிஞரினதும் வித்தியாசமான கருப்பொருள் கவியரங்கை களை கட்ட வைத்தது.

**(படங்கள்: முஹம்மத் நசார்)**

# கீதா கணேஷின் நூல் லண்டனில் வெளியீடு










லண்டன் விம்பம் கலை இலக்கிய, திரைப்பட மற்றும் கலாசார அமைப்பின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 2ஆம் திகதி, லண்டன், ஈஸ்ட் ஹோம், Trinity Centre மண்டபத்தில் வேலணை சிற்பனை, கீதா கணேஷின் இருளைக்கிழித்த கோடு, எத்தனங்கள் ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புகளின் வெளியீடும் விமர்சனமும் நிகழ்வு பூங்கோதை (கலா ஸ்ரீரஞ்சன்) தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அஞ்சனா, பிரதீபன் ஹம்சத்வனி, தோழர் வேலு, பூங்கோதை ஸ்ரீ ஹரன் ஆகியோர் விமர்சன உரை ஆற்றினார்கள். லண்டனில் செயல்பட்டுவரும் வேலணை ஒன்றியத் தலைவர் வேந்தனார் இளஞ்சேய் வெளியீட்டுரையுடன் இ.பத்மநாபஐயர் (நூலகம்) முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் பங்கேற்றவர்களையும் சிறப்புப் பிரதி பெற்றுக் கொண்டவர்களையும் காணலாம்.

**(படங்கள் - சாந்தன்)**

## காத்திரமான படைப்புகளால்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆங்கில மொழியில் முதுமாணி பட்டம் பெற்றுள்ள மரீனா, பயனுள்ள ஆங்கில ஆக்கங்களையும் தமிழில் மொழிபெயர்த்து இலக்கிய நெஞ்சங்களை ஈர்த்து வருவதோடு, சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்து வருகின்றார்.

இலக்கியப் பணிகளுக்காக கௌரவங்களும் பல விருதுகளும் அவருக்குக் கிடைத்திருக்கின்றன.

1999இல் மத்திய மாகாண முஸ்லிம் கலைஞர் கௌரவிப்பில் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2023இல் பிரான்ஸில் பரிஸ் நகரில் இடம்பெற்ற வென்மேரி அறக்கட்டளையின் தமிழ் ஆளுமைகளுக்கான உயர் விருது வழங்கப்பட்ட நிகழ்வுகளின்போது கலாநிதி ம.மு.உவைஸின் ஞாபகார்த்தமாக அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

துணிந்தெழு, பூங்காவனம், முத்தமிழ்க் கலசம் போன்ற சஞ்சிகைகள் அவரை அட்டைப்பட அதிதியாகக் கௌரவித்தன.

சமூக நலப் பணிகளிலும் அவரின் பங்களிப்புகள் குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியவையே. உளவியல் ஆலோசனைகள் வழங்குதல், இன மத நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடுதல், அகதிகளின் மறுவாழ்வு, கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பது, இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்துவது என்று பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு வரும் மரீனா ஊக்கமூட்டும் பேச்சாளராகவும் கண்ணியம் பெற்றிருக்கின்றார்.

மரீனா இல்யாஸ் ஷாபி கண்டி மாவட்டம், தெஹிதெனிய மடிகேயில் பிறந்தவர். பெற்றோர் : மஸ்தூரா - இல்யாஸ், கணவர் - எம்.வை.எஸ். ஷாபீ (இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமை புரிந்தவர்)

தெஹிதெனிய முஸ்லிம் மஹா வித்தியாலயம் , ஸஹிராக் கல்லூரி மாவனல்லை என்பவற்றில் கல்விகற்றவர்.

பேராதனைப் பல்கலைக்கழகம், மலேசியா சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகம், நியூசிலாந்து விக்டோரியா பல்கலைக்கழகம், ஒக்லாந்து பல்கலைக்கழகம் நியூசிலாந்து என்பவற்றில் உயர் கல்வி கற்று ஆங்கில முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். புலம்பெயர்ந்து நியூசிலாந்து செல்லும் வரை பல்கலைக்கழகத்தில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபீ.


சுற்றிவர சிங்கள மொழிச் சூழலில் இருந்துகொண்டு தமிழ் இலக்கிய முயற்சிகளில் உற்சாகத்தோடு ஈடுபட்டவர் அவர். நியூசிலாந்துக்குப் புலம்பெயர்ந்த பின்னரும் தமிழ் இலக்கியப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் அவரின் பணி தொடர்கின்றது.


தமிழ் இலக்கிய நெஞ்சங்களின் சார்பில் அவருக்கு நமது வாழ்த்துகள்.










# கவிஞர் மு.அனுஷன் எழுதிய ‘சிறகிருந்தால்’ நூல் வெளியீட்டில்








கவிஞர் மு.அனுஷன் எழுதிய ‘சிறகிருந்தால்’ எனும் கவிதை நூல் வெளியீடு, அண்மையில் புளூம்பீல்ட் தேசிய கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் து.அறிவழகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சென். ஜோசப் கல்லூரியின் அதிபர் ந.பரமேஸ்வரன் H நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி இணைப்பாளர் சந்திரசேகரன், ஒஸ்போன் தமிழ் வித்தியாலய அதிபர் ஜேம்ஸ் விக்டர், ஒல்டன் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் மோகன், டிக்கோயா தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியரும் எழுத்தாளருமான சிவனு மனோஹரன், ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியரும் எழுத்தாளருமான சு.தவச்செல்வன் உட்பட ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரிய ஆலோச கர்கள், ஆசிரியர்கள், தொண்டு நிறு வனங்களின் அதிகாரிகள், சமூக சேவையாளர்கள் முதலானவர் கள் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.





நிகழ்வில், வரவேற்புரையை காட்மோர் தமிழ் வித்தியாலயத்தின் ஆசிரியர் ம.சரவணன் நிகழ்த்தினார். மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா மு.சிவலிங்கம் வழங்கிய ஆசியுரை காணொளி ஊடாக ஒளிபரப்பப்பட்டது. தொடர்ச்சியாக இலக்கிய ஆர்வலர் செல்வி சதாசிவம் தனுஷாவால் நூல் அறிமுகம் இடம்பெற்றதோடு நூல் வெளியீடானது கவிஞர் மு.அனுஷனின் பெற்றோர்களின் கரங்களிலிருந்து சிறப்பு அதிதிகள் ஊடாக வெளியீடு வைக்கப்பட்டதோடு தொடர்ச்சியாக சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

நூலுக்கான ஆய்வுரை எழுத்தாளர் சிவனு மனோஹரன் வழங்க, கருத்துரையை எழுத்தாளர் சு. தவச்செல்வன் நிகழ்த்தினார். ஒஸ்போன் கல்லூரியின் அதிபர் ஜேம்ஸ் விக்டர், சென். ஜோசப் கல்லூரியின் அதிபர் ந.பரமேஸ்வரன் ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

இறுதியாக கவிஞர் மு.அனுஷனின் ஏற்புரையும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் குணசேகரனின் நன்றியுரையும் நிகழ்த்தப்பட்டன.

புளூம்பீல்ட் தேசிய கல்லூரியின் ஆசிரியர் கோ.மனோகரன் நிகழ்வை தொகுத்து வழங்கி யிருந்தார். மலையகத்திலிருந்து தனது 22ஆவது வயதில் கவிஞர் வெளியிட்டுள்ள இலங்கைவாழ் பன்மைத்துவ சமூகத்தின் உரிமைக் குரலாக வெளிவந்துள்ள ‘சிறகிருந்தால்’ எனும் கவிதை நூல் அமோக வரவேற்பை வாசகர் மத்தியில் பெற்று இன்று பேசுபொருளாக மாறியுள்ளதோடு இதற்கு முன்னர் கவிஞரின் 20ஆவது பிறந்த தினத்தன்று (2021.08.13) மலையக பெருந் தோட்டத் தொழிலாளர் களின் உரிமைக் குரலாக வெளி வந்திருந்த மலைக் குருவி யின் ஆதங்கம் எனும் முதல் கவிதை நூலும் வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.







# கொழும்பில் அரச இலக்கிய விருது விழா

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கைக் கலைக் கழகம் மற்றும் அரச இலக்கிய ஆலோசனைக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் அரச இலக்கிய விருது வழங்கல் விழா-2023 இம்முறையும் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இவ் விருது வழங்கல் நிகழ்வு இம் மாதம் அதாவது 2023 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, கொழும்பு -10, மருதானை, எல்பின்ஸ்டன் மண்டபத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் அழைப்பின் பிரகாரம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் மற்றும் இலங்கை இலக்கியத் துறைக் தமது உன்னத படைப்புகளால் ஊட்டமளித்த எழுத்தாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது.

தமிழ் இலக்கியத்துறைக்கு ஆற்றிய உன்னத சேவை நிமித்தம் சாகித்திய ரத்னா எனும் தேசத்தின் உயர் அரச விருது தமிழ் மொழியில் பிரபல இலக்கியப் படைப்பாளர்களான கனகரத்தினம் சட்டநாதன் (தமிழ் மொழி மூலம்), சிங்கள மொழியில் தகைசார் பேராசிரியர் சுனந்த மகேந்திர, ஆங்கிலமொழியில் பேராசிரியர் ஜெரல்ட் ஹேர்பட் பீரிஸ் ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது.



இதன்போது சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் 2022ஆம் ஆண்டுமுதல் பதிப்பாக வெளிவந்த சுய நாவல், சுய சிறுகதை, சுய கவிதைப் படைப்பு, சுய இளையோர் இலக்கியப் படைப்பு, சுய பாடலாக்கத் தொகுப்பு, சுய நாடகம், சுய அறிவியல் புனைகதை, சிறுவர் இலக்கி யப் படைப்பு, சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு, நானாவித விடய நூல்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ளது.

மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நாவல், சிறுகதைத் தொகுப்பு, கவிதை படைப்பு, நாடகம், புலமைத்துவ ஆகியவற்றுடன் ஆய்வுசார் படைப்புகளுக்கும் சிறந்த பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளது.

**கலாசார அமைச்சு - ஊடகப்பிரிவு**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

கிக்

# கிக்

வாசிக்க
வாசிக்க...

மலர் : 02, இதழ் : 41 - 10.09.2023



o O
s oo
To sd

திரையுலகில்
11 வருடங்கள்
பூர்த்திசெய்யும்
பூஜா ஹெக்டே



# திரையுலகில் 11 வருடங்கள் பூர்த்திசெய்யும் பூஜா ஹெக்டே

தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி என மூன்று மொழிகளிலும் முன்னணி நடிகையாக வலம் வந்துகொண்டிருப்பவர் நடிகை பூஜா ஹெக்டே. இவர் திரையுலகில் கால்பதித்து இற்றைக்கு 11 வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில், பூஜாவின் 11 வருட சினி வாழ்க்கையை சிறப்பிக்கும் முகமாக 'லைப்ஸ்டைல் ஏசிய' என்ற சஞ்சிகை அவரின் புத்தம்புது பொழிவான புகைப்படத்தை வெளியிட்டு தமது மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டது.

தனது 11 வருட கால திரையுலக வாழ்க்கை குறித்து பூஜா ஹெக்டே தெரிவிக்கையில், ''நான் கடந்து வந்துள்ள 11 வருட திரையுலக வாழ்க்கையில் நிறைய கற்றுக்கொண்டுள்ளேன். அதில் முக்கியமான ஒரு விடயம்தான் வெற்றி என்பது நிரந்தரமற்றது. எனினும், தோல்வியை கண்டு துவண்டுவிடக்கூடாது. நாங்கள் நகர்ந்துகொண்டே இருக்கவேண்டும். செய்யும் தொழிலில் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் அதற்கான 100 சதவீத எமது பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதே நாம் செய்யும் தொழில் சிறக்கும்'' - என்றார்.

பூஜா ஹெக்டே கடந்த 2010ஆம் ஆண்டு 'மிஸ் யூனிவேர்ஸ் இந்தியா' என்ற அழகுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து புகழ் பெற்றவர். இந்த புகழைத் தொடர்ந்து மொடலிங் துறையிலிருந்து தமிழ் சினிமாவில் அறிமுகமானார் பூஜா. பின்னர் தெலுங்கு, ஹிந்தி மொழி திரைப்படங்களில் பணியாற்றி பல ரசிகர்களைக் கவர்ந்து பிரபலமாகியுள்ளார்.

பூஜா ஹெக்டே மும்பையிலுள்ள ஒரு கர்நாடகா வம்சாவளி குடும்பத்தில் பிறந்தவர். இவரின் தந்தை மஞ்சுநாத் ஹெக்டே மற்றும் தாய் லதா ஹெக்டே ஆகியோர் தங்களின் பிறப்பிடமான மங்களூரிலிருந்து மும்பைக்கு குடிபெயர்ந்தனர். இவர் கர்நாடாகாவிலுள்ள 'துளு' என்ற மொழியை பேசுபவர். இருப்பினும் பூஜா ஹெக்டே ஹிந்தி, மராத்தி, ஆங்கில மொழிகளை சரளமாக பேசுகிறார்.

பூஜா ஹெக்டே கல்லூரி படிப்பை மும்பையில் உள்ள எம்.எம்.கே. கல்லூரியில் படித்து தனது இளங்கலை பட்டத்தைப் பெற்றுள்ளார். பின்னர் கல்லூரி காலத்தில் தோழிகளுடன் மற்ற கல்லூரிகளுக்கு சென்று பல போட்டிகளில் பங்கு பெறுவது மற்றும் மொடலிங் துறையில் பணியாற்றுவது என சில துறைகளில் பணியாற்றி வந்துள்ளார்.

தனது கல்லூரி படிப்பை முடித்து 2009ஆம் ஆண்டு 'மிஸ் யூனிவேர்ஸ் இந்தியா' போட்டியில் பங்குபெற்றார், சில காரணங்களால் நிராகரிக்கப்பட்டார். பின்னர் அடுத்த ஆண்டே அதே போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

2010ஆம் ஆண்டு மிஸ் யூனிவேர்ஸ் இந்தியா போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இவர், அந்த ஆண்டே தமிழ்த் திரைப்பட இயக்குநர் மிஸ்க்கின் இயக்கத்தில் 'முகமூடி' என்ற படத்தில் நாயகியாக நடிக்க வாய்ப்பைப்பெற்று திரையுலகில் நடிகையாக அறிமுகமானார்.

இவரின் முதல் படமே தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஹீரோ படம் என்பதால் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார் பூஜா ஹெக்டே. 2012இல் தமிழ்த் திரைப்படம் மூலம் தனது திரைப்பயணத்தை தொடங்கிய பூஜா ஹெக்டே, பின்னர் 'ஒக்க லைலா கோசம்' என்ற தெலுங்கு திரைப்படத்தில் நடித்து தெலுங்கு திரையுலகில் அறிமுகமானார்.

தமிழ்த் திரைப்படத்தில் நடித்து நடிகையாக இவர் அறிமுகமாகினாலும், தெலுங்கு திரையுலகில் 'ஒக்க லைலா கோசம்' என்ற திரைப்படம் மூலம் இவருக்கு தெலுங்கு திரைப்பட வாய்ப்புகள் அதிகம் பெற்று தெலுங்கு திரையுலகில் பணியாற்றி பல ரசிகர்களைக் கவர்ந்து புகழ் பெற்றார்.

தெலுங்கு திரைப்படத்தைத் தொடர்ந்து 2016ஆம் ஆண்டு 'மோஹன்ஜோ தாரோ' என்ற ஹிந்தி திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததைத் தொடர்ந்து, ஹிந்தி திரையுலகிலும் பெரியளவில் பாராட்டப்பட்ட இவர், ஹிந்தியில் பல முன்னணி நடிகர்களுடன் பணியாற்றி இந்தியளவில் பிரபலமாகியுள்ளார்.


தொடர்ந்து தமிழில் நடித்த 'பீஸ்ட்', தெலுங்கில் நடித்த 'ராதே ஷ்யாம்', ஹிந்தியில் 'சர்க்கஸ்' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.





**கிக் - 'வார இதழ்'**
இல. 91, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442
g l lk mk
Kick - கிக்
g l lk m h l lk nl
h g l lk m
தொகுப்பு: யோவாஸ் ஜெ. ஜெ. - சுஜா
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி

# s 'r d dsV cSt 2





இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதும் வியந்து பாராட்டும் ஓர் அற்புதமான நடிகையாக வலம் வந்துகொண்டிருப்பவர் பிரியங்கா சோப்ரா.

இவர் அண்மையில் இடம்பெற்ற Victoria's Secret World Tour 2023 பெஷன் வீக் நிகழ்வில் பளப்பளப்பான மெல்லிய கறுப்பு நிற ஆடை அணிந்து வந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார்.

இதேபோன்று இந்நிகழ்வில் விக்டோரியாவின் சீக்ரெட் ஐகோன்களான நவோமி கெம்ப்பெல், அட்ரியானா லிமா, கேண்டீஸ் ஸ்வான்போயல் மற்றும் லில்லி ஆல்ட்ரிட்ஜ் உள்ளிட்ட பிரபலங்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.







# பிரிட்னி ஸ்பியர்ஸின் முதுகில் படமெடுக்கும் பாம்பு


அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பொப் இசைப் பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ், முதுகின் கீழ்ப்பகுதியில் பாம்பு வடிவத்தில் பச்சை குத்திக்கொண்டுள்ளார்.

பச்சை குத்திக்கொள்ளும் காட்சிகளை தமது இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளத்தில் அவர் பகிர்ந்துகொண்டுள்ளார்.

அதை, உலகம் முழுவதும் உள்ள அவரது கோடிக்கணக்கான ரசிகர்கள் பார்த்து ரசித்து, பகிர்ந்து வருகின்றனர். ரசிகர்களால் ஏற்பட்ட மனமகிழ்ச்சியையும் பிரிட்னி ஸ்பியர்ஸ் பகிர்ந்துகொண்டுள்ளார்.

உலகமெங்கும் ரசிகர் பட்டாளத்தைக்கொண்டிருப்பவர் பிரபல 'பொப்' பாடகி பிரிட்னி ஸ்பியர்ஸ். 41 வயதான இவர் பாடகி, பாடலாசிரியர், நடன கலைஞர் என பல முகங்களைக் கொண்டவர்.

'பொப் இளவரசி' என்று உலகமெங்கும் கொண்டாடப் படுகிறார். இவர் அண்மையில் தனது சுய சரிதை புத்தகத்தை எழுதுவதாக உறுதி செய்திருந்தார். இதன்மூலம் தனது வாழ்க்கையில் நடந்த பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத வேதனை நினைவுகளையும் அவர் பகிர்ந்து கொள்ளப்போவதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







## தேசிங்கு பெரியசாமியுடன் இணையும் சிம்பு

சிம்பு தற்போது கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தல் ஆணும் வெற்றிப்படத்தை இயக்கிய தேசிங்கு பெரியசாமி இயக்கத்தில் நடிக்கவுள்ளார். தற்போது சிம்புவும் தேசிங்கு பெரியசாமியும் கதையை பற்றி கலந்துரையாடும் புகைப்படங்கள் இப்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. அது மட்டுமன்றி ட்விட்டர் தளத்தில் positive mind positive vibe என்னும் போஸ்டையும் பதிவிட்டுள்ளார் தேசிங்கு பெரியசாமி. பெரிய பொருட்செலவில் பான் இந்தியா படமாக ராஜ் கமல் தயாரிப்பு நிறுவனத்தால் இத்திரைப்படம் தயாரிக்கப்படவுள்ளது.



## இயக்குனராக அறிமுகமாகும் தளபதியின் வாரிசு

தற்போது யாருமே எதிர்பார்க்காத தகவல் வெளியாகி தமிழ்த் திரையுலகில் அதிகம் பேசுபொருளாக உள்ளது தளபதி விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் இயக்கப்போகும் தமிழ்த் திரைப்படத்தை லைக்கா நிறுவனம் தயாரிக்கவுள்ளமை. லைக்கா நிறுவனம் அவர்களது அதிகாரப்பூர்வ ட்விட்டர் வலைத்தளத்தில் ஒரு பெரிய சிங்கத்தின் கால் தடத்தில் ஒரு சிங்கக்குட்டி கால் வைப்பது போன்ற புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. அதுமட்டுமன்றி நடிகர் அஜித்தின் படங்களுக்கு p.r.o வாக பணிபுரியும் சுரேஷ் இந்திரா ஜேசன், சஞ்சய் படத்துக்கும் p.r.o வாக ஒப்பந்தமாகியுள்ளார்

## நிஜ சந்திரமுகியே நான்தான் - கங்கனா

சந்திரமுகி படத்தின் இரண்டாம் பாகம் உருவாகியுள்ளது. பி. வாசு இயக்க, ராகவா, கங்கனா, வடிவேலு, லட்சுமி மேனன், சிருஷ்டி டாங்கே, மகிமா நம்பியார், ராதிகா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ஒஸ்கர் விருது வென்ற கீரவாணி இசையமைக்கிறார். இதன் படப்பிடிப்பு முடிந்து ரிலீஸ் வேலைகள் நடக்கின்றன. எதிர்வரும் செப்.15இல் படம் ரிலீஸாக உள்ளது. சமீபத்தில் பாடல்கள், டிரைலர்கள் வெளியாகி வரவேற்பைப் பெற்றன.

கங்கனா அளித்த பேட்டி :

பி.வாசு என்னிடம் வேறொரு கதையை முதலில் சொன்னார். பின் இந்தப் படம் பற்றி சொன்னதும் சம்மதம் சொன்னேன். சந்திரமுகி 1 படம் பார்த்தவர்கள் நிச்சயம் என்னை ஜோதிகாவுடன் ஒப்பிடுவார்கள். நான் அவரை இதுவரை பார்த்ததில்லை. அவரது ரசிகை நான். ஒருமுறை என்னை பற்றி ஒரு பேட்டியில் பேசியிருந்தார். ஆனால், அப்போது நான் சந்திரமுகியில் நடிக்கவில்லை. அவரது வார்த்தைகளுக்கு நன்றி. நிஜ சந்திரமுகியே நான்தான். லக்ஷ்மி என்ற ரோலில் நடித்துள்ளேன். படத்தில் எனக்கு நிறைய டான்ஸ் இருக்கு. கிளைமாக்ஸ் நிச்சயம் அதிர்ச்சி தரும் – என்றார்.



## ராயன்

நடிகர் தனுஷ் 'ராயன்' படத்தில் நடித்து வருகிறார். இந்த திரைப்படத்தில் வரலக்ஷ்மி ஒரு முக்கியமான வேடத்தில் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அது மட்டுமன்றி நித்தியா மேனனும் இத்திரைப்படத்தில் இணையவிருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது இப்படத்தில் தனுஷ், எஸ்.ஜே.சூரியா, நித்தியா மேனன், சந்திப் கிஷன், தசரா விஜயன், அபர்ணா பாலமுரளி, காளிதாஸ், செல்வராகவன், அனிகா சுரேந்திரன், வரலக்ஸ்மி போன்ற நடிகர்கள் நடிக்கவுள்ளனர். 2024 முதல் பாதியில் இத்திரைப்படம் வெளியாகுமென சான் பிச்சர்ஸ் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.



## நீச்சல் உடையில் திவ்யா பாரதி

ஜி.வி'.பிரகாஷ் குமார் நடித்த 'பேச்சுலர்' என்ற படத்தில் நாயகியாக நடித்தவர் திவ்யா பாரதி. அதன்பிறகு 'மதில் மேல் பூனை' என்ற படத்தில் நடித்தவர், தற்போது கவினுக்கு ஜோடியாக ஸ்டார் என்ற படத்தில் நடிக்கப் போகிறார். சோசியல் மீடியாவில் ஆக்டிவ்வாக இருந்துவரும் திவ்யா பாரதி, தனது கிளாமர் புகைப்படங்கள், வீடியோக்களை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார். தற்போது சிவப்பு நிறத்தில் நீச்சல் உடை அணிந்து தண்ணீருக்குள் இருந்து படிகளில் ஏறிவரும் ஒரு வீடியோவை பதிவிட்டுள்ளார். திவ்யா பாரதியின் இந்த கவர்ச்சி வீடியோவுக்கு இலட்சக்கணக்கில் லைக்குகள் குவிந்து வருகின்றன.

அதோடு, உங்கள் வாழ்க்கையை அன்புடன் செலவிடுங்கள். உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன் என்றும் ஒரு பதிவும் போட்டுள்ளார்.



# ரசிகர்களின் மனதை கொள்ளைகொள்ளும் சாக்ஷி அகர்வால்

பிக்பொஸ் நிகழ்ச்சி மூலம் பட்டிதொட்டி யெங்கும் அறிமுகமானவர் சாக்ஷி அகர்வால். இவர் தற்போது தமிழ் திரையுலகின் வ ள ர் ந் து வ ரு ம் இ ள ம் நடிகையாகவும் தென்னிந்திய சினிமாவின் ஹொட் ஹீரோயினாக மாறி அனைவரையும் கவர்ந்து வருகிறார்.

ஆக்சன், வில்லி, கிளாமர் என அனைத்து வித்தியாசமான கதாபாத்திரங்களிலும் அசத்தி வருபவர் சாக்ஷி அகர்வால்.

கடந்த ஆறு மாதங்களில் அவரது நடிப்பில் மூன்று திரைப்படங்கள் வெளியாகியுள்ளன. இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகரின் 'நான் கடவுள் இல்லை' படத்தில் முழுநீள ஆக்ஷன் அவதாரத்தில் தோன்றிய அவர், தனது அற்புதமான நடிப்பில் ஒரு வித்தியாசமான பரிமாணத்தைக் காட்டினார். அதேபோல் நடிகர் பிரபுதேவா கதாநாயகனாக நடித்து, சமீபத்தில் வெளியான 'பஹீரா' படத்தில் எதிர்நாயகியாக வில்லி வேடத்தில் அனைவரையும் அதிர வைத்தார். தற்போது ஹங்கம (hungama) ஓடிடியில் வெளியாகியுள்ள 'என் எதிரே ரெண்டு பாப்பா' படத்தில் ஹொட் கிளாமர் ஹீரோயினாக கலக்கியிருக்கிறார்.

எப்பொழுதும் ஒரே மாதிரியான கதாபாத்திரங்களை தேர்ந்தெடுக்காமல், தனித்துவமான கதாபாத்திரங்களில் மட்டுமே தொடர்ந்து தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் சாக்ஷி அகர்வால் தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் நடித்து வருகிறார்.



சமீபத்திய திரைப்படங்கள் குறித்து அவர் பேசியதாவது:-

"பிக்பொஸ் எனக்கு மிகப் பெரிய அடையாளம், பிக்பொஸ் எல்லோரிடமும் என்னை பற்றி அறிமுகம் தந்தது. பிக்பொஸ் அறிமுகத்தை நாம் எப்படி பயன்படுத்திக்கொள்கிறோம் என்பது நம் கையில்தான் உள்ளது. உண்மையில் என் திரைப்பட வாய்ப்புகளை மிகக் கவனமாக தேர்ந்தெடுக்கிறேன். ஒரே மாதிரியான கதாபாத்திரங்கள் செய்வதில் எனக்கு விருப்பமில்லை. திரைப்படம் என்பது எனது கனவு. அதனால்தான் டான்ஸ், ஆக்சன் கற்றுக்கொள்ள தனியாக கிளாஸ் போய்க்கொண்டிருக்கிறேன். 'நான் கடவுள் இல்லை" படத்தில் நான் நடித்த ஆக்சன் காட்சிகள் நன்றாக இருப்பதாக பாராட்டுகள் கிடைத்தது மிகப் பெரிய மகிழ்ச்சி."

"அப்படியெல்லாம் தோன்றியதில்லை. தென்னிந்திய மொழிகளைப் பொறுத்தவரை, இங்கு வாழ்க்கை ஒன்றுதான். கலைஞர்கள் எல்லோருமே தெரிந்தவர்கள்தான். மொழிப் பிரச்சினை எனக்கு பெரிதாக தெரிந்ததே இல்லை.

''என் கதாபாத்திரங்கள் ஒரே சாயலில் இருக்கக்கூடாது. ஒரே மாதிரி பாத்திரங்களில் ஒட்டிக்கொள்ள விரும்பவில்லை. வித்தியாசமான குணாதிசயங்கள்கொண்ட கதாபாத்திரங்களில் எனது திறமையை வெளிப்படுத்தவே விருப்பம். வெற்றிமாறன் இயக்கத்தில் ஒரு கிராமத்து வேடத்தில் நடிக்க வேண்டும். எனக்கென ஒரு தனி அடையாளத்தை ஏற்படுத்த வேண்டும்" - என்றார்.

## லைக்கா தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் வெளியாகவிருக்கும் திரைப்படங்கள்




**சந்திரமுகி-2** - பி.வாசு இயக்கத்தில் எம்.எம்.கீரவாணி இசையமைத்துள்ளார். ராகவா லோரன்ஸ், கங்கனா ரணாவத், லட்சுமி மேனன், வடிவேலு, மஹிமா நம்பியார் ஆகியோர் இத்திரைப்படத்தில நடிகின்றனர்

**லால் ஸலாம்**- ஐஸ்வர்யா ரஜினிகாந்த இயக்கத்தில் ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கிறார். விஷ்ணு விஷால், விக்ராந்த் ஆகியோர் இத்திரைப்படத்தில் கதாநாயகர்களாக நடிக்கின்றனர். அதுமட்டுமன்றி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந், கபில் தேவ் ஆகியோர் இப்படத்தில் கேமியோ ரோலில் நடிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

**இந்தியன் - 2** - ஷங்கர் இயக்கத்தில் அனிருத் இசையமைக்கிறார். உலக நாயகன் கமல்ஹாசன், சித்தார்த், காஜல் அகர்வால், பிரியா பவனி ஷங்கர், ராகுல் பிரித் சிங், சமுத்திரக்கனி, சோம சுந்தரம், பாபி சிம்ஹா ஆகியோர் இத்திரைப்படத்தில் நடிக்கின்றனர்.

**விடாமுயற்சி** - மகிழ் திருமேனி இயக்கத்தில் அனிருத் இசையமைக்கிறார். அஜித் குமார் கதாநாயகனாக நடிக்கிறார்

**தலைவர் - 170** - ஜெய் பீம் இயக்குனர் டி.ஜே.ஞானவேல் இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த, பகத் பாசில், அமிதாப் பச்சன், செவ்வானம் மஞ்சுவாரியர் ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர் அனிருத் இசையமைக்கின்றார்.

**மிசன் சொப்டர் 1**- ஏ.எல்.விஜய் இயக்கத்தில் அருண் விஜய், நிமிஷா அமி ஜாக்க்ஷன் ஆகியோர் இத்திரைப்படத்தில் நடிக்கின்றனர். இசை - ஜி.வி.பிரகாஷ்.

## ஜெயிலர் படத்தின் மொத்த வசூல்

நெல்சன் இயக்கத்தில் வெளியான ஜெயிலர் திரைப்படம் உலகம் முழுவதும் 602.5 கோடிகளை வசூலித்துள்ளது.

தமிழ் நாட்டில் -189 கோடி

ஆந்திரா மற்றும் தெலுங்கானா - 82.5 கோடி

கர்நாடகா - 67.5 கோடி


கேரளா - 55.5 கோடி

ரெஸ்ட் ஒவ் இந்தியா - 15 கோடி

மொத்த இந்தியா வசூல் - 409 கோடி

ஓவர் சீஸ் - 193 கோடி

இதன்படி ஜெயிலர் படத்தில் மொத்த வசூல் 602.5 கோடி. தமிழ் படங்களிலேயே அதிக வசூலை கொடுத்த 2ஆவது படம் என்ற பெருமையை பெற்றுள்ளது இந்த ஜெயிலர் படம்.



# எங்கள் தங்க ராஜா - பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

## ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

குடும்பக் கதைகளிலும், புராணப் படங்களிலும் நடித்து புகழ் பெற்றுக் கொண்டிருந்த சிவாஜி கணேசனை அடிதடி, மசாலா பாணி படங்களில் நடிக்க வைத்த பெருமை நடிகர் பாலாஜியை சாரும். அந்த வரிசையில் 1973ஆம் ஆண்டு ஈஸ்ட்மன்ட் கலரில் 'எங்கள் தங்க ராஜா' படம் வெளிவந்தது. ஆனால், இந்தப் படத்தை பாலாஜி தயாரிக்கவும் இல்லை, அதில் நடிக்கவும் இல்லை. படத்தை தயாரித்து, டைரக்ட் செய்தவர் ராஜேந்திர பிரசாத் ஆவார். தெலுங்கில் பிரபலமான இவர், தான் உருவாக்கிய தெலுங்கு படத்தைத் தழுவி தமிழில் இந்த படத்தைத் தயாரித்தார். அதுமட்டுமன்றி அதுவரை எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்துவந்த மஞ்சுளா இந்தப் படத்தின் மூலம் சிவாஜிக்கு ஜோடியானார்.

அமைதியும் அடக்கமும் நிறைந்த டாக்டர் ராஜா, அடாவடித்தனமும், முரட்டுத்தனமும் கொண்ட பட்டாக்கத்தி பைரவன் இந்த இருவேறு மாறுபட்ட குணாம்சங்களை ஏற்று நடிக்க ராஜேந்திர பிரசாத் சரியான நடிகரையே தெரிவுசெய்தார். அவர் தெரிவு வீண்போகவில்லை என்பதை காட்சிக்குக் காட்சி தன் நடிப்பின் மூலம் நிரூபித்தார் சிவாஜி. அமைதியான – அடக்கமான ராஜா பாத்திரம் அவருக்கு வழக்கமானது. ஆனால், பட்டாக்கத்தி பைரவன் பாத்திரத்தில் அவர் காட்டும் நடிப்பும், ஸ்டைலும் பிரமாதம். மஞ்சுளா, நாகேஷ், மனோகர், சௌகார் இவர்கள் நால்வரிடமும் அவர் காட்டும் ஆக்ட்டிங் ஓவர் ஆக்டிங் அல்ல, எஸ்ஸ்ட்ரா ஓர்டனரி.

கதாநாயகியாக வரும் மஞ்சுளா அழகுப் பதுமையாக வந்து, விதவிதமான சேலை அணிந்து, சிவாஜியிடம் கெஞ்சியும், கொஞ்சியும் பேசி ரசிகர்களைக் கவர்கிறார்.

சௌகார் ஜானகி படம் முழுவதும் கலங்குகிறார். அபலைப்பெண்ணாக



வாடுகிறார். சுந்தரராஜன் இஸ்லாமியராக வந்து இதமாக நடிக்கிறார். ராஜா நாம உப்பு விற்கப் போனா மழை பெய்யுது, மாவு விக்கப் போனா காத்தடிக்குது என்று அவர் சொல்வது நல்ல டச். படத்தில் சிவாஜியுடன் மோதுபவர் ஆர்.எஸ்.மனோகர். இவர் இல்லாவிட்டால் சிவாஜியின் பாத்திரம் தள்ளாடி இருக்கும் என்பதுபோல் படம் முழுதும் மிடுக்குடன் வந்து மோதுகிறார். நாகேஷ் வரும் காட்சிகளில் எல்லாம் எப்படியோ சிரிப்பும் வந்துவிடுகிறது. வேலை இல்லாமல் கஷ்டப்படுறியா என்று சிவாஜி கேட்க, வேலை இருந்தாலும் கஷ்டப்படுவேன், கஷ்டமில்லாத வேலையா இருந்தா நல்லது என்று நாகேஷ் சொல்வது நல்ல காமெடி.

எஸ்.வி.ராமதாஸ், காந்திமதி, சிஐடி சகுந்தலா, ரமாபிரபா, மாலி ஆகியோரும் படத்தில் இருக்கிறார்கள். விலைமாது விடுதி நடத்தும் காந்திமதி, அவரின் அடியாள் ராமதாஸ், அவர்களை துச்சமென மதிக்கும் சௌகார் மூவர் நடிப்பும் குட்.

சிறுவயதில் வில்லனின் அட்டகாசத்தால் தாயை இழந்து, அக்காவை பறிகொடுத்து குடும்ப நண்பர் தயவில் படித்து டாக்டராகிறான் ராஜா. அவன் விலகி விலகிப் போக வலிய வந்து அவனைக் காதலிக்கிறாள் வசந்தி. இரு மனமும் சேரும்போதுதான் தெரிய வருகிறது வசந்தி தன் குடும்பத்தைக் கெடுத்த வேதசலத்தின் மகள் என்று. அதேசமயம் பட்டாக்கத்தி பைரவன் என்ற முரடன் நுழைந்து எல்லோரையும் கதிகலங்கச் செய்கிறான். அது மட்டுமன்றி, ராஜா காணாமல் போகவே பைரவன், வேதாசலம் மீது சந்தேகம் வலுக்கிறது. வசந்தியோ ராஜாவை நினைந்து உருகுகிறாள்.

படத்தில் இடம்பெற்ற கண்ணதாசனின் பாடல்கள் எல்லாம் கே.வி.மகாதேவன்



இசையில் இனிமையாக அமைந்தன. கல்யாண ஆசை வந்த காரணத்தை சொல்லவா, இரவுக்கும் பகலுக்கும் இனி என்ன வேலை, முத்தங்கள் நூறு அது தித்தித்திக்கும் பாரு பாடல்கள் இன்றும் ஒலிக்கின்றன. கற்பாம் மானமாம் கண்ணகியாம் சீதையாம் பாடல் மனதை கனக்கச் செய்கிறது.

படத்துக்கு கதை வசனம் எழுதியவர் பாலமுருகன். வசனங்கள் கூர்மையாக அமைந்தன. நல்ல பெண் கற்பை ஒருநாளும் பாரமாக நினைக்க மாட்டாள், வில்லா வளைச்சது உங்க அப்பா. நான் அம்பா மாறியது தப்பா போன்ற வசனங்கள் படம் முழுவதும் விரவிக் கிடந்தன. சபாஷ் பாலமுருகன். படத்துக்கான ஒளிப்பதிவு எஸ். வேங்கடரத்னம். படத்துக்கு கிருஷ்ண ராவ் போட்ட செட் அருமை. அதனை தனது கெமராவில் பதிவு பண்ணிய ஒளிப்பதிவாளருக்கு ஒரு ஷொட். சண்டைக் காட்சிகளும் விறுவிறுப்பாக படமாக்கப்பட்டிருந்தன .

ஒரு ஹீரோ சாது, மற்றைய ஹீரோ முரடன் என்ற கதைக் கரு பி.யு.சின்னப்பா காலத்து கதை என்றபோதும் அதனை தன்னுடைய நடிப்பால் நியாயப்படுத்தியிருந்தார் சிவாஜி. அது மட்டுமன்றி ஆட்டம், பாட்டம், உணர்ச்சிகரம், சோகம், வீரம் என்று பலவித உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தார் அவர்.

முதல் தடவையாக தமிழில் படம் தயாரித்த ராஜேந்திர பிரசாத்துக்கு கிடைத்த பிரசாதம் சிவாஜி. படம் இந்தியா, இலங்கை இரண்டு நாடுகளிலும் நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி கண்டது.

rrtmsd cr nsl h nl

# மாலைதீவில் தமன்னா





ஜெயிலர் படத்தை அடுத்து 'அரண்மனை 4' உட்பட மூன்று படங்களில் நடித்து வருகிறார் தமன்னா. சமீபத்தில் விடுமுறை நாளை கழிப்பதற்காக தனது காதலரான நடிகர் விஜய் வர்மாவுடன் வெளிநாடு சென்றிருந்தார் தமன்னா. இந்நிலையில் தற்போது அவர் மாலைதீவுக்கு சுற்றுலா சென்றுள்ளார். மாலைதீவில் தான் இருக்கும் புகைப்படங்களை அவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அங்குள்ள கடற்கரையில் வானவில் பின்னணியில் இருக்கும் புகைப்படங்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார். இந்தப் புகைப்படத்தை பதிவிட்ட ஒரு மணிநேரத்தில் 10 இலட்சம் லைக்குகளைப் பெற்று சோசியல் மீடியாவில் வைரலாகி வருகிறது. இந்தப் புகைப்படங்களில் தமன்னா மட்டுமே இருப்பதால் அவரது காதலர் விஜய் வர்மாவுடன் செல்லவில்லை என்பது தெரிகிறது.



## i phone 15 max இன் புதிய அப்டேட்கள்



அப்பிள் நிறுவனம் எண்ணற்ற அப்டேட்களை கொண்ட ஸ்மார்ட் போன்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிலையில், 14 pro max ஐ தொடர்ந்து ii phone 15 max வெளியாகவுள்ளது. இதில் 2500 nits வரையிலான பிரைட்னஸ் பவர் இருக்கும். அப்பிள் கடிகாரங்களில் பயன்படுத்திய LIPO டெக்னோலஜியை பயன்படுத்தி உள்ளார்கள். அப்பிள் கடிகாரங்களில் உள்ள action butten இந்த போன்களிலும் பயன்பட போவதாகக் கூறப்படுகிறது அதுமட்டுமன்றி A 17 சிப் இதில் பொருத்தப்படவுள்ளது. மேலும் பயன்பாட்டுக்கு என்ற வகையில் டைட்டானியம் பிரேம் பயன்படவுள்ளது. தண்டர்போல்ட் சார்ஜிங் டெக்னோலஜி போன்ற பல அம்சங்கள் இதில் உள்ளன. 48மெகா பிக்ஸல் கேமரா zooming கெபாசிட்டி 5-6xzoom அளவு கொடுக்கப்பட்டுள்ளது.

## Top 10 Update

★ நீங்கள் HD தரத்தில் எடுக்கும் படங்களை whatsappஇல் ஒருவருக்கு அனுப்பும்போது அதன் தரம் 1080p அல்லது 720p போன்ற குறைந்த தரத்திலேயே அனுப்பமுடியும். ஆனால், தற்போது HD படங்களை HD தூரத்திலேயே அனுப்பும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

★ screen sharing தற்போது அறிமுகமாகியுள்ளது. இதன் மூலம் வீடியோ கோல்களை பலதரப்பட்ட டிவைஸ்களுக்கு அனுப்பிக்கொள்ள முடியும்.

★ ஒருவருக்கு குறுந்செய்தி ஒன்றை அனுப்பிய பிறகு அதில் ஏதாவது தவறான சொற்கள் தட்டச்சு ஆகியிருந்தால் அதனை readit செய்துகொள்ள முடியும்

★ iphone whatsappஇல் உள்ளது போன்றே நவிகேசன் பேனல் அண்ட்ரெயிட் போன்களிலும் வரப்போவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

★ அனைவரும் விரும்பி பயன்படுத்தும் இமோஜி kaybord redesign ஆக உள்ளது.

★ ஒரே whatsappஐ பல deviceகளில் இணைக்கக்கூடிய வசதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

★ whatsappஇல் படங்கள் காணொளிகள் மட்டுமின்றி குரல் பதிவுகளையும் status ஆக வைக்க முடியும்.

நீங்கள் ஒருவருக்கு அனுப்பும் குறுஞ்செய்தியை அல்லது அந்த chatஐ chat lock செய்துகொள்ள முடியும்.

★ வட்ஸ்ஸாப் chat ட்ரான்ஸ்வெர் தற்போது QR குறியிடு ஸ்கேன் மூலம் இலகுவாக மேற்கொள்ளும்.

★ வட்ஸ்அப் சௌலஸ் தொடங்கப்பட உள்ளது. இதை தற்போது பேட்டா பார்வையாளர்கள் பரிசோதித்து வருகிறார்கள்.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

**எதுபோன்ற தவறுகள் நம் வாழ்க்கையை அழித்துவிடும் ஜிகினா?**

**சுபா - கொட்டாஞ்சேனை**

நம் உடம்பின் உணர்வுகளைக் கவனித்து அதை நிர்வாகம் செய்யாமல் இருப்பது. உதாரணமாக இருமல் நிறைய கூடியும் புகைப்பிடிப்பது. (Listening to body)

அதேபோல் நம் மனதையும் கேட்காமல் இருப்பது. உதாரணமாக பொய் சொல்லாதே என்று மனம் எச்சரித்தாலும் பொய் சொல்வது. (Listening to mind)

உறவுகள் சுட்டிக்காட்டுவதை சட்டை செய்யாமல் இருப்பது (not taking feedback).

இவை மூன்றும் நமக்கு இயற்கை அளித்துள்ள வாழ்க்கை திசைகாட்டிகள் (life compass) என்பது என் நம்பிக்கை.

முதல் இரண்டும் தவறாமல் செய் தால் மூன்றாவது தேவையிருக்காது.

இந்த மூன்று தவறுகள் செய்பவரை நான் தான்தோன்றிகள் என்று குறிப்பிடுவேன்.

**★ பிள்ளைகளை கட்டுப்பாடு களுடன் வளர்ப்பது எப்படி?**

**செல்வகுமார் - மட்டக்களப்பு**

பிள்ளைகளை கட்டி வைக்க வேண்டாம். விட்டு விடுங்கள். நம்பிக்கை வைக்கவும்.

உங்களைப் பார்த்துதான் வளர்கின் றனர். அவர்கள் என்ன செய்யவேண் டும் என்று எதிர்பார்ப்பதை நீங்கள் செய்யுங்கள்.

ரொம்பவும் கட்டுப்படுத்தினால் விட்டுவிட்டுப் போய் விடுவார்கள்.

நேசமுடன் சொல்லிக் கொடுக் கவும்.. கொஞ்ச நாட்களிலேயே உங்கள் பக்கம் வந்துவிடுவார்கள்.

பட்டம் பறக்க வேண்டும். கயிறு உங்கள் கையில் இருக்க வேண்டும் அவ்வளவுதான்.



**★ கெட்டப் பழக்கங்கள் என வகைப்படுத்தப்படாத, ஆனால், உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய பழக்கங்கள் எவை ஜிகினா ?**

**சிவசாமி - வட்டவளை**

உணவு உண்ட உடனே உறங்கச் செல்வது. (தொப்பை உறுதி).

அதிக நேரங்கள் ஹெட் செட் அணிந்து பாடல்கள் கேட்பது.

தலை குப்புற படுப்பது,

நீண்ட நேரம் பல் துலக்குவது, (நீண்ட நேரம் பல் துலக்கினால் பற்பசையிலுள்ள வேதிப்பொருட்கள் காரணமாக பல்லின் எனாமல் தேய்மானம் அடையலாம்)

பல் துலக்கும்போது அதிகளவில் பற்பசையை எடுத்துக்கொள்வது; ஒரு மருந்து வில்லை அளவுக்கு எடுத்துக் கொண்டாலே போதுமானதுதானாம். (இதற்கும் மேலே சொன்ன காரணம் தான்)

சூடாக நீரோ/தேநீரோ/கோப்பியோ அருந்தியவுடன் குளிர்ந்த நீரைப் பருகுவது.

கைகளில் அடிக்கடி சொடுக்கு எடுப்பது, (அடிக்கடி சொடுக்கு எடுப்பது நரம்புத் தளர்ச்சிக்குக் காரணமாகலாம்)

ரூபா நோட்டுகளை எண்ணும் போதும், புத்தகங்களைப் புரட்டும் போதும் எச்சிலைத் தொட்டுத் திருப்புவது.

துரித உணவுகள் தினமும் உண்பது,

காது, மூக்கு ஆகியவற்றை நோண்டிக்கொண்டே இருப்பது, நகம் கடிப்பது,

ஹைஹீல்ஸ் அடிக்கடி அணிவது,

காலை உணவைத் தவிர்ப்பது,

நள்ளிரவுவரை தொலைபேசி உபயோகம், குறிப்பாக படுத்துக் கொண்டு.

சரியாக உறங்காமல் இருப்பது/ நீண்ட நேரம் உறங்குவது - இரண்டு மே உடலுக்கு ஆகாதுதான் .

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

**★ வயது ஆக ஆக எதையெல்லாம் குறைத்துகொள்வது நல்லது ?**

**மஞ்சுளா - கொட்டாஞ்சேனை**

இவற்றை எல்லாம் குறைத்தால் நல்லது:

கடன், உணவு, கோபம், ஆசை, எதிர்பார்ப்பு, சோம்பேறித்தனம், வீண் பேச்சு, தற்பெருமை, கஞ்சத்தனம், மருந்துகள் .

உங்கள் கேள்விகளை 65087 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805

# விமர்சனம்




தம்பி ராமையா நடத்திவரும் விளம்பர கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார் சந்தானம். அதுபோல மனோபாலா நடத்திவரும் விளம்பர கம்பெனியில் தான்யா ஹோப் வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்குள் விளம்பரம் பிடிப்பதில் போட்டி ஏற்படுகிறது. ஒரு கார் விளம்பரத்துக்காக சந்தானம் கோல்மால் செய்து விளம்பரம் பிடிக்கிறார். இதனால் கோபப்படும் தான்யா ஹோப், கவுன்சிலில் புகார் கொடுக்கிறார்.

அதன்பின் தான்யாவை நேரில் பார்க்கும் சந்தானம், அவர் மீது காதல் வயப்படுகிறார். தான்யாவிடம் வேறொரு பெயரில் பழகி, தன்னுடன் காதல் வயப்பட வைக்கிறார் சந்தானம். தான்யாவை உண்மையாகக் காதலிக்கத் தொடங்கும் சந்தானம், ஒரு கட்டத்தில் உண்மையை சொல்லிவிட முயற்சிக்கும் நேரத்தில், தான் ஏமாற்றப்படுவது தெரிந்து மனமுடைகிறார் தான்யா ஹோப். இறுதியில் சந்தானம், தான்யா ஹோப் இருவரும் ஒன்றுசேர்ந்தார்களா? இல்லையா? என்பதே மீதிக் கதை. படத்தில் நாயகனாக நடித்திருக்கும் சந்தானம் வழக்கம்போல் டைமிங் காமெடி, பாடிலேங்குவேஜ் என குறை இல்லாமல் செய்திருக்கிறார். கதாநாயகியாக நடித்திருக்கும் தான்யா ஹோப் அழகாக வந்து அளவான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். எம்.ஜேவாக வரும் தம்பி ராமையா மைக்கேல் ஜாக்சன் பெயரை வைத்து அவரைபோல் இமிடேட் செய்து கடுப்பேற்றி இருக்கிறார். அதுபோல் கோவை சரளா ரீல்ஸ் போடுகிறேன் என்று ரசிகர் களை கதற வைத்து இருக்கிறார். மனோபாலா, மன்சூர் அலிகான் உள்ளிட்ட பலர் காமெடி என்ற பெயரில் ரசிகர்களை சோதித்திருக்கிறார்கள். காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் பிரசாந்த் ராஜ். ஆனால், காமெடி படத்தில் பெரியதாக ஒர்க்கவுட் ஆகவில்லை. படம் முழுக்க டபுள் மீனிங் காமெடியை வேண்டும் என்றே திணித்ததுபோல் இருக்கிறது. அர்ஜுன் ஜான்யா இசையில் பாடல்கள் சுமார் ரகம். பழைய படங்களின் பின்னணி இசையை படத்தில் போட்டிருக்கிறார். சுதாகரின் ஒளிப்பதிவு, படத்துக்கு பெரிய பலம். மொத்தத்தில் கிக் கிக் கொடுக்கவில்லை.





# பூங்குழலிக்கு பிறந்தநாள்



'பொன்னியின் செல்வன்' திரைப் படத்தில் அழகு பதுமைகளாக வலம்வந்த குந்தவை நந்தினிக்கு அடுத்ததாக ரசிகர்களின் அமோக வரவேற்புக் குள்ளான கதாபாத்திரம்தான் 'பூங்குழலி'.

இன்றும் ரசிகர்களிடையே பொன்னியின் செல்வனின் பூங்குழலியாகவே கலந்திருக்கும் ஐஸ்வர்யா லட்சுமி தமது 32ஆவது அகவையில் காலடி வைத்துள்ளார்.

மலையாளத்தில், 'நஞ்சு களுடே நாட்டில் ஓரிட வேள' படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானவர் நடிகை ஐஸ்வர்யா லட்சுமி. மருத்துவராக படிப்பை முடித்தவர் ஆர்வத்தின் காரணமாக நடிக்க வந்தார். முதல் படத்தில் பெரிய வெளிச்சம் கிடைக்கவில்லை என்றாலும் அடுத்ததாக இவர் நடித்த 'மாயநதி', 'வரதன்' ஆகிய படங்கள் நல்ல பெயரைப் பெற்றுத் தந்தன.

தொடர்ந்து தமிழில் 'ஆக்ஷன்', 'ஜகமே தந்திரம்', 'கார்கி', 'கட்டா குஸ்தி', 'பொன்னியின் செல்வன்' உட்பட பல படங்களில் நடித்தார். குறிப்பாக, பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் அவர் நடித்த 'பூங்குழலி' கதாபாத்திரமே அவரின் பிரபலத்தை மேலும் விரிவாக்கியது. அதன் மூலமே தென்னிந்திய ரசிகர்களிடையே கவனத்தைப் பெற்றார்.



பூங்குழலி கதாபாத்திரம் தன் வாழ்க்கையில் பல கதவுகளைத் திறந்துவிட்டதாக ஐஸ்வர்யா லட்சுமியே தெரிவித்திருக்கிறார்.

இயல்பான தோற்றம், மெலிதான உடலமைப்பு என யதார்த்த தோற்றத்தில் இருந்தாலும் படத்துக்குப் படம் ஐஸ்வர்யாவின் ரசிகர்கள் பட்டாளம் அவரின் இன்ஸ்டாகிராம் கணக்கில் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. 'கிங் ஒவ் கொத்தா' படத்துக்குப் பின்னர் சில படங்களில் நடித்து வருகிறார்.

பெரிய திட்டங்கள், கனவுகள் எதுவும் இல்லாமல் அந்தந்த கணத்தை நிம்மதியாக கழித்தால் போதும் என்பதுதான் ஐஸ்வர்யா லட்சுமியின் வாழ்க்கைப் பார்வையாம். அந்தவகையில் தற்போது தனது 32ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ள 'பூங்குழலி'யின் வாழ்க்கையில் நிம்மதி என்றும் தழைக்கட்டும்!

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07